சிவசங்கரி

# நண்டு



CPL

# நண்டு

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஜூன், 1979 |
| நான்காம் பதிப்பு | : | மார்ச், 1989 |
| ஐந்தாம் பதிப்பு (கங்கை) | : | மார்ச், 1995 |
| ஆறாம் பதிப்பு (கங்கை) | : | பிப்ரவரி, 2002 |

1062/03
26

554243
894.8113
SIV

**விலை : ரூ. 50.00**

Printed at : Sri Saravanan Offset Printers, Chennai-81.

# என்னுரை

இந்தத் தொடர் கதையைப் படிக்கும் காலத்தில் 'எதற்காக இப்படி வேதனை நிறைந்த கதையை எழுதுகிறீர்கள்? இதனால் நீங்கள் சாதிக்கப் போவது என்ன?' என்று அலலலுற்று எழுதிய சில பேர்களுக்கு ஒரு சின்ன விளக்கம் கொடுக்கவே இந்த என்னுரை:-

நளினிதளக த ஜலமதி தரலம்;
தத் ஜீவித மதிசய சபலம்;
வித்தி வ்யாதிய்யாபிமான க்ரஸ்தம்;
லோகம் ஸோகஹதம் சமஸ்தம்.

– பஜ கோவிந்தம்

தாமரை இலைத் தண்ணீரைப் போல இவ்வுலக வாழ்க்கை சஞ்சலம் நிறைந்தது. நம் உயிர் நிலையற்றது. உலகம் அனைத்தும் வியாதி, அகங்காரம் இவைகளுக்கு ஆளாகியதென்றும்; சோகத்தால பீடிக்கப்பட்டதென்றும் நீ உணர்ந்து இந்த ஸம்ஸார வாகாத்திலிருந்து விடுபட கோவிந்தனை தியானிப்பாயாக – என்கிறார் ஸ்ரீ ஆதி சங்கரர், தன் பஜகோவிந்தத்தில். நான் சாதாரணப் பெண். பெரிய தத்துவத்தையோ, இல்லை உலகத்துக்கு இதுநாள் தெரியாத உண்மையையோ 'நண்டு' மூலம் எடுத்துரைக்க முன்வரவில்லை என்றாலும் ஒரே ஒரு உண்மையை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நண்டு ஒரு நிஜக்கதை.

26 FEB 2003

சீதா, ராம்குமார் வாழ்ந்து, அழிந்து நான் கண்டிருக்கிறேன்.

அவர்களின் வேதனையை நான் அறிந்து, புரிந்து கொண்டதின் விளைவே நீங்கள் படிக்கப்போகும் இந்த நண்டு கதை.

இந்தப் புத்தகத்தை அந்தக் குடும்பத்தினருக்கு சமர்ப்பணம் செய்வதில் நான் பெருமை கொள்கிறேன்.

இதைத் தொடராக வெளியிட்ட தினமணி கதிர் நிர்வாகத்தினருக்கும் எழுத உற்சாகமளித்த திரு. சாவிக்கும் இப்போது நல்லவிதத்தில் புத்தகமாக வெளியிடும் கங்கை புத்தக நிலையத்தார் அவர்களுக்கும் நன்றி.

அன்புடன்,
சிவசங்கரி

# நண்டு

## 1

பெரிய அலை ஒன்று சீறிக்கொண்டு எழுந்து, 'உங்களையெல்லாம் மூழ்க அடித்து விடுகிறேன் பார்' என்ற வேகத்துடன் பொங்கி, முன் வந்து, இருபதடி தாண்டு வதற்குள் ஆவேசம் அடங்கிப் போனதாய், நுரையாக மாறி மேட்டில் ஊறியது. அலையின் தண்ணீர் திரும்ப கடலுக்குள்ளேயே வடிந்ததும், மேட்டிலிருந்த நுரை வற்றினதும், எங்கிருந்தோ நண்டு ஒன்று தலையை நீட்டியது. சற்றே சிவந்த ஓட்டைக் கொண்ட அந்த நண்டு எதையோ பறிகொடுத்தாற்போல இப்படியும், அப்படியும் ஓடி மீண்டும் மணலுக்குள்ளேயே புகுந்து, சற்று தள்ளி மறு படியும் புது வளையிலிருந்து தன் கொடுக்கை நீட்டியது. அடுத்தாற்போல அலை ஒன்று வரவும், இருந்த இடம் தெரியாமல் போனது அந்த நண்டு. தண்ணீரோடு போய் விட்டது. போலும் என்ற எண்ணம் தோன்றி மறைவதற்குள் ஒரு அடி தள்ளி, அதே சிவந்த ஓட்டு நண்டு மண்ணிலிருந்து வெளி வந்து குடு குடுவென்று ஓடியது. ஒவ்வொரு முறை அலை வந்து மடியும் போதும் அங்குமிங்குமாய் பல நண்டுகள் தோன்றினாலும், இந்த சிவப்பு நண்டிடம் மாத்திரம் ஒரு அலாதிவேகம், துடிப்பு இருந்தது.

25 FEB 2003

கோவணாண்டிகளாக இரண்டு சிறு பையன்கள் கையில் ஒரு பையுடன் குனிந்து எதையோ பொறுக்கிக் கொண்டே வந்தார்கள். ஆள் அரவம் கேட்டுச் சிதறி ஓடிய நண்டுகளை அவர்கள் பிடிக்கும் நோக்கில் அந்த சிவந்த நண்டு மேல் அவர்கள் பார்வை போகவே அதையும் பிடிக்க முயன்றார்கள்.

கையை இடுக்கிபோல வைத்துக்கொண்டு, பையப் பைய ஒரு பிள்ளை குனிவதற்குள் மாயமாய் மண்ணுக்குள் மறைந்தது அந்த நண்டு. அலை வந்து போனதும் தலை தூக்கும்; அப்போது பிடிக்கலாம் என்று காத்து நிற்கும் பையன்களின் கைகளில் மற்ற ஏமாந்த நண்டுகள் கிடைத் தனவே தவிரவும், இது சிக்க மாட்டேன் என்றது.

"எங்கடா போச்சு?"

"வளை ஆழமா இருக்குமாடா? போய் பதுங்கி கிச்சோ?"

"தண்ணிலே போயிருக்கும்டா."

"அந்தா பாருடா. அதேதான். சிகப்பா இருக்குது பாரு. என்னமாடா அம்மாந்தூரம் மண்ணுக்குள்ளயே போயிருக்கும்?"

எமகாதக நண்டு மூன்று அடி சுற்றுப் பரப்பில் ஓடி, ஒளிந்து, மாய்மாலம் பண்ணியதால் பையன்கள் சலித்துப் போய், "இது வேணாம்டா, வா. வேறே அங்கே போய் புடிச்சுக்கலாம்" என்று திரும்பி விட்டார்கள்.

சிவப்பு நண்டு நன்றாய் வளையிலிருந்து வெளியே வந்து தனது வெற்றியை கொக்கரிக்கிற மாதிரி, கொடுக்கு களைத் தூக்கிக்கொண்டு ஒரு வட்டம் அடித்துவிட்டு மீண்டும் மண்ணுள் மறைந்தது.

"சீதா சீதா... நான் கூப்பிடறது கேட்காமல் என்ன யோசனை?"



கடலுக்கு மிக அருகில் மேடான இடத்தில் அரு கருகே அமர்ந்திருந்த இரு பெண்களில் ஒருவளான சுமித்ரா மௌனமாய் தன்னருகில் உட்கார்ந்து அலைகள் அடித்து ஓயும் மேட்டையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த சீதாவை உலுப்பினாள்.

"ம்... என்ன சுமி...?"

"நல்லபொண்ணு... இத்தனை நாழியா கூப்பிட றேன், மெதுவா என்னனு கேட்கறே!... ஆமாம் எங்கே நினைப்பு?"

பதில் சொல்லாமல் மேட்டின் சரிவை — கடலும் கரையும் இணையும் அந்த இடத்தை சீதா காட்டவும், எட்டிப் பார்த்தாள் சுமித்ரா.

"அங்கே என்ன, சீதா? எனக்கு ஒன்றும் புரியலையே!"

"அங்கே பாரேன். ஆ... அந்த நண்டைத்தான். லேசா சிகப்பா இருக்கு பாரு அதைதான்... நானும் அப்போதிலிருந்து பார்க்கறேன். அது ஒரு இடத்தில் நிலையா இருக்கமாட்டேங்கிறது. பிடிக்கப் போனால் வளைக்குள் ஒளியறது. இந்த வளையை மூடினால் கொஞ்சம் தள்ளி இன்னொரு இடத்திலேந்து தலையை நீட்டறது. பொல்லாததா இருக்கு சுமி... இரண்டு பையன்கள் இத்தனை நாழி பிடிக்கப் பார்த்தும் மாட்டலையே! எப்படி பூமியைக் குடைந்து உள்ளே போய் மறைந்து கொள்றது பாரேன்..." சீதா மறுபடியும் அந்த மர்மமான நண்டின் செயல்களிலேயே ஒன்றிப் போனாள்.

சீதா ஒரு பிரமாத அழகி இல்லை. சாதாரண முகம், மூக்கு, உருவம், உயரம், பருமன், ரொம்ப நீளமில்லாத தலைமுடி. மாநிறத்துக்கும் சற்றே கூடுதலான நிறம். இவ்வளவுதான். ஆனால் அவள் கண்கள் — ஓ! அவை இரண்டு கரிய சமுத்திரங்கள். அழகான குண்டுக் கண்களைக் காக்கும் நீளமான, அடர்த்தியான இமைகள்.

25 FEB 2003

சீதா அதிகம் பேசுவாளோ இல்லையோ, அவள் கண்கள் ஆயிரமாயிரம் பேசும். பாவங்களை உதிர்க்கும்.

சாலையில் சீதா நடந்து போனால் அவளை இன்னொருதரம் திரும்பிப் பார்க்கத் தோன்றாத நபர், அவளிடம் நின்று ஒரு கணநேரம் பேசினாலும் போதும். அவள் கண்களின் காந்தத் தன்மை இன்னொரு முறை அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தோன்றும்.

பத்தொன்பது வயதான சீதாவுக்கு அவள் குணத் துக்கு ஏற்ற விதத்தில் எப்படிப் பேர் வைக்கத் தோன்றியது என்று அவளை அறிந்தவர்கள் அனைவருமே வியந்திருக் கிறார்கள். பொறுமை, அன்பு, அடக்கம் எல்லாவற்றிலும் முழுமையாய் இருந்தாள் சீதா.

யாரிடமும் சட்டென்று வேற்றுமை காணாத குணம்; தவறு செய்பவர் எவரையும் சுபாவமாகவே உடனேயே மன்னித்துவிடும் குணம்; இவைகளெல்லாம் சீதாவிடம் வேண்டிய மட்டும் மண்டிக் கிடந்தன.

சுமித்ராவும், சீதாவும் பள்ளி நாட்களிலிருந்தே இணைபிரியாமல் பழகினவர்கள்.

ஏழாவது படிவத்தில் புதிதாக மைலாப்பூரிலிருந்த அந்த பள்ளியில், சுமித்ராவை சேர்த்தார் அவள் தந்தை. முதல் நாள் வகுப்பில் புது மாணவியாய் ஒதுங்கி நின்ற சுமித்ராவின் மதிய சாப்பாட்டு பாத்திரம் கை நழுவி விழுந்து அத்தனை தயிர் சாதமும் மண்ணோடு மண்ணாகிப் போயிற்று. சில பெண்கள் ஏதோ வேடிக்கையைப் பார்ப்பது போல சிரித்தார்கள். இன்னும் சிலர் செய்யக் கூடாத தவற்றை செய்துவிட்டதுபோல ஏளனமாய் பார்த்தார்கள்.

அது நாழிகை மௌனமாய் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்த ஒரு பெண் மாத்திரம் அருகில் வந்து சுமித்ராவின் பாவாடையில் கொட்டியிருந்த சாதத்தைத் துடைக்கவும், தரையில் கிடந்த மிகுதியை



எடுத்து சுத்தம் செய்யவும் உதவினாள். பிறகு "வா, என்னோட சாதத்தை நாம்ப சேர்ந்து சாப்பிடலாம்" என்று இவள் கையைப் பற்றி அழைத்தாள்.

அந்தப் பெண்ணின் அன்பான, பெரிய கண்கள் சுமித்ராவுக்கு ரொம்ப பிடித்தது. "உன் பேர் என்ன?" என்றாள் இவள்.

'சீதா' — என்றாள் அவள் —

இப்படி பழக்கம் ஆனதுதான்.

பிறகு பென்சில் சீவும்போது விரலை சீவிக் கொண்டு நோட்ஸ் எடுக்க முடியாமல், வரைய முடியாமல் தவித்தபோதெல்லாம் சுமித்ராவுக்கு சீதா, சீதாவுக்கு சுமித்ரா என்று உதவிக்கொண்டார்கள்.

ஏழாம் படிவத்தில் தொடங்கின இந்த பிணைப்பு இன்று இருவரும் கல்லூரியில் பி. எஸ்ஸி. படிப்பு படிப் பதற்குள் ஆலமரமாய் வளர்ந்து, விழுது படர்ந்து உறுதி யாகியது.

சீதாவின் தந்தைக்கு தனியார் நிறுவனமொன்றில் க்ளார்க் வேலை. இல்லை என்று சொல்லாமல் சுமாரான வரும்படி.

பூர்வீக சொத்தாக ஒண்ணரை கிரவுண்ட் நிலமும், அதன் நடுவில் சின்னதாய் ஒரு வீடும் மைலாப்பூரிலேயே இருந்தது ரொம்ப உபயோகமாய் இருந்தது. வாடகைத் தொல்லையாவது குறைந்தது.

கச்சேரி ரோட்டிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு சின்ன தெருவில் சீதாவின் வீடு இருந்தது. அதிருஷ்ட வசமாய் அதற்கு இரண்டு தெரு தள்ளி சுமித்ராவின் வீடும் இருக்கவே ரொம்ப சௌகரியமாகப் போயிற்று.

சீதாவுக்கு கூடப் பிறந்தவள் என்று சொல்லிக் கொள்ள ஒரே ஒரு அக்கா ஸரஸா. எம். எஸ். ஸி. படித்து முடித்த பெண்ணுக்கு நூற்றுக்கணக்கில் ஜாதகங் களை அலசி, ஒரு பையனை தேர்ந்தெடுத்து, தன் சக்திக்கும்

மேலேயே ஆயிரக்கணக்கில் செலவழித்து கல்யாணம் பண்ணிவைத்தார் சீதாவின் அப்பா.

அப்பாடா! கடனோ உடனோ இந்த மட்டும் ஒரு பெண்ணின் சுமையாவது குறைந்ததே என இரண்டு மாசம் கூட நிம்மதியாய் இருக்கவிடவில்லை, மூர்த்தி – அவா மாப்பிள்ளை.

ஜாதகத்தின் மூலம் தேர்ந்தெடுத்த பையன், குண வானாக இருப்பான் என்று எண்ணியவருக்கு மஹா ஏமாற்றம். குணத்தில் மனுஷனாய் இல்லாமல் குரங்காய் இருந்தான் மூர்த்தி. குரங்காவது பேனை எடுக்கும்; பிறகு காதை அறுக்கும். இவனிடம் அந்த வம்பே இல்லை; சதா கழுத்தறுப்புதான்.

கல்யாணமாகி இரண்டு மாதம் ஆவதற்குள் ஆடிப் பண்டிகை வந்ததும் அவன் சுயரூபம் தெரிந்து போயிற்று. 'சீருக்கு இதைக் கொண்டுவா, அதைக் கொண்டுவா' என்று ஸரஸாவை விரட்டிக்கொண்டே இருந்தான். முதல் கொஞ்ச நாட்கள் மாப்பிள்ளை என்று பொறுத்தார் சீதாவின் அப்பா. அவருடைய பொறுமைக்கு எல்லை இல்லை. ஆனால் அவருடைய பணத்துக்கு கண்டிப்பாக அது இருந்ததே!

'இப்போது இல்லை அம்மா அடுத்த வருஷத்துக் குள் செய்து போடுகிறேன்' என்றால் கேட்க மாட்டான். தாம்தூம் என்று குதிப்பான். ஸரஸா நல்லவள்; வாயில்லாப் பூச்சி. என்ன பண்ணுவாள்? 'அம்மா உங்களுக்கு நான் மேன்மேலும் கஷ்டத்தைத் தரேனே; அவரண்டை பேசவே பயமா இருக்கும்மா' என்று அழுவாள்.

ஆறுமாச காலத்திற்குள் சீதாவின் பெற்றோர் மன முடைந்து போனார்கள்.

'பணத்துக்கு நான் எங்கே போவேன்? தோட்டத் திலே விளையற மாதிரி இவன் நினைக்கறானே. எல்லாத் தையும் இவனுக்கே கொடுத்துட்டா கிழக்கடை பெண்



என்னாறது? என் பெண்ணை கிளியாட்டம் வளர்த்து பூனைக்கிட்டே கொடுத்தேனே! நல்ல ஜாதகம் பார்த்தோம் காமு' என்று மனைவியிடம் ராவெல்லாம் அரற்றுவார்.

சீதா அப்போது பள்ளியின் கடைசி படிவத்தில் படித்துக் கொண்டிருந்தாள். சின்ன வயசிலிருந்தே உடன் வளர்ந்திருக்கும் பொறுமையும், நிதானமும் கொண்ட வளாய் அப்பா படும் கஷ்டம் சகியாமல் அவரிடம் ஒரு முறை மெல்ல சொல்லியேவிட்டாள். "என்னை உங்களுக்குப் பொறந்த ஆண்பிள்ளைனு நினைச்சுக் கோங்கோ அப்பா. அக்காவுக்கு பண்ணறதைப் பண்ணி அவளை சந்தோஷமா இருக்க வழி பண்ணுங்கோ. நான் பெரியவளாகி, மேலே படிச்சு சம்பாதிக்கறேன்பா. என்னைப்பத்தி கவலைப் படாதிங்கோ." அன்றைக் கெல்லாம் இந்த உத்தமமான பெண்ணின் வார்த்தைகளை நினைத்து நினைத்து அகமகிழ்ந்தார் அப்பா.

பிரமாதமாய் சீதா படித்ததால் அவளுக்கு முதல் வகுப்பில் எஸ். எஸ். எல். ஸி. தேறுவதோ, இல்லை ஸ்காலர் ஷிப்புடன் கல்லூரியில் இடம் கிடைப்பதோ சுலபமாகவே இருந்தது.

சிநேகிதிகளைப் பிரிக்க மனமில்லாமல் சுமித்ரா வையும் அந்தக் கல்லூரியிலேயே சேர்த்துவிட்டார் அவள் தந்தை.

கல்லூரியில் சேர்ந்து ஒரு டெர்ம் ஆவதற்குள் அந்த சம்பவம் நடந்தது.

நாலு நாளாய் அப்பாவுக்கு ஜுரம். அன்றைக்குத் தான் சற்று தேவலை என்று ஆபீசுக்குப் போனார்.

மதியம் இரண்டரை மணி இருக்கும். வகுப்பில் பாடம் கேட்டுக்கொண்டு இருந்த சீதா, அருகில் இருந்த சுமித்ரா தொடையை நிமிண்டவே பார்வையைத் திருப் பினாள். வகுப்பு வாயிலில் அவர்கள் தெருவில் நாலு அகம் தள்ளி இருக்கும் பெட்டிக்கடை பையன். முகம் நன்றாகவே இல்லை. வேர்த்து விறுவிறுத்து இருந்தான்.

அவனிடம் பேசிவிட்டுத் திரும்பின லெக்சரரின் முகம் வெளிறி இருந்தது.

"சீதா, ஐ ஆம் ஸாரி டு ஸே திஸ், உங்கப்பா இறந்து விட்டாராம். உன்னை உடனே வீட்டுக்கு அழைத்து வரச் சொன்னார்களாம்."

அவர் முடிப்பதற்குள் அறையே ஆடிப்போயிற்று சீதாவுக்கு.

அப்பாவா?

இறந்துவிட்டாரா?

கத்தவில்லை; அழவில்லை. சிலைபோல இறுகிப் போனாள்.

சுமித்ராவும் உடன் வர டாக்ஸி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்கள்.

பையன் அப்பா இறந்துபோன விதத்தை விவரித்துச் சொன்னான்.

காலையில் சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்கு போனதி லிருந்தே அப்பாவுக்கு வேர்த்துக் கொட்டியதாம். வெயில் என்று இருந்தாராம். பன்னிரண்டு மணி சுமாருக்கு மாரை பிளக்கிறாற்போல வலியாம். லீவு போட்டுவிட்டு சைக்கிள் ரிக்ஷாவில் ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்தாராம். கூடத்தில் உட்கார்ந்துகொண்டு "காமு ஒரு வாய் ஜலம் கொண்டா" என்றாராம். அம்மா வருவதற்குள் தலை தொங்கிப் போய் விட்டதாம். அம்மா அலறிக்கொண்டு யாரையோ கூப்பிட்டு டாக்டரை அழைத்து வரச் சொன்னாளாம். அரைமணிக்குள் எல்லாம் முடிந்தேவிட்டதாம்.

பிறகு... பிறகு என்னவாயிருந்தால் என்ன?

அப்பா போன கதை அவ்வளவுதான்.

பிணம் கிடக்கும் போதே மூர்த்தி வந்து கூத்தடித் தான் "வீடு என் பெண்டாட்டிக்குத்தான் வரணும். இல்லை,



சரிபாதி சொத்தைப் பிரித்துக் கொடு" என்று ரசாபாசமாய் கத்தினான்.

எல்லாரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கை யில் அம்மாவும், சரளாவும் அதிர்ச்சியால் ஊமைகளாகி நிற்க, சீதா மட்டும் அவனிடம் வந்தாள் "அத்திம்பேர்! உங்களுக்குக் கொடுக்காமல் ஒரு பைசாகூட அம்மாவோ, நானோ எடுத்துக்க மாட்டோம். என் வார்த்தையை நம்புங்கோ. அப்பா பேரிலே சத்யமா சொல்லறேன். இப்ப காரியங்கள் முதலில் நடக்கட்டும்!" கெஞ்சும் குரலில் அவள் கேட்டதுக்கு அவன் கட்டுப்பட்டு வாயை மூடிக் கொண்டான்.

அப்பா ஆபீசிலிருந்து அக்கா கல்யாணக் கடனைக் கழித்துக் கொண்டு பிராவிடண்ட் பண்ட், அது இது என்று கொடுத்ததும், இன்ஷூரன்ஸ் மூலமாகவும் ரொக்கமாய் கிட்டத்தட்ட இருபதாயிரம் வந்தது.

"வேண்டாமடீ, சொன்னால் கேளு. அந்த மனுஷ னுக்கு ஒன்றும் வாண்டாம். நான் அனுபவிக்கிறதை அனு பவிக்கிறேன்" என்று ஸரளா தடுத்தும் மூர்த்தியிடம் பத்தா யிரத்தைத் தூக்கிக் கொடுத்தாள் சீதா.

தனியாக இருக்கும்போது அம்மாவிடம் "அக்காவை இனியாவது அத்திம்பேர் சௌக்யமாய் வைச்சிக்கட்டும்மா. அதுதான் நமக்கு முக்கியம்" என்றாள். பிறகு "நமக்கு எதுக்கும்மா இத்தனை பெரிய வீடு? நாம்ப சின்னதாய் பின்னால் ஒரு அவுட் ஹவுஸ் கட்டிண்டு இதை வாடகைக்கு விட்டுடலாம், எனக்கு ஸ்காலர்ஷிப் இருக்கு நாம்ப சாப்பிட இந்த வாடகை போதாதா" என்றாள்.

அம்மா சம்மதித்தாள்.

ஓட்டுக் கட்டிடத்தில் அவுட் ஹவுசும் பெரிய வீட்டின் மொட்டை மாடியில் ஒரு சின்ன அறையும் சுமித்ராவின் தந்தையின் உதவியுடன் கட்டினாள் சீதா. சீதாவின் நம்பிக்கை வீண் போகவில்லை. நகரத்தின் மையப்

பகுதியிலிருந்த அந்த வீட்டை இருநூற்றைம்பது ரூபாய் வாடகைக்கு ஒரு வியாபாரி எடுத்துக்கொண்டார்.

தெருவே அதிசயித்தது! இந்தச் சின்னப் பெண்ணுக்குள்ள சாமர்த்தியத்தைப் பாரேன் என்று!

எல்லாம் ஒருவழியாய் நடந்து முடிந்த அன்று மட்டும் சுமித்திராவின் வீட்டுக்குப் போன சீதா, அவளுடன் கற்பகாம்பாள் கோவிலுக்குப் போனாள். இருட்டில் ஒரு மூலையாய் மணலின் அமர்ந்துகொண்டு, 'கடவுள் என்னை காப்பாத்திட்டார் சுமி' என விசித்து விசித்து அழுதாள். அப்பாவின் மறைவின்போதுகூட கலங்காத சீதா அன்று மட்டும் தன் சுமைகளை இறக்கி வைத்தவளாய் ஆத்ம சிநேகிதியிடம் மனம் விட்டு அழுதாள்.

"என்ன சுமி-என்ன சொல்லிட்டு நீ எந்த கோட்டையைப் பிடிக்க இப்படி யோசனையில் மூழ்கி இருக்கே?"

பழைய நினைவுகளிலிருந்து மீண்டாள் சுமித்திரா. வலுவான இதயமும், மலர்ந்த முகமும் கொண்ட அன்பான சீதாவைப் பார்த்து லேசாய் முறுவலித்தாள்.

"எல்லாம் உன்னைப் பத்திதான். நாள்தான் எத்தனை வேகமா போறது?... ம்... சரி... வா, இருட்டப் போறது, போலாம்"

சிநேகிதிகள் ஒன்றாய் எழுந்து நடந்தார்கள்.

சீதாவின் தெருமுனை திரும்பும்போது, அவள் வீட்டு வாசலில் ஒரு ஸ்கூட்டர் நின்றிருந்தது. உள்ளேயிருந்து வந்தவர்களில் ஒருவனை அவர்களுக்குத் தெரியும். கச்சேரித் தெரு வக்கீல் பிள்ளை ஸ்ரீதரன். கூட நிற்பது — உயரமாய், சிவப்பாய் நெடு நெடுவென்று தமிழ்க்காரன் அல்லாத ஜாடையுடன் நிற்பது யார் என்றக் கேள்விக் குறியுடன் சுமித்ரா பார்க்கவும் 'எனக்குத் தெரியாது' என்பது போல தலையை ஆட்டி தோளைக் குலுக்கினாள் சீதா.



## 2

"ஏம்மா சுமி, இருட்டிப் போச்சே. வீட்டுக்கு வரதுக்கு ஏன் இத்தனை நேரம்? எங்கே, கோவிலுக்கா போயிருந்தேள்?"

அம்மா கேட்டது காதிலேயே விழாதவளாய் கூடத்தில் அமர்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்த தந்தையிடம் நேரே போய் நின்றாள் சுமித்ரா.

"அப்பா ஒரு குட் நியூஸ்; சீதாவோட வீட்டின் மாடி அறைக்கு ஒரு குடித்தனக்காரர் வந்தாச்சு."

"வெரி குட்... கிட்டத்தட்ட மூணு மாசமாய் பூட்டி இருந்ததுக்கு ஒரு வழியா ஆள் வந்ததா? குட்... யாரும்மா வரப்போறது?" மனப்பூர்வமான சந்தோஷம் அவர் குரலில் ஒலித்தது.

சுமித்ராவின் தந்தை கோபாலன் எல். ஐ. ஸியில் ஆபீசராக இருக்கிறார். சுமித்ராவைத் தவிர இரண்டு சின்னப் பையன்கள் உண்டு. சௌகரியமான வாழ்க்கை நிறைந்த குடும்பம் கோபாலனுடையது.

சின்ன வயசிலிருந்தே சீதாவுக்கும் தன் மகள் சுமித்ராவுக்கும் இடையே எழுந்த சிநேகிதத்தின் ஆழத்தை, உண்மையை, உணர்ந்து கொண்டதோடல்லாமல் ஊக்கமும் கொடுத்தவர்.

தந்தையை இழந்த பிறகு, பொறுப்பில்லாத அத்திம்பேரை சமாளித்து, ஒருவரிடமும் கையேந்தி

25 FEB 2008

நீங்காமல் தன் குடும்ப விவகாரத்தைத் திறம்பட சீதா நடத்துவதில் சுமித்ராவைவிட அவருக்கே பெருமை அதிகம். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேல் சீதா வீட்டில் குடியிருந்த வியாபாரி வியாபாரம் நொடித்துப் போய் சொந்த ஊருக்கே போனதும், தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி உடனடியாக வீட்டுக்கு மற்றொரு குடித்தனத்தை ஏற்பாடு செய்துவிட்டார்.

சென்னைக் கல்லூரி ஒன்றில் லெக்சரராக இருக்கும் சம்பந்தம், 'நாங்கள் குழந்தை குட்டி இல்லாதவர்கள். என் மனைவியும் வேலை பார்க்கிறா. பாதி நாள் வீட்டிலே இருக்கமாட்டோம். அதனாலே எங்களுக்கு மாடி அறை வேண்டாம். கீழ் போர்ஷன் மட்டும் போதுமானது. தர முடிந்தால் வருகிறோம்' என்று சொன்னபோது "பரவாயில்லை, ஒப்புக்கொள் சீதா. இதற்கே இவர்கள் இருநூற்றைம்பது ரூபா தரத் தயாராயிருக்கா. மாடியை யாருக்காவது ஐம்பது ரூபாய்க்கு தாராளமாய் விடலாம். நச்சு பிச்சு இருக்காது" என்று கோபாலன் அடித்துப் பேசி அவர்களை சீதாவின் இல்லத்திற்கு குடி பெயரச் செய்தார்.

அவர்கள் குடிவந்து மூன்று மாசத்திற்கு மேலேயே ஆகியும் திருப்திகரமாய் ஒருவரும் மாடி அறைக்கு குதிரவில்லையே என்று அவர் எண்ணிக்கொண்டிருந்த ஒரு நாளில் சுமித்ரா ஆள் வந்துவிட்டதை அறிவித்தாள்.

"நானும் சீதாவும் பீச்சுக்குப் போயிட்டு திரும்பி னோமா, வாசல்லே ஸ்கூட்டர் இருந்தது. கச்சேரித் தெரு வக்கீல் ராமானுஜம் இல்லே, அவர் பிள்ளை ஸ்ரீதரன் இன்னொருத்தனோட வந்திருந்தான். பேர் ராம்குமார் சர்மாவாம். ஹிந்திக்காரன், இங்கே ஸ்ரீதரனோட கம்பெனியிலே புதுசா சேர்ந்திருக்கானாம். பத்து நாளாய் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் இருந்தவன், 'எனக்கு அமைதியான இடத்திலே ஒரு ரூம் கிடைச்சால் பாரேன்'னு இவனிடம் சொன்னானாம். ஸ்ரீதருக்கு இந்த மாடி அறை ஞாபகத்துக்கு வந்து கூட்டிண்டு வந்திருக்கான். மாடியிலே ஒரு பாத்ரூம்



போட்டுக் கொடுத்தா எழுபத்திஐந்து ரூபா வரைக்கும் தரேன்ங்கறான்ப்பா... உங்களைக் கேட்டுட்டு நாளைக்கு சொல்றதா சீதா சொல்லியிருக்கா... நீங்க என்னப்பா நினைக்கிறேள்...?"

மூச்சு விடாமல் பேசித் தீர்த்தாள் சுமித்திரா.

"ஹிந்திக்கார பிள்ளையா? அவனெதுக்குடி ஊரை விட்டு இங்கே வந்து இருக்கான்? அது சரி, சீதா அத்திம் பேரை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?" சுமித்திராவின் தாய் கேட்ட இதே கேள்வியைத்தான் காமுவும் தன் மகளிடம் அதே வினாடியில் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"ஏம்மா, உங்க அத்திம்பேரிடம் வேணா ஒரு வார்த்தை கேட்கறயா?"

"அதுக்கு அவசியம் இல்லேம்மா. எதுக்காக அவரை இதுலே இழுக்கணும்? அப்புறம் அது இதுனு ஆயிரம் சொல்வார்" மெதுவாகப் பதிலுரைத்தாள் சீதா.

"பாத்ரூம் போட்டுத் தரச் சொல்றானே. நமக்கு கட்டுபடியாகுமாம்மா? மேலும் ஹிந்திக்கார பிள்ளை யாண்டானாக இருக்கிறானே! சாஸ்வதமா இருப்பானா? நீ என்ன நினைக்கறே?" அம்மாவின் கவலை சீதாவுக்கு நன்கு புரிந்தது.

"ஸ்ரீதரன் குடும்பம் நல்ல குடும்பம்மா; அவா சொன்னா நல்ல மனுஷனாதானே இருக்கணும்! எதுக்கும் நான் நாளைக்கு கோபால மாமாகிட்டே ஒரு வார்த்தை கேட்கிறேன். பிறகு பதில் சொல்லலாம் என்ன?" என்று விஷயத்தை அத்துடன் முடித்துவிட்டாள் சீதா.

மறுநாள் கோபாலன் சொன்ன கருத்தையே தன் மனமும் ஆதரித்ததால் கையிலிருந்த பணத்தையும், லெக்சரர் தம்பதி அட்வான்ஸாகக் கொடுத்த பணத்தையும் போட்டு உடனுக்குடன் ஒரு சின்ன பாத்ரூம் கட்டினாள் சீதா.

அடுத்த ஒன்றாம் தேதி மூன்று மாச அட்வான்ஸை கொடுத்துவிட்டு அந்த வீட்டில் குடியேறினான் ராம்குமார் சர்மா.

முதல் நாள் நண்பனுடன் வந்தபோதே வீட்டின் சூழ்நிலையும், தோட்டமாய் நின்ற மரங்களும் அவனைக் கவர்ந்தன. மரக்கதவு கேட்டுகளைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனால், பச்சைக் குடையாய் ஆகாயம் தெரியாமல் படர்ந்து கிடந்த இரண்டு மகிழ மரங்கள். தரையெல்லாம் முதல் நாள் பூத்துக் கொட்டிக் கிடக்கும் பூக்கள். அதன் இனிமையான மணம்.

வீட்டின் வெளி வராந்தாவிலிருந்து மாடிக்குப் படி இருந்தது. படி ஏறியதும் சின்னது என்றோ, இல்லை பெரியது என்றோ திட்டமாய் சொல்ல முடியாதபடி அறை. புத்திசாலித்தனமாய் இரண்டு பெரிய ஷெல்புகளும், ஓரமாய் ஒரு மேடையும் போட்டே கட்ட கோபாலன் சொல்லியிருந்தது சௌகரியமாய் இருந்தது.

அறையின் கிழக்குக் கோடியிலிருந்த வாசல் வழியே வெளியே போனால் மொட்டை மாடி; அதில் பாத்ரூம்.

பிரமாதமாக வாடகை கொடுக்காமலே தன் மனசுக்கு ஏற்ற விதத்தில் ஒரு இடம் கிடைத்ததில் குமாருக்கு திருப்தி. அதிலும், காமாட்சி அம்மாளும் சரி, அவர் மகள் சீதாவும் சரி முதல் நாளிலிருந்தே அவனிடம் நடந்துகொண்ட விதமும் ரொம்ப பிடித்தது.

தேவையான கேள்விகளை மட்டுமே கேட்டார்கள். யார், எங்கு வேலை, தீர்மானமாக இரண்டு வருஷங்களாவது இருப்பானா, இப்படி மட்டுமே! அவர்களுக்கு சம்பந்தமில்லாத வம்பு கேள்விகள் ஒன்று கூட இல்லை. காமாட்சி அம்மாளிடம் ஸ்ரீதரன் என்னவோ கொஞ்ச நேரம் தமிழில் பேசிக்கொண்டிருந்தான். அவன்



இவனிடம் திரும்பி ஆங்கிலத்தில் கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னான்.

முதல்நாள் போய்விட்டு வந்தபிறகு இரண்டு நாட்கள் கழித்து, ஸ்ரீதரன் 'ஒன்றாம் தேதியிலிருந்து நீ குடி போகலாம் குமார். அவர்கள் பாத்ரூம் கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு, சீதாவின் குடும்பத்தைப் பற்றி, அவள் தந்தையின் அகால மரணத்தைப் பற்றி, அவளுடைய பொறுப்பில்லாத அத்திம்பேரைப் பற்றி, அவளுடைய பொறுப்பான குணத்தைப் பற்றி, புத்திசாலித்தனத்தைப் பற்றி, அம்மாவிடம் கொண்டுள்ள அன்பைப் பற்றி சில வரிகளில் சொன்னான். "ஸின்ஸ் யூ ஆர் கோயிங் தோ ஆஸ் தெயர் டெனென்ட்; ஐ தாட் தட் யூ ஷுட் நோ அட் லீஸ்ட் திஸ் டீடெயில்ஸ்..." என்றும் சேர்த்துச் சொன்னான்.

பதில் ஒன்றும் சொல்லாத குமாரின் மனசில் மட்டும் சீதாவைப் பற்றின உயர்ந்த எண்ணம் உருவாகிப் போனது.

குடிவந்த முதல் சில நாட்களுக்கு காலையில் ஒன்றுமே அருந்தாமல், ஒரு வழியாய் குளித்து, உடை உடுத்தி வெளியே போய் உணவருந்திவிட்டு அலுவலகத்துக்குப் போனான் குமார். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல காலையில் காபி குடித்தால் தேவலை என்று தோன்றவே, ஸ்ரீதரனின் உதவியுடன் ஒரு எலக்ட்ரிக்கல் ஸ்டவ், சில அத்யாவசியமான பாத்திரங்கள், நெஸ்கபே டின் சர்க்கரை இவைகளை ஒரு நாள் வாங்கி வந்தான்.

"பாலுக்கு காமாட்சி அம்மாளிடம் சொல்லி ஏற்பாடு பண்ணிக்கொள்" என்று ஸ்ரீதரன் சொல்லவே, அந்த பதினைந்து நாட்களில் முதல் முறையாய் வீட்டின் பக்கவாட்டில் செல்லும் பாதை வழியாகப் போய், பின்னால் இருந்த அவுட் ஹவுசின் முன் நின்று "மா" என்று அழைத்தான் குமார்.

சீதா அன்றைக்குப் பார்த்து கல்லூரியிலிருந்து வரவில்லை.

"மா" என்ற அடக்கமான அழைப்பு கேட்டு காமாட்சி வெளியில் வந்தாள்.

"வாங்கோ" என்றழைத்து குமாரை ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தாள். பிறகு 'என்ன?' என்று சைகையால் கேட்டாள்.

குமாருக்கு தமிழ் தெரியாது. காமாட்சிக்கு ஆங்கிலமும் தெரியாது; ஹிந்தியும் தெரியாது.

"ஐ வாண்ட் ஸம் மில்க் ஃபார் மார்னிங் காபி கான் யூ ப்ளீஸ அரேன்ஜ் ஃபார் இட்?" தயங்கித் தயங்கி குமார் கேட்டதில் அவளுக்கு 'காபி' என்ற ஒரு வார்த்தைதான் புரியவே, 'இருங்கள்' என்பது போல கையை காட்டிவிட்டு பாவம் பிள்ளை; நல்ல காபி வேணும் என்கிறான் போல இருக்கிறது என்று எண்ணியவளாய உள்ளே சென்று சீதாவுக்காக வைத்திருந்த பாலில் எடுத்து சூடாய் காபி கலந்து குமாரின் முன் வைத்தாள். அன்பாய் "எடுத்துக் கோங்க" என்றும் சொன்னாள்.

தான் கேட்டது அவளுக்கு புரியவில்லை என்பது குமாருக்குத் தெரிந்தது. என்ன செய்வது என்று புரியாமல் தவித்தவன் அவள் கொடுத்த காபியைக் குடித்துவிட்டு "தேங்க்ஸ் மா ஐ வில் கம் லேட்டர்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

மாலை இருள் மங்கும் சமயத்தில் சீதா வந்தாள். முகம் அலம்பிக்கொண்டு, காபி குடித்துவிட்டு நெத்திக்கு இட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் நினைப்பு வந்தவளாய் காமாட்சி "அந்த பிள்ளையாண்டான் வந்திருந்தான் சீதா. நல்ல காபி குடிச்சு நாளாச்சோ என்னமோ? காபி வேணும்னான், குடுத்தேன். அப்புறம் ஏதோ சொல்ல தவிச்ச மாதிரி இருந்தது. பாஷை தெரியாத சங்கடம். ரெண்டு பேரும்



முழிச்சோம்! நீ வேணா அவனுக்கு என்ன வேணும்னு கேட்டுண்டு வாயேன்" என்றாள்.

குடி வந்த இத்தனை நாட்களில் மொட்டை மாடியில் விளக்கைப் போட்டுக்கொண்டு அவன் ஏதோ படிப்பதை சீதா பார்த்திருக்கிறாள். எப்போதாவது இவள் பார்வையும், அவன் பார்வையும் சந்திக்க நேர்ந்தால் சின்ன முறுவல் ஒன்று தோன்றும், அவ்வளவுதான்,

அம்மா கேட்டதின் பேரில் அன்று மாடிக்குப் போனாள் சீதா.

துப்புறவாய் இருந்தது அறை. இந்தக் காலத்துப் பையன்கள போல போட்டது போட்ட இடத்திலில்லாமல் அதனதன இடத்தில இருந்தது.

ஒரு கட்டில், எழுத ஒரு மேஜை, ஒரு நாற்காலி, இரண்டு போட்டோக்கள். ஷெல்ஃப் நிறைய புத்தகங்கள்.

சீதா நுழைந்தபோது அவன் எழுதிக்கொண்டிருந்தான்.

"எக்ஸ்க்யூஸ்மீ. மே ஐ கம் இன்?"

ஆழ்ந்த நிசப்தத்தில் மெல்லியதாய் ஒலித்தது சீதாவின் குரல்.

"வாருங்கள்" என்று எழுந்து நின்று வரவேற்றான் ராம்குமார். சீதாவின் வருகையை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முகத்திலே தெளிவாகியது

சீதா உள்ளே வராமல் அறை வாசலில் நின்று கொண்டாள். "நீங்கள் வந்தீர்களாம், அம்மா சொன்னாள். ஏதேனும் உதவி வேண்டுமா?" சரளமான ஆங்கிலத்திலேயே அவர்கள் உரையாடல் தொடர்ந்தது.

"காலையில் எழுந்து காபியை நானே தயாரித்துக் கொள்ள உத்தேசம். அதற்கு ஒரு பால்காரனை ஏற்பாடு பண்ணித்தர முடியுமா என்று அம்மாவிடம் கேட்டேன்.

அவர்களுக்கு நான் கேட்டது புரிந்ததோ என்னமோ?" சற்றே வெட்கப்பட்டுப் போனதால ராம்குமாரின் சிவந்த முகம் இன்னும் சிவந்து போயிற்று.

'ஓ இவன் ஒரு சங்கோஜமுள்ள ஆண்!' என்று மனசில நினைத்துக் கொண்டாள் சீதா. அதே சமயத்தில் இவன் காபி கேட்டதாக எண்ணிக்கொண்டு காபி கலந்து கொடுத்த தாயின் செய்கை நினைவுக்கு வரவே, அவளையும் அறியாமல் உதடுகள் விரிந்தன. பிறகு ராம் குமார் தவறாக எண்ணக்கூடாதே என்ற நினைப்பும் எழ "இது என்ன பிரமாதம். எங்கள் பால்காரனையே உங்களுக்கும் தரச் சொல்லுகிறேன். அவ்வளவுதானே? இன்னும் வேறு ஏதாவது தேவையா? அறை சௌகரியமாய் இருக்கிறதா?"

மேலும் ஓரிரு நிமிடங்கள் பேசிவிட்டு சீதா தன் இல்லத்திற்குப் போய்விட்டாள்.

"என்னம்மா, நீ! அவன் பால்காரன் ஏற்பாடு பண்ணச் சொன்னால், காபி கேட்டான், கொடுத்தேன்ங்கறயே, உன்னை நிமிஷமாய் ஏமாத்திடலாம்மா" என்று அவன் சொல்லிச் சிரிக்கவும், கூடச் சேர்ந்து சிரித்தாள் காமாட்சி.

அதன் பிறகு சீதாவும், குமாரும் எப்போதாவது சந்திக்க நேர்ந்தால் 'பால் சரியாக கொடுக்கிறானா? தண்ணீர் குழாயில் தாராளமாய் வருகிறதா?' என்று அவளும், 'அம்மா சௌக்கியமா?' என்று இவனும் கேட்டுக் கொள்வார்கள்.

சீதா கண்ணைக் கவரும் அழகி இல்லை என்பது முதல் நாளே குமாருக்குப் புரிந்தது என்றாலும், அவளுடன் நின்று பேசும்போது, கண்கள் விரிந்து இமைகள் துடிக்கும் போதும், அவளுடைய உள்ளத்தின் அழகெல்லாம் முகத்துக்கு வந்துவிட்டாற் போலத் தோன்றியது.



சீதாவைப் பற்றி ஸ்ரீதரன் சொன்னதைக் கேட்டபோதே அவள் மேல் அவனுக்கு உண்டான நல்லெண்ணம், நாளாக ஆக அவளை, அவள் நடத்தையைப் பார்க்கப் பார்க்க இன்னும் கூடியது என்றுதான் சொல்லவேண்டும்.

மாடியிலிருந்து சீதாவின் இல்லத்தை நன்கு கவனிக்கலாம். குடி வந்த சில மாதங்களில் அவளைப் பற்றி நிறைய தெரிந்துகொண்டான் குமார். கல்லூரியில் பைனல் இயர் படிக்கும் சீதா பெண்மை நிறைந்தவளாகவும், அதே பொறுப்புள்ளவளாகவும் இருந்தாள்.

காலையில் எழுந்து அம்மாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு, கல்லூரிக்கு சிநேகிதியுடன் போவாள். மாலையில் எந்நேரத்துக்கு வந்தாலும், அம்மாவுக்கு வீட்டு வேலைகளில் தானாகவே வலிய சென்று உதவுவதையும் பார்த்திருக்கிறான். அவள் சிநேகிதி சுமித்ரா அவள் மனசுக்கு ரொம்ப இனிமையானவள் என்பதும் குமாருக்குப் புரிந்தது.

திரும்பத் திரும்ப நான்கு, ஐந்து புடவைகளையே சீதா மாற்றி மாற்றிக் கட்டுவதிலிருந்து அவளிடம் அதிக உடைகள் இல்லாமல் இருந்தாலும், அவள் உடைகளைப் பேணி சீராக உடுத்தும் விதம் அழகாகவே இருந்தது. தோட்டக் கலையில் சீதாவுக்கும், அவள் அன்னைக்கும் விருப்பம் என்பது அவுட் ஹவுஸைச் சுற்றி வைத்திருந்த மல்லிகை, கனகாம்பரம், ரோஜா செடிகள் மூலமும், ஒரு சில காய்கறிப் பாத்திகள் மூலமும் தெளிவாயிற்று.

எல்லாவற்றிற்கும் மேலாக வாடகையில் வரும் பணத்தை சீதா திறமையாய் கையாளும் விதத்தையும் அவன் பார்த்தான்.

என்றைக்காவது ஒரு நாள் அத்தி பூத்தாற் போல அவள் இல்லத்திற்கு வரும் சகோதரியை குமார் பார்த்திருக்கிறான். 'மை ஸிஸ்டர் ஸரஸா' என்று அறிமுகம் கூட சீதா செய்வித்திருந்தாள்.

தந்தை இறந்தபின் சீதா கொடுத்த பத்தாயிரத்தில் ஒரு சின்ன கைத் தொழிலைத் தொடங்கி இருந்தான் மூர்த்தி. ஓரளவுக்கு லாபமாகவே அது நடந்ததாலும், ரொம்ப ஒட்டிக்கொண்டால் சீதாவையும், அவள் தாயையும் காப்பாற்றும் பொறுப்பு தன் தலையில் விழுந்து விடுமோ என்ற பயத்தாலும் முன்னைவிட ஒதுங்கியே இருந்தான் மூர்த்தி.

அம்மாவின் கௌரவத்தைக் காப்பாற்ற சீதா மட்டும், கார்த்திகை சங்கராந்தி என்று விடாமல் தன்னால் இயன்ற அளவுக்கு சீர்களை எடுத்துக்கொண்டு, முதல் நாளே அக்காவிடம் கொண்டு கொடுத்துவிடுவாள்.

தன் மனமறிந்து சீதா செயல்படுவதில் காமுவுக்கு ஏக பெருமை.

"அம்மா என்னாலே உனக்கு காலணா பிரயோஜனம் இல்லை. ஆனா சீதா உனக்கு ஆண்பிள்ளை தாம்மா. அவ நன்னா இருக்கணும்மா..." என்று ஸரஸு சொல்லி அழுதபோது, கணவனைப் பறித்துக்கொண்ட கடவுள் தனக்கு சீதாவைக் கொடுத்து ஓரளவு ஆறுதலாவது தந்திருக்கிறாரே என்று தேற்றிக்கொள்வாள் காமு.

"தெய்வம் ஒண்ணு இருக்கு சீதா, இல்லைன்னா, நம்மை மாதிரி ஆண் இல்லாத குடும்பங்கள் நிர்மூலமா நிக்கறச்சே, நாம்ப மட்டும் இப்படி சௌக்யமா ஏன் இருக்கணும்!" என்று சதா சீதாவிடம் சொல்லவும் செய்வாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை ரொம்ப நாள் கழித்து பிறந்தகம் வந்த ஸரஸாவை அழைக்க மாலையில் மூர்த்தியே வந்தான். வந்தவன் கண்ணில் மாடியில் நின்ற ராம்குமார் தெரிந்தான்.

"யாரவன் சீதா?" என்று மரியாதையில்லாமல் சீதாவிடம் கத்திக் கேட்கவும் செய்தான்.



நல்ல வேளை அவருக்கு தமிழ் தெரியாது என்று நிம்மதியுற்ற சீதா, குமார் மாடியில் வாடகைக்கு இருப்பதையும், மற்ற விவரங்களையும் சொன்னாள்.

ஒரு ஆண் பிள்ளையை குடி வைக்குமுன் தன்னைக் கேட்கவில்லை என்ற எண்ணங்கள் தோன்றவும் கத்தினான் மூர்த்தி.

ரொம்ப நாளைக்குப் பிறகு அவன் வாய் அதிகமாகவே பேசியது. சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு "நீ வா ஸரஸு; உன் தங்கைக்கு தானா எல்லாம் பண்ணிடுவோம்ங்கிற 'திமிர்' இருக்கு. நாமெல்லாம் மனுஷாளாத் தெரியறதில்லை. பொண்ணுக்குத் தெரியாட்டா அம்மா சொல்லவா வாண்டாமா? சரி சரி நீ வா..." என்று கோபமாய் பேசிவிட்டுக் கிளம்பினான்.

மாடி அறையிலிருந்து எதற்காகவோ மொட்டை மாடிக்கு வந்த ராம்குமார் 'கீழே என்ன கலாட்டா?' என்ற நினைப்பில் சற்றே எட்டிப் பார்க்கவும் மூர்த்தியின் கோபம் கூடிப்போயிற்று.

"ஹௌ கேன் கீப் எ பாச்சிலர் வென் தேர் ஈஸ் அன் அன்மாரிட் கேர்ல் இன் தி ஹௌஸ் (கல்யாணமாகாத பெண் இருக்கும் வீட்டில் ஒரு பிரம்மச்சாரியை எப்படி குடி வைக்கலாம்?) ஹூம்... காலம் கெட்டுப் போச்சு... வரம்பு, அடக்கம் எல்லாம் போச்சு" என்று ராம்குமாரின் காது கேட்கவே முதல் சில வரிகளை ஆங்கிலத்திலும், பிற்பாடு தமிழிலும் சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியே நடந்தான்.

குமாருக்கு எது புரிந்ததோ இல்லையோ மூர்த்தி ஆங்கிலத்தில் சொன்ன வரிகளின் அர்த்தம் புரிந்து காது சிவக்க 'என்ன இது' என்பது போல சீதாவைப் பார்த்தான்.

அவனை நிமிர்ந்து நோக்கின சீதாவின் பெரிய கண்கள் 'மன்னித்து விடுங்கள்' என்று அவனிடம் கேட்பதாகவே குமாருக்குத் தோன்றியது.

## 3

சம்பந்தத்திற்கும் உமாவிற்கும் திருமணமாகி ஆண்டுகள் இருபது ஆகியும் குழந்தைப்பேறு மட்டும் வாய்க்கவில்லை. எம். ஏ. முடித்துவிட்டு உதவி பொருளாதார விரிவுரையாளராக அவர் சென்னைக் கல்லூரியில் பதவி ஏற்கும்போது அவருக்கு வயசு 22. 'நம்ம சமூகத்திலே இத்தனை வயசாகியும் கட்டிக்காம இருந்தா எதுனாச்சும் சொல்லுவாங்க தம்பி. முறைப் பொண்ணு உமா பள்ளி முடிச்சிட்டா. நீ 'உம்'னா முடிச்சிடலாம். என்ன சொல்றே?' என்று சதா தாய நச்சரித்தது தாங்காது உமாவை சம்பந்தம் மணக்கும் போது அவருக்கு வயது 24. உமாவிற்கு 16.

இரண்டு வருஷ காலம் வரைக்கும் பொறுமையாயிருந்த பெற்றோருக்கு வருஷம் ஆக ஆக பேரப் பிள்ளை பிறக்காதது பெரிய குறையாய்ப் போயிற்று. ஒரு பூஜை புனஸ்காரம் பாக்கி இல்லை. ஒரு கைதேர்ந்த டாக்டர் மிச்சமில்லை. எல்லாம் ஆகியும் வயிறு திறக்கவே இல்லை.

வீட்டிலுள்ள மற்ற பெரிய பெண்மணிகளுடன் கூடிக் கொண்டு சதா வம்படிக்கும் குணம் உமாவிடம் ரொம்ப கூடிப்போனதும், பார்த்தார் சம்பந்தம் — வீட்டோடு உமாவை வைத்திருந்தால் அவள் மனம் இன்னும் ஏங்கிப் போகிறது என்று உணர்ந்து, பலவந்தமாய் அவளை தபாலில் பி. ஏ. படிக்கச் சொல்லி வெற்றியும் கண்டார். பிறகு அருகிலிருந்த இன்ஸ்டிட்யூட்டிற்குச் சென்று ஷார்ட் ஹாண்ட், டைப்ரைட்டிங்கும் படிக்க வைத்தார்.



"ஏங்க.. எனக்கு என்னத்துக்கு இதெல்லாம்... வேணாங்க..." என்று உமா சொன்னதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. என்ன செய்தும் சதா வீட்டில் இருப்பதால் வம்பு பேசும் குணமும், குழந்தை இல்லையே என்ற ஏக்கமும் இன்னும் வளரவே செய்ததால் யோசித்தார் சம்பந்தம். தெரிந்தவர் ஒருவர் மூலம் உமாவுக்கு தேனாம்பேட்டையிலிருந்த ஒரு கம்பெனியில் டைப்பிஸ்ட் உத்தியோகத்தையும் வாங்கிக் கொடுத்தார்.

"என்னங்க இது; நான் வேலைக்குப் போனா வீட்டு வேலை என்னாறது? வேணாங்க" என்று முதலில் தீவிரமாய் ஆட்சேபித்தாலும் போகப் போக, வீட்டிற்கு வெளியே போய் வருவது உமாவுக்கு புது தெம்பையே அளித்தது. அவள் அதிருஷ்டம் வேலையும் அதிகமில்லை. சம்பளமோ முந்நூறுக்கும் மேல்.

மண்ணடியிலிருந்து வேலைக்கு வந்து போவது மனைவிக்கு சிரமமாக இருந்ததால் அருகிலேயே குடி போக நினைத்தவருக்கு, சீதாவின் வீடு கிடைத்தது.

தாராளமாக புழங்க இடம்; வாசலில் காம்பௌண்ட், ஜிலுஜிலுவென்று காற்று, மண்ணடியைப் போல ஒண்டுக் குடித்தனக்காரர்களின் தொல்லை இல்லை. தெரு இறங்கி கச்சேரி ரோடில் நடந்தால், பஸ் ஸ்டாப், மார்க்கெட், லஸ் கார்னர். ஆக மொத்தம் புது வீடு உமாவுக்கு ரொம்பப் பிடித்தது — ஒன்றே ஒன்றைத் தவிர.

சீதாவின் அமரிக்கையான குணத்தையும், வேலை செய்யும் பாங்கையும் ஸ்காலர்ஷிப்பில் படிக்கும் புத்தியையும் தன் கணவர் அவ்வப்போது புகழ்வது மட்டும் அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. கணவர் மேல் நம்பிக்கை இல்லை என்பதினால் அல்ல; தான் வாங்க முடியாத புகழுரைகளை சின்னப் பெண் வாங்குகிறாளே, என்ற ஆதங்கத்தால்தான்.

"வாசலை நீ கூட்ட வேண்டாம் வேலைக்காரி யிடம் சொல்லியாவது கூட்டச் சொல்லக்கூடாதா? சீதா வின் வீட்டு வாசலைப் பாரு" — என்பார் ஒரு நாள்.

"வீட்டு முன்னால் எவ்வளவு இடமிருக்குது! கொத்து ரெண்டு மல்லிச் செடி வைக்கக்கூடாதா, உமா?" என்பார், அல்லது "வீட்லே தூசி மண்டிக் கிடக்கு. ஞாயிற்றுக் கிழமை கொஞ்சம் தட்டக் கூடாது? நேத்து வாடகை கொடுக்க காமாட்சியம்மா வீட்டுக்குள் போயிருந்தேன். என்ன சுத்தமா இருக்குது வீடு! திரைச்சீலை எல்லாம் சீதா பின்னித்தாம்! சின்னப் பொண்ணு, காலேஜுக்கும் போய் கிட்டு, வீட்லேயும் எத்தனை பொறுப்பா இருக்குது?" என்று அதிசயிப்பார் மற்றொரு நாள்.

"ஆமாம்... பிரமாதமா செஞ்சிட்டாள்" என்று தனக்குள்ளேயே முணுமுணுப்பாள் உமா.

சீதாமேல் ஏதாவது குறை சொல்லும் சந்தர்ப்பம் வராதா என்று காத்திருந்தவளின் காதுகளில், அன்று ஞாயிற்றுக் கிழமை மூர்த்தி கத்தினது விழவும் ஆஹா கண வனிடம் இதைச் சொல்லலாமே என்று மகிழ்ந்து போனாள்.

வெளியில் போயிருந்த சம்பந்தம் வந்ததும் "கேட்டீங்களா சமாசாரத்தை?" என்று ஆரம்பித்தாள்.

"சீதாவோட அக்கா புருஷன் வந்திருந்தாரு-என்னமா ஒரு கன்னிப் பெண் இருக்கிற வீட்ல சின்னப் பையனை கொண்டாந்து குடி வைப்பேனு கண்டபடி பேசித் தீர்த்துட்டாரு-அதுவும் சரிதானுங்களே-இவ சின்னப் பொண்ணா லட்சணமா, ஆம்பிளை அவருகிட்டே ஒரு வார்த்தை கேட்க வாணாமா? என்னமோ தனக்குத்தான் எல்லாம் தெரியும்னு நினைப்பு. நான்கூட பார்த்தேன். இருட்டினப்புறம் மாடிக்கு ஏறிப் போய் அந்தப் பையனோட பேசுறா. இது தப்புத்தானுங்களே. தெரு பேச



ஆரம்பிச்சிடுச்சினா, அப்புறம் மூட முடியாதுங்க... என்ன நான் சொல்லறது?"

அவள் எதிர் பார்த்தபடி சம்பந்தம் உற்சாகமாய் அவள் வம்பில் பங்கெடுக்கவில்லை. மாறாகச் சிறிது எரிச் சலுடன் "இத பாரு உமா, அந்தப் பொண்ணு உமா-நல்லது — நாம அதைப் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கோம்? அதனோட அத்தானைப் பற்றி நமக்குத் தெரியாதா?... ராம் குமாரும் யோக்யமானவனாத்தான் தெரியுது... நீ வீணா இந்த பேச்செல்லாம் வளர்க்காதே..." என்று சொல்லிவிட்டு "சரி, சரி எனக்குப் பசிக்குது" என்று உள்ளேயும் போய் விட்டார்.

அன்று பௌர்ணமி, நிலா வட்ட வடிவமாய், தங்கத் தாம்பாளமாய் காய்ந்துகொண்டிருந்தது. மொட்டை மாடியில் நாற்காலி எடுத்துப் போட்டு அமர்ந்த குமாருக்கு, அன்று ஏனோ பொழுதே போகவில்லை. ஸ்ரீதரன் இல்லை. டூர் போயிருந்தான். அவன் இருந்தால் எங்காவது ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருவார்கள். சென்னைக்கு வேலையாகி வந்த இந்த எட்டு மாதத்தில் ஆபீஸ் நண்பர்களைத் தவிர தனக்கு என்று வேறு எந்த நண்பர்களையும் குமார் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அலுவலக வேலை, அங்கு கிடைத்த ஒரு சில உண்மையான நண்பர்கள், சென்னையின் அழகான மெரினா கடற்கரை இவைகள் அளித்த பொழுதுபோக்குகளே அவனுக்கு நிம்மதியைத் தருவனவாய் இருந்தன.

நிம்மதி — இதைத் தேடி அவன் எத்தனை ஆண்டுகள் அலைந்திருக்கிறான்?

சிந்தனை வயப்பட்டிருந்த குமாரின் கவனம் கீழே இருந்து வந்த பேச்சுக் குரலால் தடைப்பட்டது. அது சீதா வின் மெல்லிய குரல்தான். ஏனோ எழுந்து சென்று அவளைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழ, மாடி கைப்பிடிச் சுவருக்கருகில் சென்று நின்றுகொண்டான்.

சுமித்திராவும், சீதாவும் எங்கே வெளியில் போய் விட்டுத் திரும்புகிறார்கள் — கை நிறைய புத்தங்கள், லைபரரிக்கோ?

'ஸோ-லை-லீ யூ டுமாரோ-' என்று கேட்டிலேயே சொல்லிவிட்டு சுமித்ரா போய்விட்டாள்.

சீதா மெல்ல நடந்து தன் வீட்டை நோக்கிப் போனாள். அவள் மேலே நிமிர்ந்தால் தன்னைப் பார்த்து விடுவாளே என்ற நினைப்பில் இரண்டு அடிகள் தள்ளி பின்னால் போனான் குமார். சீதா முன் வீட்டைக் கடந்து பின்னால் போனதும் மீண்டும் சுவரை ஒட்டி நின்று அவளைக் கவனித்தான்.

திடீரென்று சீதாவின் அழகிய கண்களை இந்த நிலா வெளிச்சத்தில் பார்த்தால் எப்படி இருக்கும் என்று தனக்குத் தானே கற்பனை பண்ணிக்கொண்டான். கறுத்த கண்கள் நிலவின் ஒளியில் 'தக தக' வென்று மின்னும், ஆயிர மாயிரம் பேசும் என்று நினைத்தவன் மறுகணமே தன் செய்கைக்கு வெட்கினான். பிறகு 'ஏன் நான் இப்படி சீதாவிடம் ஒரு கவர்ச்சியை உணர்கிறேன்?' என்றும் நினைத்தான். அவன் பார்வை சீதாவைத் தொடர்ந்தே போயிற்று.

காலையில் போனவள் இப்போதுதான் திரும்பு கிறாள் போலும்! புத்தகங்களை ஓரமாய் வைத்துவிட்டு வாசற் திண்ணையில் இருந்த அம்மாவிடம் அமர்ந்து அவள் மடியில் தலையை வைத்து ஏதோ சொல்லி அவள் கழுத்தைக் கட்டிக் கொள்ளுகிறாள். பெண்ணின் தலையை நீவி விட்டுக்கொண்டே பேசுகிறாள் காமாட்சி — ஆணுக்கு ஆணாய் தன் உணர்ச்சிகளை வெளியில் சற்றும் காட்டாத சீதாவினுள், இப்படியொரு குழந்தைத்தனம் இருப்பதைக் கண்ட குமாருக்கு வியப்பு உண்டாயிற்று.

அம்மா மடியில், இருட்டில், நிலவொளி மட்டுமே படும்வகையில் படுத்திருந்த சீதாவை எழுப்பி விட்டு உள்ளே போனாள் காமாட்சி. இந்து நிமிஷங்களுக்குள்



எதையோ டம்ளரில் கொண்டுவந்து வாஞ்சையுடன் மகளிடம் கொடுத்தாள். அம்மா கொடுத்ததை ரசித்து அருந் தினாள் சீதா பிறகு ஏதோ சொல்லி 'கல கல' வென்று சிரிக்கவும், செல்லமாய் அவள் கன்னத்தில் தட்டிவிட்டு காமாட்சி உள்ளே போக, சீதாவும் தொடர்ந்தாள்.

பார்த்துக்கொண்டே நின்ற குமாருக்கு 'எத்தனை அன்பு நிறைந்த தாயும், மகளும்?' என்ற உணர்ச்சி உண்டா னாலும் 'ஒருவரை அவர் அறியாமல் கண்காணிப்பது தவறாயிற்றே' — என்றும் திடும் என நினைத்துக் கொண்டு மீண்டும் தன் நாற்காலியில் போய் அமர்ந்தான்.

நிர்மலமான நிலவைப்போல சீதாவின் அன்பும், உள்ளமும் தூய்மையாகவே இருக்கின்றனவா?

சீதாவிற்கும் அவள் தாய்க்கும் இருக்கும் பாசப் பிணைப்பை காண்கிறபோதெல்லாம் அவனையும் மீறிக் கொண்டு அவன் குடும்பத்தைப் பற்றின எண்ணமும் எழுந்தது.

அவன் தந்தை — தயாள் சர்மா.

தாய் — மஞ்சரி.

தமக்கை — வீணா

தங்கை — நந்தினி.

தம்பிகள் — சங்கர், வினோத்.

ஓ! எல்லோருமே வேஷதாரிகள் — இல்லை — இல்லை அவன் தாயைத் தவிர.

மத்தியப் பிரதேசத்தில், இந்தூரில், அவர்கள் தலை முறை தலைமுறையாய் வாழ்பவர்கள். நிறைய நிலபுலன்கள் உண்டு. தான் பணம் படைத்தவன் என்ற திமிரில் அட்டகாசமாய் நடப்பார், சிரிப்பார் அப்பா — அவரது ஒவ்வொரு அணுவும் 'நான்' என்ற மமதையில் புடைத்

தெழுவதை ராம்குமார் ஆயிரமாயிரம் முறைகள் பார்த்திருக்கிறான்.

தன் பெருக்காக, புகழுக்காக, தன்னைப் பிறத்தியார் செய்யும் முகஸ்துதிக்காக செலவு பண்ண அஞ்சாதவர் விடிந்து எழுந்தால் இராமாயணம் படிப்பார். மாலை போய் இரவு வந்தால் கிளப்புக்குப் போய குடித்துவிட்டுக் கூத்தடிப்பார். 'கவாலி கேட்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு இந்தூரின் விலை மதிக்க முடியாத விலை மாது களிடம் மயங்கிப்போவார். தன் சுகம், தன் இன்பம் ரொம்ப முக்கியம்.

வீட்டில் சாதுவான அம்மாளை தருணமாய் மதித்து நடத்தினதால் அவா குழந்தைகளுக்கும் அவளிடம் மரியாதை இல்லாமல் போயிற்று, ராம்குமாரைத் தவிர. ஆட்களுக்கெதிரிலேயே அம்மாளை கேவலமாய் நடத்துவார். 'நான் ஆண் — நீ பெண்; நான் குடும்பத் தலைவா — நீங்கள் அத்தனை பேரும் எனக்கு அடிமைகள்' என்று வெளிப்படையாகப் பேசுவார்.

ஊரே வியக்கும்படி வீணாவிற்கு கல்யாணம் பண்ணினார். இரண்டாம் மாசமே 'அவன் ஆண்மையில்லாதவன்' என்று கூசாமல் சொல்லிக்கொண்டு வீட்டோடு வந்து விட்டாள் வீணா. அவள் அப்பா செல்லம் — யாரும் அதட்டிக் கேட்க முடியாது. ஊரில் உள்ள அத்தனைப் பேர்களைப் பற்றியும் வாய்கிழிய வம்பளப்பாள். அதுதான் அவள் பொழுதுபோக்கு.

தம்பிகள் இருவரும் அப்பாவின் மறு பிறப்புகள். அப்பாவுக்கு எதிரில் சாது மாதிரி வேஷம் போட்டுவிட்டு அவர் தலை மறைந்ததும் அவரையே 'புட்டா' என்றும், இன்னும் அசிங்கமாகவும் திட்டுவார்கள். தாய் எட்டடி என்றால், குட்டி பதினாறு அடி பாயும் என்ற வசனத்துக்கு எடுத்துக்காட்டாய் விளங்கினார்கள். சின்னவயசிலிருந்தே வேண்டாத பழக்கங்கள் அத்தனையும் உண்டு.



தங்கை நந்தினி கடைக்குட்டி. அதற்கு மேல் பெற அம்மாவின் தேகவாகு இடம் கொடுக்கவில்லை. அவள் தீராத ஆஸ்த்மா நோயாளி வேறு. இன்னும் வேறு என்ன வேண்டும்?

நந்தினியும், அவனும் ஒரு தினுசுயென்று அம்மாவே சொல்லுவாள்.

நினைவு தெரிந்த நாளிலிருந்தே தன் தந்தையின், உடன் பிறந்தோரின் நேர்மையில்லாத குணம் ராம்குமாருக்கு பிடிக்காத ஒன்று. வயசு ஏற ஏற, உண்மைகள் நன்றாய் விளங்க விளங்க, அதுவே அவன் மனசில் வெறுப்பாக மண்டிவிட்டது. வலிய தந்தை கூப்பிட்டனுப்பினால் ஒழிய அவர் முன் நின்று பேசுவதைக்கூட செய்ய மாட்டான். படிப்பு நன்றாக வந்ததால் ராஜஸ்தானிலுள்ள பிலானி எஞ்சினீரிங் கலலூரியில் 'இந்தக் குடும்பத்தை விட்டு எவ்வளவு தள்ளி இருக்கிறேனோ அவ்வளவு நல்லது' என்று சேர்ந்து விட்டான்.

அவ்வப்போது லீவுக்கு வரும்போது தாமரை இலைத் தண்ணீராக இருந்துவிட்டுப் போய்விடுவான்.

இருபதாம் வயதில் பி. ஈ. படிப்பை முடித்துக் கொண்டு அவன் ஊர் திரும்பினபோது சங்கருக்கு பதினெட்டு வயசு. வினோதிற்கு பதினாறு. படிப்பு ஏறாமல் இருவரும் அப்பாவின் தொழிலைப் பார்த்துக்கொள்கிறேன் என்று அவரை ஏமாற்றிக்கொண்டு, ஒன்றுக்கும் உதவாக்கரைகளாய் இருந்ததைக் கண்டபோது குமாருக்கு கோபம் எழுந்தது.

ஒரு நாள், அவனுக்கு நன்றாய் நினைவிருக்கிறது — வேலை தேடி அலைந்த அந்த நாளில் தம்பிகள் இருவரும் செய்யத்தகாத ஒரு காரியத்தைச் செய்வதை அவன் பார்த்துவிட்டான். இனியும் விடக்கூடாது என்ற நினைப்பில் தந்தையிடம் புகாரும் செய்தான். 'நீங்களே இப்படி

இருப்பதால்தான் இவர்களும் கண்டிக்க ஆள் இல்லாமல் இருக்கிறார்கள்' என்றும் சொன்னார்.

"என் பணம், நான் செலவழிக்கிறேன். நீ யார் கேட்க?" என்றவர் — "முதலில் நீ ஒரு வேலையை உருப்படியாய் தேடிக்கொள். பிறகு உன் தம்பிகளைப்பற்றி புகார் சொல்லலாம்" என்றும் முகத்தில் அறைந்தாற்போல் பேசி விட்டார்.

எப்படியோ ஒரு வேலையில் அமர்ந்து, பல்லைக் கடித்துக் கொண்டு அந்த வீட்டிலேயே வாழ்ந்து வந்தான் குமார்.

வீட்டில் நிம்மதியே இல்லை. அப்பா இருந்தால் ஒரு மாதிரி இருக்கும். வயதுக்கு வந்த பிள்ளைகளை சர்க்கஸ்காரன் புலிகளை மிரட்டுவது போல மிரட்டிக்கொண்டே இருப்பார். அதிகாரம் தூள் பறக்கும். அவர் இல்லாவிட்டால் இன்னொரு மாதிரி நாக்கில் நரம்பு இல்லாமல் தம்பிகளும் அக்காவும் பேசுவதும், பெற்றவர்களையே வைவதும், ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதும் ராம்குமாருக்கு அருவருப்பைத் தரும்.

அப்பாவின் பணத்திற்காக அவர் முன் குழையும் உடன்பிறந்தோர், உற்றோர், உறவினோர் பின்னால் தூற்றுவதைக் கண்டால் குமாருக்கு குமட்டிக்கொண்டு வரும்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல சென்ற ஆண்டு நடந்த சம்பவம்தான் குமாரை ஊரை விட்டே வரச் செய்தது.

குமாரிடம் கேட்காமலேயே அவனுக்கு பெண் பார்த்து பேசி முடித்துவிட்டதை தந்தை தெரிவித்தபோது, அவன் அதிர்ந்து போனான். பெண் படிப்பு இல்லாதவள். அம்மைவடு நிறைந்த முகம்; ஒரு கால் குட்டை வேறு. ஆனால் நல்ல பணம்.



"எனக்கு இப்போது கல்யாணத்துக்கு என்ன அவசரம்?" என்று அவன் மறுத்தான்.

"இதைவிட பணம் உள்ள பெண் கிடைக்க மாட்டாள்" என்று அப்பா சொன்னபோது எல்லோரும் தலை ஆட்டினார்கள்.

பிறகு அப்பா அந்தப் பக்கம் போனதும் அக்கா காலை இழுத்து இழுத்து நடந்து காண்பித்தாள். தம்பிகள் அவள் முகத்தை விமர்சனம் செய்தார்கள்; அண்ணா என்ற மரியாதை கொஞ்சமும் இல்லாமல்.

இருந்த ஒரு நூல் பாசமும் அறுந்தது அன்றைக்கு தான்.

இந்த வீட்டில் இருந்தால், தனக்குப் பைத்தியம் பிடிப்பது நிச்சயம் என்று உணர்ந்தான்.

அவன் அதிருஷ்டம் சென்னையில் ஃபாக்டரியும் ஆபீசும் கொண்ட பெரிய மனிதரின் தொடர்பு கிடைத்தது.

"சென்னைக்கு வர இஷ்டம்" என்றான். வேலை கிடைத்து, ஒப்புக்கொண்டு விட்டான்.

முதல் வருஷம் ப்ரோபேஷன், அறுநூறு ரூபாய் சம்பளம். கன்ஃபர்ம் ஆனதும் எண்ணூறு சம்பளம் கிடைக்கும்.

வேலைக்கு ஆர்டர் வந்த பிறகே அப்பாவிடம் சொன்னான். ஹாய் ஊய் என்று குதித்தார் அவர்.

"பெரிய வேலை. ஒரு வருஷம் கழித்து அமெரிக்காவுக்கு அனுப்புவார்களாம். திரும்பி வந்ததும் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்" என்று அன்றுவரை சொல்லாத பொய்யை நெஞ்சாரச் சொன்னான்.

நம்பினார் தந்தை. அனுப்பிவிட்டார்.

சென்னைக்கு வந்த நாளாய் தன் வாழ்க்கையில் இது நாள் உணராத நிம்மதியை உணர்ந்தான் ராம்குமார்.

சிந்தனை வயப்பட்டு தூங்கிப் போய்விட்ட குமார் திடுக்கிட்டு எழுந்தபோது மணி பதினொன்றைக் காட்டியது. திறந்த வெளியில், பனியில் அமர்ந்திருந்ததால், மூச்சு 'கர்' என்று இழுக்க ஆரம்பித்து விட்டது.

"என்னிடமிருந்து உனக்கு இந்த ஆஸ்தமாவை சொத்தாக கொடுத்திருக்கேன் ராம். உடம்பை பார்த்துக் கொள். மழையில் நனையாதே" என்று அம்மா சொன்னது நினைவுக்கு வர எழுந்து உள்ளே போனான்.

இழுப்பு அதிகமாகிப் போக ஒரு தம்ளர் பாலை சுட வைத்து மெல்ல அருந்தினான். படுக்க முடியாமல் போனதால் ஆஸ்த்மா மாத்திரை ஒன்றை விழுங்கிவிட்டு தலையணையை அணைத்தவாறு, கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தான்.

அவன் கண்ணுக்குள் சீதா தோன்றி அன்பாய் புன்னகைத்தான்.

## 4

"ஏன் சீதா, ராத்திரியெல்லாம் வாய் ஓயாம இருமினது யாரு, அந்த பிள்ளையாண்டானா?" அம்மா அன்று காலையில் எழுந்ததுமே, மாடியைக் காட்டி சீதாவிடம் கேட்டாள்.

"அப்படித்தான் தோணறதும்மா" என்றாள் சீதா. கடந்த இரண்டு நாட்களாகவே ராம்குமார் இருமுவதையும் சோர்வாக இருப்பதையும் அவள் பார்த்தாள். 'உடம்பு சரியில்லை போலிருக்கிறது' என்று அவள் தனக்கு தானே நினைத்த போது பாவம்-மருந்து சாப்பிட்டாரோ இல்லையோ என்ற பரிவும் உடன் எழுந்தது.



"யார் பெத்த பிள்ளையானால் என்ன? நல்ல பிள்ளை. மிளகு கஷாயம் பண்ணித் தரேன், போய் குடும்மா. பாவை புரிந்தா நானே போவேன். உம்."

அம்மா செய்து கொடுத்த சூடான கஷாயத்தை ஒரு டம்ளரில் விட்டு, சின்ன தட்டுப் போட்டு மூடி எடுத்துக் கொண்டு போனாள் சீதா.

மாடிப் படியேறும்போது அன்றொரு நாள் வக்கீல் பிள்ளை ஸ்ரீதரனை சந்தித்ததும் பேசினதும் நினைவு வந்தது. தெப்பக்குளத்தருகே காய்கறி வாங்கிக்கொண்டிருக்கையில் அவனைப் பார்த்தாள் சீதா.

"என்ன! உங்க டெனன்ட் எப்படி இருக்கான்?" என்று அவன் கேட்கவும் "இருக்கிற இடமே தெரியாமல் இருக்கார்" என்று சீதா பதில் சொல்லவும் இருவருமே சிரித்தார்கள்.

ஒரு சில கணங்கள் மௌனமாகிப் போனான் ஸ்ரீதரன். ஆபீசிலும் அவனுக்கு ரொம்ப நல்ல பேர். கெட்டிக்காரன். ஒருத்தரிடமும் வேண்டாத பேச்சுக் கிடையாது. அவன் குடும்பம் பணக்காரக் குடும்பம் போலிருக்கு. அவா நடத்தை பிடிக்காம ஒதுங்கி வந்துட்ட மாதிரி இருக்கு. 'குடும்பம்னா அமைதியாய் அன்பாய் இருக்கணும் ஸ்ரீதர்; சண்டைக்களமாய் இருக்கக் கூடாது'ன்னான் ஒரு நாள். அதனால நானா ஊகிச்சண்டேன்..." என்றான்.

மாடி ஏறி, அறைக்குள் கதவைத் தட்டிவிட்டு சீதா நுழைந்தாள். அவன் நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மேல் குப்புறக் கவிழ்ந்து கொண்டிருந்தான். அலை அலையாய் எழுந்த இருமல் அடங்கினதும், 'கர் — புர்' என்று பெரிய தாய் மூச்சு இழுத்தது.

"உடம்பு சரியில்லையா, மிஸ்டர் சர்மா? அம்மா கஷாயம் போட்டுக் கொடுத்தாள்; குடித்துப் பார்க்கிறீர்

களா?" என்று கனிவான குரலில் சீதா கேட்டது ராம் குமாருக்கு இதமாக இருந்தது.

பதிலே பேசாமல் சீதா நீட்டிய டம்ளரை வாங்கினான். மெல்ல உறிஞ்சிக் குடித்தான்.

"ரொம்ப நன்றி... எனக்கு இன்னொரு உதவி உங்களால் பண்ண முடியுமா? கல்லூரிக்குப் போகும்போது, வழியில், முடிந்தால் ஸ்ரீதரனிடம் நான் இன்றைக்கு அலுவலகத்துக்கு வரமுடியாத நிலையில் இருக்கிறேன் என்று சொல்ல முடியுமா? தொந்தரவுக்கு மன்னியுங்கள்..." பேசி முடிப்பதற்குள் திரும்ப இருமல் வந்துவிட்டது.

மூச்சு விடவே திணறும் குமாரைக் காணும்போது பரிதாபமாகவே இருந்தது.

"ரொம்பத் திணறுகிறதே — மருந்து சாப்பிட்டீர்களா? டாக்டரை வேண்டுமானால் கூப்பிடட்டுமா?"

வேண்டாம் என்பது போல தலையை ஆட்டினான் ராம்குமார். "இது எங்கள் பரம்பரைச் சொத்து. என் தாயாருக்கு உண்டு. எனக்கும், என் கடைசித் தங்கை நந்தினிக்கும் உண்டு. பயப்பட ஒன்றுமில்லை." வேதனையூடன் அவன் சிரித்துக்கொண்டே பேசினான்.

"நிம்மதியாய் படுத்துக்கொள்ளுங்கள்... நான் ஸ்ரீதரனிடம் சொல்லுகிறேன்," என்று சொல்லிவிட்டு டம்ளரை எடுத்துக்கொண்டு அறை வாசலுக்குப் போன சீதா, மீண்டும் உள்ளே வந்து "ஏதாவது வேண்டுமானால் தயக்கமில்லாமல் கேளுங்கள்" என்றும் சொல்லிவிட்டு வெளியே போனாள்.

மாலையில் கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது குமாருக்கு மத்தியானம் ரசம் சாதமாய் சமைத்துக் கொண்டு போய் கொடுத்துவிட்டு வந்ததாக அம்மா சொன்னதைக் கேட்டதும் சந்தோஷமாக இருந்தது. அவளையும் அறியாமல் மதியம் ஓரிருமுறைகள் அவள்



நினைவு குமாரிடம் ஓடியபோது 'என்ன பண்ணுகிறாரோ?' என்று சற்றே கவலையுடன் நினைத்துக் கொண்டிருந்ததால் அம்மா சாதம் போட்ட சேதி சந்தோஷத்தையே தந்தது.

"அப்பவே ஜுரம் போல 'ஜிவு ஜிவு'னு மொகமெல்லாம் இருந்தது. சீதா டாக்டரைப் பார்க்கச் சொல்லேன்" என்று சொல்லவும், மாடிக்குப் போனாள்.

கதவு தாளிடப்படாமல் இருந்தது. தட்டிப் பார்த்தாள் சீதா. பதிலில்லை. ஐந்து நிமிஷ காலம் நின்றவளின் காதில் ராம்குமார் விடும் மூச்சின் அலாதி சப்தம் கேட்கவே கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

குமார் உறங்கிக்கொண்டிருந்தான். உட்கார முடியாததால் கட்டிலில் சாய்ந்த நிலையிலேயே உறங்கிக் கொண்டிருந்த அவன் முகம் துவண்டிருந்தது.

"மிஸ்டர் சர்மா" என்று இரண்டு தரம் சீதா அழைத்தும் பதிலில்லை. மெல்ல நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் சீதா. தொட்ட இடம் கொதித்தது.

'ஆஸ்த்மாவினால இழுப்புதான வரும்? இப்படி அனலாய் காயுமோ? ஒருவேளை நெஞ்சில் கபம் கட்டிக் கொண்டிருக்கிறதோ?'

என்ன செய்வது என்று சீதாவுக்குப் புரியவில்லை.

கதவைச் சாத்திக்கொண்டு, கீழே வந்தவள் அம்மாவிடம் சொல்லிவிட்டு சுமித்ராவின் தெருவிலிருந்த டாக்டரை அழைத்து வந்தாள்.

டாக்டர் வந்து ஸ்டெதஸ்கோப் வைத்து பரிசோதிக்கும்போது விழித்துக்கொண்டான் குமார்.

இருமலும் இழுப்பும் ஜுரமும் அவனை உட்கார விடாமல் வாட்டின. தர்மா மீட்டர் 103 டிகிரி ஜுரத்தைக் காட்டியது.

"எப்போதிலிருந்து இப்படி?" என்று டாக்டர் கேட்டதற்கு நான்கு நாட்களாகவே லேசாக இருமல் ஜுரம் இருப்பதாகவும், தான் வழக்கமாக சாப்பிடும் மருந்துகளின் பெயர்களைச் சொல்லி, அவைகளையே சாப்பிட்டதாகவும் சொன்னான் குமார்.

உபாதை கொஞ்சம் குறைய இண்ட்ராவீனஸ் டெரிஃபிலின் ஊசி போட்டார் டாக்டர். "யுவர் செஸ்ட் கண்டிஷன் ஈஸ் வெரிபாட் – வொய் டிட் யூ இக்னோர் இட் ஸோ மச்?" என்று கோபித்துக்கொண்டுவிட்டு தேவையான மருந்துகளை எழுதிக் கொடுத்து ஆறு மணி நேரங்களுக்கு ஒரு முறை சாப்பிடச் சொன்னார். "நாளைக்கு வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

"அவருக்கு நெஞ்சில் ரொம்ப கபம் இருக்காம். அதனால்தான் ஜுரமாம். இத்தனை தூரத்துக்கு விட்டிட்டியேனு டாக்டர் கோவிச்சுண்டார்ம்மா... ஊசி போட்டிருக்கார். மருந்துகள் கொடுத்திருக்கார்." அம்மாவிடம் சொன்ன சீதா பிளாஸ்கில் வெந்நீரையும் அம்மா கொடுத்த கஞ்சியையும் ராம்குமாரின் அறையில் கொண்டு வைத்தாள்.

காமாட்சியும் மாடிக்கு வந்து ராம்குமாரின் கட்டத்தில் அமர்ந்து ஒவ்வொரு வாயாக கஞ்சியை சாப்பிட வைத்தாள்.

காமாட்சியும், சீதாவும் காட்டும் அன்பு குமாரின் நெஞ்சத்தில் முட்டி, கண்களைக் கலக்கியது.

"பஹுத் ஷுக்ரியா மா" என்று கரகரத்த குரலில் சொல்லி அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

என்னவெல்லாமோ சொல்ல நினைத்து ஒன்றுமே சொல்லமுடியாமல் அவன் கஷ்டப்படுவது தாய் மகள் இருவருக்குமே புரிந்தது.



மறுநாளும் குமாரின் உடல்நிலை மோசமாகவே இருந்தது. மருந்துக்கு கட்டுப்படாத ஜுரம் 103க்கு குறையவேயில்லை.

மருந்தை மாற்றி எழுதினார் டாக்டர். ஊசி போட்டுவிட்டு "முடிந்தால் அவ்வப்போது பார்த்துக் கொள்ளுங்கள். குளிர் காற்றுப் படாமல் இருக்கட்டும்" என்று சொல்லிப் போனார்.

ஜுரம் வேகம் அதிகமாகிப் போனதும், மூச்சு விடுவதே குமாருக்கு சிரமமாகிப் போயிற்று.

அவன் திணறும் திணறல் சகிக்காமல் மார்பை நீவி விட்டுக்கொண்டே காமாட்சி அருகில் இருந்தபோது குமார் உணர்ச்சி வயப்பட்டுப்போனான்.

"மா, என் குடும்பத்தார் மூலம் இதுநாள் வரை நான் அனுபவித்திராத அமைதியை, அன்பை, இன்றைக்கு நான் அனுபவித்துவிட்டேம்மா..." என்று மூச்சுத் திணறத் திணற சொன்னபோது, அவன் உள் மனசின் ஆதங்கம் சீதாவுக்குப் புரிந்தது. அவன் சொன்னதை அம்மாவிடம் தமிழில் சொன்னபோது காமுவின் கண்களில் நீர் திரண்டு விட்டது.

குமாரின் உடல்நிலை நன்கு தேற கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கும் மேலாகிவிட்டன.

இந்தப் பத்து நாட்களில் அவனும், சீதாவும் காமாட்சியும் வெகுவாக ஒன்றிப்போய் விட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். குமாரிடம் இருந்த சங்கோஜம், ஓட்டுக்குள் ஒடுங்கும் தனம் கொஞ்சம் கொஞ்சமாகப் போய், தன்னைப்பற்றி, தன் குடும்பத்தாரைப்பற்றி மனம் விட்டுப் பேசுவான். பேசப் பேச, தொண்டை அடைத்துப் போகும். கண்களில் அருவருப்பும், வெறுப்பும் கலந்து தெறிக்கும்.

"நல்ல பிள்ளை, இவன் இப்படி வெறுத்துப் போகணும் என்றால், அவா எப்படிப்பட்ட மனுஷாளா இருக்கணும்?" என்று தனிமையில் சீதாவிடம் சொல்லி காமாட்சி மாய்வாள்.

பழக்கம் அதிகரிக்க அதிகரிக்க சீதா வீட்டில் இவன் சாப்பிடுவதும், 'வழியில் நல்ல காலிஃப்ளவர் பார்த்தேன்மா', 'ஆரஞ்சு மலிவாய் இருந்தது மா' என்று சொல்லிக் கொண்டு பொருட்களை குமார் வாங்கி வருவதும், 'படிக்க புஸ்தகங்கள் எடுத்துக்கொள்கிறேன்' என்று சீதாவும், ஒருவரிடம் ஒருவர் நெருங்கிப்போனார்கள்.

'தண்ணி, வாண்டாம், வேணும், வா, போ' என்ற அத்யாவசியமான வார்த்தைகளைக் கற்றுக் கொண்டவனாய் காமாட்சியிடம் குமார் பேச முயலும்போது சீதாவுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வரும்.

பள்ளி ஹிந்திப் பாடங்கள் மூலமும், ஹிந்தி சினிமாக்கள் மூலமும் கற்றுக்கொண்ட ஹிந்தியை குமாரிடம் சீதா ஜமாய்க்கும்போது 'இலக்கணம் தற்கொலை செய்து கொண்டு விட்டதே!' என்று அவன கேலி செய்து சிரிப்பான்.

இப்படி குமாரும் சீதாவும் அன்னியோன்யமாய் பழகுவது யாருக்குப் பிடித்ததோ இல்லையோ, கீழ்விட்டு உமாவிற்கு கட்டோடு பிடிக்கவில்லை. "அளவு மீறி என்ன பழக்கம்?" — என்று அவள் வம்பளந்ததை முதல் சிலமுறைகள் சம்பந்தம் தடுத்துப் பார்த்தார். பிறகு விட்டுவிட்டார். கல்லூரியிலிருந்து வந்ததும் வராததுமாய் ஒன்றுக்கு நாலாய் எதாவது கிசுகிசுப்பாள் உமா. 'பத்து நிமிஷம் பேசிவிட்டு அடங்கட்டும், என்னிடம்தானே பேசுகிறாள், ஊராரோடு இல்லையே' என்று சம்பந்தமும் விட்டுவிடுவார்.

ஒரு நாள் எதேச்சையா பஸ் ஸ்டாண்டில் சந்தித்த குமாரும், சீதாவும் ஒன்றாய் வீட்டுக்கு வரும் நேரத்தில், வாசல் வராந்தாவில் உமா நின்றிருந்தாள். ஆபீசில் அதிகாரியிடம் வேலையில் கவனமின்மையால் வாங்கி இருந்த திட்டு நெஞ்சில் கனக்க நின்றவளுக்கு, களங்கம் இல்லாமல், பேசிச் சிரித்துக்கொண்டு வரும் சீதாவும் குமாரும் கண்ணில் தெரிய எரிச்சல் எழுந்தது.



"நேற்று வாங்கின புத்தகத்தை முடித்துவிட்டேன். வேண்டுமா?" — என்று குமார் கேட்டதும், 'சரி' என்று அவனுடன் மாடிக்குப் போக படிகள் ஏறினாள் சீதா.

காரணமில்லாமல் எழுந்த உமாவின் எரிச்சல் ஒரு வடிகால் தேடி அலையவே மனசின் வெறுப்பை, வார்த்தைகளால் வடித்தாள். அருகில் பெருக்கிக்கொண்டிருந்த வேலைக்காரியிடம் பேசுவது போல உரக்கவே "சே... ச்சே... காலம் கெட்டுப் போச்சி — பொம்பளைங்களுக்கு வர வர அடக்கமே இல்லை — நாலு பேர் பார்க்கத் தெருவுக்கே எல்லாம் வந்திடிச்சி — பீபிள் ஹாவ் நோ டீஸன்ஸி —" என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் சளசௌன்று விழுந்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

உமாவின் பேச்சு சீதாவிற்குத் தெளிவாய்க் கேட்க, மனம் பதறி, உடல் ஆடிப்போயிற்று.

'என்னையா?' —

'என்னையா, குறிப்பிடுகிறாள் உமா?' — என்ற கேள்வி எழ, பாதிப் படிக்கட்டிலேயே நின்றுவிட்டாள்.

'பீபிள் ஹேவ் நோ டீஸன்ஸி' — என்ற வரியின் அர்த்தம் மட்டும் புரிந்த குமாருக்கு, சீதாவிடம் எழுந்த மாறுதலைக் கண்டதும், ஏதோ தவறு என்று புரிந்து போயிற்று.

"ஃஸ் எனிதிங் ராங்?" என்று கேட்டான். பதில் சொல்லவில்லை சீதா. ஒரு நிமிஷ காலம் அங்கேயே நின்று விட்டு மேல்படியில் நின்றிருந்த குமாரை தலை நிமிர்ந்து நோக்கி, "நான் மேலே வரவில்லை. பிறகு பார்க்கலாம்"

என்று ஒரு வரி பேசிவிட்டு, மடமடவென்று ஓட்டமும் நடையுமாக இறங்கிப் போனாள்.

என்னாயிற்று?

ஏன் இந்தப் படபடப்பு?

மிஸஸ் சம்பந்தம் என்ன சொன்னார்?

சீதாவின் கண்களில் ஏனிந்த வருத்தம்?

'ஜனங்களுக்கு நடந்துகொள்ளத் தெரியவில்லை' என்றாரே ஏன் அப்படி சொன்னார்?

மாடிக்குப் போய் தன் அறையில் அமர்ந்த குமாருக்கு ஒன்றுமே புரியவில்லை. சட்டையைக்கூட மாற்றாமல் அப்படியே அமர்ந்திருந்தவன், வெளியில் நன்றாக இருட்டின சமயத்தில் எழுந்து வந்து, மொட்டை மாடியிலிருந்து சீதாவின் இல்லத்தை நோக்கினான்.

வாசற் திண்ணையில் இருளோடு இருளாய் அமர்ந் திருந்தாள் சீதா. முழங்கால்களில் முகத்தைப் பதித்து அவள் அமர்ந்திருந்தது குமாரின் நெஞ்சில் நெருடியது.

ஏன்?

என்ன சொன்னார் மிஸஸ் சம்பந்தம்?

திடீரென்று அன்றொரு நாள் மூர்த்தி கத்தினதும் நினைவுக்கு வந்து, இதோடு சேர்ந்து இரண்டும் இரண்டும் நாலு என்றது.

இரவு படுக்கப் போகுமுன் இதைப் பற்றியே யோசித்துக் கொண்டு இருந்தவனுக்கு மெல்ல மெல்ல ஒன்று புரிந்து 'இப்படியும் இருக்குமா?' என்று தோன்றியது.

இந்த எண்ணம் தோன்றி, அதைப் பற்றியே மேலும் எண்ண எண்ண தன் சந்தேகம் சரிதான் என்றே நினைத்தான்.



சட்டென்று அவனுள் சந்தோஷமும், பிரமிப்பும், சந்தேகமும் மாறி மாறித் தோன்றி அவனை அலைக்கழித்து எடுத்தன. இரவெல்லாம் புரண்டு புரண்டு படுத்தவன் பல முறைகள் உறக்கம் வராமல் எழுந்து வந்து, சீதாவின் வீட்டையே நோக்கிக் கொண்டிருந்தான். விடி வெள்ளி முளைக்கையில் தனக்குத்தானே அவன் செய்து கொண்ட தீர்மானம் அவனைக் குதூகலத்தில் ஆழ்த்தியது.

முதல் நாள் மாலையில் உமா பேசிய பேச்சுக்கள் நெருஞ்சி முட்களாய் உறுத்த, மனம் நொந்து போனாள் சீதா. பாடமும் படிக்காமல், சரியாகவும் பேசாமல், வந்த சுமித்ராவுடன் வழக்கம் போலப் பழகாமல் அவள் இருந்ததை காமாட்சி பார்த்து "என்னடீ உடம்பு சரியில்லையா?" என்று கேட்கவும் செய்தாள். "ஒண்ணுமில்லைம்மா" என்று சொல்லி சீதா திரும்பிப் படுத்ததும் 'மனசில் ஏதோ கவலை. இந்த சின்ன வயசில் எத்தனை பொறுப்புகள் கொழந்தைக்கு' என்றே பெற்ற தாய்க்கு வருத்தம் எழுந்தது.

மறுநாள் கல்லூரியில் மதிய உணவு நேரத்தின் போது சுமித்ராவிடம் உமா பேசின பேச்சுக்களை சொன்ன சீதாவின் குரல் கம்மிப்போயிற்று.

"படிச்ச மனுஷிக்கு எப்படி இப்படிப் பேசத் தோணறது, சுமி? குமாரும் நானும் பழகறதில் கடுகளவாவது தப்பு இருக்கா, சுமி? ஏன் இப்படி மனுஷா மனசை புண்படுத்தறா?" என்றபோது மனம் கலங்கின சுமித்ரா வேறு ஏதும் சொல்லத் தோன்றாமல் 'விட்டுத் தள்ளு' என்று மட்டும் சொல்லி தோழியைத் தேற்றினாள்.

"பரீட்சை நெருங்குவதால் லைப்ரரியில் ஏதேதோ எழுதிக் கொண்டிருந்துவிட்டு மாலை மணி ஆறை நெருங்கு கையில் வீட்டிற்குப் போகலாம் என்று கல்லூரியை விட்டு வெளியே வந்தவர்களின் கண்களில் சாலை ஓரத்தில்

நின்றிருந்த ராம்குமார் தெரிந்ததும் ஆச்சரியத்துக் குள்ளாகிப் போனார்கள்.

அருகில் வந்துவிட்ட பிறகும் அவன் ஒன்றும் பேசாதது இன்னும் வியப்பையே தந்தது.

சுமித்ராதான் மௌனத்தைக் கலைத்தாள்.

"எங்கே மிஸ்டர் சர்மா இந்தப் பக்கம்?"

அவன் பதில் சொல்லாமல் சிரித்தான். அவன் முகம் ஏனோ சிவந்து போயிற்று.

"உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும். முடியுமா?" என்று சீதாவைக் கேட்பதற்குள் தடுமாறிப் போனான்.

சுமித்ராவிற்கு புரிந்து விட்டது.

"எனக்கு வீட்டில் அவசர வேலை இருக்கு. நான் போறேன்" என்று சொல்லிவிட்டுப் பதிலை எதிர் பார்க்காமல் அந்தப் பக்கம் போய்விட்டாள்.

டாக்ஸி ஒன்றைப் பிடித்தான் குமார்.

"யூ ஹாவ் நோ அப்ஜக்ஷன்" என்று கேட்டு விட்டு சீதாவை ஏற்றிக்கொண்டு பீச்சுக்குவிடச் சொன்னான்.

மணலில் இறங்கி நடந்து அமர்ந்தார்கள்.

மாலைக் கதிரவன் மலைவாயிலில் விழும்வரை இருவரும் பேசவில்லை.

சீதாவினுள் வார்த்தைகளால் வடிக்க முடியாத ஒரு படபடப்பு. 'எதற்காக இங்கு கூட்டி வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்க நினைத்தும் வாய் எழவில்லை.

ராம்குமார் அவள் முகத்தையே உற்று நோக்கி விட்டு, மெல்ல பேச ஆரம்பித்தான். "நேற்று மிஸஸ் சம்பந்தம் என்ன பேசியிருப்பார்கள் என்று என்னால் ஊகிக்க முடிகிறது. அது சரியான ஊகமோ, இல்லை



தவறானதோ. அதனால் நான் இந்த முடிவுக்கு வரவில்லை. உங்களை பார்த்த நாளிலிருந்தே என் மனம் உணர்ந்திருக்கும் நிம்மதியே என்னை இந்த முடிவுக்கு வரத் தூண்டியது. நான் கேட்பது தவறானால் மன்னித்துவிடுங்கள், சீதா. சீதா நான் உங்களை மணக்க விரும்புகிறேன். இது சாத்தியமா?" சுற்றி வளைக்காமல் பேசிவிட்டான் ராம்குமார்.

மொட்டு ஒன்று காற்றில் ஆடி ஆடி அழகாய் பிரிந்த உணர்வு எழுந்து நெஞ்சும் மனமும் இனிமையாய் பாட அற்புதமான இயற்கையோடு ஒன்றிப்போனாள் சீதா.

# 5

"உங்களை நான் மணக்க விரும்புகிறேன்..." என்று அடிக்குரலில் தயங்கித் தயங்கி சொன்ன ராம்குமார், என்ன நினைத்துக் கொண்டானோ, மறுபடியும் ஹிந்தியில் "சீதா மை தும்சே பஹுத் பியார் கர்தா ஹூங்" என்று உணர்ச்சி வயப்பட்டு கூறினான்.

தன்னுடன் பழகின இதுநாள் வரை குமார் தன்னை பெயர் சொல்லிக் கூப்பிடாமல் மொட்டையாகவே பேசுபவன், இன்று மட்டும், தன் நெஞ்சின் காதலைத் தெரிவிக்கும் நேரத்தில் 'சீதா' என்று அழகாய் பெயரிட்டு அழைத்ததும், 'உங்களை' என்பவன் 'உன்னை' என்று உரிமையுடன் அழைத்து 'நேசிக்கிறேன்' என்றதும் சீதாவுக்கு சிலிர்த்துப் போயிற்று.

குமாரின் வார்த்தைகளை கேட்டு என் மனசும், உடம்பும் சந்தோஷத்தில் குதிக்கின்றனவே. இனிய ராக மொன்றை என் இதயம் பாடுகிறதே. இவை எல்லாம் எதனால்? என்னை அறியாமல், என் மனசின் அடித்தளத்

இல் ஏற்பட்டு இருந்த உணர்ச்சி வெறும் சிநேகமல்லாமல் காதலுடன் கலந்தே இருந்ததா?

பரவசமாகிப் போன சீதாவுக்கு வாய் வார்த்தைகளால் ஒன்றுமே பேச வராமல், குமாரை ஏறிட்டு நோக்கி, கண்களால் மட்டும் என்னென்னவோ பேசினாள்.

சீதாவின் மௌனத்தையும் துடிக்கும் கண்களையும் கண்ட குமாருக்கு தான் சொன்னதை அவள் எப்படி வரவேற்கிறாள் என்ற சந்தேகம் தோன்ற, "பேச மாட்டாயா சீதா? நான் உன்னிடம் கேட்டது தவறா?" என்றான் மெதுவாக.

சீதாவின் சிந்தனை இப்போது அம்மாவிடம் போயிற்று. இந்த விஷயத்தைக் கேட்டால் என்ன நினைப்பாள்? சந்தோஷிப்பாளா; இல்லை மறுப்பாளா?

'பெண் பெரியவளாகி, சம்பாதித்து, என்னை சௌக்கியமாய் கொஞ்ச காலமாவது வைத்துக்கொள்வாள் என்றிருந்தேனே? மண்ணை வாரிப் போட்டுவிட்டாளே!' என்று குமுறுவாளா, இல்லை 'மனசுக்குப் பிடிச்ச நல்ல பையனோடு தீர்க்க சுமங்கலியாய் இரும்மா' என்று வாழ்த்துவாளா?

'ஜாதிவிட்டு ஜாதியிலேயாடீ கல்யாணம் பண்ணிக்கணும்? நம்ப ஜாதியிலே பையன்கள் இல்லாம போயிட்டானா; உங்கப்பா இருந்தா இப்படிப் பண்ணுவியாடி?' என்று துடிப்பாளா?

'குணக் குன்றான பையனைத்தானேம்மா பண்ணிக்க உத்தேசிச்சு இருக்கே, ஊர் நாலும் சொல்லும். நான் சம்மதிக்கிறேன்' என மனமார மகிழ்வாளா?

என்ன நினைப்பாள்?

எப்படி இச்செய்தியை வரவேற்பாள்?



அம்மா, அம்மா உன் மனசு கோணாமல் நான் நடக்கணுமே அம்மா!

அப்பா, 'என் பெண்' என்று பெருமைப்படுவேனே! 'என் சீதாவுக்கு நிதானம் அதிகம், ரொம்ப பெரிய இதயம் கொண்டவள்'னு வாய்விட்டுப் சொல்லுவேளே, நீங்க என்ன நினைப்பேளப்பா? என் சீதாவை நம்பி ஏமாந்துட்டேனே, என் குடும்பப் பெருமையை அழிச்சுட்டாளேனு, எங்கிருக்கேளோ, அங்கு வருந்துவேளா?

நானாவித எண்ணங்களும், கேள்விகளும் எழுந்து சீதாவைக் குழப்பின.

ராம்குமார் கேள்வி கேட்டதும், முதலில் மகிழ்ச்சி பிரவாகமெடுத்து ஓடினாலும், ஒரு சில நிமிஷங்களில் யதார்த்த சிந்தனையும், பிறர் மனசுக்கேற்றபடி என்றுமே நடந்துகொண்டுள்ள அவளது சுபாவமும் பீறிக்கொண்டு எழுந்து மகிழ்ச்சி உணர்வை அமுக்கி, அவளை யதார்த்தமாக எண்ண வைத்தன.

"சீதா, நான் தவறாகப் பேசிவிட்டேனா? சீதா, அப்படியென்றால் என்னை மன்னித்து விடு..."

சீதாவின் மௌனத்தையும், அவள் முகத்தில் பல நிமிஷங்களாக மாறி மாறி எழுந்த பாவங்களையும் கண்டு ஏதும் புரிந்துகொள்ள முடியாதவனாகிப்போன குமார் தவித்தான்.

தனக்குள்ளேயே நடந்த சிந்தனை அலைகளிலிருந்து மீண்டாள் சீதா. அருகில் பரபரத்துக் கொண்டிருந்த குமாரைப் பார்த்து மெல்ல நாணத்துடன் புன்னகைத்தாள். பிறகு "உங்கள் மனசிலிருப்பதை நீங்கள் தெரியப்படுத்தியிருக்கிறீர்கள். இதற்காக நான் ஏன் கோபிக்க வேண்டும்? ஆனால்... ஆனால்..." தன் வார்த்தைகள் குமாரின் உள்ளத்தை புண்படுத்தக் கூடாதே என்ற நினைப்பில் கவனமாய் பேசினாள் சீதா. "எனக்கு யோசிக்க

அவகாசம் வேண்டும். இப்போது உள்ள மன நிலையில் என்னால் எதையும் தீவிரமாக, தெளிவாக எண்ண முடியவில்லை. யு அண்டர்ஸ்டாண்ட், டோண்ட், யூ?"

சன்ன குரலில், சீதா பேசியதின் கருத்தை ராம் குமார் ஏற்றுக் கொள்ளவே, இருவரும் எழுந்து வீட்டுக்குப் போக புறப்பட்டார்கள்.

"தயவு செய்து, நான் தனியாக போக விடுங்க ளேன்" என்று கெஞ்சிக் கேட்டுவிட்டு தனியாக பஸ் ஏறி வீட்டிற்குப் போனாள் சீதா.

இருட்டிவிட்ட காரணத்தால் சீதா பஸ் ஏறும் வரை காவலுக்காக அங்கேயே நின்ற குமார் பஸ் போனதும், திரும்ப மணலில் சென்று அமர்ந்து கொண்டான்.

காற்று சுகமாய் வீசியது.

நிமிர்ந்து ஆகாயத்தை நோக்கிய ராம்குமாருக்கு, சீதா விஸ்வரூபம் எடுத்து வானமெங்கனும் பரவி நிற்பது போன்ற உணர்வை உண்டாயிற்று.

சீதா – ஐ லவ் யூ.

ஐ லவ் யூ வித் ஆல் மை ஹார்ட்.

ப்ளீஸ், டோண்ட் டிஸப்பாயிண்ட் மீ.

சீதா தன்னை இவ்வளவு தூரம் ஆட்கொண்டிருப் பதை உணர்ந்தவனுக்கு அது வியப்பைக் காட்டிலும் குதூகலத்தையே அளித்தது.

கச்சேரி ரோடில் இறங்கிய சீதாவின் உள்ளம் சற்றும் அனுபவித்திராத மகிழ்ச்சிகளால், குதித்துக் கொண்டிருந்தது.

வீட்டிற்குப் போகாமல் நேரே சுமித்ராவின் இல்லத்துக்குப் போனாள்.

CPL 554243



மணி கிடடத்தட்ட ஏழரை ஆகிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் தோழி தன்னைத் தேடி வருவாள் என்ற உந்தலின் காரணமாய் வாசல் தோட்டத்திலேயே இங்கு மங்குமாய் உலாவிக் கொண்டிருந்தாள் சுமித்ரா.

சீதா தெருவில் வரும்போதே அவளைப் பார்த்து விட்டாள் சுமி. அவள் முகத்திலிருந்து ஏதாவது புரிந்து கொள்ள முடிகிறதா என்று உன்னிப்பாய் பார்த்தபோது மகிழ்ச்சியும், குழப்பமும் சேர்ந்து பரவிக் கிடந்ததாகவே அவளுக்குத் தோன்றியது.

554249

சீதா அருகில் வந்ததும் அவள் கையிலிருந்த புஸ்தகங்களை வாங்கி வாசல் திண்ணையில் வைத்தாள். சீதா நேராக, வீட்டுக்குப் போகாமல் இங்கே வருகிறாள் என்று அறிந்தவளாய், சமயற்கட்டுக்குள் சென்று சூடாக காபி கலந்து எடுத்து வந்து தோழியிடம் கொடுத்தாள். பிறகு "மாடிக்குப் போகலாமா?" என்று கேட்டாள்.

"ம்?... வேண்டாம். கோவிலுக்குப் போகலாமே."

அம்மாவிடம் சொல்லிட்டுக் கிளம்பினாள் சுமித்ரா.

வழியில் சீதா பேசட்டும் என்று சுமியும், அவள் ஏதாவது கேட்கட்டும் என்று இவளும் பேசாமலே சென்றார்கள்.

894.8113
SIV

குறுக்குச் சந்தில் புகுந்து, கபாலீஸ்வரர் கோவிலுக்குள் நுழைந்தார்கள் கற்பகாம்பாள் சந்நிதியில் தரிசனத்தைச் செய்துகொண்டு, கொது மண்டபத்தில் ஒரு மூலையாய்ச் சென்று அமர்ந்தார்கள்.

சுமித்ராவுக்கு இனியும் பொறுக்கவில்லை.

"என்ன சீதா – என்னாச்சு? என்கிட்டே சொல்ல உனக்கென்ன?"

தலையை நிமிராமல் சீதா பேசினாள் –

25 FEB

"அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் படறார் சுமி."

சுமித்ரா எதிர் பார்த்ததுதான். ஆனாலும் 'தடக்' கென்று உண்மை வெளிவரும்போது, ஒருகணம் மனசு மரத்துத்தானே போகும்?

"நீ என்ன சொன்னே சீதா?"

"ம்?... யோசிச்சு சொல்றேன்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"அப்புறம், வேற ஒண்ணுமே பேசலை சுமி."

சீதா மேற்கொண்டு ஏதாவது பேசுவாள் என்று காத்திருந்த அவள் பேசாதிருக்கவே சுமித்ராவே மறுபடியும் கேட்டாள்.

"உன் அபிப்பிராயம் என்ன, சீதா?"

தெரியாது என்பதுபோல தலையை ஆட்டினாள் சீதா. பிறகு, "எனக்கு கல்யாணம்னு நான் நினைச்சுக்கூட பார்த்ததில்லை சுமி. இப்ப திடீர்னு கேட்டா மனசு குழம்பிப் போறது. அவர் நல்லவர், ஆனாலும்... அம்மாவைக் கேட்காம நான் எப்படி முடிவு எடுக்கறது சுமி?... எனக்கு ஒண்ணுமே புரியலை..." என்றாள்.

சீதாவின் நிலை நன்கு புரிந்தது சுமித்ராவுக்கு. 'நான் எது சொன்னாலும் இவள் ஏற்றுக்கொள்வாள்' என்ற தைரியம் தோன்ற "சரி, நான் சொல்றதைக் கேளு, சரியா, நமக்கு ஃபைனல் எக்ஸாம்ஸ்க்கு இன்னும் இரண்டு மாசம் தான் இருக்கு. நீ இத்தனை நாள் கஷ்டப்பட்டு முதலாவதா படிச்ச மாதிரி, இதையும் முடிச்சால்தான் உங்கம்மா, உங்கப்பா, ஏன் உன் மனசுக்குக்கூட திருப்தி யாகும். அதனாலே, நீ பரீட்சை முடியறவரைக்கும் இந்தப் பேச்சை அடியோட மறந்துடு. நாளைக்கே வேணா ராம் குமாரிடம் என் பரீட்சை முடியட்டும் பிறகு முடிவு எடுக்க லாம். அதுவரை இதைப்பத்தி பேசவேண்டாம் என்று சொல்லிவிடு. நீ சொல்றமாதிரி அவர் ரொம்ப பண்புள்ள மனுஷன், ஹி வில டெபனெட்லி அண்டர்ஸ்டாண்ட் ஓ பரிட்சை முடிந்தப்புறம், அம்மாகிட்டே பேசிக்கலாம். அதுவரைக்கும் நீயும் படிப்பைத் தவிர வேறு எதையும் நினைக்காம இருக்கறதுதான் உன் கடமை, சீதா..."



கலங்கிப் போயிருந்த மனசுக்கு தோழியின் வார்த்தைகள் சரியான புத்திமதியாகத் தோன்றவே அவள் யோசனையே ஏற்று, அப்படியே நடப்பதாக சீதா சொல்லவும், சிநேகிதிகள் வீடு திரும்பினார்கள்.

கொடுத்த வாக்குப்படி மறுநாள் காலையில் குமாரின் அறைக்குச் சென்று தன் தீர்மானத்தைத் தெளி வாகச் சொன்னாள் சீதா. கடைசியாக "என்னை நீங்கள் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டீர்கள் என்ற நம்பிக்கை யோடு இதை கூறியிருக்கிறேன். உங்கள் மனசை நான் எந்த விதத்திலாவது ஏமாற்றியிருந்தால், தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றும் கூறினாள்.

நியாயஸ்தனான ராம்குமார் சீதாவின் கெடுவை நியாயமானது என்றே நினைத்ததால் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டான். ஆனால் அவள் மாடிப்படி இறங்க உத்தேசித்த அந்த சமயத்தில் "சீதா இந்த விஷயம் பற்றி நீயே பேசினாலொழிய நான் பேச்சை எடுக்கமாட்டேன்" என்றவன், மறுபடியும் நினைவுக்கு வந்தவனாய் "நான் உன்னை சீதா என்று அழைத்ததால் ஆட்சேபனை உண்டா? இல்லை உங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்று நினைக்கிறீர்களா?" என்றும் கேட்டான்.

ஆண்மையின் வடிவாக நின்றுகொண்டு குழந்தைத்தனமான இந்தக் கேள்வியைக் கேட்டதும் சீதா வின் மனம் நெகிழ்ந்து போயிற்று. தன் பெரிய கண்களால் அவனை நிமிர்ந்து நோக்கி, "எனக்கு உங்கள் கேள்வியின் முதல்வரிதான் பிடிக்கிறது! இரண்டாவது வரி பிடிக்க

வில்லை" என்று சொல்லி அழகாய் புன்னகைத்துவிட்டு ஓரே ஓட்டமாய் இறங்கி ஓடினாள்.

அடுத்த இரண்டு மாதங்களைக் கடத்த சீதாவும், ராம்குமாரும் வெகுவாக சிரமப்பட்டார்கள். ஒருவரை ஒருவர் மனமார நேசிப்பது அவரவர் மனசுக்கே புரிந்து போனதால் தவித்துப் போனார்கள்.

ராம்குமாரைப் பற்றி எண்ணவே கூடாது என்று எவ்வளவுதான் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டாலும், அத்தனைக்கத்தனை மனசு பூராவும் அவனே நிறைந்து போனதையும் சீதா உணர்ந்துகொண்டாள்.

இந்த நாட்களில் மகளிடம் சொல்லத் தெரியாத ஒரு மாறுதலை தாய் உணரவே செய்தாள். தாய் இல்லையா அவளிடம் எதை மறைக்க முடியும்? அடிக்கடி எதையாவது வாங்கிக்கொண்டு வரும் ராம்குமார் அப்பழக்கத்தைக் குறைத்துக் கொண்டவனாய், அதிசயமாய் வீட்டுக்குள் வரும்போதும், வாடகைப் பணத்தை கொடுக்க வரும் போதும் "நீ போய் என்னனு கேளும்மா" என்று சீதா அனுப்பினது புதிய பழக்கமாக இருந்தது.

ஒருசில சமயம் சீதாவும், அந்தப் பையனும் எதிர் எதிராய் சந்திக்க நேர்ந்த போதும் சிவந்து போகும் முகங்களுடன் காரணமில்லாமல் இருவரும் தடுமாறியதும் அவளுக்கு வினோதமாய் இருந்தாலும், மகளிடம் வைத்திருந்த அசாத்திய நம்பிக்கை காமாட்சியை வேறு எதுவும் நினைக்காதபடி செய்துவிட்டது.

சிநேகிதிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற, இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு வேறு சிந்தனை எழ இடம் கொடாமல் சீதா படித்தாள்.

ஒரு வழியாய் பரீட்சைகள் முடிந்தன.

கடைசி பரீட்சை முடிந்து கல்லூரியிலிருந்து திரும்பின சீதா "எப்படிம்மா எழுதியிருக்கே?" என்று



அம்மா கேட்ட கேள்விக்கு "நன்னா எழுதியிருக்கேம்மா" என்று பதிலளித்துவிட்டு முகம் அலம்பி உடை மாற்றிக் கொண்டு சுமித்ராவின் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

மாடியில் ராம்குமார் நின்றிருந்ததை அவள் பார்த்தாள். இப்போதெல்லாம் அவன் முன் மாதிரி ரொம்ப வெளியில் போகாததை சீதா கவனித்திருந்தாள். மொட்டை மாடியில் நின்றுகொண்டு அவன் தன்னையே பார்ப்பது அவளுக்குத் தெரிந்ததுதான்.

கூடியமட்டும் இருவரும் ஒருவரை ஒருவர் தவிர்க்க முயற்சித்தாலும், மீறிக்கொண்டு சந்திக்கும் சமயங்களில் இதயங்களின் ஏக்கங்கள் கண்களில் இருவருக்குமே தாண்டவமாடும்.

பரீட்சை ஆரம்பித்த பிறகு தினமும் அவள் புறப்படும் நேரத்திற்குக் கீழே வந்து நின்று தவறாமல் "பெஸ்ட் ஆஃப் லக், சீதா" என்பான் குமார். அவன் குரலில் வழிந்தோடும் அன்பில் புளகாங்கிதமடைவாள் சீதா.

அன்று காலைகூட அவள் புறப்பட்டதும் எதிரில் வந்து "இன்றைக்குத்தான் கடைசி பரீட்சை இல்லையா? நீ அமோகமாய் வெற்றிபெற வாழ்த்துகிறேன் சீதா" என்ற போது 'உன் கெடு முடியப்போகிறதே?' என்று அவன் உணர்த்தியதாக சீதாவுக்குத் தோன்றியது.

இப்போது சுமித்ராவின் இல்லத்திற்குப் புறப்பட்ட நேரத்தில், அவன் மாடியிலிருந்து பார்த்த பார்வை "இன்னும் எவ்வளவு நாள் சீதா?" என்று அவளைக் கேட்பதாகவே இருந்தது.

இனியும், இந்த முடிவை ஒத்திப் போடக் கூடாது என்று தீர்மானித்த சீதா, ஒரு திடமான எண்ணத்துடன் சுமித்ராவிடம் பேசினாள்.

"அவர் என்னைப் பார்க்கும் பார்வை என்னைத் துளைத்து எடுக்கறது, சுமி. எனக்காக அவர் ஏன் இப்படி

தவமிருக்கணும்? என்கிட்டே அப்படி என்ன இருக்கு?..." சீதாவால் கோர்வையாகப் பேசமுடியவில்லை. படபடப்பு அதிகமாகிப் போனது. "இந்த இரண்டு மாசத்திலே அவர் மேலே நான் கொண்டுள்ள பிரியம் எனக்கு நன்னா புரிஞ்சு போச்சு, சுமி. அவரை நான் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்... எனக்கு உதவி பண்ணு சுமி..." வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டு, மனசைக் கொட்டிவிட்டாள் சீதா.

சீதா மனப்பூர்வமாக ராம்குமாரை விரும்புவதை என்றோ சுமித்ரா உணர்ந்துவிட்டதால், இன்று வெளிப் படையாக சீதா பேசினது அவளுக்கு அதிர்ச்சியைத் தர வில்லை.

தீவிரமாக யோசனை செய்தாள். "இனியும், நீ பேசாம இருக்கக்கூடாதுதான், சீதா. இரண்டில் ஏதாவது ஒன்றை குமாரிடம் சொல்லித்தான ஆகணும்... முதலிலே எங்கப்பாகிட்டே இதைப்பற்றிப் பேசுவோமா? அவரை விட்டே உங்கம்மாவிடம் சொல்லச் சொல்லலாமா?"

சீதா உடன் நிற்க அன்றிரவே கோபாலனிடம் விஷயத்தை எடுத்துரைத்தாள் சுமித்ரா.

சுறுக்கே பேசாமல் சமாசாரத்தை கிரஹித்துக் கொண்டார் கோபாலன். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு "இதிலே ஒண்ணும் தப்பிருக்கிறதா எனக்குத் தெரியலை சீதா. பிள்ளைக்கு குணம்தான் முக்கியம், அது குமாரிடம் நிறைய இருக்கு. நன்னா படிச்சவன்... ம்... ம் தாராளமாய் இந்தக் கல்யாணம் நடக்கலாம்... ஆனா உங்கம்மாகிட்டே நானே இதைப்பற்றிப் பேசறதுக்கு முன்னாலே உன் வாயாலேயே தெரிவிக்கிறது நல்லதுன்னு நான் நினைக்கிறேன்... இன்னிக்கு வெள்ளிக்கிழமை... நல்ல நாள், நீ நேரே வீட்டுக்குப் போய் அம்மாகிட்டே விபரத்தைச் சொல்லு. நான் உன் பின்னாலேயே வரேன்..." என்று திட்டவட்டமாகக் கூறினார்.



சீதா தனியாக வீட்டுக்குத் திரும்பினாள்.

காமாட்சி குத்து விளக்கை ஏற்றி வைத்துவிட்டு, அபிராமி அந்தாதி படித்துக் கொண்டிருந்தாள்.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்
அறிவதொன்றேதுமில்லை. உனக்கே பரம்
எனக்குள்ளதெல்லாம் அன்றே உனதென்று
அளித்து விட்டேன் அழியாத குணக்குன்றே
அருட் கடலே இமவான்பெற்றகோமளமே.

அருகில் போய் அமர்ந்துகொண்டாள் சீதா. அம்மா படிக்கும் வரிகளுக்கும், தன் நெஞ்சின் துடிப்புக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தோன்ற பேசாமல் அம்மா முடிக்கும்வரை காத்திருந்தாள்.

அந்தாதியை முடித்த காமாட்சி நமஸ்காரம் பண்ணி முடித்ததும், அவள் காலில் விழுந்து சீதா நமஸ் கரித்தாள். அம்மாவின் கையைப் பற்றி, இழுத்து அருகில் அமர்த்தினாள். "அம்மா... அம்மா..." என்று நடுங்கும் குரலில் ஆரம்பித்து, ராம்குமார் தன்னிடம் பேசினதி லிருந்து, சுமித்ரா சொன்னது, இன்று கோபாலன் சொன்னது எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சொன்னாள். "அம்மா நான் அதிகப் பிரசங்கித்தனமா ஏதாவது செய்திருந்தா மன்னிச்சுடும்மா... உன்னை மீறி நான் எதுவும் பண்ண மாட்டேன்ம்மா... ஆனா, ஆனா... அவரை நான் விரும்பறேன்ம்மா... அதையும் உனக்குச் சொல்லிடறேன்" என்று சொல்லிவிட்டு, படபடப்பு தாங்காமல் அம்மாவின் மடிக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசும்பினாள்.

ஓரிரண்டு மாசங்களாய் நடக்கும் மௌன நாடகம் இன்று காமாட்சிக்குப் புரிந்து போயிற்று.

"சீதா... எதுக்கும்மா அழறே" என்று கேட்டுக் கொண்டு அவள் தலையை நிமிர்த்தவும், கோபாலன் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

"வாங்கோ" என்று அழைத்தாள் காமு.

"நம்ப சீதாவுக்கு கல்யாணம் தெரியுமோன்னோ? ஜாதகத்தை அலசி அலசி எடுத்த மாப்பிள்ளையைவிட இந்தப் பையன் நல்ல ஆம்படையானாக இருப்பான்னு நான் நினைக்கிறேன். தெய்வமா இருந்து அவர் நடத்தறார். நான் வேறு என்ன சொல்லப் போறேன்!" காமாட்சி தன் சம்மதத்தை வெகு எளிதில் தந்துவிட்டாள். புயல் அடித்து கோர தாண்டவமாடுவதற்குப் பதிலாக இதமான தென்றல் வீசியது.

## 6

**சீ**தா வெளியில் போனதும் ராம்குமாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'எங்கே போகிறாள்?' — என்ற கேள்வியும் 'என் கேள்விக்கு என்ன பதிலளிக்கப் போகிறாள்?' என்று ஆதங்கமும் சேர்ந்தே எழுந்தன. வீட்டில் இருக்கப் பிடிக்காதவனாய் குளித்து உடை மாற்றிக் கொண்டு வெளியே போய்விட்டான்.

எங்கெல்லாமோ சுற்றிவிட்டு வேண்டா வெறுப்பாக உணவருந்திவிட்டு அவன் தன் அறைக்கு வரும்போது மணி ஒன்பதைத் தாண்டிவிட்டது. அறையில் விளக்கைப் போட்டு, இறுக்கமாய் இருந்த பேண்டையும், ஷர்ட்டையும் அவிழ்த்து விட்டு, தொளதொளவென்று பைஜாமா ஒன்றை எடுத்து மாட்டிக்கொண்டான். பாத்ரூமிற்குச் செல்லும் கதவைக் திறந்துகொண்டு போய் பச்சைத் தண்ணீரில் நன்றாக முகத்தைத் அலம்பிக்கொண்டான். டவலினால் முகத்தைத் துடைத்துக்கொண்டே மாடி சுவருக்கு அருகில் வந்து சீதாவின் இல்லத்தை எட்டிப் பார்த்தவனுக்கு, அந்நேரத்தில் கோபாலனை அங்கு கண்டதும் ஆச்சரியமாய்



போயிற்று. காமாட்சியும் அவரும் ஏதோ தீவிரமாய் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. சீதா அம்மாவுக்கு அருகில் அமர்ந்து தாயின் தோளின் மேல் வாஞ்சையுடன் சாய்ந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் அலாதி சந்தோஷம். என்ன விஷயம்?

அறைக்குள் வந்து நாற்காலியில் அமர்ந்தான் ராம்குமார். சீதா வீட்டில் ஏதோ விசேஷப் பேச்சு நடக்கிறது — என்ன அது?

ஐந்து நிமிஷ காலம்கூட யோசித்திருக்கமாட்டான். 'மே ஐ கம் இன்?' என்று மாடிப்படி ஏறியவாறு கேட்ட கோபாலன் அவன் பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே நுழைந்து விட்டார்.

"கங்கிராஜுலேஷன்ஸ், மை பாய்," என்று இரு கைகளையும் விரித்துக்கொண்டு, எழுந்து நின்ற குமாரை ஆரத் தழுவிக்கொண்டார்.

நல்ல பொண்ணுக்குத்தான் வலை போட்டிருக்கிறாய் ராம்குமார். சீதாவைப் போல பெண் கிடைப்பது ரொம்ப சிரமம். அப்போதிலிருந்து உனக்காகத்தான் காத்திருக்கிறேன். உன் அறையில் வெளிச்சம் தெரிந்தது.. உடனே வந்துவிட்டேன்... சந்தோஷம் குமார் ரொம்ப சந்தோஷம்..."

குதூகலம் நிறைந்த குரலில் உற்சாகமாக கோபாலன் பேசினதிலிருந்து குமார் விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டான். என்றாலும் விபரமாகப் புரியவில்லை.

"சார்... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஓ! என் சந்தோஷத்தில் விளக்கமாய்ச் சொல்லவில்லையா? குமார், நீ சீதாவை மணப்பதற்கு காமாட்சி சம்மதித்துவிட்டாள். எங்களுக்கெல்லாம் பூரண திருப்தி. போதுமா?"

சீதா என்னை மணப்பது ரொம்ப சிரமமான காரியம். அவர்கள் பிராமணர்கள், தமிழர்கள். எனக்குப் பெண் குடுக்க வெகுவாக ஆட்சேபிப்பார்கள். காமாட்சி

அம்மாள் கோபம் அடைவார். நான் அவரை எப்படியாவது சம்மதிக்கச் செய்ய வேண்டும். 'மா நான் சீதாவுக்கு நல்ல கணவனாக இருப்பதோடு உங்களுக்கும் பெறாத பிள்ளையாக இருந்து காப்பாற்றுகிறேன்' என்று மனப்பூர்வமாகச் சொல்லி சம்மதத்தைப் பெறவேண்டும். கடைசியில் ஒன்றுக்குமே சீதாவின் தாய் பணிய மறுத்தால் என்ன பண்ணுவது?' என்றெல்லாம் கடந்த மாதங்களாய் தனக்குத் தானே உழன்று கொண்டிருந்தவனுக்கு கோபாலன் சொன்ன எளிமையான வார்த்தைகளை நம்புவது சிரமமாக இருந்தது.

"சார்..." என்றவனுக்கு மேலே பேச்சு எழவில்லை.

''என்னப்பா. திகப்பிரமையாய் நிற்கிறாய்? சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லையா! சரி... வா... கீழே போகலாம். காமாட்சி உன்னை அழைத்து வரச் சொன்னாள். இல்லையப்பா சீதா உனக்காகக் காத்திருக்கிறாள். வா குமார்." சந்தோஷத்தில் தலைகால் புரியாமல் கோபாலன் பேசினார்.

பைஜாமாவை மாற்றிக்கொண்டு அவரோடு சீதாவின் வீட்டுக்குப் போனான் குமார்.

ஒருவருக்கொருவர் கோபாலனும், காமாட்சியும் பேசிக்கொண்டது புரியாவிட்டாலும் அவர்கள் முகத்தில் கூத்தாடிய உற்சாகம் மட்டும் ராம்குமாருக்குப் புரிந்தது.

சூடாக ஒரு தம்ளரில் பாலைக் கொடுத்து குமார் குடித்த பிறகு வாசற்படியில் அமர்ந்த காமாட்சி பேசினாள். "எங்களுக்கெல்லாம் இந்த சம்பந்தத்தில் ரொம்ப சந்தோஷம் ஜாதி விட்டு ஜாதி பண்ணறோம்னு நாலுபேர் பேசத்தான் போறா. ஆனா இந்த கல்யாணத்தினாலே என் சீதா சந்தோஷமா இருப்பானு நான் நினைக்கிறேன். உங்க குணம் எங்களுக்குத் தெரியும். குணவானான மாப்பிள்ளையானதாலே எனக்கு ரொம்ப இருப்தி... ஆனா நாங்க சரின்னாலும், உங்களைப் பெத்தவா சம்மதத்தையும்



கேட்டுட்டு தான் இந்தக் கல்யாணம் நடக்கணும். எங்க ஆசை. அதுதான் மரியாதையுங்கூட..."

கோபாலன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

"எங்கள் வீட்டில் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். என்னைப பெற்றவர்களைப் பற்றி; என் குடும்பத்தைப் பற்றி நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லி இருக்கிறேன். அவர்கள் சம்மதம் கிடைக்காவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. சீதா மாதிரி குணமுள்ள பெண்களைப் பற்றி எங்கள் குடும்பத்தில் யாருக்குமே, அம்மாவைத் தவிர, புரியாது அதனால் அவர்களிடம் இந்தத் திருமணத்தைப் பற்றிப் பேசுவதுகூட அனாவசியம் என்றே தோன்றுகிறது..."

ராம்குமாரின் வாதத்துக்கு காமாட்சி கட்டுப்படவில்லை. "நாளைக்கு ஒருத்தர் ஒரு வார்த்தை சொல்ல இடம் வைச்சுக்கக்கூடாது. நீங்கள் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பணத்துக்காக எங்கள் பிள்ளையை எங்ககிட்டேயிருந்து பிரிச்சேனு சீதாவுக்கு ஒரு அபாவாதம் வரக்கூடாது. பெரியவாளுக்குத் தெரிவிக்காம கல்யாணம் நடக்கிறது நல்லதில்லைன்னுதான் எனக்குத் தோணறது" என்று திருப்பித் திருப்பி அடித்துப் பேசவும், கோபாலனும், குமாரும் சொல்லுவது சரி என்றே ஒப்புக் கொண்டனர்.

ஆக ஞாயிற்றுக்கிழமை ராம்குமார் இந்தூருக்குப் போவது என்று தீர்மானித்த பிறகு அவரவர் வீட்டுக்குப் போனார்கள்.

முதல்நாள் பேச்சுகளின்போது கண்களிலேயே தெரியாத சீதா, மறுநாள் காலை எட்டு மணியளவில் வெளியில் வந்தபோது ராம்குமார் பார்த்துவிட்டான். இது நாள் வரை அவளைப் பார்க்கும்போது எழாத தாபம் தூண்ட, மாடிச்சுவரில் சாய்ந்து குனிந்து 'சீதா?' என்றழைத்தான்.

சீதா நிமிர்ந்து பார்த்தாள், நாணிக் குனிந்தாள்.

அவள் கண்கள் சிவந்து தாமரை இதழ்களாய் இருந்தன. அவளும் இரவு தூங்கவில்லையா! எப்படித் தூங்க முடியும்?

"ஊபர் ஆஜாவ் ப்ளிஸ்" என்று கெஞ்சினான் ராம் குமார்.

"ம்ஹூம்" என்பதுபோல தலையை ஆட்டினாள் சீதா.

"ப்ளீஸ், சீதா ப்ளீஸ்" என்று அவன் வாயைக் குனிந்து கொண்டு கெஞ்சவும், அம்மா பார்க்காத சமயத்தில் பக்கப் பாதையில் வந்து படியேறினாள் சீதா.

ராம்குமார் அழைத்ததையும், சீதா குறும்புடன் மாடிக்கு ஏறுவதையும் கீழ்விட்டு உமா பார்த்துக் கொண்டே இருந்தாள். முதல்நாள் மாலைக் காட்சிக்கு சினிமா போய்விட்டு, ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு அவர்கள் வீடு திரும்பும்போது மணி 11-க்கும் மேலேயே ஆகிவிட்ட தால் நடந்தது ஒன்றுமே தெரியாத உமாவிற்கு 'இது என்ன கூத்து!' என்று தூக்கிவாரிப் போட்டது.

அறைக்குள் சீதா நுழைந்ததும் இருவருக்குமே என்ன பேசுவது என்று புரியவில்லை.

பனியில் மலர்ந்த ரோஜாவின் தளதளப்புடன சீதா நின்றிருந்தாள்.

ஆஜானு பாகுவாய் கம்பீரமாய் அவன் இருந்தான்.

"சீதா..."

"......"

"ஹேய்... சீதா..."

"ம்....."

"என்னைப் பார்க்க மாட்டாயா?"



கண்களை நிமிர்த்தினாள் சீதா.

ஓரடி முன்னால் வந்தான் குமார். "சீதா நீ என்னை மனப்பூர்வமாக விரும்புகிறாயா?"

"........"

"ப்ளீஸ்-சொல்லேன்..."

ஆமாம் என்பது போலத் தலையாட்டினாள் சீதா.

"உனக்கு இந்தூரிலிருந்து ஏதாவது வேண்டுமா?"

வேண்டும் என்பது போல மீண்டும் தலையை ஆட்டினாள் சீதா.

"என்ன வேண்டும்-சொல்லேன்"

சீதாவின் முகத்தில் நாணமும், குறும்பும் சேர்ந்து பரவின.

'இதுதான்' என்பதுபோல அவன் நெஞ்சுக்கு நேரே ஒரு விரலை நீட்டினாள்.

சிலிர்த்துப் போயிற்று ராம்குமாருக்கு.

நீட்டிய விரலை மெல்ல பிடித்துக்கொண்டு சீதாவை அருகில் இழுக்க முன் வந்தான்.

"நாழியாகி விட்டது, அம்மா தேடுவாள் நான் போகிறேன்." சீதா கையை விடுவித்துக்கொண்டு கீழே போக இறங்கினாள்.

அவளைத் தொடர்ந்து ராம்குமாரும் இறங்கினான்.

கீழே அலுவலகத்துக்குப் புறப்பட உமா வெளியே வரவும், இவர்கள் இறங்கவும் சரியாக இருந்தது.

உமாவைக் கண்ட குமாரினுள் குடிகொண்டு விஷமம் குடி கொள்ளவே, முன்னால் சென்ற சீதாவின் தோளைப் பற்றி நிறுத்தி "சாயங்காலம் பார்க்கலாமா?"

25 FEB 2005

என்றும் கேட்டான். ராம்குமாரின் திடீர் செய்கைக்கு அர்த்தம் புரியாமல் 'என்ன இது?' என்ற பாவனையில் கண்களைத் திருப்பிய சீதா, ராம்குமாரின் விஷமக்கார முகத்தையும், அவன் பின்னால் அதிர்ச்சியில் பிதுங்கிப் போன கண்களைக் கொண்ட உமாவையும் பார்த்தாள். அவளுக்குப் புரிந்து போயிற்று. சிரிப்பை அடக்க முடியாதவளாய், வாயை ஒரு கையால் பொத்திக்கொண்டு ஓடியே போனாள்.

மறுநாள் ராம்குமார் இந்தூருக்குப் புறப்பட்டான். நல்ல சேதியுடன் அவன் திரும்ப வேண்டுமே என்ற படபடப்புடன் காமாட்சியும், சீதாவும் அவனை அனுப்பி வைத்தார்கள்.

கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் ஏறி, ஒன்றரை நாள் பிரயாணம் செய்து, போபாலில் இறங்கி, இந்தூருக்குப் போக ரயில் மாறினான் ராம்குமார்.

அவன் இந்தூருக்குப் போய்ச் சேரும்போது நடுப்பகல் ஆகிவிட்டது. அப்பா உணவருந்த வீட்டிற்கு வந்திருப்பார். உடனே பேச்சை எடுக்கலாமா? இல்லை சற்று பொறுத்து ஆரம்பிக்கலாமா? கண்டிப்பாக சம்மதம் கிடைக்காது; சண்டை போட்டுத்தான் வாங்கவேண்டும். வந்ததற்காக இரண்டு நாட்களாவது இருக்கவேண்டும் என்றெல்லாம் யோசித்தவாறு வீட்டினுள் நுழைந்தவனை முதலில் வீணா பார்த்தாள்.

"அரே; ராம்குமார்? தும் கப் ஆகயி?" என்று கேட்டு விட்டு, உள் நோக்கி "மா-ராம்குமார் ஆகயா" என்று கத்தினாள். பிறகு "சௌக்யமாய் இருக்கிறாயா?" என்று கூடக் கேட்காமல் "எனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறாய்?" என்று வினவினாள்.

"ஒன்றுமில்லை, அவசர வேலையாய் வந்ததால் ஒன்றும் வாங்க நேரமில்லை" என்று ராம்குமார் பதிலளிக்க அவள் முகம் சுண்டிப் போய்விட்டது.



அப்பா, அம்மா, தம்பிகள், தங்கை, வேலைக்காரர்கள், உறவினர்கள் என்று எல்லோரும் கூடிவிட்டார்கள்.

"எப்போது வந்தாய்? எப்படி வந்தாய்? ஏன் சொல்லாமல் வந்தாய்?" என்று பலவித கேள்விகள்.

ஏதேதோ சொல்லி மழுப்பினான் ராம்குமார்.

குளித்துவிட்டு வந்தபோது அனைவரும் ஒன்றாக உணவருந்த தட்டுகள் போட்டிருந்தார்கள்.

அப்பா இன்னும் பெருத்திருந்தார்; அம்மா இன்னும் இளைத்திருந்தாள்; வீணாவின் வாய் இன்னும் வளர்ந்திருந்தது. தம்பிகள் முகத்தில் தத்தாரித்தனம் இன்னும் கூடிப் போயிருந்தது.

சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"என்னடா — குமார் — சோழியன் குடுமி சும்மா ஆடாதே... எதற்காக திடீரென்று வந்திருக்கிறாய்?" என்று அப்பா வினாவவும் அமைதி நிலவியது.

அப்பா அசகாய சூரர், எப்படியோ மோப்பம் பிடித்து விடுவார்.

"சாப்பிட்ட பிறகு பேசலாமே" அம்மா குறுக்கிட்டாள்.

"ஏன்? என்னத்துக்கு சாப்பிட்ட பிறகு பேசணும்? உன் வேலையை நீ பார்" என்று அவளை அதட்டிவிட்டு "என்னடா சமாசாரம்?" என்று மறுபடி கேட்டார்.

அமர்க்களம் ஓய்ந்த பிறகு பேசலாம் என்றிருந்த ராம்குமாருக்கு பொய் பேசத் தெரியாததால் தந்தை கேட்டவுடன் "நான் கல்யாணம் பண்ணிக்கலாம் என்று இருக்கிறேன்" என்றான் மெதுவாக.

"அடி சக்கை அதுவா விஷயம்... அப்போது பெண் வீட்டுக்கு சொல்லி அனுப்பிடலாமா? அந்த மல்லிகா

வீட்டில் துளைத்து எடுக்கிறார்கள்." அப்பா அட்டகாசமாய் சிரித்தார்.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பேசினான் ராம்குமார்.

"பெண் அவள் இல்லை, மெட்ராசில் நானே பார்த்திருக்கிறேன்."

திடீரென்று ஓரே நிசப்தம்.

"என்னது? பார்த்திருக்கிறாயா? யாருடா, அவள்?"

"சீதா என்று பேர். தமிழ்க்காரி, பிராமணப் பெண்."

அவனை முடிக்கவிடாமல் கத்தினார் தயாள் சர்மா — "தமிழ்க்காரியா? ஏண்டா? ஜாதிவிட்டு ஜாதியிலே பெண் பார்த்துவிட்டு என்னை சம்மதம் கேட்க உனக்கு எத்தனை திமிர்? அதிகப் பிரசங்கி..."

"இதைப் பாருங்களேன்..." தடுத்துப் பேச வந்த அம்மாவை "வாயை மூடு" என்று அதட்டினார். பிறகு "உன்னை அப்படி மயக்கிவிட்ட பெண் மஹா ரம்பையா, இல்லை கோடீஸ்வரியா? சொல்லுடா?" என்று உறுமினார்.

இப்போது ராம்குமாருக்கும் கோபம் வந்து விட்டது. வயசு வந்த பிள்ளை என்று கூட பார்க்காமல், தம்பிகள் நடுவில் வேலைக்காரர்கள் முன்னால் அப்பா தூக்கி எறிந்து பேசியதும் அவனுள் ரோஷம் மூண்டது.

"சீதா அழகி இல்லை, பணக்காரி இல்லை. ரொம்ப ஏழ்மையானவள், எளிமையானவள், அவளிடம் நீங்கள் மதிக்கும் ஒன்றுமே இல்லை. ஆனால் உங்களுக் கெல்லாம் தெரியாத புரியாத விசேஷம் அவளிடம் நிறைய இருக் கிறது அதுதான் குணம். அவள் குணம்தான் என்னைக் கவர்ந்தது. போதுமா?"



என்றுமே தன் முன் நின்று தலையைக் கூட நிமிர்த்திப் பேசாத பிள்ளை இன்று இவ்வளவு பேசவும் தலைகால் புரியாத ஆத்திரம் சாமாவுக்கு எழுந்தது.

என்னைக் கேட்காமல் பெண் பார்த்து நிச்சயித் திருக்கிறான். ஜாதிவிட்டு ஜாதி அதுவும் ஏழைப் பெண்ணை.

இனி நான் எந்த முகததோடு இங்குள்ளவர்களைப் பார்ப்பேன்?

கிளப்பில் என் அந்தஸ்து என்னாவது?

ஊரில் என் கௌரவம் என்னாவது?

சீறினார் தயாள் சர்மா.

"எழுந்திருடா வெட்கம் கெட்டவனே! பெரியதாய் சாப்பிட உட்கார்ந்துவிட்டான் மான, வெட்கம் இல்லா தவன். பிள்ளையாய் பிறந்து, என் பணத்தில வாழ்ந்து, உயர்ந்துவிட்டு, இன்று என் முகத்திலேயே கரி பூசிய பிறகு அப்பனாவது, மகனாவது, எழுந்திருடா."

வார்த்தைகளை நெருப்புத் துண்டங்களாய் தலையில் கொட்டவும் துடித்துப்போனான் ராம்குமார். சப்பாத்தியை விண்டு வாயில் வைத்தவன் அதைத் துப்பி விட்டு, கையை உதறியவாறே எழுந்தான்.

"ராம் என்னப்பா இது..." பதறிக்கொண்டு வந்த மஞ்சரியை தடுத்தார் தயாள் சர்மா. "ஏய்! நீ பேசாமல இருக்கமாட்டாய். அவன் அப்படிப்பட்ட ரோஷக்காரனாக இருந்தால் எதுக்காக எனக்கு அவமானம் வரும்படி நடந்து கொள்ள வேண்டும்? கண்ட, கண்ட கழுதைகள் பேச்சைக் கேட்டுக்கொண்டு குப்பையை மடியில் கட்டிக் கொள்ளத் துணிவானா? சீதாவாம் சீதா. எப்படிப்பட்ட பெண்ணோ? எப்படிப்பட்ட குலமோ?....."

அவரை முடிக்கவிடாமல் உரக்க கத்தினான் ராம்குமார். "நிறுத்துங்கள்! சீதாவைப் பற்றி உங்களிடம் பேசினது என் தவறுதான். அவள் பேரைச் சொல்லக்கூட உங்களுக்குத் தகுதியில்லை... அனாவசியப் பேச்சு வேண்டாம்..."

அவ்வளவுதான் —

அதன் பிறகு எல்லாமே ரசாபாசமாய் போயிற்று.

எச்சில் கையுடன் மகனை அடிக்க வந்த சர்மாவின் முன் மஞ்சரி விழுந்து தடுக்க, அவளுக்கு ஒரு அறை கொடுத்து விட்டு, அதே கையால் ராம்குமாரை நெம்பித் தள்ளினார்.

"போடா, போ வெளியே, இனி எனக்கு நீ மகனுமில்லை. நான் உனக்கு அப்பனுமில்லை. சொத்தில் காலணா கூட கிடையாது. அந்த மயக்குக்காரியை, கட்டிக் கொண்டு அழு" என்று அலறவும், "உங்கள் உறவே வேண்டாம் என்று நான் இருக்கும்போது, உங்கள் பணம் மாத்திரம் எனக்கெதற்கு?" என்று குறுக்கே பாய்ந்து பதிலளித்துவிட்டு உள்ளே போய் தான் கொண்டு வந்த சின்ன பெட்டியை எடுத்துக்கொண்டு ராம்குமார் வந்தான்.

'ஹோ' என்று அழுது புலம்பின தாயின் கால்களைத் தொட்டு வணங்கினான். "உன் ஆசிர்வாதம் இருந்தால் போதும், உடம்பைப் பார்த்துக்கொள்" என்றவன், துக்கம் நெஞ்சை அடைக்க ஹாலைக் கடந்து, படிகளில் இறங்கி தெருவில் ஓட்டமும் நடையுமாய் நடந்தான்.

இத்தனை அசிங்கமாகுமளவுக்கு விஷயம் போகும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அன்று இரவு போபாலுக்குச் சென்று ரயிலைப் பிடித்து வியாழனன்று சென்னைக்குத் திரும்பிய ராம்குமார், இத்தனை விரைவில் வந்துவிட்டது சீதாவுக்கும், காமாட்சிக்கும் வியப்பைக் கொடுத்தது.



கலைந்த முடியும், சிவந்த கண்களும், ஒட்டிய தாடைகளுமாய் அவன் வந்ததுமே அவர்களுக்குப் புரிந்து விட்டது.

சீதாவின் கைகளைப் பற்றிக்கொண்டு காமாட்சியின் முன் நின்றான் ராம்குமார் "மா... இனி நீங்கள் சீதாவிற்கு மட்டுமல்ல எனக்கும் தாயாகவும், தந்தையாகவும் இருப்பீர்களா?" என்று கேட்டபோது அவன் கண்கள் கலங்கின அவன் மனசின் பாரத்தை உணர்ந்த சீதாவுக்கும் அழுகை வந்தது.

## 7

**வே**லைக்குப் புறப்படுமுன் சமையற்கட்டை ஒழித்துக் கொண்டிருந்த உமாவிற்கு "சீதா... சீதா..." என்று யாரோ ரகசிய குரலில் கூப்பிடுவது போலத் தோன்றவே — சற்றே எட்டி ஜன்னல் வழியாகப் பார்த்தாள், அண்ணாந்து, மாடியைப் பார்த்துக்கொண்டு சீதா நிற்கவும், ராம்குமார்தான் அவளை கூப்பிட்டான் என்பது உமாவிற்கு தெளிவாயிற்று. 'வரமாட்டேன்' என்பது போல் முதலில் சீதா தலையை ஆட்டினாலும் நாணத்தால் முகம் சிவக்க, சற்று பொறுத்து மாடிக்குச் செல்லும் பாதையில் சென்ற போது. "ஓஹோ இவ்வளவு தூரத்துக்கு வந்திடுச்சா" என்று கறுவிய உமா பரக்க பரக்க சம்பந்தம் அமர்ந்திருந்த ஹாலுக்கு ஓடினாள்.

"என்னங்க... என்னங்க... இந்த கூத்தைப் பார்த்திங்களா? இவன் மாடியிலிருந்து 'சீதா ப்ளீஸ்'னு கெஞ்சினான். இவளும் குலுக்கிக்கிட்டு மாடிக்குப் போறா... என்னங்க இது? கொஞ்சம்கூட நல்லாயில்லையே! நடக்கறது உங்க

கண்ணுக்குத் தெரியலை... நான் மட்டும் ஏதாவது சொன்னா பேசாதே... பேசாதேனு வாயை அடைக்கிறீங்க..."

சம்பந்தத்திற்கு கல்லூரிக்கு நாழியாகிவிட்டது. டை கட்டுவதில் மும்முரமாய் இருந்தவர் "குமார் கூப்பிட்டானா? வாடகை கொடுக்க இருக்கும்... இன்னிக்குத்தான் தேதி மூணாச்சே..." என்றதும் உமாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

"நல்ல மனுஷன் — உங்ககிட்டே வந்து முறை யிடறேனே... வாடகை கொடுக்கக் கூப்பிட்டானாம் இவள் போறாளாம்.... ஐயோ... ஐயோ... என்னங்க நீங்க... அவன் கூப்பிட்ட விதமும்... இவள் நாணிக்கோணிக் கொண்டு போனதும்..."

இடைமறித்தார் சம்பந்தம் — தினம் பொறுப்ப வருக்கு இன்று கல்லூரி போகும் மும்முரத்தில் உமாவின் வம்பு பேச்சை நின்று கேட்கும் பொறுமை இல்லை.

"சரி சரி — விடு அவுங்க எப்படிப் போனா நமக் கென்ன? நாம் ஒழுங்கா இருந்தா சரி... எனக்கு நாழியா வது... உனக்கும்தான்... ஆபீசுக்கு கிளம்பாம என்ன வெட்டிப் பேச்சு உமா? — நான் முன்னே போறேன். நீ பூட்டிக்கிட்டு கிளம்பு... என்ன?" அவன் பதிலை எதிர் பார்க்காமல் சம்பந்தம் கிளம்பிவிட்டார்.

உமாவுக்கு முகம் தொங்கிவிட்டது 'என்ன மனுஷன் இவர்? நடந்ததைச் சொன்னாகூட நம்பாமல்?' தனக்குத் தானே முணுமுணுத்து விட்டு, சேலையை மாற்றிக் கொண்டு, கைப் பையை எடுத்துக்கொண்டு, கதவைப் பூட்ட வெளியே வந்தாள்.

அவள் வந்ததற்கும், மாடியிலிருந்து மனம் விட்டு சிரித்துக்கொண்டு சீதாவும், தொடர்ந்து ராம்குமாரும் இறங்கி வருவதற்கும் சரியாக இருந்தது.



சீதா அவளை கவனிக்கவில்லை. ஆனால் ராம் குமார் பார்த்துவிட்டான். என்ன நினைத்துக் கொண்டானோ, உமாவைப் பார்த்தவாறே சீதாவின் தோள் மேல் கையைப் போட்டு நிறுத்தி, "சாயங்காலம் பார்க்கலாமா?" என்று குறும்புடன் கேட்டுச் சிரித்தான். திரும்பிய சீதாவிற்குப் திக்பிரமை பிடித்தாற்போல உமா நிற்பது தெரியவே அவளை வியப்பில் ஆழ்த்தவே ராம் குமார் இப்படி செய்ததை உணர்ந்தவளாய் சிரிப்பு பொங்கி எழ ஓடியே போனாள்.

உமாவுக்கு சரியான அதிர்ச்சி.

தன் முன்னாலேயே இப்படி தோளைத் தொட்டு நிறுத்திப் பேசவேண்டுமென்றால் எத்தனை தைரியம்? என்ன திமிர்?

படபடப்பில் உடம்பு ஆடியது.

கேலியாக இருவரும் சிரித்துக்கொண்டு பிரிந்த விதம் தன்னைக் கேலி செய்கிறாற்போல வேண்டுமென்றே செய்தது என்று அவளுக்குப் புரிந்ததால் அவளுள் கோபம் பொங்கி எழுந்தது.

'மடார்' என்று வாசற் கதவை அடித்து மூடினாள். ஆத்திரம் தீர வெடுக்கென்று பூட்டிவிட்டு பூமி அதிர தெருவில் இறங்கி நடந்தாள்.

'புத்தி கெட்ட மனுஷன், சரியான ரெண்டாங் கெட்டான். தனக்காகவும் தெரியாது நாம் சொன்னாலும் தெரியாது. வயசு வந்த பொண்ணுா தத்தாரித்தனமா இருக்குது. அவுங்க அம்மாகிட்டே சொல்லி கண்டிக்க வாணாம்? நான் சொன்னா கேட்பாங்களா? இவளாவது ஆம்பிளை — சொன்னா மதிப்பாங்க — ஊஹூம் இந்த மனுஷன் கிட்டத்தான் என் பேச்சே எடுபடாதே... யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?' மனசுக்குள் குமுறிக் கொண்டே ஆபீஸை அடைந்தாள் உமா. அங்கு தன் தாபம் தீர சக பெண் கிளர்க்கிடம் 'என் வீட்டுக்கார கழிசடை

இருக்குதே..' என்று ஆரம்பித்து கொட்டித் தீர்த்தாள். முன் பின் தெரியாத பெண்ணைப் பற்றின வம்பைக் கேட்பதில் சம்பந்தம் காட்டாத ஆர்வத்தை அவள் சிநேகிதி காட்டவும் உமாவிற்கு கொஞ்சம் திருப்தியாயிற்று.

மாலை வீட்டுக்குப் போய் கணவனிடம் இந்த அசிங்கத்தை எப்படியாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தவளின் ஆசை, மதியம் போன் செய்த சம்பந்தம் "அம்மாவுக்கு உடம்பு சொகமில்லைனு அப்பா போன் செய்தாரு. எனக்கு இனிமே கிளாஸ் இல்லை — நான் நேரே மண்ணடிக்குப் போறேன் — நீ ஆபீசிலேந்து வீட்டுக்குப் போய் உனக்கும், எனக்கும் நாலு நாளைக்கு வேணுங்கற துணிமணிகளை எடுத்திட்டு மண்ணடிக்கு டாக்ஸி எடுத்துக்கிட்டு வந்திடு'' என்றதும் நிறைவேறாதபடி ஆயிற்று.

சம்பந்தத்தின் தாய்க்கு கொஞ்சம் தேவலையானதும், அடுத்த வெள்ளிக்கிழமை மைலாப்பூருக்கு வந்தார்கள். மண்ணடி வீட்டில் கணவனுடன் கொஞ்சங்கூட சேர்ந்து இருக்க முடியாததால் அவரிடம் சொல்ல நினைத்த 'சீதா விஷயத்தை' அந்த வீட்டுப்பெண்களை எல்லாம் கூட்டி வைத்துக்கொண்டு ஆசை தீர வம்படித்தாள் உமா.

வெள்ளிக்கிழமை மாலையில் வீட்டுக்கு வந்ததும், அத்யாவசியமான வேலைகளைக் கவனித்துவிட்டு, சம்பந்தத்திற்கு குடிக்க காபி எடுத்துப் போனபோது சனிக்கிழமை நடந்ததை பிட்டு பிட்டு கை கால்கள் சேர்த்து சொல்லிய உமா "நீங்க அவுங்க அம்மா கிட்டே சொல்லி கண்டிக்கச் சொல்லணுங்க.. நாளைக்கி, எதுனா ஆயிடுச்சின்னா... நமக்கும் இதிலே பொறுப்பு இருக்குங்க..." என்றும் பேசி ஒரு வழியாய் முடித்தாள்.

அவள் முடிப்பதற்கும் "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டுக்கொண்டு கோபாலன் வாசலில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.



"வாங்க.. வாங்க.." தம்பதி எழுந்து நின்று வரவேற்றனர்.

"உட்காருங்க... என்ன விஷயம் சார்?"

சௌகரியமாய் உட்கார்ந்தார் கோபாலன் — பிறகு "நீங்க பேசிண்டு இருந்ததைக் கேட்டுண்டுதான் வந்தேன். உமாம்மா... நீங்க நான் இதிலே குறுக்கிடறதுக்காக மன்னிக்கணும் — சீதா என் பெண் மாதிரி — அந்த சுவாதீனத்தில் பேசறேன் — தவறா நடந்துக்கக் கூடிய பெண் சீதா இல்லேம்மா. அவளோடு இத்தனை மாசங்களா பழகியுமா அவ குணம் உங்களுக்குப் புரியலை" என்றார் மெதுவாக.

உமாவுக்கு வியர்த்துப் போயிற்று. அவள் பதில் பேசாததால் சம்பந்தம் பேசினார். "தப்புத்தாங்க மிஸ்டர் கோபாலன். இவ கிட்ட நான் எத்தனையோ முறைகள் சொல்லிட்டேன்... இனியும் இப்படி பேசாம பார்த்துகிட வேண்டியது என் பொறுப்பு — ஐ ஆம் ட்ருலி ஸாரி —"

சிரித்தார் கோபாலன். "பாருங்கோ — சீதா மாதிரி நல்ல பெண்ணைப்பத்தி யாராலும் எதனாலும் பேசிடக் கூடாதேன்னுதான் அந்த பையனுக்கே அவளை முடிக்க பகவான் ப்ராப்தம் இருக்கு."

"என்ன, என்ன சொல்றீங்க?"

"சீதாவுக்கும், ராம்குமாருக்கும் கல்யாணம் மிஸ்டர் சம்பந்தம். பெரியவா நிச்சயம் பண்ணி நடக்கிற கல்யாணம். ராம்குமார்கூட இந்தூருக்குப் போய பேரண்ட்ஸ்கிட்டே தெரிவிச்சுட்டு நேத்து வந்துட்டான். வர பதினெட்டாம் தேதி, வடபழனியில் கல்யாணம் நீங்களும் மிஸஸ் சம்பந்தமும் அவசியம் வரணும்..."

கோபாலன் பேசப் பேச உமாவிற்கோ, இல்லை சம்பந்தத்திற்கோ எதுவுமே பேசத் தோன்றவில்லை.

"அப்புறம் சார்... ராம்குமாருக்கு நல்ல சம்பளம், வேலை கன்ஃபாம் ஆயிடுத்து. கல்யாணம் ஆனப்புறம் இந்த அவுட்ஹவுஸ் போதாது. அதனாலே வர ஒண்ணாந் தேதிக்குள் நீங்கள் வேறு வீடு பார்த்துண்டால் நல்லது... முன்னாலேயே சொல்லலாம்னா இது 'திடும்' என்று நிச்சயம் ஆன கல்யாணம். நீங்க தவறா எண்ணக் கூடாது..."

"இதிலே என்ன சார்? வி டெஃபனெட்லி அண்டர்ஸ்டாண்ட்... அந்த பெண் சீதா சந்தோஷமாய் இருந்தால் சரி... ப்ளீஸ் கன்வே அவர் கன்கிராஜுலேஷன்ஸ் டு சீதா" என்று சம்பந்தம் சொன்னாலும் 'இத்தனை சௌகரியங்களுடன் கட்டிய வீடு மாதிரி எங்கே சுலபமாய் கிடைக்கப்போகிறது' என்ற ஆதங்கம் அவர் குரலில் தெரிந்தது.

கிட்டத்தட்ட அதே நேரத்தில் கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குள படிக்கட்டில் அமர்ந்துகொண்டு இதையே பேசிக் கொண்டிருந்தார்கள் சீதாவும், சுமித்ராவும்.

"ம் அப்புறம்?"

"அப்புறம் என்ன சுமி? அவர் வந்து இறங்கினதுமே எனக்கும் அம்மாவுக்கும் புரிஞ்சுடுத்து. அவாத்திலே சம்மதம் கிடைக்கலைன்னு அவரும் அதைத்தான் சொன்னார்..."

"எவரும்?" சுமியின் கேள்வியில் குறும்பு கூத்தாடியது.

"போ சுமி" சிணுங்கினாள் சீதா.

"நேற்று வரை அவன், இவன் குமார் என்பாய். இன்று மட்டும் அவரா? என்ன மரியாதை..." கேலி செய்து சிரித்தாள் சுமித்ரா. "சரி, சரி... விஷயத்தைச் சொல்லு... அப்பா, அம்மா ஏன் சம்மதிக்கலையாம்? டீடெய்ல்ஸ் எல்லாம் சொல்லு சீதா..."



"அவ்வளவுதான் குமார் சொன்னார் சுமி. அப்பா அம்மா சம்மதிக்கவில்லையாம். தீர்மானமாக 'சீதாவைத் தான் பண்ணிக் கொள்வேன்' என்று சொல்லிவிட்டு இவரும் வந்து விட்டார். ஐ டிண்ட் ஆஸ்க் ஹிம் ஃபார் த டீடெய்ல்ஸ். ஹொ கேன் ஐ, சுமி? ஸச் அன் அன்ப்ளெசண்ட் சப்ஜெக்ட்..."

வாஸ்தவம்தான். குமார் விவரம் ஒன்றும் சீதாவிடம் சொல்லவில்லை. அப்பா கத்தினது, தன்னை அடிக்க வந்தது, சீதாவைப் பற்றி தரக்குறைவாய் பேசினது, தன்னை வீட்டைவிட்டுப் போ என்று சொன்னது எல்லா வற்றையும் தன் மனசிலேயே போட்டு அடக்கிவிட்டான். மறுத்த விஷயம் தெரிந்தால் போதும். பாக்கி கசப்பு நிகழ்ச்சிகள் எதற்கு என்று பேசாமல் இருந்துவிட்டான்.

"சாயங்காலம் குமார் அப்பாவைத் தேடி வந்திருந் தார் சீதா. அவருக்கு வேலை கன்ஃபாம் ஆயிடுத்தாம். இன்னிக்கு ஆபிசில சொன்னானாம். அவுட் ஹவுசை வேறு யாருக்காவது வாடகைக்கு விட்டுடலாமா? நாங்கள் மெயின் ஹவுசில் குடித்தனம் பண்ணலாமான்னு அப்பா கிட்டே கேட்டுண்டு இருந்தார்... என்னம்மா ஏற்பா டெல்லாம் தடபுடலாய் இருக்கு...?"

நாணத்தால் முகம் மலர்ந்து, சிவந்து போயிற்று சீதாவுக்கு... "ஆமாம் சுமி... அவர் ஆபிஸிலிருந்து வந்ததும் எங்கிட்டேயும் சொன்னார்..."

பேசிக்கொண்டே போன சீதா எதுவோ நினைத்துக்கொண்டு சற்று மௌனமானாள். பிறகு மெல்ல "சுமி... அவரைப் பற்றின உன் அபிப்பிராயத்தை சொல்லவேயில்லையே... சுமி... ஏன் சுமி... அவர் ஹிந்திக் காரர் — நான் தமிழ்... எல்லாம் சரியாக இருக்குமா...? எனக்கு பயமாக இருக்கு சுமி..." என்றும் கேட்டாள்.

சீதாவின் மனக்கலக்கம் சுமித்ராவுக்கு நன்றாய் புரிந்தது.

"ஏய்... என்ன இது பைத்தியம் மாதிரி, பிடிச்சாலும் புளியங்கொம்பாய் பிடிக்கணும் என்று சொல்றதை நிரூபிக்கிற மாதிரி மனிதரைப் பிடித்திருக்கிறாய், ஹி ஈஸ் எ ஜெண்ட்டில் மேன். ஸ்ரீதரன்கூட அப்பாவிடம் பேசும்போது, 'சீதா அதிருஷ்டக்காரி மாமா பையன் தங்கம்தான்'னு சொன்னதை என் காதால் கேட்டேன்... சீதா... ஹிந்திக்காரனாவது, தமிழ்காரனாவது, எல்லாம் மனசில் இருக்கு. ஜாதி, பாஷையிலே என்ன இருக்கு?"

சுமித்ராவின் பேச்சைக் கேட்டதும் சீதாவின் முகம் பழையபடி மலர்ந்தது.

தோழியின் சந்தோஷத்தைக் காணக் காண சுமித்ராவின் நெஞ்சில் பரவசம் முட்டிற்று. நெருங்கி வந்து சீதாவின் தோள் மேல் கையைப் போட்டுக்கொண்டாள். தீவிரமான குரலில் "ஐ ஆம் ஸோ ஹாப்பி. சீதா உன் வாழ்வு, எவ்வளவு அழகாய் அமையப்போறது. நீ இந்த சின்ன வயசில் நிறைய கஷ்டத்தைப் பார்த்துவிட்டாய் சீதா. இனி உன் வாழ்க்கையில் சந்தோஷத்தைத் தவிர வேறு ஏதும் இருக்கக்கூடாது. ஐ வில் பிரே டு காட்..." என்றாள்.

"நம்மைப் போன்ற எத்தனையோ ஏழைகள், ஆண் துணையில்லாத ஏழைகள், திண்டாடி தவிக்கும்போது நாம் மட்டும் மனசில் நிம்மதியோடும், கஷ்டப்படாமலும் வாழறோமே? தர்மத்தோடு வாழ்பவர்களை தெய்வம் கை விடாது. எப்போதும் கண்ணைத் திறந்து கவனித்துக் கொண்டே இருக்கும்' என்று அம்மா அடிக்கடி சொல்லும் போது எனக்கு முழு அர்த்தமும் விளங்காது. ஆனால் இன்னிக்குப் புரியறது சுமி..."

தோழிகள் கோயிலை விட்டு வீட்டுக்குத் திரும்பும் போது நன்றாய் இருட்டிவிட்டது. வழியில் சுமித்ரா கேட்டாள். "உங்க அத்திம்பேருக்கு சொல்லவேண்டாமா, சீதா? யார் சொல்லப்போறா? ஆர், ஹெ ஈஸ் கோயிங் டு டெல் இ காட்?"



"அம்மா போய் சொல்ல மாட்டாளாம், 'சுப காரியத்துக்கு என்னைப் போன்றவா பேசக்கூடாது' என்று பிடிவாதம் பண்ணறா உங்கப்பாவிட்டே சொல்லியிருக்கா. நாளைக்கு மத்தியானத்துக்கு மேல் அவாத்துக்கு போய் சொல்றேன்னு உங்க அப்பா சொல்லி இருக்கார்..." சற்றே நிறுத்தினாள் சீதா. பிறகு "அத்திம்பேரை நினைச்சால் எனக்கு பயமாக இருக்கு சுமி..." என்றும் சொன்னாள்.

அவள் பயந்தது வீணுக்கு இல்லை.

மறுநாள் கல்யாண சேதி சொல்லப்போன கோபாலனை அவமானப்படுத்தாத குறையாக கத்தினான் மூர்த்தி. விஷயத்தை பூராவும் அவர் முடிக்கவிடாமல் குறுக்கிட்டு "என்னது, கல்யாணமா? சீதாவுக்குக் கல்யாணமா? சொந்தக்கார எங்களுக்கு நீங்க மூணாவது மனுஷா சொல்லித்தான் தெரியணுமா?" என்று ஆரம்பித்து மாப்பிள்ளை யார் என்று தெரிந்ததும் 'ஓஹோ' என்று கூப்பாடு போட்டான். முடிவில் "உங்களிடம் என்ன சார் பேச்சு? பேச வேண்டிய இடத்தில் பேசிக்கிறேன்" என்று கோபாலனை எடுத்தெறிந்தும் பேசினான்.

"சித்தே சும்மா இருங்கோளேன். அவர் என்ன சொல்றார்னு பூராதான் கேட்போமே?" குறுக்கே பேசிய லைலாவை உள்ளறைக்குள் தள்ளினான். பிறகு "நீங்க புறப் படுங்கோ சார், நான் என் மாமியாரிடம் பேசிக்கிறேன்" மரியாதை இல்லாமல் பேசி விஷயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

கோபாலன் சீதாவின் வீட்டை அடையும்போது மணி மாலை நான்கு. மெள்ள மெள்ள நடந்த விவரங்களை அவர் கூறி முடித்ததும் "எங்களால் உங்களுக்கு எவ்வளவு அவமானம்?" என்று கலங்கிவிட்டாள் காமாட்சி.

"இதுலே அவமானம் என்னம்மா? நீங்க யாரு, அன்னியமா? சீதாவுக்காக நான் எதையும் பொறுத்துப் பேன், அவ குணம் தெரியாதா? விட்டுத் தள்ளுங்கோ."

அவர் பேசிக் கொண்டிருக்கையிலேயே புயல் போல வந்து சேர்ந்தான் மூர்த்தி. மாமியாரிடம் பேச்சுக் கொடுக்காமல் திகபிரமை பிடித்து அமர்ந்திருந்த சீதாவைப் பார்த்து "என்ன சீதா, என்னது இது இவர் என்னென்னமோ சொல்றாரே? நிஜமா?" என்று உரக்கக் கேட்டான்.

சீதா பதில் சொல்லவில்லை.

காமு முந்திக்கொண்டாள்.

"வந்து மாப்பிள்ளை மாடிப் பிள்ளை, ரொம்ப நல்லவராய் இருக்கார்-இரண்டு பேருக்கும் புடிச்சு போயிடுத்து. ஈஸ்வர கிருபை அப்படீன்னா நாம் எப்படி தடுக்க முடியும்?" அவளை பேசவிடாமல் எகிறிக் குதித்தான் மூர்த்தி.

"நல்ல பிள்ளை தூத்தெறி. ஹிந்திக்கார தத்தாரிக்கு இந்தப் பட்டம் வேறேயா?" என்று ஆரம்பித்து எழுத்தில் வடிக்க முடியாத வார்த்தைகளாக வாரிக் கொட்டினான்.

சீதாவும், காமுவும் துடித்துப் போகும்படி அலறினான்.

என்னவெல்லாமோ சொல்லி தன் ஆத்திரம் தீர கத்திவிட்டு "அவன் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாய் வந்தால் நான் வெளியே போயிடுவேன். ஸரஸாங்கற பொண்ணு செத்துப் போயிட்டதா நினைச்சுங்கோங்கோ. அம்மாவும், பெண்ணும் சேர்ந்துண்டு குடும்ப பேரை கெடுக்க நாடகமாடறேளா என்ன? உங்க வீட்டில் பெண் எடுத்ததற்கு இப்போ நான் வெட்கப்படறேன். இப்படி நீங்க மானரோஷம் இல்லாமல் இருப்பேள்னு தெரிஞ்சுதான் மாமா போய்ச் சேர்ந்தாரோ, என்னமோ..." என்றும் அசிங்கமாய் பேசி கத்தினபோது காமுவின் பொறுமை எல்லையைத் தொட்டு விட்டது.

"போதும் நிறுத்துங்கோ. உங்களுக்கு இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லைனா, நீங்க சொன்ன மாதிரி



எங்க தொடர்பை அறுத்துக்கலாம். நானும் எனக்கு ஸரஸான்னு பொண்ணு பொறந்ததை மறந்துடறேன்.. இதை விட்டுட்டு வேண்டாத பேச்சு வேண்டாம்..."

இந்தப் பேச்சை சற்றும் எதிர்பாராத மூர்த்தி குன்றிப் போனான். அவமானத்தால் முகம் துடிக்க, வெடுக்கென்று எழுந்து, அருகிலிருந்த நாற்காலியை எட்டி உதைத்து கவிழ்த்துவிட்டு "எக்கேடும் கெட்டுப் போங்கள். இழவு எடுத்த ஜன்மங்கள்" என்று காறித்துப்பிவிட்டு, ஓட்டமும், நடையுமாக வெளியே போனான்.

ரசாபாசமாய் தன் வீட்டில் நடந்த விஷயங்களை மறைத்துவிட்டு, 'அவர்கள் சம்மதம் கொடுக்க மறுத்து விட்டார்கள்' என்று ஒரே வார்த்தையில் ராம்குமார் சொன்னதுபோல, அன்றிரவு 'மூர்த்தி என்ன சொன்னார்?' என்று ஆவலுடன் ஒன்றுமே அறியாமல் ராம்குமார் இவர்களிடம் கேட்டபோது, கசப்பான வாக்கு வாதங்களைச் சொல்லி அவன் மனசைப் புண்படுத்த வேண்டாம் என்ற நினைப்பில் "அவருக்கு அவ்வளவாய் இஷ்டம் இல்லை; எதிர்பார்த்ததுதானே?" என்று ஒரே வரியில் பதில் சொல்லி மற்றவைகளை தன் நெஞ்சிலேயே தேக்கிக் கொண்டாள் சீதா.

## 8

"எழுந்திருங்கள் ராம். மணி என்ன தெரியுமா? ஏழரை —"

கையில் ஆவி பறக்கும் காபியை வைத்துக் கொண்டு ஐந்து நிமிஷ காலமாய் கணவனை எழுப்ப முயன்று தோல்வி கண்டாள் சீதா.

"எழுந்திருக்காவிட்டால் என்ன பண்ணப் போகிறேன் தெரியுமா?... இருங்கள் இருங்கள் பொய்த்தூக்கமா தூங்குகிறீர்கள்?"

போர்வையிலிருந்து தாமரை இதழ் நிறத்துடன், நீண்டிருந்த ராம்குமாரின் பாதத்தில் அருகிலிருந்த பேப்பரை எடுத்து லேசாக வருடினாள் சீதா. பாதம் குறுகுறுக்க எழுந்து விடுவான் என்று பார்த்தால், ராம்குமார் அசையக் கூட இல்லை.

கிட்டே போய் தொட்டு, குலுக்கி எழுப்ப மாட்டாள் சீதா. திருமணமான இந்த மூன்று மாதங்களில் பலமுறை ஏமாந்து போய் அருகில் சென்று தொட்டு எழுப்பினால், கையைப் பிடித்துக்கொண்டு வம்பு செய்வான் ராம்குமார்.

'அடே! என்ன இது! நிஜமாய்தான் தூங்குகிறாரா என்ன!' தனக்குத்தானே பேசிக்கொண்ட சீதா, காபியை அருகிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டு குப்புறப் படுத்து உறங்கும் கணவனின் தோளை தொட்டு "ராம்... ராம்... எழுந்திருங்கள்" என்றாள் மெதுவாக.

அவ்வளவுதான். இதுநாழிகை உறங்கியதுபோல பாசாங்கு செய்துகொண்டிருந்த ராம், சட்டென்று திரும்பி, கையை நீட்டி, சீதாவைப் பற்றி தன்பால் வேகத்துடன் இழுத்தான். இதை சற்றும் எதிர்பார்க்காத சீதா, நிலை குலைந்து போய் கணவன் மேல் பாதியும், படுக்கையில் பாதியுமாக விழுந்தாள். ராமின் கைகள் அவள் இடுப்பைச் சுற்றி வலுவுடன் அணைத்துக்கொண்டன.

"ஆ... வலிக்கிறது. கையை எடுங்கள்... ஆ... என்ன இது... சின்னக் குழந்தை போல... விடுங்கள் ராம்..."

சிரித்தான் ராம்குமார்.



"சிரிப்பைப் பார் சிரிப்பை... சே... ஆனாலும் ரொம்ப மோசம்... தூங்குவதுபோல் பாசாங்கு செய்து..." கோபமும் சந்தோஷமும் கலந்து பேசினாள் சீதா.

அவள் என்ன கெஞ்சியும், அவளது கோபத்தை ரசித்த ராம்குமார் கையை எடுக்காமலேயே சீதாவின் முகத்துக்கு அருகில் நெருங்கி "எனக்கு ஒரு முத்தம் கொடு" என்றான் தமிழில்.

தூக்கி வாரிப்போட்டது சீதாவுக்கு.

ராம்குமாருக்கு தமிழ் தெரியாததால் அவர்கள் எப்போது பேசினாலும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். நடுநடுவில் இவள் ஹிந்தியில் பேசினாலும் இவனுக்கு மட்டும் வா, போ தண்ணி என்று மட்டும்தான் பேசத் தெரியும். இப்போது திடீரென்று நல்ல தமிழில் திக்கி, திக்கி பேசியதும் அவளுக்கு தூக்கி வாரிப் போடாமல் என்ன செய்யும்?

"என்ன, என்ன சொன்னீர்கள்?" என்றாள் ஆங்கிலத்தில்.

நிதானமாய் மறுபடியும் ராம்குமார் "எனக்கு ஒரு முத்தம் கொடு" என்று தமிழில் பேசியதும் சீதாவின் ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை.

"கடவுளே! என்ன பேசறார் இவர்! ஹேய் ராம் நீங்கள் பேசுவது உங்களுக்குப் புரிகிறதா?"

"கிவ் மி எ கிஸ்" ஆங்கிலத்தில் தான் தமிழில் கேட்டதை மொழி பெயர்த்தான் ராம்குமார்.

"எப்படி?... எப்படி தெரிந்தது, ராம்?" சீதாவின் முகத்தில் திகைப்பு.

"ஸ்ரீதரன் கற்றுக்கொடுத்தான்."

"என்ன? ஸ்ரீதரனா?"

"ஆமாம். தமிழில் 'கிஸ் மி எ கிஸ்' என்பதற்கு என்ன என்று கேட்டேன். சொல்லிக்கொடுத்தான்."

தலையில் அடித்துக்கொண்டாள் சீதா.

"இதெல்லாம் எப்படி ஸ்ரீதரனிடம் கேட்கலாம், இன்னதுதான் நண்பனிடம் சொல்வது என்று கிடையாதா, என்ன?"

"ஆண் பிள்ளைகளுக்கு வெட்கம் கிடையாது என்பது உனக்குத் தெரியாது? சரி பேச்சை மாற்றாதே சீதா" என்று கூறி ராம்குமார் மறுபடியும் குழந்தைபோல முகத்தை வைத்துக்கொண்டு "எனக்கு ஒரு முத்தம் கொடு" என்றான் தமிழில்.

சிரிப்பு பொத்துக்கொண்டது சீதாவுக்கு. "ஐயே, முத்தமா? இப்போதா? பல்கூட தேய்க்காமல் நான் மாட்டேன், ராம்... அசிங்கம்" செல்லமாய் கணவனிடம் விளையாடினாள் சீதா.

"மாட்டாய்? மாட்டாய், சரி அம்மா எங்கே பக்கத்து ரூமில் தானே இருக்கிறார்கள். நான் இப்போது கத்தப் போகிறேன். சீதா எனக்கு ஒரு மு..." உரத்த குரலில் ராம் பேச ஆரம்பிக்கவும், தங்கள் உரையாடல் அம்மாவுக்கு கேட்டாலும் கேட்கும் என்று ஒரு கையால் கணவனின் வாயைப் பொத்தின சீதா அவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தாள்.

அடுத்த அறையிலிருந்து அலை அலையாய் எழுந்த சிரிப்பு, காமாட்சிக்கும் சிரிப்பை வரவழைத்தது. என்னதான் சிரிப்பார்களோ, சதா சர்வகாலமும்! அவளுக்குப் புரியவில்லை. அவர்கள் ஆங்கிலத்திலேயே முழுக்க முழுக்க பேசியதால், பிற சமயங்களில் அவர்கள் பேசியது புரியாவிட்டாலும், அவர்கள் சந்தோஷம் மட்டும் காமுவிற்கு புரிந்துபோய் நெஞ்செல்லாம் இனிக்கும்.



திருமணமான நாளிலிருந்து இதுநாள் வரை, சீதாவிடம் தெரிந்த மகிழ்ச்சி சந்தோஷம் அவளுக்கு இதமாக இருந்தது.

"சின்ன வயசிலேயே எத்தனை பொறுப்புகளை ஏத்துண்டிருந்தா! குழந்தை பாவம் இனியாவது சிரிப்பும், சந்தோஷமுமா இருக்கட்டும்" என்று நினைக்கையிலேயே கண்கள் கலங்கிவிடும்.

ராம்குமார் மகளிடமும், தன்னிடமும் காட்டும் அன்பு அவளை திக்கு முக்காடவே செய்தது. இத்தனை வருஷங்களாய் அடக்கி, அடக்கி வைத்திருந்த அன்பு, பாச உணர்வுகள் இனியும் அடங்க மாட்டோம் என்று கூக்குரலிட்டுக் கொண்டு பிரவாகமெடுத்து சீதா மேல் அருவியாய் வர்ஷித்தது.

ஒரு நாளைக்கு ஆயிரம் தடவையாவது சீதா, சீதா என்று சுற்றிச் சுற்றி வருவான். வேலை பார்க்கும் ஒரு வருஷமாய் சேர்த்து வைத்த பணத்தில் சீதாவுக்கு இரண்டு ஜதை தங்க வளையல்கள், ஒரு கங்கணம், ஒருஜதை தங்கத்தோடு என்று திருமணத்திற்கு முன்னாலேயே வாங்கிவிட்டான்.

திருமணமானதும் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்த எண்ணூறு ரூபாயுடன் மேரேஜ் அலவன்ஸ் என்று மேலும் நூற்று ஐம்பது ரூபாய் கம்பெனி சேர்த்து தருவதாக அறிவித்ததும் அவன் எல்லாம் சீதாவின் அதிருஷ்டம் என்று பூரித்துப் போனான்.

கம்பெனியில் அட்வான்ஸ் வாங்கி, ஸ்ரீதரனின் உதவியுடன் பிரம்பினாலான சோபா செட், இரண்டு கட்டில் மெத்தைகள், காஸ் அடுப்பு, இரண்டு மின்விசிறிகள் என்று ஜமாய்த்துத் தள்ளினான்.

இதுநாள் வரை இருக்குமிடம் தெரியாமல், தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்த ராம்குமார் இன்று எல்லோரிடமும் சகஜமாய் பழகி செட், செட்டாக

தன் வீட்டில் ஆபீஸ் நண்பர்களை விருந்துக்கு அழைத்த போது, சீதா அவனுள் உண்டாக்கிய மாறுதலைக் கண்டு அவனைத் தெரிந்தவர்கள் அதிசயித்துப் போனார்கள்.

அன்னையின் உதவியுடன், சிறந்த முறையில் விருந்து சமைத்து, நண்பர்களுடனும், அவரவர் மனைவியுடனும் அழகாய், புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டு சீதா நல்ல பேர் வாங்குகையில ராம்குமாரின் இதயம் கடவுளுக்கு சதா நன்றி சொல்லும்.

இந்த மூன்று மாசங்களில் சீதாவுக்கு எட்டு, காமாட்சிக்கு இரண்டு என்று புடவைகளை அவன கை கொள்ளாமல் வாங்கி வந்து கொடுக்கும்போது "எதற்காக இப்படி செலவழிக்கிறார்? நீ சொல்லு சீதா..." என்று அம்மா சொன்னால், "நான் உங்களுக்கு வாங்கித் தராமல யாருக்குத் தரப்போகிறேன்..." என்று சொல்லி மெதுவாய் சிரிப்பான் ராம்குமார்.

அடிக்கடி சினிமா, பீச என்று இருவரும் கிளம்புவார்கள், "அம்மாவும் வரட்டும், சீதா" என்று பிடிவாதம் பிடிப்பான் ராம்குமார். காமாட்சியிடம் பேசவேண்டும் என்பதற்காக கஷ்டப்பட்டு சீதாவிடம் சில சில வார்த்தைகளை கற்றுக்கொண்டுவிட்டு, சமயத்தில் மறந்து நிற்கும் அவனைப் பார்த்தால் காமாட்சியின் நெஞ்சில் தாய்ப் பாசம் பீரிட்டு எழும்.

பூஜை அறையில கணவன் படத்திடம் அமர்ந்து 'குழந்தைகளை க்ஷேமமாய் வைக்கவேண்டியது உங்க பொறுப்பு' என்று சதா வேண்டுவாள்.

கணவனில்லாமல் வாழ்ந்த இந்த நான்கு வருஷ வாழ்க்கையின் துன்பமெல்லாம் சீதா, குமாரின் மகிழ்ச்சியான உறவை பார்க்கும் போது கரைந்து விட்டதாகவே தோன்றும்.

கணவனுடன் வாழ்ந்த பெரிய வீட்டில், இன்னும் கூடிய சௌகரியங்களுடன் வாழும்போது "தெய்வமே —



நாங்க புண்ணியாத்மாக்கள் தானப்பா, உன் கருணை எங்களிடம் நிறைய இருக்கப்பா" என்று உருகி பிரார்த்திப்பாள்.

கண்ணை மூடி, தியானத்தில் ஈடுபட்டிருக்கும் காமுவிற்கு அவ்வப்போது சரஸா, மூர்த்தியின் நினைவு வரும்போது மட்டும் உடம்பு ஆடிப்போகும்.

மூர்த்தி கல்யாண தேதி அறிந்து வந்து கத்தினதையும், அசிங்கமாய் சாபமிட்டுவிட்டு போனதையும் நினைப்பாள். மறுநாள் கணவனுக்குத் தெரியாமல், தையல் கிளாசுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு பரக்க பரக்கச் ஸரஸா வந்து நின்றதையும் நினைப்பாள்.

"அம்மா, என் சீதாக் கண்ணுக்கு கல்யாணமா அம்மா? அப்பாதான் தெய்வமா இருந்து நடத்தறார்... எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமாம்மா... இவர் ரசா பாசமாய் கத்தினாரா? அவர் குணம் அதுதானேம்மா... நீ மனசில வைச்சிக்காதே... சீதாக் கண்ணு; நீயும் நேத்திக்கு அத்திம்பேர் கத்தினதை மறந்துடும்மா... என் ஆசிர்வாதம் உனக்கு எப்போதும் உண்டும்மா..." என்று சொல்லி சரஸா அழுததும்.

"ஆமாம். நீ எப்படி இப்போ வந்தே ஸரஸா; உங்காத்துக்காரர் விட்டாரா?" என்று தான் கேட்டதும் —

"அவருக்கு நான் வந்தது தெரியாதும்மா. தையல் கிளாசுக்குப் போறேனு சொல்லிட்டுவந்தேன்... நேத்து ஆத்துக்கு வந்து, 'இனிமே உங்கம்மாவாத்துக்கு நீ போனாயோ உன் காலை வெட்டிடுவேன்'னு சொல்லி நாக்கில் நரம்பு இல்லாமல் கத்தினாரம்மா... அவர் கிடக்கிறார்... என்னால் சீதாவை பார்க்காம முடியுமா!– என் தங்கைக்கு கல்யாணம்னா நான் வராமல் எப்படியம்மா..." என்று விசும்பியதும் பிறகு மடியிலிருந்து நூற்றியொரு ரூபாய் பணத்தை எடுத்து சீதா கையில் கொடுத்து "என்னால் கல்யாணத்துக்கு வரமுடியுமோ

முடியாதோ, உனக்கு நான் எவ்வளவோ பண்ணலாம் சீதா. ஆனா இப்ப முடிஞ்சது இவ்வளவுதான். உனக்குப் பிடிச்ச சாமானாய் வாங்கிண்டு அமோகமாய் இரும்மா" என்று வாழ்த்தினதும், அக்கா தங்கை ஒருத்தரை ஒருத்தர் கட்டிக்கொண்டு கதறியதும் காமுவிற்கு தினம் ஒரு தடவையாவது ஞாபகத்துக்கு வரும்.

ஸரஸா சொன்னதுபோல அவளால் சீதாவின் கல்யாணத்துக்கு வர இயலவில்லை. மூர்த்தி மறுத்து விட்டான். கல்யாண பத்திரிகையை கிழித்து சரஸாவின் முகத்தில் போட்டு "இன்விடேஷன் அனுப்பியிருக்காளா, திமிர் பிடிச்ச கழுதை! இவள் திமிருக்கு எழவு எடுத்த கல்யாணம் ஒண்ணுதான் குறைச்சல்... ஏ சரஸா நீ அங்கே போனே அப்புறம் நீ எனக்கு பெண்டாட்டி இல்லை, ஆமாம்" என்று உறுமினதும் "நல்ல காரியத்தை ஏன் இழவுனு சொல்றேள், நான் போகலை, அவ நன்னா இருந்தா சரி" என்றாள் சரசா தேம்பியபடி.

அதன் பிறகு எப்போதாவது ஒரு தடவை தையல் கிளாசுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு இங்கு வருவாள் சரசு. தன் கையிருப்புக்குத் தகுந்தபடி பூவோ, பழமோ வாங்கிக் கொண்டு வருவாள். ஒருமணி நேரம் ஆசைதீர பேசிக் கொண்டிருந்த பிறகு தெருக்கோடியில் அவளை டாக்சியில் விட்டு விட்டு வருவாள் சீதா.

அன்று மாலை வீடு திரும்பிய ராம்குமார் ஏதோ நினைத்துக் கொண்டு "சீதா, அம்மா ரொம்ப நன்றாய் சமைக்கிறார்கள். இதை அவரிடம் எப்படி தமிழில் சொல்லுவது?" என்று கேட்கவும், காலையில் ஸ்ரீதரனிடம் கற்றுக்கொண்ட தமிழ் மூலம் தன்னை கேலிக்குள்ளாக்கியதை நினைத்துக் கொண்ட சீதாவுக்கு பதிலுக்கு குறும்பு செய்ய ஆசை உண்டாயிற்று.

"அம்மா உங்கள் சமையல் ரொம்ப ரொம்ப மோசம்; எனக்குப் பிடிக்கவில்லை—" என்று சொல்லிக் கொடுத்தாள்.



"எங்கே, வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சொல்."

"உங்கள் — யுவர்; சமயல் — குக்கிங்; ரொம்ப ரொம்ப, வெரி, வெரி; மோசம் — குட்; எனக்கு — ஐ பிடிக்கவில்லை — லைக் இட்!" இரண்டு பதங்களுக்கு மாத்திரம் மாற்று அர்த்தத்தை சொல்லி கற்றுக் கொடுத்தாள் சீதா. ராம்குமாரும் அப்படியே சிரமப்பட்டு பாடம் செய்தான். பிறகு "நான் இருக்கும்போது சொன்னால் அம்மா வெட்கப்படுவாள், தனியாக இருக்கும் போது சொல்லுங்கள்" என்று சீதா சொல்லவே, ராம் குமாருக்கு காபி எடுத்து வந்த காமாட்சியிடம் சீதா இல்லாதபோது "அம்மா உங்கள் சமயல் ரொம்ப ரொம்ப மோசம். எனக்குப் பிடிக்கலை" என்று தமிழில் எப்படியோ சொல்லிவிட்டான்.

அம்மா பூரித்துப் போவாள் என்று நினைத்து அவளை எதிர் நோக்கினபோது காமாட்சியின் முகம் திடுக்கிட்டு கூம்பிப் போக, அவள் சட்டென்று உள்ளே திரும்பிப் போகவும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இரவு சாப்பாட்டின் போது காமாட்சி எதிரே வரவேயில்லை. சீதாதான் பரிமாறினாள். சமயல் சுமாராக இருந்தது. "யார் சமையல்?" என்று கேட்டவனுக்கு "நான் தான்" என்று பதிலளித்தாள் சீதா. "ஏன் அம்மாவுக்கு என்ன?"

"எனக்குத் தெரியாது ராம், நீங்கள் தான் எதையாவது சொல்லியிருப்பீர்கள்." சீதாவின் முகத்தில் குறும்பு சிரிப்பு.

இவள் தன்னை மாட்டி விட்டிருக்கிறாள் என்பது புரிந்து போனதால் காமாட்சியைத் தேடிப்போனான் ராம் குமார். ராமாயணம் படித்துக் கொண்டிருந்தவளிடம் ஐ டிணைட் மீன் எனிதிங் பேட் அம்மா, யுவர் குக்கிங் ஈஸ் வெரி குட், ஐ லைக் இட்" என்று சொல்லிக் கொண்டே

சைகையாலும் தன் கருத்தை சொல்ல சிறிது நாழிகை நாட்டியம் ஆடினான். என்ன செய்தும் காமாட்சிக்குப் புரியாமல் போகவே அடுத்த அறையில் நின்று சிரிப்பை அடக்கமுடியாமல் தவித்த சீதாவின் காதை பிடித்து தரதர வென்று இழுத்து வந்தான்.

"ஆ.. காது....... காது......."

"அம்மாவிடம் உண்மையைச் சொல, என்னைத் தமிழில் என்ன சொல்லச் சொன்னாய்..."

ராம்குமார் படும் பாட்டைக் கண்ட சீதாவுக்கு சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது.

"எங்கே, அம்மாவிடம் என்ன சொன்னீர்கள், சொல்லுங்கள் பார்க்கலாம்?" — "அம்மா உங்கள் சமயல் ரொம்ப ரொம்ப மோசம், எனக்குப் பிடிக்கலை —"

'ஓஹ்ஹோ!" என்று அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்த சீதா ஓடிப்போய் தாயின் முதுகை கட்டிக் கொண்டு நின்றாள் அம்மாவின் முகம் போன போக்கும், ராமின் திகைப்பும் அவள் சிரிப்பை கூட்டியது.

"சீதா– சீதா ஏன் சிரிக்கிறாய்?" கெஞ்சினான் ராம் குமார்.

எதற்கும் அவள் மசியாமல் சிரிக்கவும் சட்டென்று ஒரு யுக்தி அவனுக்குத் தோன்றியது.

"சீதா, நீ இப்போது உண்மையைச் சொல்லா விட்டால் அம்மாவுக்கு எதிரில் ஸ்ரீதரன் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லப் போகிறேன். சீதா எனக்கு ஒரு..." ஆங்கிலத்தில் பேசினவன் கடைசி வரியை மட்டும் தமிழில் ஆரம்பிக்கவும், நாணம் கவ்விக் கொண்டது சீதாவை.

"ஸ்டாப் இட் ராம்.. ஐ வில் டெல் த ட்ரூத்" என்று ராமிடம் கெஞ்சிவிட்டு, அம்மாவிடம் தமிழிலும் பிறகு ராமிடம் ஆங்கிலத்திலும் தான் மாற்று அர்த்தம் உள்ள



வார்த்தைகளைக் கற்றுக் கொடுத்ததை எடுத்துச் சொல்ல அவர்கள் மூவரும் சிரித்த சிரிப்பினால் அறையே அதிர்ந்தது.

9

அன்று சுமித்ராவை பெண் பார்க்க வந்திருந்தார்கள். மாப்பிள்ளைக்கு சொந்த வியாபாரம், பெற்றோருடன் நுங்கம்பாக்கத்தில் ஜாகை. பெயர் விஸ்வநாதன். ரொம்ப உயரம், பருமன் என்று சொல்ல முடியாவிட்டாலும், திட்டமாய் இருந்தான். முகத்தில் நல்ல களை. கை நிறைய சம்பாத்தியம், ஒரே பிள்ளை, பேஷான குடும்பம். இன்னும் வேறு என்ன வேண்டும்?

பிள்ளை வீட்டார் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டுப் போய்விட்டார்கள். சுமித்ராவுக் கென்ன? அழகிலா, படிப்பிலா, பணத்திலா, எதில் குறைச்சல்? அவளைப் பிடிக்காமல் போகுமா என்ன?

அடுத்த வாரம் நிச்சயதார்த்தத்துக்கான தேதியைக் கூட பிள்ளைவீட்டார் குறிப்பிட்டு விட்டார்கள். எல்லா அமளியும் ஓரளவுக்கு ஓய்ந்த பிறகு சீதாவை இழுத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்தாள் சுமித்ரா. இப்போதே கல்யாண களை வந்துவிட்ட மாதிரி அவள் முகம் விகசித்தது.

"எனக்கு மாப்பிள்ளையை ரொம்ப பிடிச்சிருக்கு சுமி, ஜோடிப் பொருத்தம் பிரமாதம். அவா நடந்துண்ட விதத்தை கவனிச்சாயோ? குடும்பத்தில் அத்த பாசம் மரியாதை இருக்கும் போல் இருக்கு..."

"......."

"என், என்ன பேசமாட்டேங்கறே? உன் அபிப் பிராயம் என்ன சுமி?"

"உனக்குப் பிடிச்சிருக்கும் போது எனக்கும் பிடிக்காமல் இருக்குமா? நம்ப எண்ணம் என்றைக்கு வேறு பட்டது சீதா?"

இறுக சுமித்ராவை அணைத்துக்கொண்டாள் சீதா. "ஓ! ஐ ஆம் வெரி ஹாப்பி சுமி. எனக்கு மட்டும் கல்யாணமாகி ஆறு மாசமாகப் போகிறதே என் சுமிக்கு ஆக வேண்டாமானு தவிச்சிண்டு இருந்தேன். இன்னிக்கு என் ஆசை நிறைவேறிடுத்து..."

"என்னதான் உள்ளூர் என்றாலும், அடுத்த தெருவில் இருப்பது எப்படி? நுங்கம்பாக்கத்தில் இருப்பது எப்படி?" பெருமூச்சு விட்டாள் சுமித்ரா.

"என்னமோ, இந்தமட்டும் உள்ளூரிலேயாவது இருக்கோமேன்னுதான் எனக்கு இருக்கு சுமி, நினைச்சால பார்க்க முடியாதா, என்ன?"

தோழிகளின் பேச்சு எங்கெல்லாமோ தொட்டு விட்டு கடைசியில் ஸரஸாவிடம் வந்து நின்றது.

"சரஸா எப்படி இருக்கா சீதா? இது அவளுக்கு எத்தனாவது மாசம்?"

"நாலு... ம்... நேத்து கூட ஆத்துக்கு வந்திருந்தா. இனிமே இந்த மாதிரி திருட்டு விசிட் அடிக்க முடியாதாம். அதிசயமாய் ஐந்து வருஷம் கழிச்சு பிள்ளையாண்டிருப்ப தால மாமியார் தையல் கிளாஸ் வேண்டாம். உடம்புக்கு ஆகாது என்கிறாளாம். 'இனிமே உங்களை எப்படியம்மா பார்க்கறது'னு சொல்லி அழுதா, சுமி."

"அனாலும் இந்த மூர்த்திக்கு இத்தனை முரட்டுக் குணம் வேண்டாம் சீதா. இப்பவாவது கொஞ்சம் இளகக் கூடாதா?"



"இளகறதா? அவரா? அது இப்போதைக்கு இல்லை சுமி. மாமியார் நித்தமும் ஏதாவது சொல்லிச் காட்டிண்டே இருக்காளாம் 'பெத்தவள் ஒருத்தி இருந்து என்ன பிரயோஜனம்?' இருந்திருந்து உண்டாகி இருக்கிற பொண்ணுக்கு வாய்க்கு ருசியாய் வேணுங்கறதை சமைத்துப் போடத் துப்பில்லை, இரண்டு நாள் கொண்டு வைச்சுக்க யோக்கியதை இல்லை. அப்படி, இப்படினு ஏதாவது குத்திக் காண்பிக்கிறாளாம். ஸரஸா வாயில்லா பூச்சி... அழத்தான் தெரியறது... அம்மாவுக்கும் இங்கே ரொம்பத் தோணறது. அனால் என்ன பண்ணறது சுமி? எல்லாம் என்னால வந்ததுதானே?" குரல் கம்ம பேசின சீதா தன்னைத்தானே சுதாரித்துக் கொண்டவளாய் "சரி, சரி, நல்ல நாளும் அதுவு மாய் இந்த பேச்சு எதற்கு? உன் கல்யாணத்தைப் பற்றி பேசலாம்" என்று பேச்சை மாற்றினாள்.

அடுத்த மாசமே சுமித்ராவின் கல்யாணம் அமர்க்களமாய் நடந்தேறியது. விசுவநாதனும், பெற்றோர் களும் எதிர்பார்த்ததுக்கும் மேலாகவே நல்ல குணமுடை யவர்களாயிருந்தனர்.

"இதுதான் சீதா. சுமித்ராவின் பால்ய சினேகிதி. இந்தாத்துக்கு இன்னொரு பெண் மாதிரி" என்று கோபாலன் அவளை சம்பந்திகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"நாங்க தெரிஞ்சுண்டுட்டோமே. ஓடி ஓடி வேலை பண்ணி, எங்களை எல்லாம் அழகாய், பொறுப்பாய் கவனிச்சுண்டாளே, அப்பவே இவளைப் பற்றி விஜாரிச்சு தெரிஞ்சுண்டோம்" என்றார் சம்பந்தி பிராமணர்.

"சுமித்ராவோட சினேகிதம் இத்தோடு போய் விடாமல், ஆத்துக்கு வந்துண்டு போயிண்டிரும்மா" என்று சுமியின் மாமியார் சொன்னாள்.

ராம்குமாரின் கையை, மணமான மறுநாள் காலையில் பிடித்துக்கொண்டு "ஐ அம் ஹாப்பி டு மீட் யூ

குமார், சுமித்ரா டோலட் மீ அபௌட த வொண்டர்புல் ஃப்ரெண்ட்ஷிப், ஸ்டார்டே" என்று விசுவநாத் சொல்லவும், "போயும், போயும் எங்களைப் பற்றித்தான் நேற்று சுமி பேசினானா? ஆக மொத்தம் நேற்று இரவை பாழ் பண்ணின பாவம் எங்களுக்கா?" என்று பதிலுக்கு ராம் குமார் கேட்கவும், 'கொல்'லென்று அனைவரும் சிரித்து விட்டார்கள்.

ஒரு தடங்கலும் இல்லாமல் இத்தனை வருஷங்கள் வளர்ந்த நம் நட்பு இனிமேலும் இதே விதத்தில் வளரும் என்ற திருப்தி சிநேகிதிகளுக்கு உண்டானதும் அப்போது தான். சந்தோஷமான வாழ்க்கையினூடே இன்னும் சில மாசங்கள் ஓடின.

ஸரஸாவுக்கு ஏழாம் மாசம் நடந்து கொண்டிருக்கையில் அம்மாவின் மனக்குறையை உணர்ந்து அதற்கு ஒரு வழி தேடி வெள்ளிக்கிழமை தோறும் ஸரஸா மாம்பலம் சிவா விஷ்ணு கோவிலுக்கு வருவது தெரிந்திருந்ததால் சீதாவும் ஒரு வெள்ளிக்கிழமை அங்கு போனாள்.

பிராகாரம் சுற்றின ஸரஸா அனுமான் கோவில் சுவாருகில் நிற்கும் தங்கையைப் பார்த்துவிட்டாள். 'இங்கேயே இரு' என்று சைகை காட்டிவிட்டு, உடன் வந்த மாமியார் பின்னால் கதாகாலட்சேபம் கேட்க உட்கார்ந்ததும் "தேங்காய்த் தட்டுக்காரன் பாக்கி சில்லறையை கொடுக்கலைம்மா தட்டில் போட சில்லறை வேணுமே. நீங்க இருங்கோ. நான் வாங்கிண்டு வந்துடறேன்" என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு கிளம்பி சீதா இருக்கும் இடத்துக்கு வந்தாள்

"எப்படி இருக்கே ஸரஸு!"

"இருக்கேன். ஆமா நீ ஏன் இங்கே வந்தே? எங்க மாமியார் கண்ணில் பட்டால் விபரீதம்தான் சீதா."

"கோவிலுக்கு, எல்லோரும் வரலாம். இதுக்கு ஏன் பயப்படறே? நான் எதுக்கு வந்தேன்னா உனக்கு இது



ஏழாம் மாசமில்லையா சம்பிரதாயப்படி வளைகாப்பு செய்யற சமயம் இதுதானாம். வளைகாப்பு பண்ணலைன்னு அம்மா ரொம்ப ஏங்கறா. தலைச்சனுக்கு குறை வைக்கப் படாதுன்னு தனக்குள்ளேயே புழுங்கி வருத்தப்படறா. இது எங்களுக்கு நன்னா புரியறது. அடுத்த வெள்ளிக்கிழமை நாள் நன்னா இருக்காம். நீ நம்பாத்துக்கு வரவேண்டாம். நான் உனக்கு வளை, சீர் எல்லாம் எடுத்துண்டு உங்காத்துக்கு வரேன். இத்தனை வயசுக்குப் பிறகு அம்மாவுக்கு எதுக்காக ஒரு குறை வைக்கணும்? எங்களுக்கும் ஆசையா இருக்கு ஸரஸு."

"சந்தோஷமும், பயமும் மாறி மாறி எழ உன்னாலே வர முடியுமா, சீதா? எங்க மாமியார் பிடுங்கறதை நினைத்தால் பிறந்தாத்து சீருடன் நீ வாறது ரொம்ப சந்தோஷமாய் இருக்கு. ஆனால் எங்காத்துக்காரர் முரட்டுத்தனமாய் நடந்துண்டா?"

"அவர் என்ன வேணும்னாலும் கத்தட்டும். எனக்கு உறைக்காது. உன் அம்மா, சந்தோஷத்துக்கெதிரே இது தூசி மாதிரி."

"சீதா!" உணர்ச்சி பொங்க தங்கையை கட்டிக் கொண்டாள், ஸரஸு.

"சரி, சரி கண்ணைத் துடைச்சிண்டு நீ போ. நாங்க வரது உனக்கு தெரிந்ததாக காட்டிக்காதே. என்ன?"

அடுத்த வெள்ளிக்கிழமை சீதாவின் இல்லம் கல்யாணக்களை கட்டி இருந்தது.

ஒரு எவர்சில்வர் தூக்கு நிறைய திரட்டுப்பால், ஐம்பத்தியொரு குஞ்சாலாடு; ஐம்பத்தியொரு சீர் முறுக்கு, வெற்றிலை, பாக்கு, பழம், கல்கண்டு, சர்க்கரை, பூ இரண்டு எவர்சில்வர் தாம்பாளங்கள், கறுப்பு பட்டில் ஒரு விரல் கடை அகலத்திற்கு ஜரிகை போட்ட பட்டுப்புடவை, ஒரு ஜதை தங்க வளையல், கெட்டியாய் நாலு பவுனில். கலர்

கலராய் கண்ணாடி வளையல்கள் ஒரு கைக்கு பதினொன்று, ஒரு கைக்கு பன்னிரண்டு என்று.

காமாட்சியின் மனம் நிறைந்து கிடந்தது.

"நூத்தி ஐம்பது ரூபாய் புடவை, பவுன் நூத்தி ஐம்பது ரூபாய் விக்கிறது. கல்லு கல்லாய் வளை, சீர, செனத்தி. சீதா இவ்வளவு ஜாஸ்திம்மா. எல்லாமாக கிட்டத் தட்ட ஆயிரம் ரூபாயைத் தொட்டிடும் போல இருக்கே. எதுக்காம்மா இத்தனை? மாப்பிள்ளைகிட்டே நீ சொல்லக் கூடாதா?" என்று சீதாவிடம் கேட்டபோது அவள் சிரித்தாள்.

"அம்மா இது 1960-உன் காலமில்லை, பவுன் நூத்தி ஐம்பது ரூபாய் விக்கிறதுனு அங்கலாய்க்காதே." என்று சொல்லி விட்டு மேலும் "அம்மா பண்ணறதை நன்னா பண்ணணும்னு இவர் அபிப்ராய படறார். அவுட் ஹவுஸ் வாடகையை அப்படியே போட்டு வைத்திருக்கிறதை எடுத்துதான் இதெல்லாம் வாங்கி இருக்கேன். அது உன் பணம். ஸரஸுக்கும் அதில் பாத்யதை இருக்கும்மா" என்று சொல்லி அம்மாவை திருப்தி படுத்தினாள்.

காலை எட்டுமணி நல்ல நேரம் என்று ஜோசியர் சொல்லி இருந்ததால். ஏழு மணிக்கெல்லாம் கார் டிரைவருடன் சுமித்ரா வந்துவிட்டாள். "எதுக்கு சுமி?" என்று முதல் நாள் சீதா மறுத்தபோது 'இந்த விசேஷத்தில எங்களுக்கும் பங்கில்லையா?' என்று விசுவநாத் கேட்டு சீதாவை வாளாதிருக்கச் செய்துவிட்டான்.

அம்மா வர மறுத்ததால் சீதாவும், சுமித்ராவும் பெரிய மனுஷிகள் போல சீர்வரிசைகளுடன் ஸரஸுவின் வீட்டில் சென்று இறங்கிய போது மணி ஏழரை.

கார் கொள்ளாமல் எடுத்து வந்த சாமான்களை, ஹாலில் சீதா அடுக்கவும் ஸரஸுவின் மாமியாருக்கு வாயெல்லாம் பல்.



"எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கவேண்டிய சமயம் இது மாமி. நான் கழிசக பிள்ளையாண்டிருக்கிற ஸரஸுக்கு இன்னும் எவ்வளவோ பண்ணலாம். எங்க சக்திக்கு முடிந்ததை அம்மா கொடுத்தனுப்பியிருக்கா. நல்ல நேரம் எட்டு மணியாம். அதுக்குள் புடவையைக் கட்டிக்கச் சொல்லி வளையை அடுக்கிட்டால் தேவலை மாமி. பெரியவா நீங்க. நடந்ததையெல்லாம் மறந்துடணும்." அக்காவின் சந்தோஷத்திற்காக, தன் கௌரவத்தை மறந்து பேசினாள் சீதா.

"என்னவோ நடந்தது, நடந்துடுத்து. இனிமே அதைப்பத்தி என்ன? உங்கம்மா மனசு சந்தோஷத்துக்காக எல்லாத்தையும் மறந்துடறேன். ஸரஸு இங்கே வா. இந்த மணையிலே கோலம் போடு. இதை கட்டிண்டு வா.. உங்கம்மா மாதிரி நானும் சுப காரியத்துக்கு உதவாதவ சீதா. அதனாலே உன் கையாலயே வளைகளை அடுக்கு.." பேசிக் கொண்டே போன ஸரஸு மாமியார் தங்க வளையல்களை கையிலெடுத்து எடை போடுகிற மாதிரி நிறுத்துப் பார்த்தாள். முகத்தில் ஒரு திருப்தி நிலவினாலும் "உங்க அத்துக்காரர் நன்னா சம்பாதிக்கறான்போல இருக்கே.. ஒரு கல் வளையா பண்ணிக்கூட போட்டிருக்கலாம்.." என்றும் கூறிவிட்டு "ஸரஸு... தாழியாறது.. வா... வா" என்று மாட்டுப் பெண்ணை விரட்டினாள்.

ஸரஸுக்கு புடவை வெகு அழகாக இருந்தது. குத்துவிளக்கை ஏற்றி வைத்துவிட்டு மணையில் அவள் உட்காரவும் தங்க வளையல்களை முதலில் அடுக்கிவிட்டு கண்ணாடி வளையல்களை சீதா அடுக்கும்போது வெளியே போயிருந்த மூர்த்தி வந்துவிட்டான்.

"வாசலில் கார் நிக்கறதே, யாரு வந்திருக்கா?" என்று கேட்டுக்கொண்டே வந்தவன்; கூடத்தில் பரப்பியிருந்த சாமான்களையும், சீதாவையும், ஸரஸுவின் புதுப் புடவையையும் கண்டதும் விஷயத்தை புரிந்துகொண்டு விட்டான். "ரோஷம் கெட்ட நாயே, நடத்தை கெட்டவ

வளை கொண்டு வந்து போட்டால் நீயும் வெட்கமில்லாமல் எடுத்து மாட்டிக்கிறதா?" என்று ஆவேசமாய் கேட்டுக் கொண்டு ஸரஸ்"மேல பாய்ந்தான்.

அடுக்கிவிட்டிருந்த கைகளை பலவந்தமாய் இழுத்து ஆத்திரத்துடன் சேர்த்து மோதவும் புதிய கண்ணாடி வளைகள் சுக்கு சுக்காய் சிதறின. ஸரஸு"வின் கையெல்லாம் ரத்தம். "போய் இந்த புடவையை அந்த சிறுக்கி மொகத்திலே எறி போ" என்று அவளை நெட்டித் தள்ளினான்.

"வந்துடா... மூர்த்தி... இன்னும் இரண்டு நாள்லே எட்டாம் மாசம் பொறந்திடப் போறதோன்னோ... அதுக்கு முன்னால் வளை அடுக்க ஆசைப்பட்டாளாம், அதை நான் கூட நீ இல்லையேனு தடுத்துப் பார்த்தேன்..." வெல வெலத்துப் போனதால் பொய்யான வாக்கியங்களை பேசினதும் மூர்த்தியின் கோபம் கட்டுக்கடங்காமல் போயிற்று. "சரிதான் போம்மா உள்ளே, உன் பிள்ளையை அவமதிச்ச மனுஷிகிட்டே உனக்கு என்ன பேச்சு?" என்று உறுமினான். பிறகு சீதா எடுத்து வந்த முறுக்கு, வடை, லட்டு, திரட்டுப் பால் பாத்திரங்களை கையில தூக்கி ஓங்கி வாசலில் எறிந்தான். கல்கண்டு, வெற்றிலை, பூவெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வாசல் புழுதியில விழுந்தன.

"நீ வந்து வளை அடுக்காவிட்டால் என் பெண்டாட்டிக்கு சுகப் பிரசவம் ஆகாதோ? போடி வெளியே, வந்துட்டா முந்திரி கொட்டையாட்டம்."

சீதாவின் உடம்பு அவமானத்தால் குறுகிப் போயிற்று. கனவில்கூட நினைத்துப் பார்க்காத அவமானத்தால் குன்றிப் போனாள்.

சுமித்ராதான் சுதாரித்துக் கொண்டாள்.

"வா... சீதா நாம பெரிய தப்பு பண்ணிட்டோம். மிருகத்தினிடம் மனுஷ உணர்ச்சியை எதிர்பார்த்தது நம்ப தப்புதான், நீ வா" என்று கூறியவண்ணம் சீதாவின்



கைகளைப் பிடித்து தர தரவென்று இழுக்காத தோஷமாய வாசலில் கிடந்த லட்டு, பூ வெற்றிலை இவைகளை மிதித்துக்கொண்டு காரில் ஏறினாள்.

கார் புறப்படு முன் ஸரஸு" புடவையை மாற்றிக் கொண்டு வரவே, பட்டுப் புடவையை பந்தாகச் சுருட்டி "இதையும் எடுத்துண்டு தொலை" என்று ஆங்காரத்துடன் கத்திய மூர்த்தி, வீசி எறிந்தான்.

திறந்திருந்த ஜன்னல் வழியாக பந்துபோல புடவை பொதகென்று சீதாவின் மடியில் வந்து விழுந்தது.

சீதாவின் கண்களிலிருந்து மாலை மாலையாய் கண்ணீர். ஒருவரும் பேசவில்லை.

மௌனத்திலேயே வீடு வந்தது. ராம்குமாருடன் பேசிக் கொண்டிருந்த கோபாலன் இன்னும் வீடு திரும்ப இல்லை.

"என்னம்மா, போன சுருக்கில திரும்பிட்டே?" பேச ஆரம்பித்த கோபாலன் சீதாவின் அழுகையையும், சுமியின் தோற்றத்தையும் கண்டு அரண்டுபோனார்.

"என்னம்மா என்ன விஷயம்?"

"வாட் ஹாப்பண்ட் சீதா?"

குரல் கேட்டு உள்ளிருந்து ஓடி வந்தாள் காமாட்சி.

"அம்மா...!" அடிவயிற்றிலிருந்து அழுதுகொண்டு அம்மாவை ஓடிக் கட்டிக்கொண்டாள் சீதா.

சுமித்ரா நடந்ததை விவரித்தாள்.

"ராஸ்கல், தான் இப்போ நன்னா சம்பாதிக்கிறோம் என்கிற திமிர் அவனுக்கு, ராஸ்கல்." கோபாலனுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

காமுவின் பெற்ற வயிறு துடித்தது. "அடீ, ஸரஸு, கிளியை வளர்த்து ஓனாயிடம் கொடுத்தேனேனு உங்கப்பா

தவித்தார். இது சத்தியம் தாண்டியம்மா. இருந்திருந்து உண்டான பெண்ணுக்கு ஒரு வாய் சாதம் போட எனக்கு பிராப்தம் இல்லை. ஒரு பேரக்குழந்தையை கையில் எடுத்துச் கொஞ்ச துப்பில்லையே" என்று உரக்க குமுறினாள். பிறகு "எல்லாத்துக்கும் மேலே உன் தங்கமான மனசை நோகடித்து உன்னை அவன் அவமானப்படுத்தினதும் என்னால் தானே? சீதா... நான் என்ன பண்ணுவேன்?" என்று அரற்றியவண்ணம் உள்ளே போனாள்.

அன்று இரவு கணவனின் மார்பில் புதைந்து சீதா மறுகியபோது அவளை அணைத்து ராம்குமார் ஆறுதல் சொன்னான். "இந்த மாதிரி மனிதர்களுடன் நான் நிறைய பழகி இருக்கிறேன், சீதா. இப்படி ஏதாவது நடக்கும் என்று நான் கொஞ்சம் எதிர்பார்த்தேன். விடு, இதை மறந்துவிடு" என்றும் சொல்லி தேற்றினான்.

காமாட்சியின் மனம் அந்த நிகழ்ச்சியால் எவ்வளவு தூரம் புண்பட்டது என்பதை நன்கு புரிந்துகொண்ட ராம்குமார் அந்தப் புண்ணை ஆறச் செய்யும் மருந்து தன்னிடமும், சீதாவிடமும் இருப்பதை உணர்ந்ததும் அன்றுதான்.

மூத்த பெண்ணிடம் நிறைவேறாத காமாட்சியின் ஆசை இளைய பெண் மூலம் விரைவிலேயே நிறைவேறியது. மறுமாசமே சீதா உண்டானாள். ஏழாம் மாசம் மூர்த்தி தூக்கி எறிந்த அதே புடவையை சீதாவுக்கு கட்டி வளை அடுக்க ராம்குமார் சொன்னபோது நெகிழ்ந்து போனாள் காமாட்சி.

செக்கச் செவேலென்ற பெண் குழந்தையை சீதா ஈன்று கொடுத்ததும், அதை முதலில் காமாட்சி கையில் கொடுத்து பேரக்குழந்தை ஆசை தீர்ந்ததா என்று அன்பால் ராம்குமார் கேட்டபோது மூத்த மாப்பிள்ளையினால் உண்டான வடு இளைய மாப்பிள்ளை மூலம் ஆறியது என்று மனம் குளிர்ந்தாள் காமாட்சி.



## 10

"**மா**, மே ஜாதி ஹாங்..." உரக்க அழகாய் கூவிய மஞ்சு சமயலறைக்குள் ஓடி, அங்கு வேலையாய் இருந்த சீதாவை அணைத்து முத்தமிட்டாள். பிறகு பாத்ரூமிற்குள் புகுந்து பாதி ஷேவ் செய்து கொண்டிருந்த தந்தையை பின்னாலிருந்து கட்டிக்கொண்டு அவன் முதுகில் ஒரு முத்தமிட்டாள். "அப்பா நான் ஸ்கூலுக்கு போயிட்டு வரேன்" என்று அவனிடம் தமிழில் சொல்லிக்கொண்டு பள்ளி பெட்டியை கையில் எடுத்தவாறே ஓட்டமும் நடையுமாய் வாசலுக்குத் தாவினாள்.

வாசல் வராந்தாவில் அமர்ந்து சுந்தரகாண்டம் படித்துக் கொண்டிருந்த காமாட்சி அவள் கண்ணில் படவே, "ஓ பாட்டி ஹூ ஆர் ஹியர்...?" என்று கேட்டுக் கொண்டே அவளருகில் வரவும் — "படாதேடிம்மா, என் மேலே படாதே மஞ்சு என் கண்ணோல்லியோ." புத்தகத்தை மார்போடு அணைத்துக்கொண்டு மஞ்சுவைக் கெஞ்சியவாறே சுவரோரமாய் ஒதுங்கினாள் காமு.

ஸ்கூல் போகும் அவசரத்திலும் குஷி பிறந்தது மஞ்சுவிற்கு.

"ஹைய்யா. ஹூ ஆர் மடி? ஐ ஆம் கோயிங் டு டச் யூ... டச் யூ!" பெரிய கண்களில் குறும்பு கூத்தாட பாட்டியை நெருங்கினாள் மஞ்சு.

"வேண்டாம் கண்ணு, என் கண்ணோல்லியோ. சமர்த்தோன்னோ... இப்ப என் மேல் படாமல் போனா சாயங்காலம் பாட்டி பெரிய கதை சொல்லுவேனாம்..."

கதை! பெரிய கதை! ப்ரேக் போட்டாற்போல் நின்றாள் மஞ்சு.

"ஓ கே பாட்டி; நான் உன்மேல் படாம போகணும்னா என்கூட இங்கிலீஷ்ல பேசு..."

"என்னாடியம்மா இது! தினம் வம்பு பண்றே? எனக்கு என்னடி தெரியும்?"

"பேசாட்டா பட்டுடுவேன் பாட்டி, ஐ ஆம் கம்மிங் நியர் யூ.." ராகம் போட்டுக்கொண்டே மஞ்சு நெருங்கினாள்.

புரட்டாசி சனிக்கிழமை இன்னும் பாராயணமே முடியலை. பாக்கி எல்லாம் படிக்கணும். இப்போ மேலே விழுப்பு பட்டால் எப்படி?

"நோ... நோ... டச்... யூ... ஸ்கூலுக்கு கோ. ஐ டெல் பெரிய ஸ்டோரி... ஈவனிங்."

பாட்டி பேசும் ஆங்கிலம் அலை அலையாய் சிரிப்பை எழுப்பியது மஞ்சுவிற்கு. "பாட்டி நீ நன்னா இங்கிலீஷ் பேச கத்துண்டுட்டே. இன்னும் கொஞ்ச நாள் போனா ஜோராய் பேசப்போறே பாரேன்..."

சமயற்கட்டிலிருந்து வெளியே வந்து மகள் படுத்தும் பாட்டை ரசித்த சீதாவிற்கும் சிரிப்பு பொங்கியது. சிரித்துக்கொண்டே வாசலுக்கு வந்து "சரி... சரி நாழியாறது கிளம்பு மஞ்சு. அப்புறம் பஸ்ஸ் போயிடும்" என்று மகளை கிளப்பினாள்.

"பாட்டி சாயங்காலம் பெ...ரி...ய கதை பிராமிஸ் பண்ணி இருக்கே! மறக்காம சொல்லணும் சரியா? நான் போயிட்டு வரேன்!" படி இறங்கி கத்திக்கொண்டே தெருவை நோக்கி ஓடினாள் மஞ்சு.

ஓடும் மகளை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள் சீதா.



தினம் நடக்கும் கூத்துதான் இன்றும் நடந்தது. சீதாவிற்கு ஹிந்தியில பேசினால் பிடிக்கும் என்றும் அவளிடம் ஹிந்தியும், ராம்குமாருக்கு தமிழிலும், பாட்டிக்கு ஆங்கிலம் புரியாது பேச வராது என்று தெரிந்தவளாய் அவளிடம் ஆங்கிலத்திலும் மஞ்சு பேசுவது தினம் நடப்பதுதான். இன்று 'மடி' வேறு சேர்ந்துகொண்டது. பிறகு கேட்பானேன்?

எட்டு வருஷம் — ஏ! அப்பா! மஞ்சு பிறந்து எட்டு வருஷங்களா ஆகிவிட்டன! நாட்கள் இப்படி ஓடுமா? மஞ்சுவின் வளர்த்தியைப் பார்க்கும் போதுதான் வருஷங்கள் எட்டு கடந்துவிட்டன என்ற உண்மை சீதாவிற்கு உறைக்கும்.

இன்றுபோல் இருக்கிறது — பெண் குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு ராம் மகிழ்ந்ததும், "என் கலியை தீர்க்க வந்த தங்கமே" என்று சொல்லி கண்களில் நீர் பெருக காமாட்சி நெகிழ்ந்ததும் நடந்து எட்டு வருஷங்களாகி விட்டனவா?

குழந்தை அப்பாவைப்போல சிவந்த நிறமே தவிர பாக்கி அனைத்தும் அம்மாதான்.

"குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம் சீதா?" என்று பல தடவைகள் ராம் கேட்டபோது பதில் அளிக்காத சீதா புண்ணிய வாசத்தன்று மட்டும் கணவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு — "எனக்கு ஒரு பேர் வைக்க விருப்பம் சொல்லட்டுமா?" என்றாள் மெதுவாக.

இதற்கென்ன இவ்வளவு தயக்கம் என்பது போல சிரித்த ராம் 'ம்' என்றதும் "மஞ்சரி" என்றாள் சீதா.

"வாட்?"

ராம்குமாரின் திகைப்பு சீதா எதிர்பார்த்த விஷயம் தான்? "உங்கம்மா பேரை வைப்பதுதான் மரியாதை. எனக்கும் விருப்பம்கூட...." ராம் முகத்தில் கோபமா,

சந்தோஷமா என்று பிரித்துச் சொல்ல முடியாதபடி ஒரு பாவம். சில வினாடிகள் வானாவிருந்தான். "அந்த குடும்பத்து நினைப்பே வேண்டாம் என்று இருந்தேன். சரி உன் ஆசையைக் கெடுப்பானேன்" என்று சொல்லி விட்டான்.

திருமணமான புதிதில் இரண்டொரு தடவை ராம் குமாரின் குடும்பத்தைப்பற்றி பேச்சு எடுத்தபோது அவனிட மிருந்து அவர்களைப் பற்றிப் பேசாதே என்று கோபத்துடன் கலந்த வாக்கியத்தை கேட்டு பழகியிருந்த சீதாவுக்கு இன்று மஞ்சரி என்ற பெயருககு என்ன சொல்வாரோ என்று பயந்து கொண்டே கேட்டவளுக்கு ராம்குமார் கோபமில்லாமல் உன்னிஷ்டம் என்று சொல்லி விட்டது மகிழ்ச்சியை தந்தது. சரி பெண் பிறந்த வேளை இவர் கோபம் கொஞ்சம் தணிந் திருக்கிறது. இனிமேல் நாம்தான் மெதுவாய் இவரையும் இவர் குடும்பத்தையும் இணைக்க வேண்டும் என்று மனசிற்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

மஞ்சரி பிறந்து ஒரு மாசமாகியிருக்கும். மாலையில் ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய ராம்குமார் படுக்கை அறையில் உறங்கிக் கொண்டிருந்த மஞ்சரியை கையில் எடுத்துக் கொண்டான். பெரிய கண்களை திறந்து அது இரண்டு தரம் சிமிட்டினதும் 'என் குட்டி சீதா' என்று முணு முணுத்துக் கொண்டே அதன் கண்களில் முத்த மிட்டான்.

"ஐயே! என்ன ராம், குழந்தையின் கண்களில் முத்தம் கொடுக்கிறீர்களே! அதுக்கு வலிக்குமோ, என்னமோ!"

ஒரு கையில் குழந்தையையும் இன்னொரு கையில் தளதளவென்று தாய்மை அழகு கூடி நின்ற சீதாவையும் அணைத்துப் பிடித்த ராம்குமார், "சின்ன சீதாவிற்கு வலிக்குமென்றால் பெரிய சீதாவின் கண்களுக்கு கொடுக் கலாமா?" என்று வினவியதும், அன்று கணவர் நல்ல மூடில்



இருப்பதை சீதா புரிந்து கொண்டு மெல்ல தன் மனசி லிருந்ததை வெளிப்படுத்தினாள்.

"எனக்கு ஒரு ஆசை ராம்..."

குழந்தைய கட்டிலில் கிடத்திவிட்டு படுக்கையில சாய்ந்த ராம், சீதாவை தன் அருகில் இழுத்துக் கொண்டான்.

"என்ன ஆசை சீதா?"

"கோபமில்லாமல் இருந்தால் சொல்லுவேன்."

"கோபமா?... எனக்கா? உன்னிடமா? பைத்தியம். பைத்தியம்... சொல சீதா..." சிரித்தான் ராம்.

"குழந்தை பிறந்த சமாசாரத்தை உங்க குடும்பத்துக்கு தெரிவிக்க எனக்கு ஆசையாயிருக்கிறது ராம்!" எப்படியோ பேசிவிட்டாள் சீதா.

ராம்குமாரின் கலகலப்பு இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போயிற்று. அவன் பதில் பேசவில்லை.

தைரியத்துடன் மேலே தொடர்ந்தாள் சீதா — "என்னதான் கோபமென்றாலும் அவர்களுக்கு சரியாக நாமும் கோபப்பட்டுக் கொண்டிருந்தால் எப்படி, ராம்? அவர்கள் வயசில் பெரியவர்கள். பழைய நடைமுறையில் பழக்கத்தில் வாழ்ந்தவர்கள் நாம் செய்தது தவறாகத்தானே தோன்றும்? வயசில் சின்னவர்களான நாம் தழைந்து போவதில் தப்பிருக்கிறதாக எனக்குத் தெரியலை. லெட்டர் போட்டு குழந்தை பிறந்ததைத் தெரிவிப்பதுதான் மரியாதை ராம்... உங்களுக்குத் தெரியாதது இல்லை. ஆனாலும் உங்கள் மனைவி என்கிற ஸ்தானத்தில் நான் ஞாபகப்படுத்தினேன். தவறாக பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள் ராம்..."

வெகு நாழிகை ஒன்றுமே பேசவில்லை ராம்குமார். பிறகு "நீ புத்திசாலி. உனக்கு நான் சொல்லித்தான் நல்லது

கேட்டு தெரிய வேண்டும் என்பது இல்லை. உன் இஷ்டம் போலச் செய்" என்று பேசி சம்மதத்தைத் தந்துவிட்டான்.

மறுநாளே மாமியாருக்கு ஹிந்தியில் எழுதினாள் சீதா. தாய் மஞ்சரியின் பெயருக்கு எழுதியிருந்த கடிதத்தில் குழந்தை மஞ்சரியைப் பற்றி நிறைய எழுதினாள். ராம்குமார் அவர்களை அடிக்கடி நினைத்துக் கொள்ளுகிறார் என்றும் அவர் செய்த தவற்றை பெரிய மனசு பண்ணி மன்னித்து விட்டு விரைவிலேயே சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் சீதா உருக்கமாய் பாசத்துடன் எழுதினாள்.

கணவனிடம் விலாசம் கேட்டு எழுதி, கடிதத்தை போஸ்ட் செய்த போது அவளுள் ஒரு அசாதாரண திருப்தி நிலவியது.

"குடும்பத்தில் ஆயிரம் கோபம், தாபம் இருந்தாலும் பெண்கள்தான் புகுந்து சரிபடுத்தணும்னு அடிக்கடி சொல்லுவியே, இப்போ நான் பண்ணினது சரி தானே அம்மா?" என்று காமாட்சியிடம் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள்.

தந்தை, மகன் நடுவில் இருந்த மனக்கசப்பை, தங்கள் பெண் நீக்கிவிடுவாள், இந்த கடிதத்திற்கு நல்ல விதத்தில் பதில் வரும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த சீதாவின் ஆசைகள் அடுத்த வாரத்திலேயே தகர்த்து எறியப்பட்டன.

அன்று தபாலில் இந்தூர் முத்திரை குத்தி வந்த கவரைக் கண்டதும் சீதாவின் உள்ளம் துள்ளியது.

"அம்மா... அம்மா அங்கேயிருந்து பதில் வந்துடுத்தும்மா" என்று சொல்லிக்கொண்டே பரக்கப்பரக்க உறையைக் கிழித்தாள். கிழித்தவள் விக்கித்துப் போனாள்.

உறையினுள் சீதா எழுதிய கடிதம் எட்டுத் துண்டுகளாக கிழித்து வைக்கப்பட்டிருந்தது. கூடவே ஒரு



சின்ன வெள்ளைத்தாளில் "மானம் ரோஷம் உள்ளவளாக இருந்தால், உப்பு போட்டுக்கொண்டு சாப்பிடுபவளாய் இருந்தால் — இன்னொரு தடவை இப்படி கடிதம் எழுதாதே" என்று எழுதி கையெழுத்திட்டிருந்தார் சங்கர் தயாள் சர்மா, ராம் குமாரின் தந்தை.

இப்படி ஒரு வெறுப்பை எதிர்பார்க்காத சீதா துடித்துப் போனாள்.

அன்று மாலை ராம்குமார் ஆபீஸிலிருந்து வந்ததும் அவன் மடியில் விழுந்து "என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் பேச்சை மீறிச் செய்ததற்கு எனக்கு இந்த தண்டனை வேண்டும்" என்று கூறி அழுதாள்.

இறுகிப் போய் அமர்ந்திருந்த ராம்குமார் ஒரே ஒரு வரியைத்தான் பேசினான். "இனியாவது மனிதர்களோடு மட்டும் பழக ஆசைப்படு சீதா. இது உனக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். என் குடும்பமும் உங்கள் மூர்த்தியும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று புரிந்து கொள்" என்றான்.

அதன் பிறகு இந்த எட்டு ஆண்டுகளில் ஒரு தடவை கூட மீண்டும் ராம்குமாரின் குடும்பப் பேச்சை எடுத்தவளில்லை சீதா. ஏதாவது பேச வேண்டும் போல தோன்றினால் அம்மாவிடம் பேசுவாள் அவ்வளவுதான்.

கணவன் மனம் நோகாதபடி ஒரு உத்தமமான மனைவியாக சீதா நடந்து கொண்டாலும், தன் மனசிற்கு நியாயம் என்று எது தோன்றியதோ அதைச் செய்ய துளியும் தவறினதில்லை. தான் மணந்திருப்பது ஒரு வடக்கத்திக் காரரை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ராம்குமார் தன் பழக்கங்களை — தன் ருசி, விருப்பு, வெறுப்புகளை — மாற்றிக் கொள்ளாமல் இருக்க விரும்பியவளாய் வீட்டு பழக்கங்களை, சமயலை, வட இந்திய பாணியில் முடிந்த வரை மாற்றினாள். இவை மட்டுமல்லாமல் மஞ்சுவிற்கு பேச்சு வர ஆரம்பித்த முதல் கொண்டே சின்ன, சின்ன பதங்களை ஹிந்தியில் கற்பிக்கத்

தொடங்கினாள். 'எதற்காக சீதா?' என்று ராம் கேட்டால் 'நான் ஒரு ஹிந்திக்காரரை மணந்திருக்கிறேனே, அதற்காக' என்பாள் சிரிப்பினூடே.

"நல்ல ஹிந்திக்காரன்! எனக்கு சாப்பாடு போடுவது சென்னை! மனைவி தமிழ்க்காரி. அதனால் எனக்கு தமிழ் தான் பிடிக்கும்" என்று பேசும் ராமின் வார்த்தைகளை காதிலே போட்டுக் கொள்ளமாட்டாள். அவனிடம் ஒன்றும் சொல்லாவிட்டாலும் தனித்திருக்கும் போது தாயிடம் மட்டும் "ஏம்மா நாளைக்கு அவா அப்பா, அம்மா ஒண்ணு சொந்தா மஞ்சுவுக்கு அவாகளோடு பேசத்தெரிய வேண்டாமா? பொண்ணுக்கு ஹிந்திகூட கத்துதரலையேனு என்னைத்தானே சொல்லுவா?" என்பாள். புருஷனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சீதா காட்டும் மரியாதை காமுவுக்கு பெருமையாய் இருக்கும்.

"ஆவ்" என்று மகளுக்கு, சீதா சொல்லிக் கொடுத்தால் கூடவே உட்கார்ந்து கொண்டு "வா" என்று கத்துத் தருவான் ராம்குமார். சின்ன வயசில் இரண்டு பாஷையால் மஞ்சு தடுமாறினாலும் வயசாக ஆக தன் புத்திசாலித்தனத்தால் சிறப்பாக பேச ஆரம்பித்து விட்டாள். மகளுக்கு எட்டு வயது நிறைவதற்குள் கற்றுத் தருகிறேன் என்று முனைந்த சீதாவும், ராம்குமாரும் அந்தந்த பாஷையில் தேர்ந்துவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

## 11

அன்று மூர்த்தியின் வீடு தடபுடல் பட்டுக்கொண்டிருந்தது. வருவோரும் போவோரும் விருந்தும் சிரிப்புமாய் அமர்க்களம்தான். மூர்த்தி இப்போது பழைய மூர்த்தி



இல்லை. சொந்த வியாபாரம் நன்றாய் தழைத்து கையில் தாராளமாய் காசு புழங்கும் மூர்த்தி.

ஒன்பது ஆண்டுகளில் யாருக்கு அதிருஷ்ட தேவதையின் கடைக்கண் பார்வை கிட்டியதோ இல்லையோ, மூர்த்திமேல் லஷ்மி தேவியின் முழுக் கண்ணும் பட்டுவிட்டது. பிறகு கேட்பானேன்?

அதிர்ஷ்டம் இவன் பக்கம் பார்ப்பதற்கும், ஸரஸு தன் முதல் குழந்தையைப் பெற்று அவன் கையில் தருவதற்கும் சரியாக இருந்தது. ஆண் குழந்தை பிறந்த வேளை மூர்த்திக்கு அமோகமாக அமைந்தது. வியாபாரம் பெருகின அதே நேரத்தில் அவன் குடும்பமும் பெருகி ஒன்பது வருஷ காலங்களுள் ஸ்திரமான வியாபாரத்துக்கும் மூன்று ஆண் குழந்தைகளுக்கும் உரிமையாளனாக மாறிப் போனான் மூர்த்தி.

ஸரஸுவிடம் அவனுக்கு உண்மையான அன்பிருந்ததோ இல்லையோ, தனக்கு நல்ல காலத்தை கொண்டு வந்திருக்கும் மூன்று ஆண் குழந்தைகளையும் அளிக்கக் காரணமானவள் என்ற ஒரு நினைப்பிலேயே, அவளையும் நன்றாக வைத்துக்கொண்டிருந்தான்.

'சே' என்று ஒரு பவிஷும் இல்லாமல் நின்ற ஸரஸு இன்று காரும், ஆளும் நகையும் நட்டுமாய் நின்றதைப் பார்த்து உறவுக் கூட்டமே அதிசயித்தது.

அன்றைக்கு மூர்த்தி வீட்டில் இரண்டு விசேஷங்கள் ஒன்று சேர்ந்திருந்தன. புதியதாய் வாங்கியிருந்த வீட்டின் கிருகப்பிரவேசத்தையும், மூன்றாவது பிள்ளையின் ஆயுள் ஹோமத்தையும் சேர்த்து நடத்தி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தான், மூர்த்தி.

சுப காரியங்கள் ஆன பிறகு, நண்பர்கள், மற்ற உறவினர்கள் உணவருந்திவிட்டுப் போன பின், முகத்தில் திருப்தி பரவிக் கிடக்க, ஹாலில் நுழைந்து 'அம்மாடி' என்று பெருமூச்சுடன் உட்கார்ந்தான் மூர்த்தி.

முக்கியப்பட்ட உறவினர் ஓரிருவர் படுத்தும், உட்கார்ந்தும் இருக்க, "என்னம்மா உனக்கு எல்லாம் சந்தோஷமா?" என்று ஸரஸுவின் தூரத்து அத்தை ஒருத்தியுடன் பேசிக் கொண்டிருந்த தன் தாயை கேட்டான் மூர்த்தி.

அவன் தாய்க்குப் பெருமையான பெருமை. ஒண்டுக் குடித்தனத்தில ஒருசில நூறு ரூபாய்க்குள் குழந்தைகளை மன்றாடி வளர்த்து, அல்ப சௌகரியத்தைக் கூட அனுபவித்திராத அவளுக்கு சில வருஷங்களாய் மகன் வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த அந்தஸ்து, ஒருவித மயக்கத்தையே தந்தது.

"நீ ஒரு காரியத்தைப் பண்ணினா அதோட நேர்த்திக்கு கேட்கணுமா, மூர்த்தி. ஜாம்... ஜாம்னு நடத்திட்ட... போ!"

ஹக்... ஹக்... என்று சிரித்தான் மூர்த்தி. பிறகு "என்ன அத்தை நீங்க ஒண்ணும் சொல்லக் காணோமே!" என்று அவளையும் பேச்சுக்கிழுத்தான்.

பக்கத்து அறையில் ஏதோ வேலையாய் இருந்த ஸரஸுவின் காதுகளில் கணவன் பேச்சு விழுந்து அவள் நெஞ்சுவலித்தது.

மூர்த்தி எதற்காக இப்போது கூடத்தில் உறவினர் நடுவில வந்து அமர்ந்திருக்கிறான், ஏன் அத்தையுடன் வலிய பேசுகிறான் என்றெல்லாம் அவளுக்கு நன்றாய் தெரியும். புதுசாய் நடந்தாலதானே தெரியாமல் போக? இதுதான் அடிக்கடி நடக்கும் நாடகம் ஆயிற்றே? ஸரஸு எதிர்பார்த்த வழியிலேயே மூர்த்தி பேச்சை வளர்த்தான்.

"என்ன அத்தை! வீட்டைப் பார்த்தேளா? இட்டுக் கட்ட லட்ச ரூபாயை முழுங்கிடுத்து. மொஸைக் தரை பளபளப்பை பார்த்தேளா? எப்படி?... என்னமோ நாங்கதான் சொந்த வீட்டில் குடி இருக்கிற மாதிரி உங்க மன்னி



துள்ளிண்டு இருந்தாளே இந்த வீடு எங்கே? அந்த வீடு எங்கே? என்ன நானே சொல்றது?"

மூர்த்தியை திருப்திபடுத்தும் பதில்தான் 'டக்' என்று அத்தையிடமிருந்து வந்தது.

"நன்னா கேட்டேளே, மாப்பிள்ளை? நீங்க எங்கே, அவா எங்கே? குலம், கோத்திரம் பார்க்காம ஹிந்திக்காரனுக்கு பொண்ணைக் குடுத்தும் இல்லாமல், தரையில் கால் பாவாமதான் காமு இருக்கா. என்னதான் எழும்பினாலும் உங்க அந்தஸ்துக்கு கிட்டே கூட வரமுடியுமா, என்ன?"

அட்டகாசமாய் சிரித்தான் மூர்த்தி.

"ஆமா, எப்படி இருக்கா அந்த திமிர் பிடிச்சவளும், அவ ஆஸ்துமா கார ஆம்படையானும்?..." வம்புக்கு அலைந்தான் மூர்த்தி.

அதற்கு இந்த அத்தைத்தான் சரியான ஆள். சீதா, ராம்குமாரை மணந்தபோது சொந்தக்காரர்கள் அனைவரும் 'தூ' என்று காமாட்சியின் முகத்தில் காறித் துப்பி ஒதுங்கிவிட்டாலும், வருஷங்கள் ஆனபோது இந்த அத்தையும் இன்னும் ஓரிரு தூரத்து பந்துக்களும், போனால் போகிறாள் என்று காமுவை மீண்டும் சேர்த்துக் கொண்டார்கள். கையில் காலணா காசு இல்லாமல் தவிக்கும் அந்த சொந்தக்காரர்கள், அவ்வப்போது தங்கள் இல்லத்துக்கு வருவதும், ஐந்தும் பத்தும் பெற்றுக் கொண்டு ஸரஸு, மூர்த்தி பற்றின விஷயங்களைச் சொல்லுவதும், தங்களை [illegible] அறிந்துகொண்ட சமாசாரங்களை கண், காது ஒட்ட வைத்து மூர்த்தியிடம் தெரிவிப்பதற்காகவும்தான் என்பதை சீதாவும் காமாட்சியும் புரிந்துகொண்டே இருந்தார்கள். மூர்த்தியின் செல்வாக்கும், ஸரஸு, குழந்தைகளைப் பற்றின தகவல்களும் அவர்கள் மனங்களுக்கு இதமளித்ததால் ஒழிந்து போகட்டும் என்று அத்தை முதலியோரின் உறவை பொறுத்துக் கொண்டார்கள்.

ஆனால் ஸரஸூவுக்கு மாத்திரம் அத்தை அந்தாத்து விவகாரங்களை இங்கு வந்து சொல்லும்போது மனசு உண்மையில் அடிப்போகும். தங்கை புருஷனை கொஞ்சமும் மதிக்காமல் ஆஸ்துமாக்காரன், இழுப்புக்காரன், வியாதிக்காரன் என்றும், சீதாவை திமிர்காரி, மானங் கெட்டவள் என்றெல்லாம் தன் காதுபட உறவினரிடம் கணவன் பேசும்போது மனசு உடைந்துதான் போகும்.

அன்றொரு நாள் வளை அடுக்கவந்த தங்கை எத்தனை பெரிய அவமானம் அடைந்தாள் என்று உணர்ந்த வளாய், மறுநாளே யாருக்கும் தெரியாமல் கோபாலனின் ஆபீஸுக்கு போன் செய்தாள்.

"மாமா, என்னால் என் குடும்பம் இது நாள் பட்ட கஷ்டம் போதும் மாமா. என் தங்கை, அவ புருஷன், உங்க பெண் எல்லோரும் அவமானப்பட்டதும் போதும் மாமா, எங்காத்துக்காரர் ஒரு மிருகம். அவர் மனசு இனி மாறாது. என் தலையில் எழுத்து நான் அனுபவிக்கிறேன். இனியும் சீதாவோ, இல்லை வேறு யாருமோ இந்தாத்துக்கு வந்து அவமானப்பட வேண்டாம். இதை அவாகிட்டே சொல்லிடுங்கோ மாமா... ஸரஸூனு ஒருத்தி இருக்கிறதை மறந்துடச் சொல்லிடுங்கோ மாமா" என்று கதறி விட்டாள்.

அதன்பிறகு சீதாவுக்கு குழந்தை பிறந்த சமாசாரத்தை யார் மூலமாகவோ கேள்விப்பட்ட அன்று, தன் பையன் புகைப்படத்துடன் "உங்களுடைய ஆசீர்வாதம் இவனுக்கு உண்டு என்பதைப் போல, மனசு நிறைந்த ஆசீர் வாதங்கள் உன் பெண்ணுக்கு எப்போதும் உண்டு" என்று எழுதி ஒரு கவரில் வைத்து சீதாவுக்கு போஸ்ட் செய்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல மூர்த்தியின் வியாபாரம் பெருகிப் போனதால் இனிப்பில் ஒட்டும் ஈக்களாய் வேண்டாத உறவினர் கூட்டமும் இவர்களைச் சுற்றிய போது சீதாவைப் பற்றின விஷயங்கள் நிறையவே தெரியவாயின.



இப்படித்தான் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தடவை 'ஸ்கூட்டரில் ஆம்படையானும் பெண்டாட்டியுமா, ஊரையே சுத்தறா' என்று ஒருத்தர் சொன்ன மறுவாரமே, செகண்ட் ஹாண்ட் காரை வாங்கி வந்து ஸரஸூவையும் தன் இரண்டு பிள்ளைகளையும் உற வினரையும் ஏற்றிக்கொண்டு சென்னை நகரை வலம் வந்த மூர்த்தி, 'உன் தங்கை ஸ்கூட்டரில தானே போனா. நான் உன்னை காரில் அழைச்சுண்டு போறேனே!' என்று சொல்லிக் காட்டவும் செய்தான்.

நடு நடுவில் ராம்குமாருக்கு ரொம்ப இருமல், இழுப்பு, ஜுரம் என்று கேள்விப்பட்டால் 'ஜாதகம் பார்த் தாளா, பெரியவாளிடம் கேட்டாளா? ஒண்ணுமில்லை. வியாதிக்காரனிடம் மாட்டிக்கொண்டு முழிக்கட்டும்' என்று கொக்கரிப்பான்.

ஒன்றுக்குமே பதில் பேசமாட்டாள் ஸரஸூ. தனக்கு இனி எல்லாமே கணவர்தான் என்று தீர்மானித்து விட்டதால், ஒரு பேச்சுக்கும் பதிலே பேசமாட்டாள். ஆனால் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அம்பாளிடம் மட்டும் 'என் தங்கையை சௌக்கியமாய் வாழச் செய். என் கணவர் நாக்கு கரி நாக்காக இருக்கவேண்டாம்' என்று வேண்டுவாள்.

மூர்த்தி வீட்டு கிருகப்ரவேச விழாவிற்கு மறுநாளே அவன் எதிர்பார்த்தது போல அத்தை சீதா வீட்டுக்குப் போய் விட்டாள்.

முதல் நாள் வைபவத்தை ஒன்றுக்குப் பத்தாக்கி விவரித்தவள், "உன் பெண் கொடுத்து வைச்சவதான் மன்னி, சொந்த வீடென்ன... ஆள் அம்பாரமென்ன... கார் என்ன... தாங்கறாள் போ..." என்றாள்.

கேட்கக் கேட்க காமாட்சியின் உள்ளம் குளிர்ந்து போனது.

"அவ குணத்துக்கு அவளுக்கு ஒரு குறையும் வராது அக்கா. என்னமோ யார் கண்ணும் படாம இருந்தா சரி..." என்றாள் நிறைந்த மனசுடன்.

நல்லதையே பேசிக் கொண்டிருந்த அத்தை திடீ ரென்று வம்பில் இறங்கினாள். "என்ன இருந்து என்ன மன்னி? மனுஷனுக்கு வாய் துடுக்கு மட்டும் போகலையே... பணம் இன்னிக்கு வரும்... நாளைக்குப் போகும். குணம் வருமா? துக்கிரியாட்டம் சதா ஆஸ்த்மாக்காரன், இழுப்புக் காரன்னு உன் சின்ன மாப்பிள்ளையைக் குத்திக் குத்தி பேசறான்; இதைக் கேட்டாதான் எனக்கு துக்கமா இருக்கு..."

மூர்த்தி ராம்குமாரை நாலுபேர்கள் நடுவில் இகழ் வது காமாட்சிக்கு புதிக ஒன்றும் இல்லை. ஆனாலும் ஒவ் வொரு முறை கேட்கும் போதும் துணுக்குறும் நெஞ்சு இன்றும் துவண்டது.

அத்தை தொடர்ந்தாள்.

"நேத்து அத்தனை பேர் நடுவிலேயும் உங்களைப் பற்றி ரொம்ப கேவலமாய் பேசினான். 'சீதா திமிர்காரி. வியாதிக்காரனிடம் மாட்டிண்டு இருக்கா. அவ கொட்டம் ஒருநாள் அடங்கத்தான் செய்யும்'னு பேசினான். இது ரொம்ப தப்பில்லையோ..." பேசிக்கொண்டு போனவளை தடுத்தாள் காமு. "என்னமோ எதுக்காக இந்த விஷயங்களை என் காதுலே போடறேள்? நல்லதை மட்டும் சொல்லுங் களேன்... குழந்தைகள் நன்னா இருக்கிறதை பார்த்துண்டே நான் போயிடணும். மனசு நோகற பேச்சு எதுக்கு?" எழுந்து விட்டாள் காமாட்சி.

நல்ல வேளையாக சீதா வீட்டில் இல்லை. சுமித் ராவின் கைக்குழந்தைப் பெண்ணுக்கு தானே பூப்போட்டுத் தைத்திருந்த பாவாடையைக் கொடுக்க நுங்கம்பாக்கம் போயிருந்தாள். அவள் காதில் அத்தையின் பேச்சு விழுந் திருந்தால் துடித்துப் போவாளே.



"காபி கலந்துண்டு வரேன்... அப்படியே உங்க பொண்ணுக்கு சீதா ரெண்டு ரவிக்கை தைச்சு வைச் சிருக்கா. அதையும் கொண்டு வரேன்" என்று உள்ளே போய் சீதா வீடு திரும்புமுன் அத்தையை அனுப்பி விடுவதில் முனைந்தாள் காமு.

"ரொம்ப அழகாயிருக்கும்மா. உன் கைவேலைக்கு கேட்பானேன்?... மஞ்சுவுக்கு தினுசு தினுசாய் தைச்சு போட்டிருக்கியே; நான் பார்த்திருக்கேனே!" சுமித்ராவின் மாமியார், சீதா கொண்டு வந்த பாவாடையைப் பார்த்து விட்டு மகிழ்ந்து பாராட்டினார்.

"பெரியம்மா, எனக்கு ஒண்ணும் கிடையாதா?" என்று சுமித்ராவின் தலைச்சன் பிள்ளை ராஜு அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். பகல் உணவிற்காக வீடு வந்திருந்த ஆறு வயசு ராஜுவுக்கு சீதா பெரியம்மா என்றால் ரொம்ப பிடிக்கும்.

அவர்கள் உறவு முறையெல்லாம் ரொம்ப வேடிக்கையாய் இருக்கும். அக்கா, தங்கை போல பழகின தால் மஞ்சு சுமித்ராவை சித்தி என்றும், ராஜு சீதாவை பெரியம்மா என்றும் அழைப்பார்கள். சுமித்ரா, ராம் குமாருக்கு ரக்ஷாபந்தனம் செய்திருந்ததால், ராஜுக்கு அவன் மாமா — மஞ்சுவுக்கு விசு சித்தப்பா — ஆக மொத்தம் எல்லாம் தலையை சுத்தும் உறவுகள்.

"எனக்கு ஒண்ணும் கிடையாதா பெரியம்மா?" என்று கட்டிக்கொண்ட பையனை இழுத்து மடியில் அமர்த்தி, பையிலிருந்து பெரிய காட்பரீஸ் சாகலேட்டை எடுத்துக் கொடுத்தாள் சீதா.

"தாங்ஸ் பெரியம்மா!" — அவளை அணைத்து முத்தம் கொடுத்துவிட்டு உணவருந்தும் மேஜை நோக்கி ஓடினான் ராஜு.

சாப்பாடு போட உள்ளே சென்ற சுமித்ராவைத் தொடர்ந்து சீதாவும் சென்றாள்.

"நீயும் கொஞ்சம் சாப்பிடு" என்று சொன்ன சுமித்ரா, சீதாவுக்கும் ஒரு தட்டை வைத்துப் பரிமாறினாள்.

பாதிச் சாப்பாட்டில் நிலைத்துக்கொண்டு சீதா சொன்னாள். "வந்ததுமே சொல்லணும்னு இருந்தேன சுமி! மறந்துபோயிடுத்து. வீட்டில் சும்மா இருக்கிற நேரத்தில் நான் பி. டி. படிக்கலாம்னு இருக்கேன். அவர் சரினுட்டார். நீ என்ன நினைக்கறே?"

தோழியின் இத்தகைய பேச்சை சற்றும் எதிர் பார்க்காத சுமித்ராவுக்கு வியப்பு மேலிட்டது. "இது என்ன, திடீர் ஆசை!" என்று கேட்டாள்.

"மஞ்சுக்கு எட்டு வயசாறது. வீட்டு வேலைகளை அம்மா பார்த்துக்கறா — நான் பொம்மை, ஜுஸ், தையல் எல்லா கிளாஸுக்கும் போய் கத்துண்டாச்சு... அதனாலே மேலே சேர்ந்து படிச்சா என்னனு நினைக்கறேன். ஏதாவது வேலைக்கு போறதுன்னா கூட பி. டி. படிச்சால் சௌகரியம் தானே?..."

மஞ்சரிக்குப் பிறகு ஐந்து வருஷம் குழந்தை வேண்டாமென்று கட்டுப்பாட்டோடு இருந்தார்கள் ராம் குமாரும் சீதாவும். இப்போது மூன்று வருஷங்களாய் கட்டுப் பாடு இல்லை ஆனாலும் ஒன்றும் உண்டாகவில்லை, ஏனோ தெரியவில்லை. அவளுடன் கல்யாணமான சுமித்ரா வுக்கு மூத்தது பிள்ளை; இரண்டாவது பெண்ணுக்கு ஒன்றரை வயது.

சீதா எதற்கு மேற்கொண்டு படிக்கணும்? கை நிறைய ராம்குமார் சம்பளம் வாங்கும்போது அவள் ஏன் வேலைக்குப் போகணும்? இப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள்.

விதி இருக்கிறதே அது நம்மையும் அறியாமல் வரப் போவதை நம் வாயிலிருந்தே சில சமயம் சொல்ல வைக்கு மாம்.



வால்மீகி தன் காவியத்தில் தசரதன், மந்திரி, பெரியவர்களைக் கூப்பிட்டு அனுப்பி 'ராமனுக்கு வயதாகி விட்டது பட்டாபிஷேகம் நடத்த வேண்டும்' என்று மட்டும் சொல்லவில்லையாம் 'காடெல்லாம் பூத்திருக்கு. நல்ல நேரம். பட்டாபிஷேகத்தை நடத்த வேணும்' என்றானாம். அன்று விதி தசரதன் வாக்கில் உட்கார்ந்து கொண்டு நாளைக்கு ராமன் நாடாளப் போவதில்லை. காட்டில்தான் வசிக்கப் போகிறான் என்பதை தெரிவிக்க தசரதன் வாக்கிலே, 'காடெல்லாம் பூத்திருக்கு. நல்ல நேரம்' என்று வந்ததாகக் கூறுகிறார். ஆளானப்பட்ட தசரதனே விதியின் விளையாட்டுக்கு கட்டுப்பட்டானென்றால், சாதாரண மான சீதா, 'நான் மேலே படிக்கிறனே! நாளைக்கு ஏதாவது வேலைக்குப் போகலாமே' என்று சொன்னதில் என்ன அதிசயம் இருக்கிறது?

## 12

"ப்ளீஸ் ராம். தெரியறதா பாருங்களேன்..." நித்தம் கெஞ்சுவது போல இன்றும் சீதா கெஞ்சிக் கொண்டிருந் தாள். மஞ்சுவை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டு சமயற் கட்டிலிருந்து சீதாவின் மதிய உணவுடன் வெளியே வந்த காமாட்சிக்கு பெண்ணின் கெஞ்சல் கேட்டு சிரிப்பு வந்தது. இதோ இன்னும் ஒரு நிமிஷத்தில் அவரிடம் வந்து இதே கேள்வியை மறுபடியும் கேட்கப் போகிறாள். என்ன பெண் ணோ என்ன கூத்தோ!

பி.டிக்கு சேர்ந்த வேளையோ என்னவோ அடுத்த பிள்ளையை சீதா உண்டானதும் எல்லோரும் மகிழ்ந்து தான் போனார்கள்.

26 FEB 2003

படிப்பு முக்கால்வாசிகூட 'ஆகியிருக்கவில்லை. மசக்கை என்று சதா தலையைப் பிடித்துக்கொண்டும் குமட்டிக் கொண்டும் சோர்ந்து சீதா படுத்தபோது ராம்குமாரை யாராலும் கட்டிப் பிடிக்க முடியவில்லை.

"பைனல் பரீட்சையின் சமயத்தில் ஐந்து மாசம் முடிஞ்சிருக்கும். அத்தனை பெண்கள் நடுவில் வயிற்றை நீட்டிக் கொண்டு நான் போகணுமே. எனக்கு வெட்கமாய் இருக்கும். நான் படிப்பை நிறுத்தப் போறேன்ம்மா" என்று சீதா சொன்னதும் பலமாக மறுத்தது ராம்குமார் மட்டுமில்லை, காமாட்சியும்தான். "நல்ல பொண்ணுடிம்மா நீ! மேலே படிக்கப் போறேன்னு ஒத்தைக் காலில் நின்னு படிக்க ஆரம்பிச்சே. அந்த நல்ல வேளை நீ மறுபடி பிள்ளையாண்டிருக்கே. எட்டு மாசம் போல படிச்சுட்டு அஞ்சாம் மாசம் வயிறு தெரியும், நான் காலேஜிக்கு போக மாட்டேன்னா எப்படி!" என்று காமுவும்—

"என்ன சீதா, சின்னக் குழந்தை போல? உன் உயரத்தில் வயிறு தெரியவே தெரியாது. இன்னும் இரண்டு மாசம் முடிச்சிட்டு ஜம்முனு பி. டி டிகிரி வாங்குவாயா? அதை விட்டுட்டு..." என்று ராம்குமாரும் பேசி அவளை அடக்கி விட்டார்கள்.

வயிற்றுப் பிள்ளைக்கு மூன்று மாசங்கள் ஆகும் வரை கூட சீதா எப்படியோ பொறுத்து விட்டாள். அதன் பிறகு 'வயிறு தெரிகிறது' என்று தனக்குதானே நினைத்துக் கொண்டவளாய், தினமும் கல்லூரிக்குப் புறப்படும் நேரத்தில் கணவனிடமும், தாயிடமும் 'வயிறு தெரிகிறதா? என்று மறக்காமல் கேட்பாள். 'வயிறும் தெரியலை, கியிறும் தெரியலை. வீணா அலட்டிக்காதே' என்று ஒரே பல்லவியை காமு பாடுவாள். அதில் ஒரு திருப்தி சீதாவுக்கு.

மாசங்கள் நாலு பூர்த்தியானதும் புடவையைக் கட்டிக் கொண்டு கண்ணாடி முன் நின்று இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று இழுத்து எந்த விதத்திலும் கருவுற்றிருப்பது மற்றவர்களுக்குத் தெரியாது என்று தன்னைத்



தானே மகள் தேற்றிக் கொள்ளுகையில் காமுவுக்கு வேடிக்கையாய் இருக்கும்.

"ஏன் சீதா, ஏற்கனவே மருகளை உண்டானவ தானே எதுக்காக இப்படி வெட்கப்படறே?" என்று ஒரு சமயம் கேட்டதற்கு "என்னம்மா நீ. இப்ப எனக்கு வயசு என்ன? முப்பத்தி ஒண்ணு ஆறுது. மருகளுக்குப் பிறகு பத்து வருஷமா ஒண்ணும் இல்லை. அதுவே எனக்கு வெட்கமா இருக்கு. என்கூட படிக்கிற பெண்களெல்லாம் கல்யாணமாகாதவ. ஏற்கனவே என்னோட அவா சகஜமாய் பழக தயங்குவா. இப்ப இந்த விஷயம் வேற சேர்ந்துண்டுதுன்னா எப்படியம்மா" என்று வெகுளித்தனமாய் சீதா பதில் சொன்னபோது காமுவுக்கு சிரிப்பே எழுந்தது.

என்றுமே மனைவிக்கு இதமாய் நடந்து கொள்ளத் தெரிந்தவன் ராம்குமார். இப்போது ஆசையாய் இருக்கச் சொல்லித் தர வேண்டுமா என்ன? அதுவும் பரீட்சைக்கு நாட்கள் நெருங்க நெருங்க சீதா என் என்பதற்கு முன்னால் எண்ணெயாய் நின்றான். சீதாவின் ரிக்கார்டுகளை அக்கறையுடன் தயாரித்துத் தந்தான். நோட்ஸ் எழுதித் தந்தான். இன்னும் இரவு வேளைகளில் டீ போட்டுத் தருகிறேன் என்று கூட கூத்தடித்தான்.

முதல்நாள் இரவு பதினொரு மணி அளவில் சமயல் கட்டில் ஏதோ கடபுடா என்று உருளும் சப்தம் கேட்கவே எழுந்து போய் பார்த்த காமு மாப்பிள்ளையை அங்கு பார்த்து திகைத்துப் போனாள்.

ஏதோ ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து அடுப்பில் வைத்த குமார், மாமியாரைப் பார்த்துவிட்டான். சிவப்பு முகம் மேலும் சிவந்து போக "ஒன்றுமில்லை... சீதாவுக்கு டீ..." என்று அவன் அசடு வழியவும் பெண்டாட்டிக்கு சிஷ்ருஷை பண்ண குமார் ஆசைப்படுகிறான் என்பதை காமு புரிந்து கொண்டவளாய், முகத்தில் எழுந்த சிரிப்பை வெளிக்காட்டாமல், தன் அறைக்கு வந்து சேர்ந்தாள்.

மறுநாள் சீதாவுக்கென்று திஹுசு, திஹுசாய் மாமியார் செய்து அனுப்பும் சிறுறுண்டிகளை எடுத்துக்கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை வரும் சுமித்ரா வந்தாள். மாலையில் எல்லோரும் கூடி அமர்ந்து பேசுகையில், ராம்குமாரின் மணிக்கட்டில் தெரிந்த கொப்புளத்தைக் கண்ட சுமித்ரா 'இது என்ன?' என்று வினவவும் "பெண்டாட்டி விடிய விடிய படிக்கணும்னு தானே ஆசையாய் டீ போட்டு தறதுக்கு பரிசு" என்று காமு குட்டை உடைக்கவும் 'ஹோ' என்று அனைவரும் சிரித்துவிட்டார்கள். அன்றைக்கு சுமித்ராவும், விசுவும் சேர்ந்து செய்த கேலியில் புதிதாய் திருமணமான தம்பதிபோல புளகாங்கிதமடைந்தார்கள் குமாரும் சீதாவும்.

அன்று இரவு தனித்து படுக்கை அறையில் இருக்கையில் மனைவியை வம்புக்கு இழுத்தான் ராம்குமார்.

"உங்கம்மா என்னை இப்படி மாட்டிவிட்டாரே சீதா?"

"பின்னே எதுக்காக இப்படி பெண்டாட்டி தாஸனாய் சுத்தணுமாம்?"

குறும்பு கண்களில் கூத்தாட படிக்கும் மேஜையை விட்டு எழுந்து கட்டிலில் படுத்திருந்த கணவன் மார்பில் சாய்ந்தாள் சீதா.

ஒரு வழியாய் பரீட்சைகள் முடிந்து முடிவுகள் வெளியாகி, சீதா பாஸ் செய்துவிட்டது தெரிந்தபோது சீதாவுக்கு ஏழாம் மாசம் முடிந்துவிட்டது.

அந்த புதன் கிழமை சுமி, விசுவின் சீமந்த புத்திரன் ராஜூவிற்கு பிறந்த நாளாகையால் அன்று இரவு விருந்து அனைவருக்கும் சுமியின் வீட்டில். பகலிலேயே சீதா, மஞ்சு, அம்மா நுங்கம்பாக்கத்துக்குப் போய் விடுவதென்றும், மாலையில் ஆபீஸிலிருந்து ராம்குமார் நேராக வருவதென்றும் தீர்மானித்திருந்தபடியால் சீதா நாலு மணிக்கெல்லாம்



போய்விட்டாள். சரியாக ஆறு மணிக்கு ராம்குமாரும் வந்துவிட்டான்.

என்னென்னவோ பேசி, கும்மாளமிட்டுக் கொண்டிருந்தாலும் கணவன் ஏதோ சிந்தனை வயப்பட்டிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட சீதா, இரவு தங்கள் வீட்டிற்குத் திரும்பினதும், மஞ்சுவுக்கு 'குட் நைட் கிஸ்' கொடுத்து படுக்க அனுப்பிவிட்டு கணவனிடம் அமர்ந்து "வாட் ஈஸ் த மேட்டர்? ஏன் ஒரு மாதிரி இருக்கேள், ராம்?" என்று கேட்கவே செய்தாள்.

"ம்?.. சொல்றேன்."" பாத்ரூமிற்கு சென்று இரவு உடைகளை மாற்றிக்கொண்டு, முகத்தை அலம்பிக் கொண்ட ராம், "என் தங்கை நந்தினிக்கு கல்யாணம் சீதா! பத்திரிக்கை வந்திருக்கு" என்றான்.

முகத்தை துடைத்த வண்ணம், அவன் பேசியதால் டவலில் சொற்கள் அழுந்திப் போய் வார்த்தைகள் சீதாவுக்கு சரியாக கேட்கவில்லை.

"என்ன?"

"இந்தூரிலிருந்து கல்யாண அழைப்பு வந்திருக்கு"

சீதாவினால் இதை நம்ப முடியவில்லை.

அறைக்குள் வந்த ராம்குமார் தன் ப்ரீஃப் கேஸிலிருந்து ஒரு கவரை எடுத்து சீதாவின் மடியில் போட்டான்.

எடுத்துப் பிரித்தாள் சீதா.

ஹிந்தியில் அச்சடிக்கப்பட்ட ஒரு திருமண அழைப்பிதழ் கூடவே ஒரு சின்ன கடிதம், ஹிந்தியில்தான்.

'மேரே பையா' என்று தொடங்கியிருந்த கடிதத்தில், தனக்கு கல்யாணம் என்றும், அருமை அண்ணனாகிய அவன் குடும்பத்துடன் வருகை தந்து, முன் நின்று திருமணத்தை நடத்தி வைத்தால் அது அவளுக்கு எத்தனை சந்தோஷத்தைத் தரும் என்றும், அம்மாவின் ஆசையும் அது

தாலே என்றும் இப்படி கடைசி நிமிஷத்தில் யாரோ அன்னி யருக்கு அழைப்பு அனுப்புவது போல பத்திரிகை அனுப்பு வதை மன்னித்துவிட்டு அவசியம் வரவேண்டும் என்றும் அவன் தங்கை நந்தினி எழுதி இருந்தாள்.

கடிதத்தைப் படித்துமுடித்த சீதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. திடுதிப்பென்று இப்படிப்பட்ட ஒரு கடிதத்தை அவள் எதிர்பார்க்காததால் எண்ணங்கள் அங்கங்கு நின்று போயின. ஒரு நிமிஷ காலத்தில் தன்னை சுதாரித்துக் கொண்டவள் "இந்த மாதிரி ஒரு கடிதத்துக்காக நான் எத்தனை வருடங்களாக ஏங்கி இருக்கேன், ராம். ஐ ஆம் ஸோ ஹாப்பி" என்று மெதுவாய் முணு முணுத்த வண்ணம், ராம்குமாரின் கைகளை இழுத்து தன்னோடு சேர்த்துக் கொண்டாள்.

"அப்பாவுக்கு இவ எழுதினது தெரியுமோ, தெரியாதோ. ஐ டோண்ட் நோ வாட் ஹிஸ் ரிஆக்ஷன்ஸ் வில் பி..."

"ஒரு சின்ன பெண் தானாகவே இப்படி ஒரு லெட்டரை எழுதமாட்டா, ராம். 'அம்மாவும் ஆசைப் படறா'ன்னு தானே எழுதி இருக்கா. அதனாலே பெரியவா சம்மதத்தோடதான் இந்த இன்விடேஷன் வந்திருக்கு..."

'இல்லை' என்பது போல தலையை ஆட்டினான் ராம்.

"யூ டோண்ட் நோ மை பாதர், சீதா."

"பத்து வருஷத்திலே ஒரு மனுஷர் மனசு மாறக் கூடாதா?..."

"உங்க மூர்த்தி மாறினானா? இல்லையே?" ராம் குமாரின் குறுக்கு கேள்வி சீதாவுக்குப் பிடிக்கவில்லை.

"எல்லோரும் மூர்த்தி மாதிரியே இருக்கணும்னு ஏன் ராம்ப எதிர்பார்க்கணும்? இந்த கல்யாணத்தாலே பிரிஞ்ச குடும்ப அங்கம் ஒண்ணு சேர்ந்தா, அதைவிட



சந்தோஷமான சமாசாரம் வேறெ ஒண்ணும் இருக்க முடியாது... ப்ளீஸ்... ராம்... போகலாமே..."

மனசினுள் ஒரு நெருடல். அப்பாவின் குணத்தைப் பற்றின பயம் இருந்தாலும், நந்தினியின் கடிதமும், சீதாவின் கெஞ்சலும் அவன் ஆசையை வளர்க்கவே ஊருக்குக் கிளம்ப சம்மதித்தான்.

நந்தினியின் கல்யாணம் அடுத்த திங்கள் கிழமை. பராத் ஞாயிற்றுக் கிழமை. நடுவில் இருந்தது மூன்றே நாட்கள்.

"ஒரு வாரம் லீவு போடுங்கோ ராம், அங்கே போய் தேவைப்பட்டால் கூட எடுத்துக்கறது... மஞ்சு ஸ்கூல் பற்றி கவலை வேண்டாம். இப்போ என்ன ஆகஸ்ட் மாதம் தானே? நான் நாளைக்கே மதர்கிட்டே பேசிடறேன்." சீதாவினுள் சந்தோஷம் பீரிட்டது.

ஆக, வெள்ளி கிராண்ட் டிராங்க்கில் புறப்படுவது; சனி இரவு போபாலை அடைவது; இந்தூர் வண்டியைப் பிடித்துக் கொண்டு, ஞாயிறு காலை வீட்டிற்குப் போவது என்றெல்லாம் கணக்குப் போட்டு விட்டு அவர்கள் தூங்கப் போகும்போது மணி பனிரெண்டுக்குமேல் ஆகிவிட்டது.

மறுநாள் காலை மகிழ்ச்சியால் வெடிக்கும் மனசுடன் அம்மாவிடம் நந்தினி கல்யாணத்தைப் பற்றியும், தாங்கள் போகப் போவது பற்றியும் சீதா சொன்னபோது வெகுவாக காமு சந்தோஷப்பட்டாலும் 'எட்டாம் மாசம் நடக்கிறது இப்போது அலையலாமோ?' என்றும் ஆதங்கமும் அவளுள் எழவே செய்தது. அம்மாவின் சந்தேகத்தை 'போம்மா ஒருத்தொருத்தர் கடைசி நிமிஷம் வரைக்கும் வெளியிலே அலைந்து வேலை பார்த்துட்டு வராளாம், நீ என்னமோ...' என்று சொல்லி அடக்கி விட்டாள் சீதா.

அவனுக்கு வேலை தலைக்கு மேல் இருந்தது. சுபிக்கு போன் பண்ணி சேதியைச் சொன்னதும் "வெரி

கூட நான் கார் எடுத்துண்டு வரேன். வேலைகளை முடிச்சுடலாம்." என்று சொல்லி, சரியாக அரைமணிக்கெல்லாம் அவள் வந்துவிட்டாள்.

முதலில் மஞ்சுவின் ஸ்கூலுக்குப் போய் மதரிடம் விபரத்தைச் சொல்லி பத்து நாட்கள் விடுமுறை வாங்கிக் கொண்டார்கள். பிறகு மாம்பலம் நல்லி கடைக்குப் போய் மாமியாருக்கு ஜரிகை போடாமலும் நந்தினிக்கு சாண் அகலத்திற்கு கரையிட்டும் இரண்டு பட்டுப் புடவைகளை எடுத்துக்கொண்டாள்.

"மஞ்சுவின் சல்வார் கம்மிஸ் எல்லாம் பழசாயிருக்கு. நல்லதாய் ஒண்ணும் இல்லை சுமி. வெறும் பட்டில் ஒன்று எடுக்கட்டுமா?" என்று கேட்டு அதையும் வாங்கினாள். அங்கிருந்த மோதிலால் தெருவிலிருந்த ராதா டெய்லரிங் கடைக்குப் போனாள். "மஞ்சு அளவிற்கு ஒரு சல்வார் கம்மிஸ் இன்னிக்கு சாயங்காலமே வேணும், டெய்லர். இவர் தங்கைக்கு கல்யாணம்; நாளைக்கு இந்தூர் போறோம்" என்றும் சொன்னாள். இப்படியாக மனசுக்கு திருப்தி அளிக்கும் தினுசில் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மறுநாள் சுமியும், அம்மாவும் வழியனுப்ப கணவனுடனும், குழந்தையுடனும் புக்ககத்திற்குப் புறப்பட்ட சீதாவின் மனம் பரவசமாகி இருந்தது.

ரயிலின் ஓட்டத்தினூடே, பரபரக்கும் முகத்தோடு "அப்பா கோபமாய நடந்துண்டா என்ன பண்றது சீதா?" என்று கணவன் கேட்டபோது, அவன் மனசின் துடிப்பு அவளுக்குப் புரிந்தது.

"என்ன கோவிச்சுப்பார்? ரெண்டு வார்த்தை கேட்டா குறைஞ்சா போயிடப் போறோம்?... மிஞ்சிப் போனா அவரிடம் பேசாமல் ஒதுங்கிடலாம். போகப் போக சரியாயிடும்..." என்று அவனைத் தேற்றிய சீதாவோ, இல்லை ராம்குமாரோ அடுத்த நாற்பத்தி எட்டு மணி நேரங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளால் தங்கள் வாழ்க்கையே தடம் மாறப் போகிறது என்பதை சற்றும் உணர்ந்தார்களில்லை.



## 13

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

'ஒண்ணரை நாள் பிரயாணமாயிற்றே. உட்காரக் கூட இடம் இல்லாமல் எப்படி போவது? இப்படி கடைசி நிமிஷத்தில் புறப்படுகிறோமே' என்று ராம்குமாரும், சீதாவும் பயந்ததை 'பூ' என்று ஊதித்தள்ளின விஸ்வநாத் எந்த ரயில்வேக்காரரைப் பிடித்தானோ, இல்லை வேறு யாரைத்தான் பிடித்தானோ, ரயில்வே கோட்டா மூலம் மூன்று ஸ்லீப்பர் டிக்கெட்டுகளுடன் மாலையே வந்து நின்றதில் இப்போது பயணம் சௌகரியமாய் இருந்தது இவர்களுக்கு.

"அங்கே போய் சமத்தா நடந்துக்கணும் மஞ்சு — எல்லாரிடமேயும் அடக்கமாய் பேசணும். அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த பெண்ணாட்டம் ஹிந்தியில ஜமாய்க்கணும். சரியா?"

அம்மா சொன்னதற்கெல்லாம் 'சரி' 'சரி' என்று தலையை ஆட்டினாள் மஞ்சு.

"நாம்ப கல்யாணத்துக்கு முதல்நாள் அங்கே போயிடுவோம். அன்னிக்கு பராத்... அங்கிருக்கிற குழந்தைகளெல்லாம் என்ன பண்றாளோ, அதையே நீயும் பண்ணணும். சும்மா என் பின்னாடி சுத்தக் கூடாது."

"பராத் — னா என்னம்மா?"

"இங்கே முதல்நாள் மாப்பிள்ளை ஊர்கோலம், ஜான வாசம் — வரும் பாரு. அதுக்குத்தான் வடக்கே

பாரத்துப் போ. மாப்பிள்ளையை குதிரைமேலே அழைச்சிண்டு வருவா... ரொம்ப ஜோராய் இருக்கும் மஞ்சு..."

பெண்ணிடம் ஊருக்குப் போய் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டு போன சீதா, அவ்வப்போது தலையைத் திருப்பி ஜன்னலருகில் அமர்ந்து... இருட்டை உற்று நோக்கின வண்ணமிருக்கும் கணவனைப் பார்க்கவே செய்தாள்.

ராம்குமாருக்கு திடீரென்று பத்து வயசு குறைந்து விட்ட மாதிரியும், பரீட்சைக்குப் போகும் ஒரு மாணவனின் பரபரப்பு அவனிடமும் பரவிக் கிடந்ததாகவும் சீதாவுக்குத் தோன்றியது.

இருக்காதா? வீட்டின் சம்மதமில்லாமல் மணந்தவளுடன் பதினோரு வருஷங்கள் வாழ்ந்துவிட்டு, இன்று நிறைமாத கர்ப்பிணியான அவளுடனும் பத்து வயசு பெண்ணுடனும் எதையோ எதிர் பார்த்துக்கொண்டு போகிறோமே-எல்லாம் நல்லபடியாய் நடக்க வேண்டுமே என்ற ஆதங்கம், பயம் இருக்காதா, என்ன?

எதிர் பெஞ்சிலிருந்த பையன்கள் சாப்பிட்டுவிட்டு கை அலம்ப பின்னால் போன நேரத்தில், எழுந்த சீதா, தன் டிராவலிங் பையைத் திறந்து மேலாக வைத்திருந்த ஸ்வெட்டரை எடுத்தாள். ராம்குமாரின் மடியில் அதை வைத்துவிட்டு, அவன் கையை எடுத்துக் கோத்துக் கொண்டு அவனிடம் நெருங்கி அமர்ந்தாள்.

"காத்து சிலுசிலுனு வீசறது... ஸ்வெட்டரை போட்டுக்கோங்கோ அலைய வேண்டிய சமயத்தில இழுப்பு வந்துடப் போறது" என்று சொன்னவள் மேலும் "எவ்ரிதிங் ஈஸ் கோயிங் டு பீ ஆல்ரைட்... டோண்ட் வொர்ரி ராம்..." என்றும் ஆறுதலாய் பேசினாள்.

மறுநாள் முன்னிரவில் போபாலை அடைய வேண்டிய வண்டி, எக்கச்சக்கமாய் லேட்டாகிப் போனதால், நடுஜாமத்திற்கு மேல்தான் ஆடிப்பாடிக்கொண்டு



போபாலை அடைந்தது சீதா, ராம்குமார் வரப் போகிறார்கள் என்று இந்தூர் வண்டி காத்திருக்குமா, என்ன? அது போய் இரண்டுமணி நேரமுட ஆகிவிட்டது.

சாமான்களை வெயிட்டிங் ரூமில இறக்கி வைத்துவிட்டு "நீ இங்கேயே இரு சீதா. நான் வாசலுக்குப் போய் டாக்ஸி ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கறேன்" என்று சொல்லி ராம்குமார் வெளியே போனான்.

ஸ்டேஷன் அழுது வழிந்து கொண்டிருந்தது. தலை எழுத்தே என்று இப்படியும் அப்படியும் போன சிலவே உத்தியோகக்காரர்களைத் தவிர ஒருவரும் இல்லை. வாசலில் நின்ற இரண்டு டாக்ஸிக்காரர்களுக்கும் நல்ல தூக்கம்.

"இந்தூருக்கு வர முடியுமா?" என்று ராம்குமார் கேட்ட கேள்விக்கு முதல்வன் பதிலே அளிக்கவில்லை. "போகவர சோத்துக்கொடுத்தால் வருகிறேன்" என்றான் இரண்டாமவன்.

'போபாலிலிருந்து இந்தூருக்கா? போக வரவா? அது நமக்கு கட்டுப்படியாகாதப்பா' என்று எண்ணிக் கொண்ட ராம்குமார் மீண்டும் சீதா இருக்கும் இடத்திற்கே வந்தான்.

"எப்படியும் நாளை சாயங்காலத்திற்குள் போனால் போதும் சீதா. நாளைக்கு பத்து மணிக்கு ஒரு பாஸஞ்சர் புறப்படறது. அதில் போனால் ஆறு மணிக்குள் போயிடலாம். இப்ப வீணா டாக்ஸி எதுக்கு? வாட் டு யூ ஸே?" என்ற கணவனின் கருத்தை சீதா ஒப்புக் கொள்ளவே, இரவை அந்த வெயிட்டிங் அறையிலேயே கழித்துவிட்டு மறுநாள் காலை இந்தூருக்குப் புறப்பட்டார்கள்.

பாஸஞ்சர் வண்டியில்லையா? அதற்கு வேகமாய் போவது என்றால் என்ன தெரியும்? ஒரு வழியாய் இந்தூரை அது அடையும்போது சரியாக மாலை மணி ஆறே கால்.

ரயிலிலேயே மகளுக்குச் சிறப்பாக அலங்கரித்து விட்டு, தானும் தயாராகிவிட்டாள் சீதா.

இந்தூரில் இறங்கினதும் ஒரு டோங்காவை பிடித்துக் கொண்டு ராம்குமாரின் வீட்டை நோக்கிப் போனார்கள்.

தெருமுனை திரும்பியதுமே பளிச்சென்று பிரம்மாண்டமான வீடும், கலர் கலராய் பூப் போட்ட ஷாமியானா பந்தலும், கண்ணைப் பறித்தன.

வீடும், அதன் சுற்றுப் புறமும் அலங்காரமும், கல்யாணத்தின் தரத்தை எடுத்துக் காட்டின.

ராம்குமாரின் நிஜ அந்தஸ்து புரிந்த அந்த வினாடியில் சீதாவின் கண்கள் கலங்கிப் போயின.

'இத்தனையும் விட்டுவிட்டு எனக்காகவா ஒதுங்கினார்? சாதாரணை எனக்காகவா?'

கல்யாணக் களை கட்டியிருந்த வீட்டின் முகப்பில் கார்களும், ஆட்களும் நின்றிருந்தார்களே தவிர, முக்கியப்பட்டவர்களெல்லாம் மாப்பிள்ளை அழைப்பிற்கும் புறப்பட்டுப் போய்விட்டார்கள் என்று சீதாவால் ஊகிக்க முடிந்தது.

டோங்கா நின்றது. சாமான்களை இறக்கிவிட்டு, குடும்பத்துடன் தானும் இறங்கினான் ராம்குமார்.

சுற்றி நின்றவர்களில் ஓரிருவர் இவனைப் புரிந்து கொண்டு விட்டார்கள்.

"ஸாப்... ஆப் ஆகயா?..." மகிழ்ச்சி தாளாமல் கத்திக் கொண்டு வந்த ஆள் ராம்குமாரை ஆரத் தழுவிக் கொண்டான்.

"எத்தனை வருடங்களாயிற்று... தம்பி சௌக்கியமா?" முதியவனாயிருந்த அவன் கண்களில் கண்ணீர்.



"எங்கள் வீட்டின் பிரதான சமையற்காரன் கோபால் — என்னை எடுத்து வளர்த்தவன் சீதா..."

பெட்டிகளை தன் கைகளில் எடுத்துக்கொண்ட அந்த ஆள் "ஆயியே ஸாப்... ஆயியே மேம்ஸாப்... மாஜி அந்தர் ஹை..." என்று உற்சாகமாய் வரவேற்றுக்கொண்டே ஓட்டமும் நடையுமாய் உள்ளே ஓடினான்.

ஷாமியானா பந்தலில் அங்குமிங்குமாய் நின்றிருந்த உறவு மனிதர்களைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே மஞ்சுவை ஒரு கையால் பிடித்துக் கொண்டு 'வா சீதா' என்று ராம் முன்னே போனான்.

வாசற்படி ஏறவும் உள்ளே இருந்து வேலையாய் அவன் தாய் வாசலுக்கு வரவும் சரியாய் இருந்தது.

"மா... தேகியே... கோன் ஆயா..."

வேலைக்காரனின் உரத்த குரல் கேட்டுத் திரும்பின தாய் மஞ்சரி ஸ்தம்பித்துப்போனாள். முகத்தில் என்னவென்று விவரிக்க முடியாதபடி ஒரு பாவம்... தாய் பாசம் வயிற்றிலிருந்து கிளம்பி நெஞ்சை அடைத்துக் கொண்டதால் வார்த்தைகளாய் ஒன்றுமே பேச வராமல் கண்கள் மட்டும் நீரைச் சொரிந்தன.

"மா..." பதினோரு வருஷங்களாய் காணாத தாயை இன்று கண்ட ராம் தன் அன்பை எல்லாம் கொட்டி அவளை அழைத்தவாறே அருகில் சென்று கால்களைத் தொட்டு வணங்கினான்.

"ராம்... மேரே பேட்டே.... தும் ஆகயே முஜெ மாலூம் ஹை... தும் ஆஜா ஓகே..." (என் பிள்ளை ராம்... நீ வந்து விட்டாயா? வருவாய் என்று எனக்குத் தெரியுமப்பா...)

தாயும், மகனும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிய வண்ணம் தங்களை மறந்து நின்றார்கள். மெதுவாகத் தன்னை விடுவித்துக்கொண்ட ராம் "மா... இதுதான் சீதா...

இது உன் பேத்தி மஞ்சரி..." என்று சின்ன குரலில், வெட்கம் மேலிட்டவனாய் பேசினான்.

மாமியார் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள் சீதா.

"ஜீதே ரஹோ பேட்டீ..." (தீர்க்காயுசுடன் இரு மகளே)

சீதாவை குனிந்து தூக்கி அவள் நெற்றி உச்சியில் முத்தமிட்டாள் ராம்குமாரின் அன்னை. பிறகு குழந்தை மஞ்சுவை தன் கைகளினால் வளைத்துப் பிடித்துக் கொண்டு "என் பேரப் பெண்ணே என் குடும்பத்துக் குல விளக்கே, என் ராம் பெற்ற மகளே" என்று புலம்பிய வண்ணம் கன்னம், நெற்றி, வாய் என்று முத்தமாரி பொழிந்தாள்.

வீட்டுப் பெரியவர்கள் என்ன மாதிரி வரவேற்புக் கொடுப்பார்களோ என்று இது நாழிகை ஒதுங்கி நின்ற உறவினர்கள் இப்போது சூழ்ந்துகொண்டார்கள்.

"எப்படி இருக்கிறாய், ராம்?"

"உன் பெண் அப்படியே நீ தானப்பா!"

"இரண்டாவதுக்கு எத்தனை மாசம்?"

"ஆமாம் தகவல் கொடுத்திருக்கக் கூடாது? ஸ்டேஷனுக்கு கார் அனுப்பியிருப்போமே" என்று என்னென்னவோ கேள்விகள்.

திட்டும், வசவுமாய் வரவேற்பு இருக்கப் போகிறது என்று பயந்துகொண்டே வந்த ராம்குமாருக்கும், சீதாவுக்கும் இப்படி ஒரு அன்பான வரவேற்பு கிட்டியதும் திக்கு முக்காடிப் போனார்கள்.

"வாம்மா... உள்ளே வா சீதா... வா... மஞ்சரிக் கண்ணா..." என்று பக்கத்திற்கு ஒருவராகப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் அழைத்துச் சென்றாள் தாய்.



"யாரங்கே? ராம்குமார் வந்திருக்கிறான் பார். நந்தினி எங்கே? அண்ணா, அண்ணா என்று புலம்பிக் கொண்டிருந்த அண்ணா வந்துவிட்டதை அவளுக்குச் சொல்லுங்கள்."

என்றுமே தலையை நிமிர்த்தி, உரக்கப் பேசாத தாய் இன்று இப்படி நடந்துகொள்வதைக் கண்ட ராம்குமாருக்கு அவள் அன்பு நெஞ்சின் ஆழம் புரிந்ததால் மனம் நெகிழ்ந்தது.

"ராம் பையா..."

பாதி அலங்காரத்தில் எழுந்து வந்துவிட்டாள் போலிருக்கிறது... மருதாணி பூசிய கைகளை வளைகள் அலங்கரிக்க, நகைகள் உடம்பை அழுத்த, காலில் கொலுசுகள் சப்திக்க, தகதகவென்று மின்னும் பட்டாடையுடனும், சற்றே பின்னிய பின்னலுடனும் ஓடி வந்தாள் நந்தினி.

ராம்குமாருக்குப் பெண் வேஷம் போட்டால் இப்படித்தான் இருப்பானோ என்று சீதா ஒரு க்ஷணம் நினைத்தாள். அதே நிறம், அதே ஒடிசலான தேகவாகு, அதே பூனைக் கண்கள், அதே அழகு, எல்லாம் அதேதான்.

"அண்ணா" என்று ஓடி வந்தாள். சட்டென்று அவன் கால்களை தொட்டு நமஸ்கரித்துவிட்டு விரிந்த ராம் குமாரின் கைகளுள் புகுந்து விசித்து விசித்து அழலானாள்.

"என் லெட்டர் உனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்று பயந்தேன் அண்ணா... நீங்கள் வந்து விட்டீர்களே... நான் அதிர்ஷ்டசாலி அண்ணா..."

பத்து வயது சின்னப் பெண்ணாய் பார்த்திருந்த நந்தினி இன்று அழகான பெண்ணுருவில், தன்மேல் இத்தனை பாசம் கொண்டவளாக வளர்ந்திருப்பதைக் கண்டு பிரமித்துப் போனான் ராம்குமார்.

"பாபி" சீதாவைத் திரும்பிப் பார்த்த நந்தினி, அவளையும் நமஸ்கரித்து எழுந்துவிட்டு மஞ்சுவை ஆரத் தழுவிக் கொண்டாள்.

ஆஹா! அவர்கள்தான் எப்படி மகிழ்ந்து போனார்கள்!

வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் மனசார குதூகலமாய் இருந்த அந்த சமயத்தில் மாப்பிள்ளை அழைப்பும் புறப்பட்டு அரைமணி ஆகி இருந்தது.

பாண்டு பிரமாதமாய் வாசிக்க, உயர் ஜாதி குதிரையில் ஊரின் பெரிய புள்ளியின் மகன் பவனி வர, பட்டும் நகைகளுமாய், ஜொலித்த ஊர்பிரமுகர்கள் காஸ்லைட் விளக்குகளில் ஒளியிட அட்டகாசமாய் தனக்கு நிகரில்லை என்று வந்து கொண்டிருந்தார் தயாள் சர்மா.

"பிதாஜி..."

பதற்றத்துடன் யாரோ அழைப்பது கேட்க திரும்பினார் அவர்.

மகன் வினோத்...

'என்னடா?' என்பது போல் அவர் வினவவே —

"ராம் பையா ஆயே ஹைங்... ஓ... ஓபி ஆயே ஹை." (ராம் அண்ணா வந்திருக்கிறான்... அவளும் வந்திருக்கிறாள்)

சீதாவும் ராம்குமாரும் உடைமாற்றிக் கொண்டு பராதை எதிர் நோக்க தயாராகிவிட்ட பிறகு எல்லோரும் வட்டமாய் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள். தாய்க்கு அருகில் குழந்தை மஞ்சு, பக்கத்தில் அத்தை நந்தினி, இந்தப் பக்கம் சீதா, ராம்குமார் இன்னும் யார் யாரோ...

'ஹோ' — என்று எழுந்த சிரிப்பையும் மீறிக் கொண்டு

"ஏ கஹாங்ஸே ஆயா?"



(இவன் எங்கிருந்து வந்தான்?)

என்ற அதட்டலான ஆத்திரமான, பயங்கரமான குரல் கேட்க அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

தயாள் சர்மா —

ராம்குமாரின் தந்தை இவரா? அன்பே உருவான என் ராமின் தந்தை இவரா? இந்த மென்மையான மஞ்சரியின் கணவர் இவரா? இத்தனை விகாரமான உருவமும், அகங்கார குரலும் கொண்டவரா என் ராமின் தந்தை?

சீதா நடுங்கியதைப் போலவே மஞ்சுவும் நினைத்த தால் அனைவரும் துள்ளிக்கொண்டு எழுந்த நேரத்தில் ஓடி வந்து தாயின் முந்தானையில் மறைந்து கொண்டான் அவள்.

## 14

"ஏ கஹாங்ஸே ஆயா?"

என்னையா? என்னையா கேட்கிறார் அப்பா? எனக்கு அழைப்பிதழ் அனுப்பியது அப்பாவுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால் 'இவன் எங்கிருந்து வந்தான்?' என்று கேட்பாரா? அம்மா, நந்தினி கொடுத்த வரவேற்பைப் பார்த்து அப்பாவின் சம்மதத்தின் பேரில்தான் எல்லாம் நடக்கிறது என்று மகிழ்ந்து போனேனே, அவை எல்லாம் பொய்யா? ராம்குமாரின் நெஞ்சம் வலித்தது.

மஞ்சரியின் சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய் விட்டன. 'அண்ணா' 'அண்ணா' என்று நந்தினி எங்கிலும் பொறுக்க மாட்டாமல் ராம்குமாருக்கு அழைப்பிதழ்

அனுப்ப அவள் சம்மதித்தாள். இன்று ராம் அவள் இதய தாபத்தைப் புரிந்து கொண்டவனாய் குடும்பத்துடன் வந்து இறங்கினதும் நிஜமாகவே பூரித்துப் போனாள். கணவன் இல்லாத சமயத்தில் அவன் வந்ததும் செளகரியமாய் போயிற்று. 'பராத்துடன் கணவர் வருவார். அத்தனை ஜனங்கள் நடுவில் வாயைத் திறந்து கத்த முடியாது. எல்லாம் முடிந்து இரவு படுத்து எழுந்தால் கோபம் சற்றுத் தணிந்துவிடும்; காலைப் பொழுதுக்குள் அவர் காலில் விழுந்து கெஞ்சி, சரிக்கட்டி விடலாம்; அப்படியும் சரிப் பட்டுவர வில்லையென்றால், உங்கள் முகத்துக்கெதிரே அவனோ, அவன் மனைவியோ வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு என்று மன்றாடினால் அவர் மனசு இளகாமலா போகும்? என்ன இருந்தாலும் பெற்றவர்தானே.... என்றெல்லாம் தனக்குத்தானே ஒத்திகை செய்துகொண்டு கணவனை எதிர்நோக்கத் தயாராகித் கொண்டிருந்த மஞ்சரியின் ஆசைகளெல்லாம் மணலில் கட்டின வீடு மாதிரி சரிந்து விழுந்தபோது அவளை பயமும் நடுக்கமுமே பற்றிக்கொண்டன.

இவர் எப்படி இங்கு வந்தார்?

மாப்பிள்ளை அழைப்புடன் இருக்க வேண்டிய இவருக்கு ராம் வந்த விஷயம் எப்படித் தெரிந்தது.

கணவரின் தலைக்குப் பின்னால் தெரிந்த இளைய மகன் வினோதும் பெண் வீணாவும் தங்கள் கண்களில் அச்சம் தாண்டவமாட நின்றிருப்பதைப் பார்த்ததுமே சர்மாவின் இத்தனை கோபத்திற்கு இவர்கள் தூபம் போட்டிருப்பதே காரணம் என்று புரிந்து போயிற்று.

"மஞ்சரி இவன் எங்கிருந்து வந்தான்? யாரைக் கேட்டுக் கொண்டு வந்தான்? வாசற் கதவு திறந்திருந்தால் எந்த நாய் வேண்டுமானாலும் உள்ளே நுழைந்து விடுவதா?... மஞ்சரி..." சவுக்கடி கொடுப்பது போல பேசினார் தயான் சர்மா.



"ஸுனோ, ஜீ ஸுனோ..." தட்டுத் தடுமாறிக் கொண்டு மஞ்சரி பேச முனைந்தாலும் அவளால் மேற் கொண்டு பேச இயலவில்லை.

எல்லோரும் மௌனிகளாய் இருந்தால் எப்படி? யாராவது ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டாமா, என்று நினைத்தவனாய் சட்டென்று தலைப்பினால் தன் தலையைப் போர்த்திக் கொண்டாள் சீதா. "அப்பா நாங்க பண்ணின தவறை பெரியவர்களான நீங்கள் மன்னித்து விட்டு எங்களை ஆசீர்வதியுங்கள் அப்பா...!" மெல்லிய குரலில் பேசிவிட்டு, அவர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்ய ஓரிரு அடிகள் முன்னால் வந்தாள்.

அவர்கள் வழக்கப்படி தலையைப் போர்த்திக் கொண்டு, கால்களை பவ்யமாக வணங்க வந்த மருமகளைக் கண்டு எப்பேர்ப்பட்ட கல்நெஞ்சுக்காரன் கூட அந்த கணத்தில் நெகிழ்ந்திருப்பான்.

ஆனால் தயான் சர்மா என்ன செய்தார்? என்ன நினைத்தார்?

மகனை மயக்கின நாடகக்காரி தன்னையும் மயக்க நாடகம் போடுகிறாள் என்றே நினைத்தார்.

நினைத்தவருக்கு கோபம் பற்றிக்கொண்டு எழ "சீ... சீ... நாய்.... நாய்... மஞ்சரி.... கண்டவர்கள் என்னிடம் நெருங்கி வந்தால் இங்கு ஒரு கொலை விழும்..." என்று ஆர்ப்பரித்தார்.

குன்றிப் போனான் ராம்குமார்.

விக்கித்துப் போனாள் சீதா.

என்ன மனுஷர் இவர்?

'பெரிய தப்பு பண்ணி விட்டோம்' என்று பதறிய ராம்குமார் "நாங்கள் ஒன்றும் விதிகெட்டு இங்கு வர வில்லை... அழையாத வீட்டில் நுழைய எங்களுக்கு ஒன்றும்

தலைவிதி இல்லை..." என்று சீறியபோது குறுக்கிட்டார் அவன் தந்தை.

"அப்போ? இவனுக்கு அழைப்பு போயிருக்கிறதா? சொல் மஞ்சரி."

அவமானத்திற்கு மேல் அவமானம் இடிகளாய் விழுந்த அந்த நேரத்திலும் நிலைமையை யதார்த்த உணர்வில் புரிந்து கொண்டவள் சீதாதான்.

கோபத்தில் கணவன் இன்னும் ஏதாவது பேசிவிடப் போகிறாரே என்ற துடிப்பில் அருகிலிருந்த அவன் கையைப் பற்றி தமிழில் 'காட்டிக் கொடுக்காதீர்கள்' என்று கெஞ்சினாள்.

அந்த ஒரு வார்த்தையில் 'அழைப்பு வந்ததைப் பற்றி சொல்லி உங்கள் தாயையும், தங்கையையும் அவருடைய கோபத்திற்கு உள்ளாக்காதீர்கள்' என்ற கெஞ்சல் பரிபூரணமாய் ஒலிக்கவே அடங்கிப் போனான் ராம்குமார்.

ஏதோ மகன் பேச வந்ததையும், சீதா தடுத்ததையும் கண்ட தயாள் சர்மாவுக்குத் தன்னைப் பற்றித்தான் அவள் ஏதோ கோள் மூட்டுகிறாள் என்று தோன்றவே பிசாசு போல உக்கிரமாய் கத்தினார்.

மகளையும் மருமகளையும் த்ருணமாய் மதித்ததால் அவர்களை ஏறிட்டுப் பார்க்காமல் ஒரு வார்த்தையும் நேராய் அவர்களுடன் பேசாமல் மனைவியைப் பார்த்தே வாயில் வந்ததை சொல்லிக் கத்தினார்... கடைசியாய் 'உஸ்னே கிஹோ கீ உஸ் லோண்டியேகோ லேகே சலே ஜாயே நைஹி தோ ஐ ஷாதி நஹி ஹோகி..." (அவன் அந்த நட்டதைக் கெட்டவளை அழைத்துக்கொண்டு வெளியேறவில்லை என்றால் இந்தக் கல்யாணம் நடக்காது) என்றும் மஞ்சரியின் தோள்களைப் பிடித்து உலுக்கிய வண்ணம் கூறினார்.



கண்களில் மாலை மாலையாய் நீர் வழிய அவர் கால்களில் பொத்தென்று விழுந்தாள் மஞ்சரி.

"ஸுனியே... தும்ஹாரி பேர் பட் கி ஹூம்.. ஸுனியே..." (உங்கள் கால்களைப் பிடித்துக் கெஞ்சுகிறேன். கொஞ்சம் கேளுங்கள்..) விக்கி விக்கி அழுது கொண்டே கதறிய மனைவியை துளியும் லட்சியம் செய்யாத சர்மா தன் கடைசி மகளை நோக்கினார்... "நந்தினி... உன் மாப்பிள்ளை வந்து கொண்டிருக்கிறான். அவனை வரவேற்க வேண்டுமா? இல்லை இப்படியே திருப்பி அனுப்ப வேண்டுமா என்று எனக்கு ஐந்து நிமிஷத்திற்குள் தெரிய வேண்டும்... புரிகிறதா?" என்றும் ஆத்திரம் கொண்டு பேசினார்.

ராம்குமாருக்கு எல்லாம் கசந்து போயிற்று.

நிறைமாத கர்ப்பிணியாய், முகம் வெளுக்க, மனசில் பட்ட காயத்தின் வலிதாங்காமல் துடிக்கும் அன்பு மனைவியையும் பலிக்குப் போகும் ஆடுபோல நடுங்கும் மகளையும் பார்த்தான். அவனுக்கும் எல்லாம் வெறுத்துப் போயிற்று.

அம்மா. நந்தினியின் அழுகையைத் தவிர பயங்கரமாய் ஒலித்த அமைதியை கிழித்துக்கொண்டு பேசினான் அவன்.

"புறப்படு சீதா... பதினொரு வருஷங்கள் முன்னாலேயே அறுந்த பந்தபாசத்தை திரும்ப புதுப்பிக்க முடியும் என்று ஆசைப்பட்டது என் தவறு. நீ புறப்படு..." பேசியவன் திரும்பி அறை மூலையில் திறந்துகிடந்த பெட்டியை மூடினான். அதைக் கையில் எடுத்துக்கொண்டு "வா சீதா... வாம்மா மஞ்சு... இந்த சுடுகாட்டை விட்டு எவ்வளவு சீக்கிரம் போகிறோமோ அத்தனை நல்லது... வாம்மா..." என்று துக்கத்தால் குரல் அடைக்க கண்கள் கலங்க கூறி விட்டு அவர்களுடன், வேறு ஒருவரையும் நிமிர்ந்து கூட நோக்காமல் விர்ரென்று வெளியில் நடந்தான்.

சிறிது நாழிகை அலைந்த பிறகு கிடைத்த ஒரு டாக்ஸியைப் பிடித்தான் ராம்குமார். டிரைவர் வாயைத் திறந்து கேட்குமுன்னரே 'போபாலுக்கு வருகிறாயா? போக வர சேர்த்துத் தருகிறேன்' என்றான்.

டாக்ஸிக்காரனுக்கு கசக்குமா என்ன?

வண்டி இந்தூர் நகரைத் தாண்டும் வரை ஒருவருமே பேசவில்லை. குடும்பம் ஒட்டு மொத்தமாக சோகமாய் இருந்ததால் 'ஏதோ பெரிய துக்கம் போலிருக்கிறது' என்று உணர்ந்த வண்டியோட்டியும் வாயே திறக்கவில்லை.

நகர் எல்லையைத் தாண்டி வண்டி வேகம் எடுத்ததும் பின் பக்கம் சற்றே திரும்பி "ஏன் சார்?... யாராவது இறந்துட்டாங்களா?'' என்று ராம்குமாரை வினவினான்.

ஒருசில நிமிஷங்கள் மௌனமாய் இருந்தான் ராம் குமார்... பிறகு மெதுவான குரலில்... "ஆமாப்பா என் தாய் இறந்து விட்டாள், முன்பு என் கூடப் பிறந்தோர், தந்தை தான் இறந்தார்கள். இன்று... இன்று... என் அம்மாவும் போய் விட்டாள்..." என்று சொன்னபோது அவன் குரல் உடைந்து போய் அழுகை தெறித்தது.

இதுவரை மௌனமாய் விசும்பிக் கொண்டிருந்த சீதா இப்போது சிதறிப் போனாள்.

"ராம்... ராம்... என்ன ராம்... நீங்க ஏன் அழறேள்? ராம்... என்னைப் பாருங்களேன்...'' உரக்க அழுது கொண்டே கணவன் முகத்தைத் தன்பால் திருப்பினாள்.

அன்பையே நித்தமும் ஏந்திக் கண்ட சீதாவின் கண்கள் அன்று தாங்கொணாத் துயருடன் கண்ணீரை ஏந்தி நின்றதும் 'சீதா' என்று அழைத்து அவளை மார்புடன் இறுகத் தழுவிய ராம்குமார்... "என்னை மன்னிச்சுடும்மா... என்னால்தானே உனக்கு இத்தனை அவமானங்கள்?... என்



குடும்பத்தால்தானே ப்ளீஸ் பாகிவ் மீ... சீதா..." என்று கூறி மேலும் அழுதான்.

திருமணமான இத்தனை வருஷங்களில் எதற்கும் அசையாத கணவன் இன்று நிலை குலைந்ததினால் சீதா கலங்கிப் போனாள்.

ஒருவரை ஒருவர் தேற்ற இருந்த சூழ்நிலையையும் மறந்து, குழந்தை தேம்புவதையும் உணராமல் அன்னிய புருஷன் ஒருவன் இருப்பதையும் பாராமல் குமுறிக் குமுறி அழுது அவரவர் துக்கத்தைக் கரைத்தார்கள்.

செத்தால்தான் அழுகை வருமா என்ன?

ஒருவர் செத்து விட்டதாகவோ இல்லை நம்மை சாக அடித்துவிட்டதாகவோ அறிந்தாலும்கூட நெஞ்சைப் பிளந்துகொண்டு தாபம் எழுமே.

கிட்டத்தட்ட அரைமணி காலம் ஒன்றுமே புரியாமல் புலம்பித் தீர்த்தவர்கள் மனசின் பாரம் சற்று குறைந்ததும், கொஞ்சம் அடங்கிப் போனார்கள்.

"என்னால்தானே? என் குடும்பத்தால்தானே உனக்கு அவமானம்..." என்று கணவன் மறுகியதைக் காண சகியாத சீதா, "போகட்டும்... ஒரு கெட்ட கனவாக இதை நாம் மறந்துடலாம். ஆனால்... உங்களை எனக்குத் தந்த அந்த பெற்றோரை நான் எப்படி ராம் குறை சொல்ல முடியும்?... உங்க மாதிரி ஒருவரை நான் கணவனா அடைய கொடுத்து வச்சிருக்கணும்... மனப்பூர்வமா சொல்றேன்... வீணா என் குடும்பத்தாலே உனக்கு அவமானம்னு வருத்தப் படாதிங்கோ... இதோடு இந்தப் பேச்சை விட்டுடலாம்..." என்று சீதா சற்றே தெளிந்த மனத்துடன் பேசி ஆறுதலளித்தாள்.

போபாலை நெருங்க இன்னும் ஒரு மணி நேரம் இருக்கையில் லேசாகத் தூறிக் கொண்டிருந்த மழை பெரிய தாய் வலுத்துப் போனது.

"இப்படி மழை கொட்டுகிறதே. நேரத்தோடு போபால் போகமுடியுமா? காலை நாலு மணிக்கு அல்லவா சென்னை வண்டி. மணி ஒன்றைத் தாண்டி விட்டதே." என்று ராம்குமார் தவித்ததை உணர்ந்தவன் போல 'நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களைப் பத்திரமாய் கடவுள் கொண்டு சேர்ப்பார்... நல்லவர்களுக்கு மேன்மேலும் சோதனை கொடுக்க மாட்டார்' என்று வண்டியோட்டி சொன்னான்.

ஆனால் அவன் வாக்கு பொய்த்துவிட்டது.

அவர்களை இன்னும் இன்னும் என்று ஆட்டி வைக்கத் திட்டமிட்டிருந்த இறைவன் தன் விளையாட்டை ஏற்கனவே தொடங்கி விட்டதை யார் அறிவார்?

மணி மூன்று அளவில் போபால் ஊருக்குள் வண்டி நுழைந்தது. ஸ்டேஷனுக்கு அரை பர்லாங் இருக்கையில் கணுக்கால் அளவு தேங்கிக் கிடந்த குட்டையின் சேற்றில் வண்டியின் பின் சக்கரம் புதைந்து போனது. பெய்த மழையையும் லட்சியம் பண்ணாமல் வண்டியோட்டி இறங்கி என்னென்னவோ செய்து பார்த்தான். ம்ஹூம். ஒன்றுக்கும் பயன் இல்லை.

கால்மணி நேரம் மன்றாடினவன் "ஐயா நீங்கள் இறங்குங்கள்... ஸ்டேஷன் கிட்டேதான். ஓடிப் போய் விடலாம்... இங்கே ஈ காக்காய் காணோம். உங்கள் வண்டி போய்விடப் போகிறது" என்று சொல்லிவிட்டு, தூங்கின நிலையிலேயே மஞ்சுவை தன் தோள் மேல் எடுத்துப் போட்டுக் கொண்டு, அவள் தலை நனையாமல் இருக்க ஒரு துணியை விரித்தான். டிக்கியிலிருந்த பிளாஸ்டிக் ஷீட்டை எடுத்து ராம் குமாரிடம் கொடுத்து "அம்மா மேல் மழை படாமல் போட்டு கூட்டி வாருங்கள். இந்த நிலையில் அவர்களை கவனிக்க வேண்டும்" என்றான். பிறகு ஒரு கையில் பெட்டியை எடுத்துக்கொண்டு, பூட்டின



வண்டியை அங்கேயே விட்டுவிட்டு, மஞ்சுவுடன் ஸ்டேஷனை நோக்கி ஓட்டமும் நடையுமாய் போனான்.

பெற்றவர்கள் காட்டாத கரிசனத்தை இந்த முன்பின் தெரியாத சர்தார்ஜி காட்டினது நொந்த இதயத்தில் மருந்து தடவின உணர்ச்சியுடன் அவன் பின்னே நடந்தார்கள் சீதாவும், ராம்குமாரும்.

ஸ்டேஷனில் தொப்பலாய் நனைந்து விட்ட துணிகளை மாற்றிக்கொண்டு, சூடாக டீ அருந்தினதும் சற்றே தெம்பு பிறந்தது.

சென்னை வண்டி வந்து அதில் அவர்களை ஏற்றி விட்டுவிட்டு மனமெல்லாம் அன்பாக "கடவுள் இருக்கிறார் கவலைப்படாதீர்கள்" என்று சொன்ன சர்தார்ஜியிடம் பேசினதற்கும் மேலேயே பணத்தைக் கொடுத்து "ஷுக்ரியா ஜீ. ஆப்கா ப்யார்கோ பஹுத் ஷுக்ரியா" என்றான் ராம்குமார்.

மனசின் அதிர்ச்சியுடன், மழையில் நனைந்தது, ஓட்டமும் நடையுமாய் அரை பர்லாங் நடந்ததும் சேர்ந்து கொள்ளவே அன்று மாலை சீதாவிற்கு அடிவயிற்றில் இலேசாய் வலி சீறி மறையத் தொடங்கியது.

ஒருநாள் முழுவதும் பொறுத்துக் கொண்டிருந்தவளுக்கு, ஏற்கனவே ஒரு பிள்ளையைப் பெற்ற அனுபவத்தால் இது சாதாரண வலி இல்லை என்றே தோன்றியதால் சென்னையை வண்டி நெருங்குகையில் தன் நிலைமையைக் கணவனிடம் எடுத்துரைத்தாள்.

சென்னையை அடையும் சமயத்தில் வலி அதிகமாகிப் போகவே அவளை வீட்டிற்குப் போகும் வழியிலேயே, எட்வர்ட் எலியட் சாலையிலுள்ள நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டு மகளுடன் தான் மட்டும் வீட்டுக்குப் போனான் ராம்குமார்.

## 15

**சீ**தா உறங்கிக் கொண்டிருந்தாள்.

பெரிய கண்களை மூடிக்கொண்டு அவள் உறங்குகையில் முகத்தில் குழந்தைத் தனமே விரவிக் கிடந்தது.

கடந்த நான்கு நாட்களில்தான் என்னென்ன நடந்து விட்டன!

மனைவிக்கு வலி எடுத்துவிட்டது என்று அறிந்ததும் பரிதவித்துப்போனான் ராம்குமார். சென்னையை அடையு முன்பே ஏதாவது ஏடாகூடமாய் ஆகிவிட்டால என்ன செய்வது? எட்டுமாச கர்ப்பிணியை அலைக்கழிக்கக் கூடாது என்று காமாட்சி சற்றே சலனப்பட்டதும் நினைவுக்கு வர எல்லாம் என்னால்தானே என்று மறுபடி மறுபடி குமுறினான்.

"வலி எப்படி இருக்கு சீதா? இங்கு யாராவது டாக்டர் இருக்காறானு கேட்கட்டுமா?" கையும், காலும் ஓடாமல் தவித்தான் ராம்குமார்.

"அப்படி பயப்படும்படி இல்லை ராம் — ப்ளீஸ் டோண்ட் ஒர்ரி ஸோ மச்" — என்று கணவனைச் சீதா தேற்றினாலும் மனசுக்குள் மட்டும் பயந்துதான் போனாள். 'எட்டாம் மாசம் குழந்தை பிறந்ததென்றால் முழுமையான வளர்ச்சியுடன் இருக்குமா?' 'புத்தி வளராமல் பிறந்து விட்டால்?' 'உயிரோடு இருக்குமா? இல்லை குறைப் பிரசவமாகிவிடுமா?' இப்படி ஏதேதோ நினைவுகள்! இதனூடே 'தெய்வமே, நடுவழியில் ஏதாவது செய்து எங்களைத் திண்டாட விடாதே. என்ன நடந்தாலும் ஊருக்குப் போய் நடக்கட்டும். மனசு கஷ்டம்



போதுமப்பா... என் ராம் இன்னும் நொந்து போகும்படி செய்யாதே' என்று மனசுக்குள்ளே வேண்டிக் கொண்டே இருந்தாள்.

எப்படியோ, யார் செய்த புண்ணியமோ சென்னையை அடையும் வரை தாக்குப் பிடித்தவளுக்கு, வண்டியை விட்டு இறங்கி டாக்ஸிக்கு நடக்க முடியாமல் உதிரப் போக்கும் ஆரம்பித்துவிடவே கூடவந்த பெண்களின் உதவியுடன் அவளை டாக்ஸியில் ஏற்றி வேகமாய் நர்ஸிங் ஹோமிற்கு விடச் சொன்னான் ராம்குமார்.

நல்ல வேளையாக பெரிய டாக்டர் இருந்தார்.

"என்ன, ஏது என்று பேசி நேரத்தை வீணாக்காமல் நேரே ஆபரேஷன் தியேட்டருக்கு சீதாவைக் கொண்டு சென்றார். அரைமணி நாழிகை பரிசோதித்து, வைத்தியம் செய்தவர் வெளியே வந்து 'உடனே பிரசவம் ஆகும் என்று தோணலை. அதிர்ச்சியில் ப்ளீடிங் ஆரம்பித்து இருக்கு. பிரசவத்திற்கு வயிற்றுப் பிள்ளை இன்னும் தயாராகலை. அந்த மட்டும் நல்லதுதான். இன்ஜெக்ஷன்கள் போட்டிருக்கேன். ஷீ நீட்ஸ் அப்ஸல்யூட் ரெஸ்ட். இன்னும் எட்டுமணி நேரங்களில் மருந்துக்கு பலன் தெரிய ஆரம்பிச்சால் குழந்தையை காப்பாத்திடலாம்... இல்லைன்னா — வெல்... அஸ் வெயிட் அண்ட் ஹோப் ஃபார் தி பெஸ்ட்..." என்று கூறிய போது இப்போதைக்கு உடனடி அபாயம் குழந்தைக்கோ இல்லை சீதாவுக்கோ இல்லை என்று சற்றே ஆறுதல் கொண்டான் ராம்குமார்.

டாக்டருக்காக வெளியில் காத்து நின்ற நேரத்தில் அங்கிருந்த போன் மூலம் சுமித்ராவுடன் தொடர்பு கொண்டான்.

போனை எடுத்தவளே சுமித்ராதான்.

'சுமி திஸ் ஈஸ் ராம்' என்ற குரலைக் கேட்டதும் அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"ராம்? என்ன ராம் நீங்களா? வாட் ஹேப்பண்ட்?" அவளுக்கு உடனேயே ஏதோ பெரிய தவறு என்பது புரிந்துவிட்டது.

அவளிடம் அப்போது ஒன்றும் விளக்கமாய் கூற வில்லை ராம்குமார்.

"நாங்க இப்பத்தான் ஊர் திரும்பறோம் சுமி. சீதா ஈஸ் நாட் ஆல்ரைட். ஷீ ஹாஸ் பெயின்ஸ். நர்ஸிங் ஹோமிலிருந்துதான் பேசறேன்..."

எந்த இடம் என்பதை மட்டும் கேட்டுக் கொண்ட சுமித்ரா 'ஐ வில் கம் இமிடியட்லி' என்று சொல்லி போனை வைத்தாள்.

கணவன் விசுவிற்கு தகவல் தெரிவித்துவிட்டு அவன் வருவதற்குள் டிபன் பாக்ஸ் நிறைய சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டாள். ஒரு ப்ளாஸ்கில் வெந்நீர், ஒரு பிளாஸ்கில் தெளிவாய் ரசம், ஹார்லிக்ஸ், பிரிட்ஜில் இருந்த பழங்கள், பாட்டிலில் தண்ணீர், டபரா, டம்ளர், ஸ்பூன் என்று புத்திக்குத் தோன்றின அத்யாவசியமான சாமான்களுடன் அடுத்த முக்கால் மணியில் அவள் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தாள்.

வந்ததுமே, குலைந்து போன ராம்குமாரையும், கசங்கிப்போன மஞ்சுவையும், கிழிந்த நாராயிருந்த சீதாவையும் 'கண்டதும் அசாதாரணமாய் ஏதோ நடந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள்.

நொந்த இதயத்தில் வேல் பாய்ச்சி வலியை அதிகமாக்குவது போல தேவையில்லா பேச்சுக்களைப் பேசாமல் முதலில் சீதாவின் உடல்நிலையைப் பற்றி என்ன சொன்னார் என்பதை ராமிடமிருந்து கேட்டுக் கொண்டாள்.

"நான் இங்கே இருந்து இவளைப் பார்த்துக்கறேன். நீங்க வீட்டுக்குப் போய் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லுங்கள்... பயப்பட ஒண்ணும் இல்லைனு அடிச்சு



சொல்லுங்கள்... இங்கே நீங்க இருந்து என்னப் பண்ணப் போறேன்?"

சுமித்ரா சொன்னதை படுத்தபடி வலியுறுத்தினாள் சீதா.

"இப்ப எனக்கு ஒண்ணுமில்லை... எப்படி இருந்தாலும் இன்னும் எட்டு மணி நேரம் தாண்டித்தானே மேற்கொண்டு எதுவும் செய்யப்போறா?... ப்ளீஸ் ராம் யூ கோ ஹோம்... குழந்தைக்கும் உங்களுக்கும் ரெஸ்ட் வேணும் ராம்..."

சுமித்ராவின் காரிலேயே வீட்டுக்குப் போனான் ராம்குமார்.

காமாட்சியைக் கண்டதும் அது நாழிகை அடக்கி வைத்திருந்த துக்கத்தைக் கொட்டித் தீர்த்தாள் மஞ்சு.

'பாட்டி... பாட்டி...' என்று அவள் மடியில் தலையைப் புதைத்து அழுதாள் அவள்.

"எங்கப்பா எங்களை அவமரியாதையா பேசி வெளியே போகச் சொன்னாராம்மா. போய் சேர்ந்த உடனேயே கிளம்பிட்டோம்... அதிர்ச்சி மேல அதிர்ச்சியால சீதாவுக்கு வரும்வழியில வலி கண்டுடுத்து. ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கேன். இன்னும் எட்டு மணி நேரம் போனால்தான் குழந்தை தங்குமா, இல்லையானு சொல்ல முடியுமாம்... சுமித்ரா வந்து அவளை பார்த்துக்கறா. நீங்க கவலைப்படாதீங்கோ — சீதாவுக்கு ஒண்ணும் இல்லை..."

விவேகியான காமாட்சியா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுவாள்? இதயத்தின் வலி காரணமாய் கண்ணில் வழிந்த நீரைச் சுண்டி எறிந்தாள். 'சுமித்ரா சீதாவைப் பார்த்துக்கொள்வாள். நீ முதலில் உன் கடமையைச் செய்' என்று மனம் ஆணையிட்டதால் அழும் மஞ்சுவை வாரி அணைத்துக்கொண்டு உள்ளே போனாள்.

பாய்லரை மூட்டி வெந்நீர் போட்டான். பரபர வென்று மினகு ரசத்தையும் சாதத்தையும் காஸில் வைத்து விட்டு, பருப்புத் துவையல் அரைத்தாள். மஞ்சுவை குளிக்கச் செய்து, 'நீங்களும் சூடா வெந்நீர் விட்டுண்டு குளியுங்கோ' என்று மாப்பிள்ளையிடம் சொன்னாள். இரு வரையும் அமர்த்தி சுடச்சுட உணவு பரிமாறினாள்.

கண்ணும் முகமும் சிவந்து கிடந்த ராம்குமாரைப் பார்த்து, "நீங்க மஞ்சுவோட சித்த படுத்துக்கோங்கோ. நான் போய் சீதாவைப் பார்த்துட்டு இதோ வந்துடறேன்... பகவான் இருக்கார்... நான் வேற என்ன செய்யப் போறேன்" என்று கூறிவிட்டு சுமித்ராவின் காரில், ஆஸ்பத்திரியில் தேவைப்படும் என்று தோன்றிய சாமான்களுடன் சீதாவைப் பார்க்கச் சென்றாள்.

பகவான் இருக்கார் என்று காமு நம்பியது அன்றைக்கு வீண்போகவில்லை. அடுத்த எட்டு மணி நேரம் நல்லதாகவே கழிந்தது. மருந்துக்குக் கட்டுப்பட்ட வலி, மறு நாளுக்குள் அடங்கியே போயிற்று. ப்ளீடிங் மாத்திரம் பட்டுக் கொண்டிருந்ததால் 'இன்னும் ஐந்து, ஆறு நாட் களுக்கு பெட் ரெஸ்டாய் இங்கேயே இருக்கட்டும்' என்று டாக்டர் சொன்னதின் பேரில் சீதா அங்கேயே இருந்தாள்.

இரண்டு நாட்கள் தாண்டி மூன்றாம் நாள் அதாவது வியாழன் அன்று உதிரம் படுவதும் நின்று போன தால் உடம்பிலும் மனசிலும் சீதாவுக்குத் தெம்பு பிறந்தது.

வீட்டில் மஞ்சுவையும், ராம்குமாரையும் கவனித்துக் கொள்ள காமாட்சி தேவைப்பட்டதால், சுமித்ரா சீதாவின் கூடவே ஆஸ்பத்திரியில் இருந்து விட்டாள்.

"இங்கே குழந்தைகளையும் விசுவையும் நான் கவனிச்சுக்கறேனம்மா. அவளை நீ போய் கவனிச்சுக்கோ" என்று சுமியின் மாமியார் சொல்லி விட்டார்.



மாமியாரா அவர்? தங்கம் சுத்த தங்கம்! இப்படி யார் அனுசரித்துப் பேசுவார்?

ராம்குமாரோ, இல்லை காமாட்சியோ காலை காபியுடன் வந்ததும், வீட்டுக்குப் போய் குளித்து உணவருந்தி விட்டு, சீதாவுக்குத் தேவையான மதிய உணவுடன் பத்து, பதினோரு மணிக்கெல்லாம் சுமித்ரா வந்தால் மறுபடியும் மறுநாள்தான் வீட்டுக்குப் போவாள்.

அவளுக்கும், சீதாவுக்கும் மாலை டிபன், இரவு உணவு என்று ராம்குமார் தங்கள் இல்லத்திலிருந்து கொண்டு கொடுப்பான். அவன் லீவில் இருந்ததால் இப்படி அலைவது ஏதுவாயிற்று.

அந்த வியாழக்கிழமை உறக்கம் கலைந்து எழுந்ததும், ஆரஞ்சு ஜூஸை வைத்துக்கொண்டு தயாராய் நின்ற தோழியைக் கண்ட சீதாவுக்கு அவளின் அன்பு நெஞ்சைத் தொட்டது.

'சுமி என்கிட்டே உட்காரேன்' என்று தோழியை அருகில் அமர்த்திக் கொண்டாள். அதுநாள் வரை இந்தூர் பயணத்தைப் பற்றிப் பேச்செடுத்தாலே 'இப்போ வேண்டாம் உன் உடம்பு தேறட்டும்' என்று சுமித்ரா ஆட்சேபித்ததால் இன்று மனம் விட்டு பேசினாள். தாங்கள் புறப்பட்டது, இந்தூருக்குப் போனது, அங்கு நடந்தது, டாக்ஸியில் திரும்பினது, ராம்குமார் உள்ளம் உடைந்து கதறியது, மழையில் நனைந்தது, ரயிலில் வலி எடுத்தது என்று அனைத்தையும் ஆதியோடந்தமாய் விவரித்தாள்.

குறுக்கே பேசாமல் அவள் பேசினதை கேட்ட போது உணர்ச்சி வயப்பட்டு தோழியின் தொண்டை அடைத்த போது சுமித்ராவுக்கு அடைத்தது. அவள் அழுத போது இவளுக்கும் அழுகை வந்தது.

"என் ராம் ரொம்ப நொந்து போயிருக்கார் சுமி... அவருக்கு தைரியம் சொல்லவேண்டிய இந்தச் சமயத்தில் இப்படி எனக்கு வேறு வந்துடுத்து பாரேன்" என்று கலங்கிய

வனை தன் தோளில் சாய்த்துக்கொண்டு "நாம்ப என்ன பண்ண முடியும் சீதா? வேணும்னா நீ இப்படி வரலமேச் சண்டே? பைத்தியம்... இந்த மாதிரி நீ பேசறது எனக்கு வேடிக்கையா இருக்கு" — என்று ஆறுதல் சொன்னாள் சுமித்ரா.

'மழையில் நனைஞ்சதுனாலே ரயிலில் வரும் போது இழுப்பு ஆரம்பிச்சுடுத்து சுமி. மருந்துப் பெட்டி, ஸ்வெட்டர் எல்லாம் அவா வீட்டிலே தங்கிடுத்து... என் புடவை ஒன்றை எடுத்துக் கொடுத்து அவரைப் போர்த் திக்கச் சொன்னேன்... அதுக்கப்புறம் அவரை கவனிக்க முடியாதபடி இந்த வலி வந்துடுத்து... மருந்து சாப்பிட் டாரோ என்னமோ... அவர் முகமே நன்னாயில்லை..." சீதாவின் மனசு வருத்தம் சுமித்ராவுக்கு நன்றாய் புரிந்தது. அவளும் கவனித்திருந்தாள். ராம்குமார் சரியாகவே இல்லை, பாவம், என்ன உபாதையோ?

அன்று மாலை காமு வந்தபோது "அவர் சாதாரணமாய் இருக்காராம்மா? முகம் நன்றாவே யில்லையே. என்கிட்டே மறைக்காதேம்மா..." என்று சீதா கேட்டபோது உண்மை வெளியில் வந்துவிட்டது.

ராம்குமாருக்கு இழுப்பும், இருமலும் அதிகமாகி இருக்காம்! ராத்திரியெல்லாம் இருமல், தூங்கமுடியாமல் இருமல்.

அம்மாவைத் துருவி துருவி உண்மையை வர வழைத்து விட்ட சீதாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இத்தனை வருஷங்கள் அவனுடன் வாழ்ந்துவிட்டாளே அவளுக்கா புரியாது?

அன்று இரவு உணவுடன் ராம்குமார் வந்தபோது, சுமித்ராவின் மாமனார், மாமியார் உடன் இருந்ததால் கண வனிடம் சீதாவால் தனிப்பட்ட முறையில் பேச இயல வில்லை. மேலே ஏறி ஏறி இறங்கிய மார்புக் கட்டும், அவன்



எவ்வளவோ முயன்றும் அடங்காத இருமலும் உபாதை அதிகமாயிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டின.

மறுநாள் காலை காப்பியுடன் வந்த கணவரை அருகில் அமரச் சொல்லி நெற்றியைத் தொட்டுப் பார்த் தாள் சீதா; தொட்ட இடம் சுட்டது.

"என்ன ராம், ஜுரமா? சுடறதே? முகம் ஜிவு ஜிவுனு இருக்கு, என்ன ராம்?" பதறினாள் சீதா.

"சுடவுமில்லை, ஒண்ணுமில்லை, வீணா அலட்டிக் காதே," என்று கையை ஒதுக்க முயன்ற கணவனின் கையைப் பிடித்துக் கொண்டாள் சீதா.

"ம்ஹூம், நீங்க பொய் சொல்றேள். யூ ஆர் நாட ஆல்ரைட்... டாக்டர்கிட்டே காண்பிங்கோ ராம்... ப்ளீஸ்." அவள் கெஞ்சலுக்கு சம்மதித்ததும்தான் ராம்குமாரை வெளியே போக அவள் அனுமதித்தாள்.

அன்று மாலை ராம்குமார் வரவில்லை.

"ஏம்மா, அவர் ஏன் வரலை?"

காமுவால் உடனே பதில் சொல்ல இயலவில்லை.

"ஆயாசமாய் இருக்குனு படுத்துண்டு இருக்கார். தினம் அலையறது ஆகலை..."

அன்று இரவு சீதாவால் நிம்மதியாய் தூங்கமுடிய வில்லை... சற்று கண்ணை மூடினபோதும் ஏதோ பயங்கர கனவு.

மணல், மணல், மணல், கண்ணுக்கெட்டின தூரம் வரையில் மணல். ராம்குமார் முன்னே போகிறான். இவள் மஞ்சவுடன் ஓட்டமும் நடையுமாய் தொடர்கிறாள். எங் கிருந்தோ 'லொள் லொள்' என்ற சப்தம் கேட்கிறது. மெது வாய் கேட்டது. மெல்ல மெல்ல காது ஜவ்வை பிய்க்கிறாற் போல அலறுகிறது. ஓநாய் மாதிரி ஒன்று இவளைத் துரத்து கிறது. சிவந்த கண்கள் கிட்டே வரும்போது ஓநாய் மாதி தயான் சாமா நிற்கிறார்.

'லொள்... லொள்' என்ற சப்தம் மறைந்து 'லொக்... லொக்' என்று கேட்கிறது. பூமியே அதிரும்படி அது என்ன சப்தம்? நெஞ்சை அறுக்கிறாற்போல என்ன ஓலம்? திரும்புகிறாள் சீதா... ராம்குமார் இருமிக் கொண்டிருக்கிறான்... 'லொக்... லொக்' அவளைக் கிடுகிடுக்க வைக்கிறது அந்த சப்தம்.

சீதா விழித்துக்கொண்டு விட்டாள். அவள் உடம்பே ஆடியது; மனசில் சங்கடம்.

மறுநாள் சனிக்கிழமை டாக்டர் வந்தபோது 'வீட்டில் ரெஸ்ட்டாய் இருக்கிறேன் டாக்டர்... ப்ளீஸ் ப்ளீஸ்' என்று கெஞ்சிக் கேட்டு அன்று மாலையே வீட்டுக்குப் போக உத்தரவு வாங்கிவிட்டாள் அவள்.

மகள் வீடு திரும்பியதில் காமுவிற்கு ரொம்ப சந்தோஷம். 'நல்லபடியாய் திரும்பினால் உசிருக்கு உசிர் விடறேன்னு மகமாயியிடம் வேண்டிண்டேன், அவ அனுக்கிரஹம் பண்ணிட்டா' என்று நிம்மதியுற்றாள்.

ஒரு உயிரை மகமாயி பிழைக்கவைத்தால் கோழி வாங்கி அவள் சந்நிதியில் விடுவதைத்தான் உசிருக்கு உசிர் என்று காமாட்சி வேண்டிக் கொண்டாள்.

ஆனால்... உசிருக்கு பதில் உசிர் வேண்டும் என கேட்டுக் கொண்டு எமராஜன் அன்று அவள் வீட்டு வாசற்படியில் நின்றிருந்தது அவளுக்குப் புரியவில்லையே!

## 16

**ரா**ம்குமாரால் சாயவும் முடியவில்லை. படுக்கவும் இயலவில்லை, உட்காரவும் முடியவில்லை. நெஞ்சில் கல்லுருண்டை உருள்வது போன்ற வேதனை. இடது விலா பக்கம் சுரீர் என்று இழுத்து வலிக்கிறதே என்று ஒரு கையால் அந்த இடத்தை அமுக்கிப் பிடித்துக்



கொள்வதற்குள் நடுமார்பு ஓட்டில் அந்த வலி இடம் விட்டு இடம் மாறி, கண்டி இழுத்தது. தோள் பட்டையில் நூறு மனிதர்கள் ஏறி நிற்கிறார்களோ, எலும்புகளெல்லாம் சடசடவென்று ஒடியப் போகின்றனவோ என அவன் அஞ்சும்படியான வலி.

கடந்த சில நாட்களாய் நடந்தவை அத்தனையுமே தன் உடம்புக்கு கொஞ்சமும் ஒத்துக் கொள்ளாதவை என்பது அவன் அறிந்ததுதான்.

ஆனாலும், அவன் என்ன பண்ணுவான்?

என்னவெல்லாமோ சாதிக்கப் போவதாக ஆசைப்பட்டு, குடும்பத்துடன் சொந்த ஊருக்குப் போனானே, அப்போது இப்படியெல்லாம் நடக்கும் என்று அவன் என்ன கண்டான்?

சரி, அப்பாதான் கத்தினார்; உடனடியாக இருந்தபடியே திரும்ப ஊர் கிளம்பினார்கள் என்றால், வழியில் அப்படி ஒரு பிசாசு மழை எதற்காகப் பெய்யவேண்டும்? இல்லை யாரோ சொல்லிக் கொடுத்தாற்போல ஸ்டேஷனுக்கு அரை பர்லாங் இருக்கையில் சேற்றில் டாக்ஸி சக்கரம் ஏன் புதைய வேண்டும்? எதற்காக அப்படி மழையில் தொப்பலாய் நனைந்து, இடம் கிடைக்காத ரயிலில் நடை பாதையில் நின்றுகொண்டாவது பயணம் செய்ய வேண்டும்?

இப்போது நினைத்துப் பார்க்கையில் தங்களை வேண்டுமென்றே யாரோ ஓட, ஓட துரத்துவதாகவே ராம்குமாருக்குத் தோன்றியது.

பதினோரு வருஷங்களாய் மனசெல்லாம் பூரிக்கும் அமைதி வாழ்க்கை வாழ்ந்த என் வாழ்க்கையை மாற்றி அமைக்கவா நந்தினியின் கல்யாண அழைப்பிதழ் வந்தது?

கேட்கக் கூடாத வசவுகளை கேட்க, நிறைமாத கர்ப்பிணியான அன்பு மனைவி அல்லலுற, இப்போது நான் இப்படி அவஸ்தைப்படவா, அந்தத் திருமணத்திற்குப் போக ஆசை எழுந்தது?

ஐயோ, எதற்காக?

சென்னை திரும்பும்போது ரிஸர்வ் செய்யாத காரணத்தால் அன்ரிஸர்வ்ட் கம்பார்ட்மெண்டில் எப்படியோ தொற்றிக்கொண்டார்கள். முதல் வகுப்புக்கு டிக்கெட்டை மாற்றலாமென்றால் ஒரு சீட் கூட காலி இல்லை. பெண்கள் முதல் வகுப்பில் சீதாவையும், மஞ்சுவையும் கெஞ்சிக் கூத்தாடி ஏற்றலாம் என்றால் சீதா அதற்கு இணங்கவில்லை. 'அனுபவிக்கிறது எதுவானாலும் உங்களோடு சேர்ந்துதான் ராம்' என்று ஆணித்தரமாய் மறுத்து விட்டாளே!

நிறைமாசப் பிள்ளைத்தாய்ச்சியாக இருந்ததால் முணுமுணுத்துக்கொண்டே சிலர் ஒதுங்க அவளுக்கும், பெண்ணுக்கும் உட்காரவாவது இடம் கிடைத்தது?

ராம்குமாருக்கு?

ஜன்னலுக்கு நேராக பெட்டியைப் போட்டுக் கொண்டு அதன்மேல் அவன் உட்கார்ந்தான்.

சாதாரணமாய் தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டாலே, சில சமயம் இழுப்பு வந்துவிடும். அன்று மழைத் தண்ணீரில் நல்ல அபிஷேகம். போதாத குறைக்கு ஜன்னலின் வழியாக வீசிய ஊதற் காற்று. அவனுக்கு எதிராக இருந்த ஒரு ஜன்னலை வேண்டுமானால் அவனால் மூட முடிந்தது. ஆனால் மற்றவைகள்? முதல் வகுப்பு என்றால் இஷ்டப்படி நடக்கலாம். அது மூன்றாம் வகுப்பில்லையா?

மாலை ஆவதற்குள் மூக்குத் துவாரங்கள் தூசியாலும் அதீதமான காற்றாலும் அடைந்துபோக



தொண்டை கரகரத்துக் கொண்டு இருமல் எழுந்துவிட்டது. "மழையில் நனைஞ்சிருக்கேனே, இப்போ காத்துலே உட்கார்ந்திருக்கேனே" என்று தவித்தாள் சீதா.

காலையிலேயே ஸ்வெட்டரையும், கம்பளிப் போர்வையையும் கணவனுக்கு எடுத்துக் கொடுப்போம் என்று எண்ணியவளுக்கு அதிர்ச்சிதான். இந்தூரிலிருந்து கிளம்பிய மனநிலையில் படுக்கையை அங்கே விட்டு விட்டார்கள். அதில்தானே ஸ்வெட்டர் போர்வை இருந்தன?

'மருந்தாவது சாப்பிடுங்கள்' என்றவளுக்கு மீண்டும் மண்டையில் அடி. அந்தப் பெட்டி நெற்றிக்கு இட்டுக் கொள்ளும் சாமான்களைக் கொண்ட சின்னப் பிளாஸ்டிக்பை எல்லாம் இந்தூரிலேயே விட்டுவிட்டது தெரிந்தது.

அவள்தான் என்ன செய்வாள்?

இருப்பதோ ஓடும் ரயிலில்.

நிலைமையோ இப்படி.

மேற்கொண்டு அவள் கவலைப்படுவதற்கு இடம் கொடாமல் அவளுக்கே வயிற்றில் வலி தோன்றிவிட்டது.

சென்னைக்கு வந்து இறங்குவதற்குள் நெஞ்சில் கபம் பாறையாய் கட்டிக்கொண்டு விட்டது ராம்குமாருக்கு நன்றாய் புரிந்துவிட்டது. என்றாலும் அவன் தன்னைப் பற்றி அந்த நிமிடம் கவலைப்படவில்லை. அவன் சிந்தனை பூராவும் சீதாவிடமே இருந்தது.

சீதாவைப் பற்றிக் கவலை இல்லை; குழந்தையைப் பற்றி எட்டு மணி நேரம் போனால்தான் தெரியும் என்று அறிந்ததும்தான் தன் உடம்பின் உபாதை அவனுக்கு உறைத்தது. சீதாவை பாதுகாக்க சுமித்ரா வந்துவிடவே மஞ்சுவுடன் அவன் வீட்டுக்குப் போனான்.

முடிவு எப்படி இருக்குமோ என்று பயந்து கொண்டே இருந்ததால் தன் உடல் நிலைக்கும் உடனடியாக மருந்து தேவை என்பதை ஏனோ ராம்குமார் மறந்து போனான்.

அன்று இரவு படுக்க முடியாமல் இருமல் வாட்டிய போது உடலை அனத்தத் தொடங்கியபோது எழுந்து தெர்மா மீட்டரை வைத்துப் பார்த்தான் நூறு டிகிரி ஜுரம் இருந்ததைக் கண்டதும் அவனுக்கு தன் மேலேயே கோபம் எழுந்தது. 'உயிருக்கு உயிரான சீதாவுக்கு உடம்பு சரியில்லை; அவளை நிம்மதியாய் கவனிக்கக்கூட விடாமல் இந்த பாழாய் போன ஆஸ்துமா படுத்துகிறதே' என்று வருந்தினான். ஜுரம் குறைய ஒரு மெட்டாஸினும், இழுப்புக்கு ஒரு ஸெடனாலும் போட்டுக்கொண்டு இரவைக் கழித்தான்.

புதன்கிழமை ஜுரம் தொண்ணூற்று ஒன்பது இருந்ததால் மூன்று ஸல்ஃபா மாத்திரைகளை தானே போட்டுக் கொண்டான். அடிக்கடி நெஞ்சில் கபம் கட்டி ஜுரம் வந்து பழக்கமுள்ளவனாதலால், இதற்கென்னத் துக்கு டாக்டர் என்ற நினைப்பில் தனக்குத் தெரிந்த வைத்தியத்தைச் செய்து கொண்டான்.

சாதாரண நெஞ்சுக்கட்டு என்று கணக்குப் போட்டது தவறு என்று அவனுக்கு வெள்ளிக்கிழமைக்குள் தெரிந்து போயிற்று. உடம்பில் முக்கியமாய் நெஞ்சில் நெருடலாய் வலி. ஓய்ந்து போகும்படி ஒரு ஆயாசம். எதனால் இப்படி? அவனுக்குப் புரியவில்லை.

சீதாவிடமிருந்து தன் உடல்நிலையை மறைப்பது சுலபம். ஏனெனில் அவள் அருகில் இல்லை. ஆனால் காமாட்சியிடம் எப்படி மறைப்பது?

இரண்டாம் நாளே அவனது சிவந்த முகத்தையும், கலங்கின கண்களையும், குத்திப் பிடுங்கும் இருமலையும் பார்த்து காமு கேட்டுவிட்டாள்.



"ஜுரமா?"

'ஆமாம்' என்பது போல தலையை ஆட்டிய ராம் குமார் 'சீதாவுக்குத் தெரிய வேண்டாம்மா' என்று கேட்டுக் கொண்டதால் அவனுடைய தாபம் புரிந்தவளாய் சீதாவிடம் எதுவுமே சொல்லவில்லை. ஆனால் ராம் குமாரை மட்டும் 'டாக்டரிடம் போங்கள்' என்று விடாமல் நச்சரித்தாள்.

வெள்ளிக்கிழமை சீதாவைப் பார்த்துவிட்டு டாக்டரிடம் போனான் ராம்குமார். அவன் அதிருஷ்டம் அவர் வெளியில் ஏதோ அர்ஜெண்ட் கேஸ் பார்க்கப் போய் விட்டார். வேறு புதிய டாக்டரைத் தேடிப்போக விருப்ப மில்லாத ராம்குமார் வீட்டுக்குத் திரும்பி வந்து தன் வைத்தியத்தையே தொடர்ந்தான்.

ரொம்ப தன் உடம்பைப் பற்றி இப்போது பாராட்டினால் சீதாவிற்கு முழுமையான கவனத்தைக் கொடுக்க முடியாது என்று தன் உடல் நிலையை அலட்சியப் படுத்திய ராம்குமார் பெரிய தவறு செய்து விட்டான்.

சீதாமேல் அவன் வைத்திருந்த கண்மூடித்தன மான காதலே, அன்பே, பாசமே அவன் உடல்நிலை மோசமாக உதவி பண்ணியது.

நூற்றிஒன்று டிகிரி ஜுரம் அடித்ததையும் பொருட் படுத்தாமல் சீதாவைத் தானே ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைக்கப் போனான்.

"நீங்க எதுக்காக வரணும், ராம்? நான் இல்லையா? யூ டோண்ட் லுக் வெல் அட் ஆல்" என்று தனியாய் இருக்கும்போது சுமித்ரா கண்டித்த சமயத்தில் இவன் முடியாமல் சிரித்தான்.

"சீதாவுக்கு இப்படி நேர்ந்ததே என் அஜாக்கிரதை யால்தானே, சுமி. அவளை வீட்டில் பத்திரமாய் சேர்த்தால்

அது எனக்கு எவ்வளவு நிம்மதியைத் தரும் தெரியுமா?" அவன் பேசப் பேச அவன் உள்ளம் சுமித்ராவுக்கு நன்றாய் புரியவே, 'என்ன, நல்ல இதயம் கொண்ட கணவர் இவர்!' என்றே வியந்தாள். அதே சமயத்தில் தன் கணவன் விசு ஊரில் இல்லையே என்பதையும் நினைத்து நொந்தாள். அவசர வேலைக்காக முதல்நாள் பெங்களூருக்குப் போயிருக்கிறான் விசு. மறுநாள் வந்துவிடுவான். 'இப்போது அவர் இருந்தால் ராம்குமாரை வலுக்கட்டாயம் பண்ணி டாக்டரிடம் கூட்டிப் போவாரே! இந்தச் சமயத்தில் இல்லாமல் போய் விட்டாரே!' என்றும் தனக்குத்தானே துக்கித்ததும் அதற்காகவே.

கணவனைத் தொட்டுப் பார்த்து அவன் நிஜ நிலையை சீதா புரிந்து கொண்டபோது அவளுக்கு அழுகையே வந்தது.

"என்னை கவனிக்கறேன்னு சொல்லி உங்க உடம்பை அலட்சியப்படுத்திட்டேனே. என்ன நியாயம் இது ராம்?" என்று விசித்தவளை அணைத்துக் கொண்டு "நாளைக்கு கார்த்தாலே முதல் வேலையாய் டாக்டர் கிட்டே போறேன். ப்ராமிஸ் சீதா. நீ அழாதேம்மா. நீ என் பக்கத்திலிருக்கும்போது இனிமே எனக்கு என்ன?" என்று நிம்மதியுடன் அவன் பேசினான்.

பத்து மணிக்கு அவர்கள் உறங்கிவிட்டார்கள். அரை மணிகூட ஆகியிருக்காது. திடீரென்று மாரில் எழுந்த வலி தாங்காது கண் முழித்தான் ராம்குமார். உட்காரவும் முடியாமல், படுக்கவும் முடியாமல் தவிக்க ஆரம்பித்தது அப்போதுதான்.

பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டு மணி வரை இருந்தவனுக்கு நெஞ்சு வலி அதிகமாகிப் போய் மூச்சு விடுவதற்குத் திணற ஆரம்பித்ததும் லேசாக பயந்து போனான்.

"சீதா... சீதா" என்று அருகில் படுத்திருந்த மனைவியை எழுப்ப மனமில்லாமலேயே தொட்டு எழுப்பினான்.



"எனக்கு மாரில் வலி இருக்கு சீதா... மூச்சு விடறதும் சிரமமாய் இருக்கு..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவன் பேசியதும் பதறிப் போனாள் சீதா. ஒரு கணம்கூட தாமதிக்காமல் அம்மாவை எழுப்பி ஹாட் வாட்டர் பாகில் சுடுநீர் போட்டு எடுத்து வரச் சொல்லி விட்டு ராம்குமாரை சாய்ந்து கொள்ள ஏதுவாய் இரண்டு தலைகாணிகளை அண்டக் கொடுத்தாள். வெண்டோலின் என்ற ஸ்பிரேயை எடுத்துக் கொடுத்து வாயினுள் தெளித்துக் கொள்ள உதவி பண்ணினாள்.

என்ன செய்தும் சிறிது நேரத்தில் ராம்குமாரின் நகக்கணுக்கள் நீலம் பாய்ந்து, அவனுக்கு குளிர் ஜுரம் மாதிரி நடுக்கவே, சீதாவின் சின்ன இதயத்தை இரும்பு கரமொன்று பிசைவது போன்ற பயம் எழ, எதிர் வீட்டுக்கு ஓடி சுமித்ராவுக்கு போன் செய்தாள்.

சுமித்ரா வரும்போது தங்கள் தெருவிலிருந்து ஒரு டாக்டரை கையோடு கூட்டிக்கொண்டே வந்தாள்.

"டபிள் நிமோனியா மாதிரி இருக்கிறது. எதனால் இவ்வளவு தூரம் கவனிக்காமல் விட்டீர்கள்? உடனே ஹாஸ்பிடலில் சேர்க்க வேண்டும். ஆக்ஸிஜன், தொபி கொடுக்க வேண்டும் சீக்கிரம்..."

போட்டது போட்டபடி இருக்க அனைவரும் கிளம்பினார்கள்.

எந்த ஆஸ்பத்திரிக்குப் போவது? அவர்களுக்கு யாரையும் தெரியவில்லையே? வந்த டாக்டரே ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோம் பெயரைச் சொல்லி அங்கு போகச் சொன்னார்.

அங்கே போய் தூங்கி வழிந்த ரிஸப்ஷனிஸ்டை எழுப்பி, டாக்டரை அழைத்து ரூம் கொடுத்து, ராம்குமார் அட்மிட் ஆவதற்குள் மணி ஐந்தைத் தொட்டுவிட்டது.

அதோடு விட்டதா? இன்னும் இன்னும் சோதனை.

சாதாரண நர்ஸிங் ஹோமான அங்கு ஆக்ஸிஜன் ஸிலிண்டர் ஸ்டாக் இல்லை என்றபோது சுமித்ராவுக்கே துக்கம் பீரிட்டது.

"ஸ்டாக் இல்லையா? உடனே, வேறு எங்காவது வாங்க முடியாதா?" அவள் பதட்டம் அந்த சிப்பந்திக்கு ஏது?

"ஒண்ணு இருந்திச்சு. அதை வேறு பார்ட்டி நேத்து வாங்கிட்டு போயிட்டாங்க — இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை.. லீவ்.. நாளைக்குத்தான் இனிமே.."

வெளியில் வேறு இடங்களில் முயற்சி செய்வதாகச் சொன்ன டாக்டர் தனக்குத் தெரிந்த விதத்தில் ராம் குமாருக்கு வைத்தியத்தைத் தொடங்கினார்.

காலை எட்டு மணி பிளேனில் ஊர் திரும்பிய விஸ்வநாத், டிரைவர் மூலம் விஷயம் கேட்டு, நேரே நர்ஸிங் ஹோமிற்கே வந்தான். ராம்குமாரின் நிலைமையைப் பார்த்தான். கோபம் சீறிக்கொண்டு எழ சுமித்ராவிடம் கத்தினான்.

"பெரிய ஹாஸ்பிடல்ஸ் எவ்வளவு இருக்கு. உங்களுக்கு இந்த இடத்தைத் தவிர வேறு இடம் கிடைக்கலை?" என்று உறுமிவிட்டு உடனடியாக ராம்குமாரை வேறு உயர்ந்த ஆஸ்பத்திரிக்கு மாற்றினான்.

நகரின் சிறந்த அந்த வைத்தியசாலையில் இன்டென்ஸிவ் கேர் தனி அறையில் சேர்க்கப்பட்ட ராம் குமாருக்கு ஆக்ஸிஜன் தெரபி முதலியன விரைவிலேயே கொடுக்கப்பட்டன.

நான்கு டாக்டர்கள் மன்றாடினார்கள்.



"காலம் கடந்த நிலையில் இங்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆக்ஸிஜன் இல்லாமல் லங்ஸ் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டன. எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்.." என்று டாக்டர் விசுவிடம் கூறியபோது அவள் உள்ளம் மரத்துப் போயிற்று.

நகக் கணுவில் கண்ட நீலம் இப்போது நகம் பூராவும் பரவி விட்டது.

பெனிஸிலின் டெட்ராஸைக்ளின் ஊசிகள், நெபுலின் இன்ட்ராவீனஸ் ஊசி, அது, இது என்று நான்கு மணி நேரங்களுக்கு ஒருமுறை மருந்துகள் உள்ளே போய்க் கொண்டே இருந்தன.

என்ன போய் என்ன?

மாலை ஐந்துமணி இருக்கும். தன் மனசில் என்ன தோன்றியதோ, சீதாவை அருகில் அழைத்தான் ராம்குமார்.

"உன்னை மனைவியாக எனக்கு கொடுத்ததுக்கு கடவுளுக்கு நான் ரொம்ப நன்றி சொல்றேன் சீதா.. என் வாழ்க்கையிலே வீசிய தென்றல் நீ.. உன்னை இப்படி விட்டுட்டு போவதற்காக என்னை மன்னிச்சுடு சீதா.." என்று திக்கித் திக்கிப் பேசினான்.

கதறவில்லை சீதா. ஹோ என்று கதறவில்லை. மாலை மாலையாய் கண்ணீர் வழிய கணவன் முகத்தோடு முகம் சேர்த்து அமர்ந்துவிட்டாள்.

அடுத்த கால் மணிக்குள் ராம்குமாருக்கு நினைவு தப்பிவிட்டது.

வைத்தியத் துறையில் சிறந்த டாக்டர்கள் சுற்றி நின்று என்னென்னவோ செய்தும் மாலை ஆறு மணிக்கு சீதாவின் அன்புக் கணவன் ராம்குமாரின் உயிர் பிரிந்தது.

ஆர்டிபிஷியல் ரெஸ்பிரேஷன் கொடுக்க மார்புக் கூட்டை டாக்டர்கள் பத்து நிமிஷத்துக்கும் மேல் பிசைந்து கொடுத்ததுதான் மிச்சம்.

ஒன்றுக்கும் பலன் இல்லை.

அன்று-1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் முப்பதாம் தேதி. பதினொரு வருடங்கள் முன்பு மூர்த்தி சொன்ன 'அவள் எப்படி வாழப்போகிறாள்?' என்ற சாபம் பலித்து அவன் நாக்கு கரி நாக்கு என்பதை நிரூபித்தது.

## 17

ராமகுமாருக்கு நினைவு தப்பி கொஞ்சம் கொஞ்சமாய் மூச்சு அடங்கத் தொடங்கி, நாடித்துடிப்பும், இருதய துடிப்பும் வேகத்தில் குறைந்துகொண்டே போனதும், பதறிக் கொண்டு டாக்டர்கள் கோரமின் இன்ஜெக்ஷனை ஒருவர் செலுத்த, மற்றவர் இருதயத்தை கையால் பிசைந்து கொடுத்து செயற்கையாய் சுவாசத்தை உண்டு பண்ண முயற்சிக்கும் போதே நிலைமையைப் புரிந்துகொண்ட விஸ்வநாத் காமாட்சியின் கைகளைப் பிடித்து மெல்ல அறையிலிருந்து வெளியே கூட்டி வந்துவிட்டான்.

"என்ன விசு?... என்ன விசு? பயப்பட ஒண்ணும் இல்லையே?... விசு என் தேகம் ஆடறதுப்பா... என் நெஞ்சு வலிக்கிறதுப்பா... என் மாப்பிள்ளைக்கு பயப்படும்படி ஒண்ணும் இல்லையே?... விசு... டாக்டர் என்ன பண்ணறார் விசு?... மார்பை பிசைஞ்சு விடறாரே? ஏன் விசு?... விசு... பயப்பட ஒண்ணும் இல்லையே?..."

அடிக்குரலில், மனசின் பயமெல்லாம் வார்த்தைகளில் தெறிக்க, கண்களில் தாரையாய் வழிந்த நீருடன்



விசுவிடமிருந்து ஒரு நல்ல வார்த்தை வராதா என்று புலம்பினாள் காமு.

உயிர் பிரிந்து போய்விட்டது தெரிந்துங்கூட தங்கள் திறமையில் நம்பிக்கையில்லாவிட்டாலும், அதிருஷ்ட வசமாய் மீண்டும் உயிர்த் துடிப்பு தொடங்காதா என்று வைத்தியர்கள் தவித்துக் கொண்டிருந்தது பேதை காமுவுக்கு என்ன புரியப் போகிறது?

"என் சீதாவோட மஞ்சள் குங்குமத்துக்கு ஒண்ணும் நேரக்கூடாதே... கருமாரித் தாயே... கபாலீஸ்வரா... கற்பகாம்பிகே... என் வயித்திலே பாலை வாருடிம்மா... பரமேஸ்வரா... என் உயிரை எடுத்துக்கோ... என் மாப்பிள்ளையை முழுசா கொடுத்துடு..."

மனசின் வேகம் தாங்காமல் காமாட்சி அரற்றுவதற்கு துளியும் பலன் இல்லை என்று உணர்ந்ததாலோ என்னவோ, விசுவின் கண்களிலும் கண்ணீர் பெருகியது.

"விசு... உள்ளே போய் பார்க்கலாமா? விசு... என் சீதாவை தனியே விட்டுட்டேனே... பயப்பட ஒண்ணும் இல்லையே—"

வாயில் முந்தானையை சுருட்டி பந்தாக அடைத்துக் கொண்ட காமு தவித்தாள்.

என்ன சொல்லி அவளுக்குப் புரிய வைப்பது?

"மாமி நீங்க பெரியவா — நீங்களே நிலை குலைஞ்சு போனா சின்னப் பெண் சீதாவுக்கு யார் சமாதானம் சொல்லுவா?... தேத்திக்கோங்கோ... மாமி விவேகமாயிருக்கத் தெரிஞ்ச நீங்க இப்படி பதறினா எப்படி மாமி? தைரியமா இருங்கோ."

விசு பேசிக் கொண்டிருக்கையிலேயே அறைக்குள் சட்டென்று சலசலப்பு.

வெளிறிப்போன முகத்துடன் தடதடவென்று ஓடி வந்தாள் சுமித்ரா.

''மாமீ'' நெஞ்சு விரிய விசும்பினவள் காமாட்சியை இறுக அணைத்துக் கொண்டாள்.

"மாமி... மாமி" அவள் குரல் உடைந்து அழுகை காமுவின் தோள்பட்டைக் குழியில் எதிரொலித்தது.

அவளைத் தொடர்ந்து வந்த டாக்டர் ஒரு பெரு மூச்சு விட்டு தலையை இப்படியும் அப்படியும் ஆட்டி 'எங்களால் ஆனவரை பார்த்துவிட்டோம்' என்பது போல பார்க்கவும் 'ஹா' என்று விஷயம் புரிந்து ஓலமிட்ட காமு, நின்ற நிலையிலேயே சுமியின் அணைப்புக்குள்ளேயே மயங்கி, தரையில் சாய்ந்தாள். "சுமி... சீதாவை தனியா விட்டுட்டயே... நீ அவகிட்டே போ..."

மனைவியை உள்ளே திருப்பித் தள்ளிய விசு, காமுவை தாங்கிக் கொண்டான்.

சீதா!

சீதா — அவள் எந்த நிலையில் இருந்தாள்? எப்படித் தாங்கிக் கொண்டாள்? மேலே செருகிக் கொண்டு போன கண்களை சிரமப்பட்டுத் திருப்பி மூச்சுவிட முடியா மல் தவித்த அந்த நேரத்தில், அன்பு மனைவியை அருகில் அழைத்து அவள் முகத்தை உற்று நோக்கி, உலகம் பூராவும் திரட்டி எடுத்த அன்பு தோய்ந்த நெஞ்சத்துடன் 'உன்னை மனைவியாக எனக்கு கொடுத்ததற்கு கடவுளுக்கு நான் ரொம்ப நன்றி சொல்கிறேன் சீதா... என் வாழ்க்கையில் வீசின தென்றல் நீ. உன்னை இப்படி விட்டுட்டு போவதற் காக என்னை மன்னிச்சுடு சீதா' என்று திக்கித் திக்கி பேசின அந்த கூணத்தில கணவன் தன்னை விட்டு மறையப் போவது சீதாவுக்குப் புரிந்து போனது.



சுத்தவில்லை, ஹோ என்று கதறவில்லை. மாலை மாலையாய் கண்ணீர் வழிய அவன் முகத்தோடு முகம் சேர்த்து அமர்ந்துவிட்டாள்.

தன் உயிரான, அன்பான கணவன் தன்னை விட்டுப் பிரியப்போகிறான். இந்தக் கணத்தில் அவனுக்கு தன் அன்பு தேவை ஆறுதல் தேவை என்பது அவளுடைய மனசுக்குப் புரிந்து போனதால் அக்கம் பக்கத்திலிருக்கும் வைத்தியர், நர்ஸ், அன்னியர்களை மறந்தாள். தன் சூழ் நிலையை மறந்தாள். தன்னை மறந்தாள்.

ராம்குமாரின் கன்னத்தோடு கன்னம் வைத்து, அவன் காதுக்குள் "உங்களை கணவனா அடைஞ்சதில் நான் பெருமைப் படறேன். ராம்... கடவுளுக்கு நான் நன்றி சொல்றேன் ராம்... எத்தனை ஜன்மம் எடுத்தாலும் நீங்களே எனக்கு கணவனா அமையணும்னு மனசார வேண்டிக் கிறேன் ராம்... ராம்... ஐ... லவ்... யூ... ஐ... லவ் யூ வித் ஆல் மை ஹார்ட்... ராம்... ராம்..." என்று தன் நெஞ்சத்தில் காதலையெல்லாம் கலந்து பேசினாள்.

பெரிய கண்கள் அருவியாய் நீரைக் கொட்டின போதும் அளவற்ற காதலுடன் சீதா பேசின வார்த்தை களைக் கேட்ட ராம்குமாரின் முகத்தில் திடீரென்று வலியையும் மீறிக் கொண்டு சந்தோஷம் தெரிந்தது. அணையப் போகும் பந்தம் ஒரே ஒரு முறை ஜ்வாலையை கக்கி விட்டு, அமுங்குவது போல அவன் அழகான முகம் சற்றே தெளிந்து கண்கள் மலர்ந்த அதே வினாடியில் 'ஐ லவ் யூ ராம்...' என்ற சீதாவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே தன் நினைவை இழந்தான் ராம்குமார்.

கணவனுக்கு பிரக்ஞை தப்பிவிட்டது என்ற உணர்வு கூட சீதாவுக்கு இல்லை.

இறக்கப் போகும் என் ராம்குமாருக்கு அமைதி தேவை; சந்தோஷம் தேவை என்று மட்டுமே உணர்ந்த வளாய் அவன் முகத்தை ஆரத் தழுவிக்கொண்டு "உங்களை

நினைத்து நான் பெருமைப் படறேன் ராம்... ஐ லவ் யூ... ராம்..." என்றே திருப்பித் திருப்பிச் சொன்னாள்.

ராம்குமாரின் சுவாசம் நின்று போனதோ, டாக்டர் செயற்கை முறையில் இருதயத்தை அமுக்குவதோ, தாய் காமுவை கைத்தாங்கலாய் விசு அறையை விட்டு வெளியே அழைத்துப் போனதோ, சில நிமிஷங்களில் சுமித்ரா துடித்துக் கொண்டு ஓடினதோ, டாக்டர் பிரயோஜனமில்லை என்று தலையை ஆட்டினதோ, ஒன்றுமே புரியாத ஒரு நிலையிலேயே இருந்தாள் சீதா.

வைத்தியர்கள் அறையைவிட்டு வெளியே போய் விட்டார்கள்.

மயான அமைதி நிலவிய அந்த நிமிஷத்தில் தன் அருமைக் கணவனின் ஆவி பிரிந்து போய் பல நிமிஷங்கள் ஆகிவிட்டன என்றுகூட உணராமல் 'ஐ லவ் யூ- ராம்' என்று முனகிய வண்ணம் அமர்ந்திருந்த தோழியைக் கண்ட சுமித்ராவின் நெஞ்சு தூள் தூளாகச் சிதறிப் போனது.

முப்பத்திரெண்டு பிராயம்கூட ஆகாமல், குழந்தைத் தனமாய் வெகுளியாய் இப்போது காட்சி அளிக்கும் என் சீதாவின் வாழ்வு அஸ்தமனமாகி விட்டதா!

குமுறி வெடித்துக் கொண்டு எழுந்த துக்கத்தைக் கடித்து விழுங்கி அடக்கிக் கொண்டாள் சுமித்ரா.

'கடவுளே! என் சீதாவைத் தேற்ற எனக்குத் தெம்பு கொடு' என்று பிரார்த்தித்தவளாய் மெல்ல சீதாவின் அருகில் சென்று அவள் தோளில் கையை வைத்தாள் சுமித்ரா.

சீதா திரும்பவில்லை.

மூடிக்கிடந்த ராம்குமாரின் முகத்தில் அவள் எதைக் கண்டாளோ, தன் பெரிய கண்களால் கணவனின் முகத்தையே உற்று நோக்கியவள் மறுபடியும் 'ஐ லவ் யூ



ராம்' என்று கூறிய போது, சுமித்ராவின் வைராக்கியம் உருகிப் போயிற்று.

'சீதா...' என்று பெரிதாய் கதறிக் கொண்டு சீதாவின் முகத்தைத் திருப்பி தன் மார்பில் புதைத்துக்கொண்டு அலறி அழுதாள் சுமித்ரா.

மயக்கம் தெளிந்துபோன காமுவுக்கு விஷயம் புரிந்து போயிற்று.

'ஐயோ, ஐயோ...' என்று குமுறியவளுள் 'சீதா எங்கே? சீதா எப்படித் தாங்குவாள?' என்ற கேள்விகள் எழ "என் கண்ணே சீதா" என்று கூவியவண்ணம் அவளும் அறைக்குள் ஓடிவந்து சீதாவை அணைத்துக்கொண்டு 'பட்பட்' டென்று தன் தலையில் அடித்துக்கொண்டாள்.

சீதா என்ன செய்தாள்? என்ன நினைத்தாள்? எப்படி சிதைந்து போனாள்?

சூன்யத்தில் கலந்துவிட்ட கணவனைத் தேடுவது போல இறுகிப் போனாள் சீதா.

பத்து நிமிஷத்திற்குள் ராம்குமாரின் சடலத்தை வீட்டிற்கு எடுத்துப்போகத் தயாராகி விட்டான் விசு.

தெரிந்த ஆஸ்பத்திரி.

பணம் பேசியது.

விரைவாக காரியங்கள் நடக்கக் கேட்பானேன்?

ஒரு வார்த்தைகூட பேசாமல், ஒரு தரம் கூட வாய் விட்டுப் புலம்பாமல் நெஞ்சைக் கரைத்து கண்கள் நீராகக் கொட்ட வந்த சீதா, அம்பாஸிடர் காரை கொண்டு நிறுத்தி ராம்குமாரின் சடலத்தை பின் சீட்டில் வைக்க விசு முனைந்தபோது "நானும் பின்னாலேயே உட்கார்ந்துக்கறேன்... என் மடியில் அவர் தலையை வைச்சி படுக்க வையுங்கோ..." என்று அமைதியான குரலில் சொன்ன போது "கடவுளே... தெய்வமே... முருகா" என்று கதறிய காமு

மீண்டும் மூர்ச்சையானாள். 'சீதா' என்று கூவி அழுதாள் சுமி. ஆண் மகனான விஸ்வநாதனும் அடக்க மாட்டாமல் அழுது விட்டான்.

வீடு வந்தது.

பண்ண வேண்டிய அத்தியாவசியமான ஒருசில காரியங்களை மட்டும் கோபாலன், விசுவின் பெற்றோர் சொன்னவைகளை மட்டும் செய்துவிட்டு, அன்று இரவு ஒன்பது மணி அடிப்பதற்குள்ளேயே ராம்குமாரின் இறுதி யாத்திரையும் புறப்பட்டு விட்டது.

யாரைக் கேட்க வேண்டும்? எவரைக் கேட்க வேண்டும்?

இல்லை, கேட்பதற்குத்தான் அந்த வீட்டில் எந்த ஆண் மகன் இருக்கிறான்?

வைதீகமாய்ச் செய்கிறேன், ஆசாரமாய் குலத்தின் வழியைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லிக் கொண்டு கூத்தடித்து பிண ஊர்வலத்தைத் தொடங்காமல், கச்சிதமாய் வெகுவாக அவசியம் என்ற ஓரிரு காரியங்களை மட்டும் செய்துவிட்டு ராம்குமாரைத் தூக்கிவிட்டார்கள்.

தெரிந்த நண்பனின் வேன் ஒன்றை எடுத்து வந்திருந்தான் விசு.

ஊர்வலமாய் எடுத்துப் போகிறேன் என்று சொல்லி ஒன்னரை நாழிகை இழுத்தடிக்காமல், வேனில் சடலத்தை ஏற்றி, இன்னும் இருட்டுவதற்குள் ஆயிற்றென்று மேற்கொண்டு காரியத்தை கவனிக்க கோபாலனும், விசுவும் முன் நின்றார்கள்.

புதுசு கட்டி, ரோஜா மாலைகளணிந்து அமைதியாய் பண்ணகைத்துக் கொண்டிருந்த ராம்குமாரை வேனின் பின் பக்கம் படுக்க வைத்தார்கள்.



தெரு மனிதர்களும், ஓரிரு ஆபீஸ் நண்பர்களும், சில உறவினர்களும் சூழ்ந்திருந்த அந்த சின்ன கூட்டத்தின் சோகம் தாங்க முடியாததாகிப் போயிற்று.

முகத்திலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு காமுவும், மற்றவரும் அழுத இந்த நாழிகைவரை கல்லாய் ஜடமாய் இறுகிப் போய் கணவன் அருகிலேயே அமர்ந்து கொண்டு இருந்த சீதாவுக்கு அவன் சடலத்தை அவனிடமிருந்து பிரித்து வண்டியில் ஏற்றி பின் கதவை மூடி பூட்டினதும் எங்கிருந்தோ ஒரு ஆவேசம் வந்தது.

வராந்தாவில் நின்றவள், படிகளைக் கடந்து புயலென ஓடினாள். பின் கதவுகளை மூடின விசுவின் கைகளிலிருந்து சாவியை இழுத்துப் பறித்தாள்.

கைகள் துடித்த துடிப்பில் சரியான சாவியைப் பொறுத்தி கதவைத் திறக்க இயலாதவளாய் தவித்து பரிதவித்துத் திறந்தாள்.

ராம்குமாரின் சடலத்தின் மேல் விழுந்தாள். அவனின் குளிர்ந்து போயிருந்த முகத்தில் முத்தமிட்டு "ராம் என்னை விட்டுப் போகாதீங்கோ ராம்... நீங்க இல்லாம என்னால இருக்க முடியாது ராம்... ராம்..." என்று பெரியதாய் கூவியவள், பைத்தியக்காரி போல ஓலமிட்டுக் கொண்டு அடி வயிற்றிலிருந்து கதறிக் கதறி அழுதாள்.

அத்தனை மணி நேரங்களாய் எங்கோ, அடங்கிக் கிடந்த துக்கம் பீரிட ரத்தக் கண்ணீர் வடித்துப் புலம்பினாள்.

"ராம் — ராம்" அந்த இரவைக் கிழித்துக் கொண்டு அழுத சீதாவை விசுவும், சுமித்திராவும் வலுக்கட்டாயமாக ராம்குமாரிடமிருந்து பிரித்து, மீண்டும் கதவை மூடினார்கள்.

"என் ராம் இல்லாமல் என்னாலே இருக்க முடியாது... ராம்... ராம்...!"

சீதா கதறுகிறாள், துடிக்கிறாள் என்பதற்காக ராம்குமாரின் இறுதி யாத்திரை நிற்க முடியுமா?

அது கிளம்பி விட்டது.

உயிருக்குயிரான கணவனின் உடலைக் கூட இனி தன்னால் பார்க்க இயலாது என்று உணர்ந்த சீதா, வண்டி கண்ணை விட்டு மறைந்ததும், மயங்கி விழுந்தாள்.

பிறகு?

அம்மம்மா... சீதாவின் வேதனையையோ இல்லை, அங்கு பரவிக் கிடந்த சூழ்நிலையையோ எழுத எனக்கு நெஞ்சில் வலிமை இல்லை. என் பேனாவிற்கும் சக்தி இல்லையே!

## 18

சீதாவின் வாழ்வு அஸ்தமனமாகி அன்றோடு ஐந்து வாரங்கள் பூர்த்தியாகி விட்டன.

ராம்குமார் மறைந்த பிறகு சாயங்காலம் நெருங்க நெருங்க அடிவயிற்றில் எழும் தாங்க முடியாத வேதனை அன்றும் சீதாவுக்கு எழவே செய்தது.

ஐந்து வாரங்களுக்கு முன் இதே ஞாயிற்றுக்கிழமை இதே நேரத்தில் என் ராம் உயிரோடு இருந்தாரே... அன்று கிட்டத்தட்ட இந்த நேரத்தில்தானே அவருக்கு நினைவு தப்பியது? மூச்சு பிரியும் நேரத்தில் நினைவு இருந்திருந்தால் என்னென்ன சொல்ல ஆசைப்பட்டிருப்பார்? மூச்சு இளைத்து, இளைத்து இறந்தாரா? இல்லை ஓரளவுக்காவது வலி தெரியாமல் இறந்தாரா?



ராம்! என்னை விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனசு வந்தது ராம்?

ஒரு நிமிஷம் கூட உங்களைப் பிரிந்து வாழ முடியாது என்று நம்பிய நான் எப்படி ராம் இப்போது இத்தனை நாட்கள் வாழ்ந்துவிட்டேன்? எனக்கு எப்படி இது சாத்தியமாயிற்று ராம்!

நாழி ஆக ஆக நித்தமும் ஆயிரமாயிரம் முறைகள் தன் நெஞ்சை துளைத்து எடுக்கும் கேள்விகள் அன்றும் தலை விரித்தாட மனம் குன்றிப் போனாள் சீதா.

முதல் நாள் ராம்குமாரின் சடலத்தை எடுத்துக் கொண்டு போனதும் மயங்கி விழுந்தவள்தான். அன்று இரவுபூராவும் சரியாகத் தெளிவு பெறவேயில்லை.

யாரோ வலுக்கட்டாயமாய் வாயைத் திறந்து உள்ளே செலுத்தும் ஒரு வாய்ப் பால், அல்லது சோடா கொடுக்கும் உணர்வில் லேசாய் கண்ணை விழிப்பாள்.

ஒன்றுமே புரியாது — மசமசவென்று கண்கள் மயங்கும். மலங்க, மலங்க விழித்து சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் 'ராம் இனி இல்லை' என்ற துக்கம் அலையாய் எழுந்து மீண்டும் அவளை அடித்துப் போக மயங்கியே போவாள்.

எத்தனை முறை மயங்கினாள், எத்தனை முறை தெளிவு பெற்றாள்?

உடலும், மனசும் மரத்துப் போனதால் பிரமை கொண்டு வாசல் அறையில் மூலையோடு மூலையாய் முடங்கிப் போனாள் சீதா.

ஒன்றுமே பேசாதிருந்தவளின் கண்களிலிருந்து மாத்திரம் ஓயாமல் கண்ணீர் வழிந்தோடியது.

காமாட்சியின் நிலையை கேட்கவே வேண்டாம். 'இனி எவர் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?' என்ற

வெறுப்பு தோன்ற சாமான் அறைக்குள் சென்று விழுந்து விட்டான்.

அரை டம்ளர் ஹார்லிக்ஸ் கரைத்து, கல் தூணாய் சமைந்து போன சீதாவினுள் எப்படியோ பாடுபட்டு செலுத்தினவள் சுமித்ராதான்.

'வேண்டாம் சுமி..' என்று மயங்கிய நிலையில் சீதா கதறும்போது, முதல் சில தடவைகள் பொறுத்தாள் சுமித்ரா. பிறகு, 'உனக்காக இல்லை சீதா. உன் வயிற்றுப் பிள்ளைக்காகவாவது நான் சொல்வதைக் கேள்' என்று வற்புறுத்தினாள். மன்றாடி சுமி கொடுத்த பாலை இரண்டு மடங்காக வாந்தி எடுக்கவே அதன் பிறகு அவளிடம் யாருமே நெருங்கவில்லை.

திங்கட்கிழமை காலை ஆறு மணி இருக்கும். தெருவே கிடுகிடுக்கும்படி அலறிக்கொண்டு நுழைந்தாள் ஸரஸா.

குடும்பத்துடன் வெளியூர் சென்றவர்களுக்கு காலை வண்டியில் ஊர் திரும்பினதும்தான் சேதி தெரியுமாம். முதல் நாள் மாலை கோபாலன் போன் செய்த போது வீட்டில் யாரும் இல்லாததால், காலை பேப்பரை பார்த்து விஷயத்தை அறிந்து கொண்ட ஸரஸு நிலை குலைந்து போய்விட்டாள்.

தலைவிரி கோலமாய், கொண்ட கணவனின் கோபத்தையும் மதிக்காமல் ஓடிவந்துவிட்டாள்.

"அம்மா... ஆ... ஆ... அம்மா... என் கண்ணே சீதா" என்று அவள் பாசத்தின் காரணமாய் கதறினபோது பெண்ணைக் கண்ட காமுவுக்கும் துக்கம் தாங்க முடியாமல் போய் விட்டது.

"நான் பாவிம்மா... ஸரஸு; மகா பாவி... இப்போப் பட்ட பிள்ளையை வாரிக் கொடுத்துட்டு நான் கல்லாட்டம் இருக்கேனே... என்னை மாதிரி ஒரு துக்கிரி



உண்டா?... அம்மா ஸரஸூ... உங்கப்பா போனபோதுகூட நான் இப்படி அடிக்கலைம்மா... நான் வாழ்ந்த வாழ்வு போதும்னு தேத்திண்டு இருந்தேனே... ஆனா... இப்போ என் கொழந்தை வாழ்வு மண்மூடி போச்சேடி... ஸரஸு... அந்த பாழாப் போன தெய்வத்தை நம்பினேனே... அது என்னை மோசம் பண்ணிடுத்தே... என் உசிரை எடுத்துக்கோ என் மாப்பிள்ளையை முழுசா கொடுத்துடுனு வேண்டிண்டேனே; அந்த கற்பகாம்பிகை என்னை ஏமாத்திட்டாளே... அந்த தெய்வத்துக்கு மனசு இல்லேடி... ஹிருதயம் கல்லுடி... அதுக்கு ரட்சிக்கிறவள்னு எதுக்கும்மா பேரு? அது வெறும் கல்லுடிம்மா... கல்லு... ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. எல்லாம் பொய், ஸரஸு... பொய்."

ஆவேசம் கொண்டவளாய் காமாட்சி கதறவும், அத்தனை பேரும் நடுங்கிப் போனார்கள்.

காமுவுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா?

வாயைத் திறந்து, ஒரு வார்த்தை அதிர்ந்து பேசாத காமுவா இப்படி ஆர்ப்பரிக்கிறாள்? சர்வமும் அந்த லோக நாயகிதான் என்று நம்பும் காமுவா தெய்வ நிந்தனை செய்கிறாள்?

பசு போன்ற காமாட்சி, இப்படி மதம்பிடித்த யானையாய் மாற வேணும் என்றால் அவள் வேதனைதான் எத்தனை?

சீதாவுடன் தாயின் வேதனையில் ஸரஸுவும் பங்கெடுக்க அதன் பின் நடந்தவை எல்லாமே கண்களால் காணமுடியாத, காதுகளால் கேட்க முடியாத, நெஞ்சத்தால் தாங்க முடியாதவைகளாய் போயின.

பயந்து போனாள் மருக.

"சுமித்ரா சித்தி... எனக்கு பயமா இருக்கு." வெளிறிப் போன முகத்துடன் சுமித்ராவின் மடியில் அவள்

ஒண்டிக் கொள்ளவும் நிலைமை கட்டுக் கடங்காமல் போகிறது என்பதை உணர்ந்தான் விஸ்வநாத.

எல்லாருமே பேசாமல் இருக்கமுடியாது. இவர்களைத் தேற்ற தான் ஒருவனாவது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தவனாய் மஞ்சுளாவைத் தூக்கிக் கொண்டு காமுவின் முன் போய் நின்றான்.

"நடந்தது நடந்துடுத்து... இனிமே என்ன பண்ண முடியும்? நீங்க இப்படி கோழையாய இருந்தா சின்னக் குழந்தை என்ன பண்ணுவா? குழந்தை பயப்படறா... மாமி... கொஞ்சம் அடக்கிக்கோங்கோ" என்று சற்றே அதட்டலான விதத்தில் பேசிவிட்டு... "நீ கூடவா இப்படி சீதா? உன் பேரில் எவ்வளவு நம்பிக்கை ராம் வைச்சிருந்தான்? 'என சீதாவுக்கு இருக்கிற மனபலம் எனக்கில்லை விசு'னு சொல்லுவானே... அதெல்லாம் நிஜமில்லையா?... சீதா... ப்ளீஸ் பீ பிராக்டிகல்" என்றும் சொன்ன வார்த்தைகள காமு, சீதாவிடத்தில் எதிர்பார்த்த மாறுதலை உண்டாக்க அவர்கள் அடங்கிப் போனார்கள்.

அடுத்தடுத்து வந்த நாட்களில் தங்களை எவ்வளவோ சுதாரித்துக் கொண்டாலும் நடந்ததை முழுமையாக அவர்களால் ஜீரணிக்க மட்டும் இயலாமல் போயிற்று.

சூன்யமான பிரதேசத்தில சீதா ஒன்றிப் போய் அவளே வெறுமையாகிப் போனாள்.

அந்த வெறுமையில் அவள் உணர்ந்தது ராம்குமார் ஒருவனைத்தான்.

நின்றாலும், நடந்தாலும், கிடந்தாலும், இருந்தாலும் எல்லாவற்றிலும் அவனே வியாபித்து நின்றான். இதயத்திலும் எழும் சிந்தனைகளிலும் அவனே கலந்து போயினான்.



'சீதா, சீதா...' என்று அழைப்பது போல காதுக்குள் அவன் முணுமுணுப்பு.

சிவந்த கரங்களால் அணைத்து இழுப்பது போல சதா ஒரு ஸ்பரிச உணர்வு.

வீட்டின் ஒவ்வொரு மூலையும் சொல்லும் கதைகள்.

அவர்கள் சிரித்தது, பேசினது, வாழ்ந்தது, மகிழ்ந்தது.

எப்படியோ பகலை நெட்டித் தள்ளிவிட்டுத் திரும்பினால் இரவு பூதாகாரமாய் பயமுறுத்தும்.

அவனுடன் படுத்து சல்லாபித்த பஞ்சணையில் தலையை அழுத்தி படுத்தால் பக்கத்து தலையணையில் அவன் படுத்திருப்பது போன்ற பிரமை எழும்.

'என் சீதா...' என்று ராம் ஆசையுடன் அழைத்து கன்னங்களில் முத்தமிடுவது போல உடம்பு பரவசமாகும். கண்களை மூடிக்கொண்டு, கைகளை நீட்டி 'ராம்... ஐ லவ் யூ...' என்று அணைத்துக்கொள்ள முயன்று திடுக்கிடுவாள்; தனிமை நெஞ்சை அறுக்கும்.

தன்னை மறந்து உறங்கின நாட்களில் ராம் இருமும் சப்தம் கேட்டு தண்ணீர் எடுத்துக் கொடுப்பதற்காக அவசரமாய் எழுவாள். தண்ணீரை டம்ளரில் கொட்டி இந்தப் பக்கம் திரும்பினால் உண்மை மண்டையில் அடிக்கும். கண்களில் நீர் வழிய ஸ்தம்பித்துப் போவாள்.

சமையற்கட்டுக்குள் போனால் டீ போட்டுக் கொடுக்கிறேன் என்று கணவன் கூத்தடித்தது கண்களில் விரியும். காஸிலிருந்து கொதிக்கும் வெந்நீரை கைகளில் கொட்டிக் கொண்டு 'ஆ... ஊ' என்று தவித்ததும் ஞாபகத்துக்கு வரும். தான் மருந்து தடவி விரல்களை முத்தமிட்டதும் அவன் இன்னொரு விரலை ஆறிப்போன வெந்நீரில் வேண்டுமென்றே முக்கி எடுத்து "இதுவும் சுட்டு

விட்டது, உன் ஸ்பெஷல் மருந்து போடு" என்று சிறு பிள்ளைத்தனமாய் ஊடல் செய்ததும் நினைவுக்கு வரும். ஒரே ஒரு கணம் நினைவுகளின் இதத்தில் தன்னை மறந்து புன்னகைப்பாள். ஆனால் மறு நிமிஷமே 'இனி இவையெல்லாம் கற்பனையில்தான்' என்ற நினைப்பு எழ இடிந்து போவாள்.

எத்தனை நினைவுகள்?

எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்?

அன்றாடம் சுமித்ரா வந்துவிடுவாள். முடிந்த போது விசுவும் வருவான். புண்பட்ட நெஞ்சுக்கு தங்களால் முடிந்தவரை மருந்தாய் இருந்துவிட்டுப் போவார்கள்.

"எங்காத்துக்கு வந்துடுங்கோ, சீதா... கொஞ்சம் மாறுதலாய் இருக்கும்" என்று அவர்கள் சொன்னபோது "நினைவுகளுக்கு பயந்துண்டு நான் ஓட விரும்பலை சுமி. அந்த நினைவுகளோடயே என் வாழ்க்கையை பின்னிக்க விரும்பறேன்" என்று மறுத்துவிட்டாள் சீதா.

சீதா புத்திசாலி. எப்படியோ தேறிவிட்டாள். ஆனால் காமாட்சி?

ஆணித்தரமாய் நம்பின தெய்வம் அவளை ஏமாற்றி விட்டதாய் நினைத்ததால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் இல்லாமல் போனாள். அவள் "என்ன, சாமி பூதம் வேண்டிக் கிடக்கு? நான் பணம் காசா கேட்டேன்? என் மாப்பிள்ளைக்கு ஆயுசு கொடுனுதானே கேட்டேன். அவரைக் காப்பாத்திக் கொடுக்க முடியாத தெய்வம் எனக்கு இனிமே வேண்டாம்" என்று வெறுப்பு மண்ட சதா பேசுவாள்.

அம்மா விரைவில் சரியாகிவிடுவாள், அவள் விவேகி. வாழ்க்கை தாமரை இலைத் தண்ணீரைப் போன்றதுதான் என்பதைப் புரிந்துகொண்டவள் என்று சீதா நம்பியதுக்கு பலனே இல்லை.



அந்த ஞாயிற்றுக் கிழமை வெகுநாழிகை உறக்கம் பிடிக்காமல் தவித்த சீதா தன்னையும் மறந்து தூங்கின போது அவள் ஒரு வினோதமான கனவு கண்டாள்.

அவளும் ராம்குமாரும் மொட்டை மாடியில் அருகருகே அமர்ந்திருக்கிறார்கள். நிலா காய்கிறது. மல்லிப்பூ வாசனை பரவிக் கிடக்கிறது. "நாழியாறது, நான் போயிட்டு வரேன சீதா" என்கிறான் ராம்குமார்.

"உங்களைப் பிரிஞ்சு எப்படி இருக்கிறது, ராம்?" சீதா தவிக்கிறாள். சிரிக்கிறான் ராம்குமார். "போறேன்னு சொல்லலை! போய்விட்டு வரேன்னுதானே சொன்னேன்! கவனிக்கலை?"

"நான் கூட புரிஞ்சுக்கறேன் ராம். ஆனா அம்மாவை நினைச்சா பயமா இருக்கு."

"நீ எடுத்துச் சொல்லு. நான் எங்கேயும் போக மாட்டேன். உடனே வந்துடுவேன். உங்கிட்டேதான் இருப்பேன்னு, அம்மாக்கு சொல்லு சீதா..."

"ம்ஹூம்... அம்மா நான் சொன்னா ஒத்துக்க மாட்டா..." பிடிவாதம் பிடிக்கிறாள் சீதா.

"ஷி வில் அண்டர்ஸ்டாண்ட்... அம்மா புரிஞ்சுப்பா... நீ வேணும்னா பாரேன்..." பேசிக்கொண்டே காற்றில் மிதந்தவண்ணம் சீதாவின் அருகில் வருகிறான் ராம்குமார். நெருங்கி, நெருங்கி, அவள் மூச்சுக் காற்றுடன் கலக்கிறான். புகை போல பனி போல கரைகிறான்.

அடிவயிற்றில் பளிச்சென்ற வலி எடுக்கவும் இடுக்கிட்டு எழுந்து விட்டாள் சீதா. வலியையும் மீறிக்கொண்டு அவள் கண்ட கனவு மனசில் நெருடவே இது என்ன புது மாதிரியான கனவு என்று வியந்தவளுக்கு அப்போது தெரியாத பதில் அன்று பகல் இரண்டு மணிக்குத் தெரிந்தது.

பிரசவவலி எடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்ட சீதாவுக்கு ராம்குமாரே சின்ன உருவமெடுத்து பிறந்

தாற் போல ஆண் குழந்தை பிறந்தது. அதே சிரிப்பு. அதே கூர்மையான மூக்கு, அதே பூனைக் கண்கள், எல்லாம் அதே.

டாக்டர் பிள்ளையைக் கையில் கொடுத்ததும் முதல் நாள் கனவுக்கு அர்த்தம் புரிந்துபோய் விக்கித்துப் போனாள் சீதா.

அறைக்குள் வந்த காமுவின் கைகளில் பேரனைக் கொடுத்து "உன் மாப்பிளை திரும்ப முழுசா வந்துட்டா ரம்மா? இனிமேயாவது தெய்வத்தை நிந்திக்காம இருப்பியா?" என்றும் கேட்டபோது 'துடையை கிள்ளி தொட்டிலையும் ஆட்டப் போகிறானா இந்த இறைவன்?' என்றே நினைத்தாள் காமு.

## 19

பிள்ளைக்கு சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள் சீதா.

"ஜாக் வீட்டிலே அன்னிக்கு கார்த்தால சமைச்சு சாப்பிட ஒண்ணுமே இல்லையாம். அம்மா ஜாக்கை கூப்பிட்டு, ஜாக், ஜாக் நீ போய் இந்த பசு மாட்டை வித்து பணம் வாங்கிண்டு வா... அப்புறமா நாம்ப சாப்பிடலாம் னானாம்... ம்... வாயைத் திற குமார், பெரிய வாய்... ஆ..."

சீதா சொல்லும் கதையின் சுவாரசியத்தில் மூழ்கிப் போன குழந்தை குமார் சாதத்துக்கு வாயைத் திறக்க மறந்ததால் நடுநடுவில் சீதா ஞாபகப்படுத்த வேண்டி யிருந்தது.

"ம்... அப்புறம்?" கண்களை விரித்துக்கொண்டு, தாயின் மடியில் அமர்ந்திருந்த குமார் தலையை நிமிர்த்திக்



கேட்டபோது கணவன் ராம்குமாரே நீலக் கண்களில் அழகு கூத்தாட தன்னுடன் பேசுவது போல சீதாவுக்குத் தோன்றியது.

"அப்புறம்?"

கதையை மேலே தொடர்ந்தாள் சீதா. 'ஜாக் அண்ட் த பீன்ஸ் ஸ்டாக்' கதைதான். எத்தனையோ முறைகள் கேட்ட கதைதான் என்றாலும், குமாருக்கு திரும்பத் திரும்ப அதையே கேட்பதில் சலை குன்றாது. 'போயும் போயும் பீன்ஸ் விதைகளையா வாங்கி வந்தே. பசு மாட்டுக்குப் பதில் இதுதானா கிடைச்சது?' என்று ஜாக்கின் தாய் அவனை திட்டும்போது குமாருக்கு அழுகை வரும். "தூங்கி எழுந்து பார்த்தால்... அம்மாடி! எத்தனாம் பெரிய பீன்ஸ் கொடி ஆகாசத்தை தொட்டுக் கொண்டு" என்று சீதா கைகளை உயரே உயரே தூக்கி விவரிக்கும் போது மேலே எதையோ பார்ப்பதுபோல நிமிர்ந்து பார்த்து குதூகலிப்பான். பிறகு ராட்சதனை ஏமாற்றி விட்டு தங்க முட்டையிடும் வாத்தை ஜாக் தூக்கிக் கொண்டு வருவதைச் சொல்லும் போது தானே ஓடி வருவதுபோல கைகளைக் கொட்டிக் கொண்டு எம்பி எம்பிக் குதிப்பான்.

எத்தனை வேலை இருந்தாலும் குழந்தைகளுக்கு தேவையானவைகளை கவனிப்பதை தன் தலையாய பொறுப்பாக நினைத்ததால் கூடுமானவரை குமாருக்கு குளிப்பாட்டுவது, உணவு கொடுப்பது போன்றவைகளைத் தானே கவனிப்பாள் சீதா.

அன்றைக்கும் அப்படித்தான். மணி எட்டரையை நெருங்கப் போகிறது. சீதா இன்னும் கதையின் முடிவுக்கு வந்தபாடில்லையாதலால் அருகில் நின்றிருந்த மஞ்சரிக்கு பஸ் வந்து விடும். இன்னிக்கு எக்லாம் வேறு. அம்மா புறப் பட்டால்தானே? ஒருகால்மாற்றி ஒரு காலில் தவித்தவள்... "அம்மா நாழியாறதே..." என்று சீதாவின் தோளைத் தொட்டு உலுப்பினாள்.

"வந்துட்டேன் மஞ்சு... ஜஸ்ட் ஒன் மோர் மினிட்... வாயைத் திற குமார். ம் ஜாக் தடதடவென்று இறங்கி வந்தானா... பின்னாலேயே ராட்சஸனும் வரான்... பூமியை தொட்டதும் வீட்டுக்குள் ஓடின ஜாக் ஒரு கோடாலியை எடுத்துண்டு வந்தான்..."

"இல்லே தப்பு..." சிணுங்குகிறான் குமார்.

அவசரத்திலும் சிரிப்புதான் வந்தது சீதாவுக்கு. நல்ல பிள்ளை இவன். ஒரு நாளைக்குக் கூட கதையைக் கொஞ்சம் சுருக்கிச் சொல்லக் கூடாது... கதைக்கு கண், மூக்கு ஒட்ட வைத்து ஒரு டிராமா பார்க்கிறாற்போல ஒவ்வொன்றாய் சொன்னால்தான் விடுவான்.

எப்படியோ சாப்பாட்டையும், கதையையும் முடித்து எழுந்த சீதா குழந்தையை தயாராக நின்ற தாயிடம் கொடுத்தாள்.

"நான் தூத்தம் கொடுக்கலைம்மா... நீ கொடுத்துடு என்று சொல்லியவண்ணம் உள்ளே போய் கையலம்பிக் கொண்டாள். கைப்பை, டிபன்பாக்ஸ், குடையை எடுத்துக் கொண்டு "போயிட்டு வரேம்மா" என்று தாயிடம் சொல்லிக் கொண்டாள்.

"பை பை... குமார்..."

"நானும் வரேம்மா..." நித்தமும் கெஞ்சும் குழந்தை இன்றும் கெஞ்சினான்.

"இப்போ வேண்டாம் கண்ணா. சாயங்காலம் அம்மா வந்து பீச்சுக்கு கூட்டிண்டு போறேன் சரியா?" குமாரை அணைத்து முத்தமிட்ட சீதா 'வா மஞ்சு' என்று பெண்ணுடன் வாசலில் இறங்கி, பக்கப் பாதை வழியாக தெருவை அடைந்தாள்.

கூடவே நிமிர்ந்து நடந்து வரும் மகளைக் காணுகையில் அவள் நெஞ்சம் சந்தோஷத்தால் துள்ளியது.



'என்னமாய் வளர்ந்துவிட்டாள். வளர்த்தியில் அப்பாதான்' என்று நினைத்தவண்ணம் நடையை எட்டிப் போட்டாள்.

வெள்ளைச் சீருடையும், சிவப்பு டையுமாய் மஞ்சு இந்த வயசில் சீதாவின் நெற்றி அளவு உயரத்தில் இருந்தாள். கண்ணுக்கெதிரேயே மகள் வளர்ந்து வருவதில் சீதா பெருமை கொண்டாலும் பொறுப்பும் ஏறியதால் தனிப் பெண்ணாக எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று பல சமயங்கள் மலைத்திருக்கிறாள். சுமித்ராவும், அவள் குடும்பத்தாரும் இல்லையென்றால் இன்று இப்படி கௌரவமாக அவள் குடும்பம் நடத்த முடியுமா! கஷ்டங்களையெல்லாம் இவளோடு தோள் கொடுத்துக் தாங்கிக் கொண்டது அவர்கள் அத்தனை பேர்களும் தானே?

தாயும், மகளும் தெரு முனையை அடைந்து கச்சேரி ரோடிலிருந்த பஸ் ஸ்டாப்பை அடைந்து விட்டார்கள்.

"எக்ஸாம்ஸ் நன்னா பண்ணு மஞ்சு. ஜோராய் தயார் பண்ணி இருக்கே. அதனாலே பயப்படாம ஆன்ஸர் எழுது..."

அன்று மஞ்சரிக்கு கடைசி பரீட்சை முடிந்து விட்டால் பெரிய லீவு ஆரம்பம். மெலலிய குரலில் தாய் சொன்னதற்கு சரி, சரி என்பது போல அவள் தலையை ஆட்டினாள்.

தூரத்தில் ஸ்கூல் பஸ் தெரிந்தது.

"பஸ் வந்துடுத்து நான் வரேம்மா... பை"

"பை... பெஸ்ட் ஆப்... லக்..."

மஞ்சரி ஏறிக் கொள்ள பஸ் நகர்ந்தது.

கையைத் திருப்பி கடிகாரத்தைப் பார்த்தாள் சீதா. எட்டு நாற்பது. அவள் பஸ்ஸும் வரும் நேரம்தான்.

சற்றே குனிந்து பாதத்திற்கு மேலே மடிந்து போயிருந்த புடவை ஓரத்தை சரி செய்துகொண்டாள்.

சீதா பழைய சீதா இல்லை, இரண்டு வருஷ அனுபவத்தில் எவ்வளவோ மாறிவிட்டாள்.

வெள்ளை, அல்லது லைட் கலர்களில் சின்னச் சின்ன பூப்போட்ட வாயில் புடவைகள், வலது கையில் மெல்லிய வளை, இடக்கையில் வாட்ச், காதில் சின்ன வளையங்கள். கழுத்தில் இறங்காமல் உயர்த்தி போடப் பட்ட கொண்டை, இவ்வளவுதான் சீதாவின் இன்றைய அலங்காரங்கள்.

மொட்டையாய் நின்ற கழுத்தையும், வெறுமை யாய் மாறின நெற்றியையும் பார்க்கும் போதெல்லாம் அம்மா மனசுக்குள் துடிப்பது இவளுக்குத் தெரியும். பொறுக்க மாட்டாமல் முன்பு ஒரு நாள் 'இத்தனை வயசான நான் கூட ரொம்ப பாராட்டாம இருக்கேன். நீ என்னத்துக்காக இப்படி சன்னியாசியா வாழணும் சீதா?' என்று அங்கலாய்த்தபோது இவளிடமிருந்து எழுந்தது ஒரு சின்ன புன்னகைதான்.

ஓட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாய் அவள் உலக வாழ்க்கையிலிருந்து தன்னை அறுத்துக்கொண்டு ஒடுங்க முயற்சிக்கும் போதெல்லாம் சுமித்ரா வெளிப்படையாய் சண்டைகூட போட்டிருக்கிறாள்.

"என்னத்துக்காக இப்படி மனசை மரத்துக்க அடிக்கறே சீதா? உன் பசங்களுக்காகவாவது சாதாரண மாய் இருக்கக் கூடாதா?" என்றால் "என் குழந்தைகளுக்கு நான் எதை குறைச்சிருக்கேன் சுமி? ஏதாவது ஒண்ணை விரலை விட்டு சொல்லு பார்க்கலாம்?" என்று பதிலுக்கு சீதா அமைதியாய் கேட்கும்போது சுமித்ராவுக்கு ஏதும் பேசத் தெரியாது.

வாஸ்தவம்தான்.



தன் குழந்தைகளே உலகமாய் வாழ்ந்த சீதா, அவர் களுக்கு எதில் குறை வைத்தாள்? அன்பிலா? கவனிப்பிலா. இல்லை பணத்திலா? மஹூம் எதிலுமில்லை.

ராம்குமார் மறைந்த உடன் ஆர்ப்பரிக்கும் அருவி களாய், மனசின் ஏமாற்றத்தை தாங்க முடியாதவர்களாய் தவித்த சீதாவும், காமாட்சியும் நாளாக ஆக அடங்கிப் போய் ஆழமாய்த் தேங்கிக் கிடக்கும் தண்ணீரின் அமைதியைப் பெற்று விட்டார்கள்.

சீதாவின் பஸ் வந்துவிட்டது. ஏறிக்கொண்டு ஜன்னலோரமாய் அமர்ந்தாள் சீதா.

வழக்கமாய் வரும் கண்டெக்டர் அவளைக் கேட் காமலேயே அடையாறுக்கு ஒரு டிக்கெட் கிழித்துக் கொடுத் தான்.

சீதாவின் பார்வை ஜன்னலுக்கு வெளியே தாவியது.

பஸ்ஸின் ஓட்டத்தில் முன்னால் தெரிந்து, பின்னால் தங்கிவிடும் கடைகள், வீடுகள், இருக்கிறாற் போல ஓடும் மற்ற வண்டிகள் சாலையில் நெரிந்து வழியும் மக்கள் கூட்டம்.

பஸ் சாந்தோமில் நின்றது. முக்கால் நிர்வாணமாய் மூக்கில் வழியும் சளியைத் துடைத்துக்கூடப் போடத் தெரியாதவர்களாய் இரண்டு சிறுமிகள் பஸ் ஜன்னலில் தெரியும் சீதாவின் முகத்தைக் கண்டதும்...

"யம்மாடி... பசிக்குது... யம்மா... பத்து காசு போடு தாயே" என்று புலம்பினார்கள்.

சீதாவிடம் பத்துக் காசு இல்லை, இருபது காசை எடுத்து நீட்டிய கைகளில் போட்டாள்.

அதுகள் முகத்தில் எத்தனை சந்தோஷம்? பாவம் யார் பெத்த குழந்தைகளோ? தாய், தகப்பன் இருக்கிறார்

களோ இல்லையோ? யாராவது ஒருவர் இருந்தால்கூட இப்படி சீரழிய விடமாட்டார்கள் இல்லையா?

சீதாவின் எண்ணம் தன் குடும்பத்திடம் ஓடியது.

குழந்தை குமார் பிறந்த ஒன்பதாம் நாள் வீட்டுக்குத் திரும்பியவள் தனக்குள்ளேயே யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு மாச காலமான பிறகு ஒரு நாள் மாலைப்பொழுதில், விசு, சுமி, கோபாலன், அம்மா எல்லோரும் சேர்ந்து அமர்ந்திருக்கையில் தன் எண்ணங்களை மெல்ல வெளியிட்டாள்.

ராம்குமாரின் பிராவிடண்ட் பண்ட் பணம் 12 ஆயிரமும் இன்ஷூரன்ஸ் பணம் பதினைந்தாயிரமும் அன்றுதான் வந்திருந்தன. அந்த இருபத்தியேழாயிரத்தை எந்த மாதிரி பத்திரப்படுத்தி வைக்கலாம் என்று பேசிக் கொண்டிருந்த அந்த சமயமே தன் மனசை வெளிப்படுத்த சரியான நேரம் என்று சீதா நினைத்தாள்.

'இருபதாயிரத்தை என் கம்பெனிலேயே இன்வெஸ்ட் பண்ணி, மாசம் பன்னிரண்டு பர்ஸெண்ட வட்டி தரலாம்னு நான் நினைக்கிறேன். நீங்க என்ன நினைக்கிறேள், மாமா? சீதா உன் அபிப்பிராயம் என்னம்மா..." இது விசு.

"பேஷான யோசனை..." என்றார் கோபாலன்.

இப்போது சீதா பேசினாள்.

நான் ரெண்டு சமாசாரத்தை உங்க கிட்டே யெல்லாம் சொல்லணும்னு இருக்கேன். ரொம்ப நாளா யோசிச்சிட்டுதான் இந்த விஷயத்தை வெளியிலே சொல்லறேன். நீங்க யாரும் வருத்தப் படாதீங்கோ... அம்மா, உனக்கும் சேர்த்துத்தான் சொல்றேன்..." சற்று நிறுத்திவிட்டு மேலே தொடர்ந்தாள் சீதா.

"நான் பி. டி படிச்சிருக்கேன். சும்மா இருந்தா மனசு கெட்டுப் போறது. அதனாலே ஏதாவது வேலைக்குப்



போலாம்னு நினைக்கிறேன்... அப்புறம் எங்களுக்கு அம்மா, குழந்தைகள், எனக்கு இத்தனாம் பெரிய வீடு என்னத்துக்கு? பழையபடி அவுட் ஹவுசுக்குப் போயிட்டா என்ன? இந்தப் பெரிய வீட்டை வாடகைக்கு விட்டுடலாம்... பெரிய வீட்டில பெண்களா நாங்க தனியா இருக்கிறதைவிட சின்ன வீட்டில் பாதுகாப்பா இருக்கலாம்... பெரிய வீட்டுக்கு நானூறு ரூபாய் வருமா, மாமா? என் வேலை மூலமா இருநூறு, இருநூற்றம்பது வந்தால்கூட போதும்... நாங்க சௌகரியமா இருந்துடுவோம்... இப்போ விசு சொன்ன யோசனை எனக்கு சரினு தோணறது... விசுவை விட எங்க பணத்தை வேறு யார் ஜாக்கிரதையா வைச்சுக்க முடியும்? அந்தப் பணத்தை அப்படியே குழந்தைகளோட பிற்கால படிப்பு, கல்யாணத்துக்கு உபயோகப் படுத்தலாம்... விசு கொடுக்கற வட்டியிலே மஞ்சுவுக்கு நகை, வீட்டுக்கு கட்ட வேண்டிய டாக்ஸ், சின்ன ரிப்பேர் இப்படி அதிகப்படி செலவை கவனிச்சுக்கலாம்... என்னவோ எனக்குத் தெரிஞ்சதை சொன்னேன்... நீங்களாம் என்ன நினைக் கறேள்?" சுற்றியிருந்து கேட்டவர்களுக்கெல்லாம் தாங்க முடியாத துக்கம்.

சீதா சொன்ன யோசனைகள் சிறந்தவைகளாக இருக்கலாம். ஆனாலும் ராம்குமாரின் அரவணைப்பில் இதுநாள் வாழ்ந்த சீதா வேலைக்குப் போவதா? சௌகரிய மாய், ஆனந்தமாய் வாழ்ந்த பெரிய வீட்டை விட்டு விட்டுப் பழையபடி சின்ன வீட்டில் வாழ்வதா?

மனங்கள் குமுறினாலும் எல்லோரும் சீதாவின் பேச்சுக்கு கட்டுப்படவே அடுத்த மாசம் பெரிய வீட்டை வாடகைக்கு விட்டார்கள்.

பையன் பிறந்த நான்காவது மாசம் அடையாறு காந்தி நகர் பள்ளியில் நான்காவது வகுப்பு ஆசிரியை உத்யோகம் கிடைத்து சீதாவும் போய்க் கொண்டிருக்கிறாள்.

## 20

**சீ**தாவுக்குப் பொழுதே போகவில்லை. கோடை விடுமுறைக்காகப் பள்ளியை மூடிவிட்டார்கள். திருத்த வேண்டிய பேப்பர்கள், நோட்டுக்கள், பள்ளி திறந்ததும் தயாராக இருக்க வேண்டிய வேலைகள், எல்லாவற்றையும் விடுமுறையின் தொடக்கத்திலேயே முடித்துவிட்டாள். சுமித்ரா ஊரில் இருந்தால் கவலை இல்லையே! குடும்பமாய் அவர்கள் ஊட்டிக்குப் போய்விட்டார்கள். சென்ற வருஷம் அவர்களுடன் சீதாவும் போயிருந்தாள். இந்த முறைதான் ஏனோ மறுத்துவிட்டாள்.

"ஊட்டிக்கு வரதிலே உனக்கு என்ன கஷ்டம்?... தனியா போனாலும் சரி... எங்களோடதானே வரே?... இங்கேயிருந்து என்னத்தை சாதிக்கப் போறே?" என்று சுமித்ரா பிடிவாதம் பிடித்தபோது "இந்தத் தடவை வேண்டாம் சுமி" என்று சிரித்துக்கொண்டே மறுத்தாள்.

"ஏனாம்? இந்த தடவை ஏன் வேண்டாமாம்?..."

"..........."

"சொல்லேன்... எங்ககூட வரத்துக்கு கஷ்டமாயிருக்கா?... எங்க கம்பெனி போர் அடிக்கிறதா? இல்லை நாங்க இல்லாம ஹாய்யாக இருக்க ஆசையா?..." பாதி கேலியும், பாதி கோபமுமாய் பேசினாள் சுமித்ரா.

சிரித்தாள் சீதா. "உன் கம்பெனி எனக்கு போர் அடிக்க ஆரம்பிச்சுதுன்னா, எனக்கு என் மேலேயே வெறுப்பு வந்துடுத்துன்னு தானே அர்த்தம்? என்ன சுமி, இதென்ன குழந்தையாட்டம்... அம்மாவுக்கு வரவர வயசாயிண்டு வரது... தனியா விட வேண்டாம்னு



பார்த்தா... நீ என்னென்னவோ சொல்லறயே?..." தோழியை நெருங்கி சுவாதீனமாய் அணைத்துக் கொண்டாள் சீதா.

வாஸ்தவம்தான். போன முறை "தனியாய் இருக்க பயப்பட நான் என்ன பாப்பாவா? நீயும், குழந்தைகளும் போயிட்டு வாங்கோ" என்று அம்மா வற்புறுத்தியதால் சீதா ஊட்டிக்குப் போனாள். அம்மாவை குடித்தனக்காரர்கள் நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் தனிமையால் அவதிப்பட்டாள் என்பதை சீதா நன்கு உணரவே செய்தாள். முக்கியமாக பேரன் இல்லாவிட்டால் அவள் தவித்துப் போவது இவளுக்குத் தெரியுமே!

"அம்மாவையும் அழைச்சுண்டு வரக்கூடாதா? அங்கே வீடு சௌகரியமா இருக்கு. ஆட்கள் இருக்கா மடி, பூஜை எல்லாத்தையும் வைச்சிக்கலாமே?" சுமி விடவில்லை.

"அந்தக் குளிர் அம்மாவுக்குத் தாங்காது சுமி வயசாகலையா?"

"என்ன பெரிய வயசு! எங்க மாமனார் மாமியாரை விடவா பெரியவா? அவா வரலையா?"

"உங்க மாமனார், மாமியாருக்கு அடிக்கடி ஊட்டிக்குப் போய் அந்தக் குளிர் ஒத்துண்டு இருக்கு அம்மாவுக்கு அது புதுசில்லையா? இங்கேயே மார்கழி மாசம் ஸ்வெட்டர், ஸ்கார்ப் தடபுடல பண்ணுவா... உனக்குத் தெரியாததா, சுமி... இதையும் தவிர பெரிய வீட்டிலே சின்னச் சின்ன ரிப்பேர் வேலை இருக்கு. நான் இட்டேயிருந்து கவனிக்க இப்ப லீவா இருக்கு... இல்லேன்னா உங்க அப்பாவையும், எங்கம்மாவையும்தானே மறுபடி தொந்திரவு பண்ணணும்."

எப்படியோ சுமித்ராவை சமாதானப்படுத்தி விட்டாள் சீதா.

"சரி போ, நீ வராவிட்டாலும் மஞ்சுவையாவது அனுப்புவாயோ மாட்டாயோ?" சுமித்ராவின் குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

"உன் பெண்ணை அழைச்சுண்டு போக என்னிடம் என்ன கேள்வி?"

ஆக, காமு, சீதா, குமார் சென்னையில் தங்க சுமித்ரா குடும்பத்துடன் மஞ்சரி ஊட்டிக்குப் போனாள்.

சுமித்ரா இல்லை; மஞ்சு இல்லை, பள்ளியும் விடுமுறை. சீதாவின் பொழுது எப்படிப் போகும்?

வீட்டுச் சுவரிலிருந்த விரிசலை சரி செய்ய, கொஞ்சம் வெள்ளை அடிக்க, தோட்டத்தை ஒழுங்கு பண்ண என்று ஆட்களை கோபாலின் உதவியுடன் நியமித்து வேலை வாங்கினாள்.

காலையில் எழுந்து தோட்டத்தில் புகுந்து விடுவாள். உச்சி வெயில் ஏறுவதற்குள் வீட்டுக்குள் வந்து குமாரின் காரியங்களைக் கவனிப்பாள். மதியம் கை வேலை செய்வாள். மாலையில் அம்மா, குழந்தையுடன் பீச்சுக்கோ, கோவிலுக்கோ போய்விட்டு இருட்டுவதற்குள் வந்து சாப்பிட்டுவிட்டு ஏதாவது படிப்பாள். பின் உறங்கப் போவாள்.

என்னவெல்லாமோ செய்தும் பல நாட்கள் பொழுது போகாமல் தவிக்கும்போது 'சே! ஸ்கூல் இருக்கக் கூடாதா?' என்ற எண்ணமே தோன்றும்.

சீதாவுக்கு அந்தப் பள்ளியில் வேலைக் கிடைத்தது அதிசயம்தான். நல்ல இதமான சூழ்நிலை. முத்துக்களாய் சிதறும் குழந்தைகள். பண்புள்ள நிர்வாகம்.

சீதாவைக் கண்டால் அவளுடைய வகுப்பு குழந்தைகளுக்கெல்லாம் ஏகக் கொண்டாட்டம்.



'டீச்சர் டீச்சர்' என்று ஒன்று மாற்றி ஒன்று கலகலக்கும்.

ஆரம்ப காலங்களில் கைக்குழந்தையான குமாரை விட்டுவிட்டு வேலைக்குப் போவதில் சீதாவுக்கு ரொம்ப வருத்தம். ஆனாலும் அம்மாவுக்கு வாழ்க்கையில் பிடிப்பு வேண்டுமானால் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை முழுக்க முழுக்க காமுவிடம் விட்டால்தான் சரி என்று அவள் நினைத்ததால் மனசை தேற்றிக்கொண்டு விட்டாள். மேலும் பள்ளியில் பட்டாம் பூச்சிகளாய், காளான் குடையாய் விரிய அவளைச் சுற்றிலும் குழந்தைகள் அவள் நெஞ்சுக்கு இன்பமே அளித்தார்கள்.

கோபிக்காமல், ஆனால் அதே சமயத்தில் அன்பாய் கண்டிப்பாய் பிள்ளைகளை அவள் தன்பால் கவருவதைத் கண்டு மற்ற ஆசிரியைகள் ஆச்சரியப்படுவார்கள்.

சீதா வரும் நேரத்திற்காக வகுப்பு மாணவ மாணவிகள் காத்து நின்று, யார் முதலில் டீச்சருக்கு 'குட் மார்னிங்' சொல்லுவது என்று தவிப்பார்கள்.

ஒன்று கையிலிருக்கும் புத்தகங்களை வாங்கும், மற்றது குடை, இன்னொன்று டிபன் பாக்சை இப்படி போட்டா போட்டி.

வகுப்புக்கு நுழைந்தால் 'டீச்சர் எனக்கு பிறந்த நாள் டீச்சர், ப்ளீஸ் டேக் எ ஸ்வீட்' என்றும், 'எங்க வீட்டிலே பூத்த முதல் ரோஜாப்பூ உங்களுக்காக கொண்டு வந்தேன் டீச்சர்' என்றும் அந்த இளசுகள் சொல்லும் போது சீதாவின் உள்ளம் நெகிழ்ந்து போகும்.

சந்தோஷமான சூழ்நிலையில் வேலை பார்த்ததாலோ என்னமோ, மனசுக்குத் தெம்பும், தன் துக்கத்தை ஆற்றிக் கொள்ளும் பக்குவமும் இன்னும் சீதாவுக்குக் கூடிப் போயின.

சித்திரை வெயில் ஜமாய்த்துக் கொண்டிருந்தது. சீதாவுக்குத் தூக்கம் வரவில்லை. படிக்க ஒரு புத்தகமும் இல்லை. உடம்பெல்லாம் வெயிலின் கடுமை தாங்காமல் எரிச்சல். கூடத்தில் படுத்திருந்த காமுவும் 'உஸ் உஸ்' என்று தவித்துக் கொண்டிருந்தாள்.

முதல் நாள் இரவில் கொசுக்களின் தொல்லை அதிகமாயிருந்ததால் சீதாவிற்கு நல்ல தூக்கம் இல்லை. கொசுக்கள் கடித்துச் சிவந்திருந்த ஓரிரு இடங்களைத் தடவிக் கொண்டவள் குளித்துவிட்டு லைப்ரரிக்குப் போய் ஏதாவது புத்தகம் எடுத்து வரலாம் என்ற நினைப்பில் குளியலறைக்குள் போனாள்.

"குளிக்கப் போறயா சீதா? இந்த மூணு மணி தருவாயிலா? — கொஞ்சம் வெயில் தாழ்ந்து குளிக்கக் கூடாதோ?" காமு தலையைத் நிமிர்த்திக் கேட்டாள்.

"இல்லேம்மா... நேத்து ராத்திரி கொசுக் கடிச்சிருக்கும் போல இருக்கு. ஏதோ சுவாரஸ்யத்தில் சொறிஞ்சிட்டேன். எரியறது... ஜில்லுனு குளிச்சிட்டு லைப்ரரி வரை போகலாம்னு..." பதில் சொன்ன சீதா கதவைத் தாளிட்டுக் கொண்டு குளிக்க முனைந்தாள்.

குளிர்ந்த ஜலத்தை மொண்டு மொண்டு மேனியில் விட்டுக் கொள்ளவும் 'அம்மாடி' என்ற சுகம் எழுந்தது.

கைகளில் கொசுக்கடி சிவந்து தடித்திருந்தது. கணுக்காலருகில்கூட ஓரிரண்டு கடிகள். அசுரக் கொசுக்கள்! புடவையுள் புகுந்து எப்படித்தான் கடிக்குமோ? சோப்புத் தடவி மறுபடி நீரைக் கொட்டிக் கொண்டாள் சீதா. உடம்பில் தடவிய சோப்பை தண்ணீர்விட்டு வழித்த போது இடது மார்புக்கு மேலாக சற்றே சிவந்து எழும்பியிருந்த அந்த சின்னக் கட்டியைக் கண்டாள். 'அட! வேனிற் கட்டி வர அளவுக்கு வெயில் காய்கிறதா?' என்று நினைத்தவள் அம்மாவிடம் சொன்னால் 'உடம்பு சூடு. பால் குடித்தால் தானே' என்று



கத்துவாள் என்று நினைத்துக்கொண்டே குளித்து முடித்தாள். தலைவாரி உடை உடுத்திக்கொண்டு வெளியே போய்விட்டு சுவாரசியமான புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்பும்போது இரவு கவிந்து விட்டது.

அடுத்த நான்கு நாட்களும் வீட்டினுள்ளேயே, புத்தகங்களைப் படித்துக்கொண்டு அடைந்து கிடந்தாள் சீதா. ஐந்தாம் நாள் குளிக்கும்போது மார்பு கட்டி சற்றே பெரிதாகி பளபளக்கவே அன்றிரவு அம்மாவிடம் சொன்னாள் அவள்.

"கட்டி வராமல் என்ன பண்ணும்? எண்ணெய் ஒழுங்கா தேச்சுக்காம, ராத்திரி விடிய விடிய படிக்கறே. கண்ணும், உடம்பும் கொதிக்காம என்ன பண்ணும்" என்று சொன்ன காமு மறுநாட்காலை தோட்டத்தில் வளர்ந்திருந்த கீழாநெல்லி தழைகளைப் பறித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி சீதாவை தேய்த்துக் கொள்ளச் சொன்னாள்.

மேலும் நாளானபோது மார்புக் கட்டி கோலியளவு பெரியதாகி பளபளக்கவே "சீழ்பிடிச்சிருக்கோ என்னவோ டாக்டரைப் பாரேன் சீதா" என்று அம்மா சொன்னதால் தெப்பக்குளத்தருகில் ப்ராக்டிஸ் செய்து கொண்டிருந்த டாக்டரிடம் போனாள் சீதா.

"மாஸ்டைட்டில் ஜலக்கட்டி மாதிரிதான் இருக்கு. இந்த வெயில காலத்தில இதெல்லாம் ரொம்ப சகஜம்" என்ற டாக்டர் "எத்தனை நாளாய் இருக்கு?" என்றும் கேட்டார்.

"சுமார் பதினைந்து நாளாய்..."

"சரி பெனிசிலின் ஐந்து இன்ஜெக்ஷன் இங்கே தினம் வந்து போட்டுக்கோங்கோ. கட்டி உடைச்சிடும், செப்டிக் ஆகாது..." என்றும் அவர் சொல்லவே நித்தமும் மாலையில் குழந்தை, அம்மாவுடன் கோவிலுக்கு போய்

விட்டு அப்படியே டாக்டரிடம் சென்று ஊசி போட்டுக்கொண்டு வந்தாள் சீதா.

டாக்டர் வீட்டில் அதிகமாய் வியாதியஸ்தர்கள் இருக்கமாட்டார்கள். மிஞ்சிப் போனால் யாராவது ஒருவர் உள்ளே இருப்பார். நேரத்தைப் போக்க அங்கிருக்கும் பெஞ்சில் உட்காருவாள் சீதா.

மார்பீ குழந்தை ஒன்று குண்டுக் கண்களை சுமிட்டி நீல பிரேமிற்குள்ளிருந்து லேசாய் புன்னகைக்கும்.

வெள்ளைச் சீருடை உடுத்தின நர்ஸ் ஒருத்தி 'சைலன்ஸ் ப்ளீஸ்' என்று உதட்டில் கையை வைத்து வலது பக்க சுவரிலிருந்து தொங்கிக்கொண்டு எச்சரிப்பாள். எல்லேவோ வண்டி வண்டியாய் பேஷண்டுகள் உட்கார்ந்து கொண்டு பேசுவது போல இவள் உஷ் என்று எச்சரிக்கிறாளே என்று எண்ணும்போது சீதாவுக்கு சிரிப்பு எழும்.

'டாக்டர் இஸ் இன் ப்ளீஸ் வெயிட்' என்ற கறுப்பு போர்டு, மஞ்சள் எழுத்துக்களைத் தாங்கிக் கொண்டு காற்றில் ஆடும்.

ஒருவழியாய ஐந்து ஊசிகளை சீதா போட்டுக் கொண்டு முடித்த அந்த தினத்தில் சுமித்ரா அண்ட் கோ, ஊர் திரும்பும் நாளைத் தாங்கிக்கொண்டு வந்த கடிதம் அவளுக்குக் கிடைத்தது.

அவர்கள் வரப்போகும் நாளில் அம்மா குழந்தை யுடன் நுங்கம்பாக்கத்துக்குப் போய்விட்டாள் சீதா.

சமயற்காரனிடம் தேவையான சமயலை சொல்லி விட்டு ஹாலில் காத்திருந்தபோது கார் வந்துவிட்டது.

இடத்தட்ட ஒரு மாசமாகிவிட்டது அவர்கள் ஊரைவிட்டுப் போய். கொண்டாட்டத்திற்கு கேட்க வேண்டுமோ?



பேச்சு, சிரிப்பு, குழந்தைகளின் கத்தல் எல்லாம் ஓய்ந்து சாமான்களை இறக்கினார்கள்.

கூடை கூடையாய் பேரிக்காய், ப்ளம்ஸ் பழங்கள்.

ஒரு மாசமாய லெட்டரில் எழுதினது போக பாக்கி இருந்த சமாசாரங்களை தோழிகள் பேசித் தீர்த்தார் கள்.

மஞ்சு இயற்கையிலேயே சிகப்பு.

மலைவாசம், மூக்கையும், கன்னங்களையும் இன்னும் சிவப்பாக்கியிருந்தது. புஸ்ஸென்று பெருத்து வேறு இருந்தாள்.

"மஞ்சுவை உன்னிடமே விட்டுவிடலாம் போலிருக்கே. என்ன கொடுத்தே சுமி இப்படி பெருத்திருக்கா?" என்று சீதா கேட்டதும் சுமித்ராவுக்கு ஏகப் பெருமை.

அன்று சீதா வீடு திரும்பும்போது மணி இரவு பத்துக்கு மேல் ஆகிவிட்டது.

மறுநாள் பகலில் மைலாப்பூருக்கு வந்த சுமித்ரா "கார்த்தால பூஜை வாத்தியார் வந்திருந்தார். என் மாமனாருக்கு வர மாசம் ஆறாம் தேதி நட்சத்திர பிறந்த நாளாம். ஷஷ்டி அப்த பூர்த்தி சீதா. தடபுடலாய் செய்ய வேண்டியதுதானே?" என்று சுமித்ரா பரபரத்துக் கொண்டு சொல்லவும் சீதா உண்மையிலேயே பரவசமாகிப் போனாள்.

அறுபது கல்யாணத்தை நன்றாய் செய்வது என்று விசு தீர்மானித்துவிட்டான்.

நாட்களோ அதிகமில்லை. வைதிகமாய் செய்து கொள்ள பெரியவர் ஆசைப்பட்டதால், அவர் விருப்பப் படி முதல் நாள் ஜபங்களுக்கும், மறுநாள் ஹோமங் களுக்கும், தாலி கட்டும் வைபவத்துக்கும் ஏற்பாடுகள்

ஆயினை. அழைப்பிதழ் அச்சடிக்க, புடவை துணிமணி நகைகள் மற்ற சாமான்கள் வாங்க என்று சீதாவும், சுமித்ராவுடன் பம்பரமாய் சுழன்றாள்.

மனசில் சந்தோஷம் நிறைந்திருந்ததாலும் வேறு எந்த் நினைப்பும் எழாதபடி வேலைகள் செம்மையாய் இருந்ததாலும், தன் மார்புக் கட்டியைப் பற்றியும், தான் போட்டுக் கொண்ட ஊசிகளைப் பற்றியும் சுமியுடன் சொல்ல அறவே மறந்துபோனாள் சீதா.

## 21

"அந்த ராக்கொடியை எடு சீதா... நான் இதை வைச்சுப் பின்னறதுக்குள்ள நீ சின்னதாய் மல்லிப்பூ வேணி ஒண்ணு தயார் பண்ணிடு... அம்மா சித்தே அசக்காம உட்காருங்கோம்மா... சீதா, மாட்டல்கள் எங்கே? உன் கிட்டேதானே இருக்கு?... கடைசியாய் அதையும் மறக்காம போட்டுவிடணும்..."

சுமித்ராவின் அதிகாரம் தூள் பறந்து கொண் டிருந்தது.

மணப்பெண்ணுக்கு அலங்காரம் நடக்கிறது, அலங்கரிப்பவள் சுமித்ரா. உதவி சீதா. மணப்பெண் என்ற பெயரில் சுமியின் அன்பு அதிகாரத்தில் மாட்டிக் கொண்டு முழிப்பது அவன் மாமியார் நீலாம்பாள்.

மாட்டல் போட்டு விடப்போகிறாள் மருமகள் என்று புரிந்ததும், ஏற்கனவே வெட்கத்தால் சிவந்திருந்த நீலாம்பாளுக்கு இன்னும் நாணம் கூடிப்போயிற்று.

ராக்கொடியே வேண்டாம் என்று சொல்லி இருந் தாள். சுமித்ரா விட்டால் தானே?



"ராக்கொடி வைத்துப் பின்னப் போகிறோமா, என்ன? பவிசாய் ஒரு கோடாலி முடிச்சுப் போட்டு, சின்ன தாய் வேணி வைத்தால் எப்படி இருக்கும் தெரியுமாம்மா?" என்று இவளை அவள் சமாதானப் படுத்தி விட்டாள்.

இப்போது மாட்டலா?

"என்ன சுமி... சின்னப் பொண்ணு மாதிரி மாட்டல் போட்டுண்டா இந்த வயசில் எப்படிம்மா இருக்கும்? எனக்கு வெட்கமா இருக்குடிம்மா..."

வெகுளித்தனமாய் மாமியார் கேட்கவும் சுமித்ரா வுக்கு சிரிப்பே எழுந்தது.

"உங்களுக்குப் பொருந்தாத மாதிரி நாங்க அலங் காரம் பண்ணுவோமாம்மா? என்னம்மா... எங்க பேரிலே அந்த நம்பிக்கை கூட இல்லையா?... இப்பவே உங்களை கண்ணாடிலே பார்த்துக்கோங்கோ. சிவப்பாய் கையில் மரு தாணி, கைநிறைய வளை; ராக்கொடி வைத்த கொண்டை, தோடு, மாட்டல், சிகப்பு வேல்தாரிப் புடவை... அப்பா பார்த்தா மயங்கிடப் போறார் போங்கோ..."

சுமித்ரா கேலி பண்ணப் பண்ண சுற்றி நின்ற எல்லாருக்கும் சந்தோஷமும் சிரிப்பும் பீரிட்டது.

பார்த்துக்கொண்டே இருந்த காமாட்சிக்கும் மனசு நிறைந்து போயிற்று.

இது என்ன அன்பு?

மாமியார், மாட்டுப்பெண் என்ற வேற்றுமை கடுகத்தனை கூட இல்லாமல் இது என்ன சத்தியமான அன்பு?

இப்படியும் ஒரு அன்யோன்யமான குடும்பம் இந்த கலிகாலத்தில் வேறெங்கிலும் காண்பது சாத்யமா என்ன?

பதினைந்து நாட்களாகவே சுமித்ரா இல்லம் அமர்க்களப்பட்டது.

முதல் நாள் ஜப ஹோம காரியங்களுக்கு — ருத்ர ஏகாதசினி அன்று உறவினர்களை மட்டும் கூப்பிடுவது என்றும், மறுநாள் ஹோம, கல்யாண வைபவத்தின்போது நண்பர்களையும் அழைப்பது என்றும் தீர்மானமாகி அதன் படியே அழைப்பிதழ்களையும் அச்சடித்தார்கள்.

நித்தமும் பள்ளியிலிருந்து மாலை நேராக நுங்கம் பாக்கத்துக்குப் போய் விடுவாள் சீதா. அழைப்பிதழ்களுக்கு விலாசம் எழுத, கடைக்குப் போக என்று வேலை நெட்டி முறியும். எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு இரவு, பத்தோ, பதினொன்றோ அவர்கள் காரில் இவள் வீட்டுக்குத் திரும்புவாள் முகூர்த்த நாள் நெருங்க நெருங்க "நீ இங்கேயே இரும்மா... என்னத்துக்காக மைலாப்பூ ராத்துக்குப் போகணும்? ஸ்கூலுக்கு லீவு போட்டுட்டு எல்லாரும் இங்கேயே வந்துடுங்கோ" என்று சுமி, விசு, பெரியவர்கள் எல்லாரும் நச்சரிக்கவே, நாலு நாட்கள் முன்னால் லீவு எடுத்துக்கொண்டு இங்கேயே வந்து விட்டார்கள், காமு, சீதா, குழந்தைகள்.

நுங்கம்பாக்கம் வீடு பெரிய வீடு. வீட்டைச் சுற்றிலும் கொட்டகை பந்தல். மாடியில் சாப்பிட என்று தனியாய் பெரிய பந்தல் ஒன்று.

விசுவநாதனோ ஒரே பிள்ளை; சுமித்ராவுக்கும் ஆசை அதிகம். பிறகு செய்வதற்கு கேட்பானேன்?

அம்மாவுக்கு செம்பு, வைரம் இழைத்த தாலி, ஜரிகை வேல்தாரிப் புடவை.

அப்பாவுக்கு லேடஸ்ட் ஓமேகா வாட்ச், பட்டு பத்தாறு இதையும் தவிர இருவருக்கும் ஜோடியாய் வைர மோதிரங்கள்.



கொள்ளை ஆசையுடன் பிள்ளை மாட்டுப்பெண் செய்வதைக் கண்டு களித்தாலும் ஒரு சமயம் "எதற்கப்பா இத்தனை அமர்க்களம்? வைதீக காரியங்கள் முக்கியம்... என்னத்துக்கு மத்தவைகளை இத்தனை தடபுடலாய் பண்ணணும்?" என்று சுப்பிரம்மண்யய்யர், விசுவின் தந்தை கேட்டபோது "எங்களுக்கு ஆசையாய் இருக்கே. அதனால் தானப்பா" என்றான் அடக்கத்துடன் விசு.

அருகில் நின்றிருந்த சீதா மட்டும் சொன்னாள். "அப்பா, அம்மா கல்யாணத்தை பார்க்கறதுக்கு ஏகப்பட்ட புண்ணியம் செய்திருக்கணும், மாமா. விசு, சுமி செய்த புண்ணியத்தாலே எங்களுக்கும்தான் உங்க கல்யாணத்தைப் பார்க்கிற பாக்யம் இருக்கட்டுமே..."

"ஒரு வார்த்தை பேசினாலும் முத்தாட்டம் பேசறே சீதா" என்று சொல்லி அணைத்துக்கொண்டாள், நீலாம்பாள்.

பிறகு?

பிறகென்ன?

ஜாம் ஜாம் என்று ஏற்பாடுகள் நடந்தன.

முதல் நாள் 'ருத்ர ஏகாதசினி' கண் கொள்ளா காட்சியாய் நடந்தது. தாமிர பாத்திரத்தால் ஆன பதினோரு கலசங்கள் வைத்து, பன்னிரண்டு வேத வித்துக்கள் பதினோரு முறை ஸ்ரீ ருத்ரம் ஜபம் செய்ய ஜபிக்கப் பட்ட தீர்த்தத்தால் தம்பதிகளை அபிஷேகம் செய்வித்து, எல்லோருக்கும் அந்தத் தீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்து வேதங்கள் முழங்க பிராம்மணர்களுக்கு ஐம்பத்திநாலு ரூபாய் தட்சிணையுடன், பாத்திரம், ஜபமாலை, வஸ்த்ரம் முதலியவை தானம் கொடுத்து அவர்களின் ஆசிர்வாதங் களைப் பெற்றுக்கொள்ள வைதீக காரியங்கள் ஆனந்தமாய் நிறைவேறின.

இன்று விடியற்காலையிலேயே எழுந்து மீண்டும் பதினைந்து கலசங்களை வைத்து, பதினைந்து வேத வித்துக்களை வர்ஷ, மால, திதி, வார, நக்ஷத்ர, யோக, கரண, நவக்ரஹ, வந்துர்கா, ஏகாதசி, ருத்ர, அயன, ருது, ஆயுர், தேவதாம்ருத்யுந்ஜய, ஸாத்குண்ய தேவதைகள், திக் பாலகர்கள் முதலிய தேவதைகளுக்கு ஆவாஹனம் பூஜை செய்து முடித்ததும், ரிக், சாம, யஜுர், அதர்வண வேத பாராயணங்கள் முழங்கியபோது கூடியிருந்த கூட்டத்தாரே பவித்ரமாகிப் போயினர். ஹோமம் முடிந்து, அந்தக் கலச தீர்த்தத்தை தம்பதிகளை ஒன்றாய் அமரச் சொல்லி ஸ்நானம் செய்வித்ததைப் பார்த்தவர்களெல்லாம் மனம் குளிர்ந்து போனார்கள்.

ஆயிற்று, இப்போது மணமகளுக்கு அலங்காரம் முடிந்து விட்டால் பிறகு மாங்கல்ய தாரணம்தான்

முதல்நாளே எல்லோருக்கும் புதிய ஆடைகள் கொடுத்து விட்டார் நீலாம்பாள்.

மஞ்சுவுக்கும், சுமியின் பெண் நீரஜாவுக்கும் முழுக் கரையிட்ட பட்டுப் பாவாடை, சட்டை.

சீதா ஆழ்ந்த நிறம் உடுத்த மாட்டாள் என்பதால் வெனிலா க்ரீம் உடம்பும் அகலமாய் வயலட் நிறத்தில் ஜரிகை யில்லாமல் கோபுரமிட்ட கரையுமாய் அவளுக்கும், சுமித் ராவுக்கும் ஜோடிப் புடவை.

காமுவுக்கு சந்தன நிறத்தில் தனிப்பட்டு.

கடுக்கத்தனைக்கு நின்று கொண்டிருந்த குழந்தை ராம்குமாருக்கு கூட சுமி பிள்ளை ராஜுவுக்கு போல முழு பாண்ட், ஷர்ட்

எவ்வளவோ சுமித்ரா எடுத்துச் சொல்லியும் "எனக்கு என்னத்துக்கு புதுசு, சுமி? நான் கட்டிக்க மாட்டேன். ப்ளீஸ்... டோன்ட் கம்பல் மீ" என்று சீதா



சொல்லி விட்டதால் சுமித்ரா மட்டும் தன் புடவையைப் பிரித்து உடுத்திக் கொண்டு விட்டாள்.

மணப் பெண் அலங்காரம் முடிந்துவிட்டது. சபைக்குப் போக வேண்டியதுதான்.

உட்கார்ந்திருந்த நீலாம்பாள் எழுந்து கொள்ளவும், அது நாழிகை அவளின் முதுகுப்புறத்தில், பூ வைத்து, மற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சீதா அவள் முன்னால் நின்று மாட்டலை ஒழுங்காய் மாட்டினாள்.

சுமித்ராவையும், சீதாவையும் மாறி மாறி பார்த் தாள் நீலாம்பாள்.

"ஏன் சுமி. சீதாவுக்குப் புடவை கொடுக்கலையா? அவ கட்டிக்கலையே...?"

'என்ன சொல்லட்டும்?' என்பது போல தோழியை ஏறிட்டு நோக்கினாள், சுமித்ரா. பிறகு "அவ கட்டிக்க மாட்டாளாம்மா" என்றாள் மெதுவாக.

"அப்படியா சீதா?"

"..............."

"சுமித்ரா எனக்கு மாட்டுப் பொண்ணுனா, நீ எனக்குப் பொறக்காத பொண்ணுனு நான் நினைச்சிண் டிருக்கேன்... அது பொய்யா சீதா?"

நீலாம்பாளின் அன்பின் தீவிரம் தாங்காமல் தவித்தாள் சீதா...

"இல்லே... வந்து... வந்து..."

"என் பொண்ணு புதுசு கட்டிக்காட்டா நான் சபைக்குப் போகப் போறதில்லை..."

நிதானமாய் பேசின நீலாம்பாள் அங்கிருந்த நாற் காலியில் உட்கார்ந்து விட்டாள்.

சீதாவின் கண்கள் பனித்துப் போயின.

இதென்ன பந்தம்?

"நான் கட்டிக்கறேன்ம்மா... உங்க அன்பு புரியாம அப்படிச் சொல்லிட்டேன்... இதோ..."

கைகள் பரபரக்க, புது புடவையை கட்டிக் கொள்ள ஓடினாள் சீதா.

கெட்டி மேளம் முழங்க வேத மந்திரங்கள் புனிதமாய் ஒலிக்க நீலாம்பாள் கழுத்தில் தாலியைக் கட்டினார் சுப்பிரமணியம்.

பந்தி பந்தியாய் சாப்பாட்டு அமர்க்களம் முடிந்து, நண்பர்கள் எல்லாம் தாம்பூலம் வாங்கிக் கொண்டு புறப்பட்டுப் போனதும், தம்பதிகளை உணவுக்கு அமர்த்தி கேலி செய்யும் கலாட்டா ஆரம்பமானது.

சாப்பிட உட்கார்ந்தவர்களைச் சுற்றி ஒரே கூட்டம்.

உறவினரில் பெண் வீட்டுக்காரர்கள், பிள்ளை வீட்டுக்காரர்கள் என்று பிரிந்து விட்டார்கள்.

எச்சில் மாற்றிக் கொள்ளுவதில் ஒரே குஷி.

பாதி உணவு அருந்துகையில் அப்பா இலையை அம்மாவுக்கும், அம்மா இலையை அப்பாவுக்கும் விஸ்வநாத் மாற்றி இழுத்து விட்டதும் 'ஹோ' என்ற சிரிப்பொலி எழுந்தது. சிரித்து, சிரித்து சீதாவுக்கு கண்களில் நீர் வழிய ஆரம்பித்து விட்டது.

ஒரே ஒரு கணம்தான். திடுக்கென்று அவள் நினைவு எங்கோ ஓடிவிட்டது.

முன்பொரு நாள் ராம்குமாருடன் அவள் வாழ்ந்த காலத்தில் அவனும் அவளுமாய் நண்பன் ஒருவனின் தந்தையின் அறுபது கல்யாணத்திற்குப் போனார்கள்.

வடக்கே இந்த மாதிரி வைபவம் கிடையாததால் ராம்குமாருக்கு ஒரே வேடிக்கை.



ஒவ்வொன்றையும் ஊன்றி ஊன்றிப் பார்த்தான்.

சாப்பாடு நடக்கையில் எச்சல் மாற்றிக் கொள்ளும் போது இவன் வெட்கத்தால் சிவந்து போனான்.

வீட்டுக்கு வரும் வழியில் "நான் உன்னே சொலலிக்கப் போனபோது அவாத்து பெண்களெல்லாம் பூக்காரன்கிட்டே பேசிண்டு இருந்தா. ராத்திரி அறையை ஜோடிக்கப் போறாளாம்... அதுக்குப் பூ நிறைய வேணும்னு சொல்லிண்டு இருந்தா" என்று சீதா சொல்லவும் ராம்குமாரின் குஷி கூடிப்போயிற்று.

அன்று இரவு படுத்தவன் என்ன நினைத்தானோ, சீதாவை அருகில் இழுத்து "ஹேய் நான் கண்டிப்பா ஷஷ்டி அப்த பூர்த்தி பண்ணிக்கிறதா தீர்மானிச்சுட்டேன்" என்றான்.

"இது என்ன கூத்து? இன்னும் இருபத்தைஞ்சு வருடம் கிடக்கு. அதுக்கு இப்போ என்ன?"

"கேளேன் சீதா... நம்ப ஷஷ்டி அப்த பூர்த்தியின் போது இன்னிக்கு அவா பண்ணின மாதிரி எச்சல் மாத்திக்க மாட்டேன்."

"பின்னே..."

"அப்படியே உனக்கு ஊட்டி விட்டுடுவேன்..."

"ஆசையைப் பார்... ஆசையை..." சீதாவுக்கு சிரிப்பு பீறிட்டு எழுந்தது.

"அப்புறம்... நமக்கும்கூட ராத்திரி அதெல்லாம் இருக்குமா, சீதா?"

"எதெல்லாம்?..." சீதாவுக்குப் புரியவில்லை.

"பூ போட்டு அலங்காரம் பண்ணற விஷயமெல்லாம்..."

"சீ..." சீதாவை நாணம் கவ்விக்கொண்டது.

எத்தனை ஆசை இந்த மனுஷனுக்கு என்று அன்று நினைத்தாள் அவள். ஆனால் நடந்தது என்ன?

"சீதா... என்ன யோஜனை?... எல்லோரும் சாப்பிடக் கூப்போறா. நாம்ப புடவை மாத்திண்டு வந்துடலாம் வரயா?" நினைவோட்டத்திலிருந்து மீண்ட சீதா தோழியைத் தொடர்ந்தாள்.

சுமித்ராவின் அறையில் புடவை ரவிக்கை மாற்ற முனைந்தபோது ஏதேச்சையாய் சீதாவை நோக்கித் திரும்பின சுமித்ரா அவள் மார்பில் கொட்டைப் பாக்களவுக்குப் பளபளத்துக் கொண்டிருந்த கட்டியைப் பார்த்தாள்.

"என்ன சீதா?" என்று தூக்கி வாரிப் போட்டவளாய் கேட்டதும் அப்போது தான்.

22

"என்ன சீதா?"

சுவரைப் பார்த்து திரும்பி நின்று கொண்டு கசகசத்துப் போன புது ரவிக்கையை அகற்றிவிட்டு, அவசரம் அவசரமாய் வேறு ஒன்று அணிவதற்காக, புடவைத் தலைப்பால் மார்பகத்தை மூடிக்கொண்டு, சற்றே திரும்பி ரவிக்கையை எடுக்க சீதா முனைந்த அதே சமயத்தில், அவிழ்த்துப்போட்ட புடவையை கையி லெடுத்துக் கொண்ட சுமித்ரா நிமிரவும், லேசாய் சீதாவின் புடவை விலகின காரணத்தால் இடது மார்பகத்தில் பள பளத்துக் கொண்டிருந்த அந்தக் கட்டியை பார்த்த சுமிக்கு தூக்கி வாரிப்போட்டது.

ஒரே பாய்ச்சலில் சீதாவை நெருங்கி ஒருகையால் அவள் தோளை இறுகப் பற்றிக்கொண்டு என்ன ஏது, என்று



சீதா நிதானிக்கு முன் சடக்கென்று தலைப்பைக் கீழே இழுத்து விட்டாள் சுமித்ரா.

அருமைத் தோழிதான் என்றாலும் நாணம் மேலிட்டவளாய் "சீ, என்ன சுமி! விடு, விடு" என்ற அவள் கையை உதறி தலைப்பை நேர் செய்தாள் சீதா.

சுமித்ரா விடவில்லை.

"என்னடி அது? கோலி குண்டு மாதிரி?"

"....................."

"என்ன சீதா, நான் கேட்கறது காதுலே விழலையா? என்ன கட்டி அது?"

விடாமல் தொண தொணத்தாள் சுமித்ரா.

"சின்ன கட்டி சுமி, வெயில் கால கட்டி, வேறொன்றுமில்லை... சும்மா சின்ன விஷயத்துக்கு தடபுடல் படுத்தாதே."

"சின்ன கட்டியா? இதுவா? எத்தனாம் பெரிசு இருக்கு? ஆமாம் மருந்து போட்டுண்டாயா? எத்தனை நாளா இருக்கு?"

"டாக்டர் உன்னிடம் பிச்சை வாங்கணும், என்ன மடக்கு மடக்கறே!" என்று கேலி செய்த சீதா அந்தக் கட்டி சுமார் இரண்டு மாச காலமாய் இருப்பதையும், போன மாசம் டாக்டரிடம் காட்டி ஐந்து பெனிசிலின் போட்டுக் கொண்டதையும், டாக்டர் இது வெறும் மாஸ்டைடிஸ் என்று சொன்னதையும் எடுத்துச் சொன்னாள்.

"ஏன் இதை எங்கிட்டே முன்னாலேயே சொல்லலை?" சின்ன குழந்தை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு சுமித்ரா கேட்டதும் சீதா சற்றே புன்னகைத்தாள்.

"வேணும்னு சொல்லாமலில்லை, மறந்துடுத்து" என்று சுமியை சமாதானம் செய்துவிட்டு "நாழியாறது, சாப்பிடப் போலாம் வா" என்று பேச்சை மாற்றினாள் சீதா.

இரண்டு மாசமாய் கட்டியுடன் தோழி துன்பப் பட்டிருக்காளே என்ற ஆதங்கம் சுமித்ராவுக்கு எழுந்தாலும் 'டாக்டர் பார்த்து வைத்தியம் செய்துவிட்டார்' என்ற நினைப்பும் கூட எழ சீதாவுடன் சாப்பிடப் போனாள்.

அடுத்த இரண்டு நாட்களில் வந்திருந்த உறவினர்க ளெல்லாம் ஊர் திரும்பிவிட்டனர்; கணக்கு வழக்குகளை தீர்த்தாகிவிட்டது; பந்தல் பிரித்து வீட்டை சற்றே ஒழுங்கு பண்ணின பிறகு குடும்பத்துடன் தன் வீட்டுக்குப் போனாள் சீதா.

அன்று இரவு எல்லா அமர்க்களமும் ஓய்ந்துவிட்ட தால் அப்பாடி என்ற ஆயாசம் மேலிட இரவு ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கப் போய் விட்டாள் சுமித்ரா.

கணவன் விசுவுடன் நடந்த சம்பவங்களையெல் லாம் பேசிக்கொண்டிருந்தவளுக்கு தூக்கம் கண்களை அழுத்தும் சமயத்தில் சீதாவின் நினைப்பு எழ, காரண மில்லாமல் அவள் மார்புக் கட்டியை பற்றியும் நினைத்தாள்.

கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந்த சுமித்ரா கண்களை மூடியவாறே அதைப்பற்றி கணவனிடம் பேசினாள்.

முதலில் அதிக நாட்டமில்லாமல் 'ம்' கொட்டிக் கொண்டு கேட்ட விசு இரண்டு மாசமாய் கட்டி இருப்ப தையும், பெனிசிலினுக்கு கட்டுப்படாததையும், கோலி குண்டு மாதிரி பளபளப்பதையும் சுமி சொன்னவுடன் ஏதோ எண்ணம் உந்த எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"டாக்டர் என்ன சொன்னாராம்?" அவன் குரலில் ஒரு பரபரப்பு.

"ரோஸ்டடிங், ஜலக்கட்டி"

"நிச்சயமாக அதுதான் என்றாரா?"



சுமித்ராவுக்கு பதில் சொல்லக்கூட முடியாதபடி தூக்கம் மயக்கம். "என்ன ப்ளீஸ்.. அதுதான் சொல்லிட் டாரே... என்ன திரும்பத் திரும்ப?... எனக்குத் தூக்கம் வரது..." என்று சொல்லிவிட்டு அந்தப் பக்கம் திரும்பிப் படுத்து விட்டாள்.

அடுத்த சில நிமிஷங்களில் ஆழ்ந்த உறக்கத்தில அமிழ்ந்து போன சுமித்ராவுக்கு விசு இருப்புக் கொள்ளாமல் எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்ததோ, புத்தக அலமாரியிலிருந்து வைத்திய சம்பந்தப்பட்ட புத்தகங்களை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்ததோ ஒன்றுமே தெரியாது.

மறுநாள் பிற்பகல் மணி இரண்டரை இருக்கலாம். அறுபது கல்யாணத்திற்கு வந்திருந்த பரிசுப் பொருட்களை பிரித்து அடுக்கிக் கொண்டிருந்த சுமித்ராவை சின்ன எஜமான் போனில் கூப்பிடுவதாக ஆள் வந்து சொல்ல அவள் எழுந்து போனாள்.

"நான்தான் விசு.. டாக்டர் கிட்டே பேசிண்டு இருந்தேன். சாயங்காலம் ஐந்து மணிக்கு ஃப்ரீயாக இருப்பா ராம். சீதாவை செக் அப்பிற்கு கூட்டிண்டு வந்தால் பார்க்கறேன்னார்..."

சுமித்ராவுக்கு தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை.

டாக்டரா? சீதாவா? என்ன சொல்றார்?

"எதுக்கு டாக்டர்?"

"நேத்து நீ சொன்னாயே சீதாவோட கட்டி பத்தி. அதுக்குதான் சுமி, அந்த மாதிரி ப்ரொலாங்டாக ஒரு கட்டி இருக்கறது நல்லதுக்கு இல்லையாம். டு பி ஆன் தி ஸேஃபா ஸைட் டெஸ்ட் பண்ணறது நல்லதுதானே? இப்போ நான் கார் அனுப்பறேன்... நீ உடனே கிளம்பி சீதாவோட ஸ்கூலுக்குப் போய் அவளைப் பிக்கப் பண்ணிண்டு

ஜெனரல் ஹாஸ்பிடலுக்குப் போய் இந்த டாக்டரைப் பாரு. நான் டிரைவர்கிட்டே டீடெய்ல்ஸ் சொல்லிடறேன்... சரியா?"

தான் சாதாரணமாய் ஒரு சமாசாரத்தைச் சொல்லப் போச அதை தீவிரமாய் எடுத்துக் கொண்டு முன் ஜாக்கிரதையுடன் இத்தனை ஏற்பாடு பண்ணுவதன் மூலம் திக்கற்ற சீதா குடும்பத்திடம் கணவனுக்கு உள்ள ஈடுபாட்டை சுமித்ரா உணர்ந்தபோது அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது.

"அப்புறம் சுமி... இதெல்லாம் என்னத்துக்குனு சீதா அப்ஜெக்ட் பண்ணினா ரொட்டீன் செக் அப்னு அவகிட்டே சொல்லு... அப்புறம்..."

கணவன் குரலில் ஏதோ ஒரு தயக்கம் இருப்பது சுமித்ராவுக்குப் புரிந்தது.

"என்ன ப்ளீஸ்?"

"ஒண்ணுமில்லை... டெஸ்ட் முடிஞ்சதும் சீதாவை வெளியே அனுப்பிச்சுட்டு டாக்டர்கிட்டே என்ன விஷயம், எப்போ ரிப்போர்ட் வாங்கிக்க வரணும்னு கேளு... சின்ன விஷயத்துக்காக சீதாவை வொரி பண்ண வைக்கக்கூடாது பாரு... அதுக்காகத்தான்..."

கணவனிடம் பேசிமுடித்த பிறகு மாமியாரிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டுப் புறப்படத் தயாரானாள் சுமித்ரா.

'சீதாவிடம் எனக்கு எத்தனை அன்பு இருக்கிறது என்று புரிந்துகொண்டு எவ்வளவு இதமாய் நடக்கிறார் என் விசு' என்று மனம் சந்தோஷித்தவாறே வந்த வண்டியில் ஏறிக்கொண்டு சீதா பள்ளிக்குப் போனாள் சுமி.

"இது என்ன, இந்த நேரத்தில?" சீதா முகத்தில் சந்தோஷம், திகைப்பு.



விசு சொன்னதைத் திருப்பிச் சொன்னாள் சுமி.

"சரிதான் ஆம்படையானும், பெண்டாட்டியுமாக சேர்ந்து கூத்தடிக்கிறேள்! இத்துனூண்டு கட்டிக்கு இத்தனை அமர்க்களமா? வெளியில் தெரிஞ்சா சிரிப்பா..."

"ரொடீன செக் அப் செய்துக்கறது நல்லது தானே?... சரி சரி... நீ பர்மிஷன் கேட்டுண்டு கிளம்பு..."

அடையாறிலிருந்து நேரே மைலாப்பூருக்குப் போனார்கள். அம்மாவிடம் டாக்டர் என்று சொன்னால் பயப்படுவாள் என்று எண்ணி வெளியே போகிறோம் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்.

வண்டியோட்டியிடம் விசுவநாத் எந்த இடம், எப்படிப் போகவேண்டும் என்று சொல்லி இருப்பான் போலிருக்கிறது. ஜி. எச்.-ல் நுழைந்த வண்டி இடது, வலது என்று திரும்பி ஒரு இடத்தில் நின்றது.

"முதல் மாடிலே வலது பக்க இரண்டாம் அறைனு ஐயா சொன்னாரு."

தோழிகள் இறங்கி வார்டுகள் வழியாய் நடந்தார்கள்.

ஆஸ்பத்திரி வாடை.

எங்கோ 'ஹோ' என்ற ஓலம்.

நோயால் துடிக்கும் நோயாளிகள்.

சுமித்ரா பேசினாள்:

"தங்களோட கஷ்டத்தையே எப்போதும் நினைச்சுண்டு புலம்பறவா எல்லாம் ஆஸ்பத்திரிக்கு ஒரு தடவை வந்துட்டுப் போனாப்போறும்... இங்கேயிருக்கிற கஷ்டங்களையும், அவஸ்தைகளையும் பார்த்தால் தங்களது எத்தனை சின்ன கஷ்டம்னு புரிஞ்சிப்பா... இல்லையா?..."

பேசிக்கொண்டே மாடி அறையை அடைந்து விட்டார்கள்.

மாடி வராந்தாவை வெள்ளைக் கோட்டு தரித்த குட்டி டாக்டர்களும், ஹவுஸ் ஸர்ஜன்களும் நிறைத்தார்கள்.

அறைக் கதவை தட்டிவிட்டு இவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

டாக்டர் இவர்களுக்காகவே காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

சிரித்த முகம்.

சற்றே காதில் ஓடின நரை.

அமைதியான கண்கள்.

அடுத்த அறைக்குள் சீதாவை அழைத்துக் கொண்டு போய் விதவிதமாய் பரிசோதித்தார்.

ரவிக்கையையும், ப்ராவையும் களைய சீதா சற்று தயங்கின காலத்தில் "உன் முகமோ, கையோ, மார்போ, கால்களோ, எனக்கு எல்லாம் ஒன்றுதானம்மா... நான் வைத்தியன்; நீ பேஷண்ட்..." என்று அவர் சொன்னதும் தன் தயக்கத்தைக் குறித்து சற்றே அவமானம் கொண்டாள் சீதா.

சீதாவின் குழந்தைகளைப் பற்றி, அவள் வேலைப் பார்க்கும் பள்ளியைப் பற்றி என்று சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டே பரிசோதனைகளை முடித்தார் டாக்டர்.

"நான் இது எந்த மாதிரிக் கட்டி என்று தெரிய பையாப்ஸிக்கு எடுத்திருக்கேன்... ஐ வில் டாக் டு மிஸ்டர் விஸ்வநாத் டுமாரோ" என்று டாக்டர் சொல்லவும் இவர்கள் 'தேங்க்யூ' என்று தெரிவித்துவிட்டு வெளியே வந்தார்கள்.

" 'கன்ஸல்டேஷன்' பீஸ் கொடுக்கணுமோ என்னமோ... நீ இங்கேயே இரு சீதா... இதோ வந்துடறேன்"



என்று நினைத்துக்கொண்டு சொல்லிவிட்டு சுமித்ரா மாத்திரம் மீண்டும் அறைக்குள் போனாள்.

வெளி அறையில் மரபெஞ்சில் உட்கார்ந்தாள் சீதா.

அந்த தளத்தில் ஆபரேஷன் தியேட்டர் இருக்கும் போலிருக்கிறது.

தடதடவென்று ட்ராலி சப்தம்.

இரண்டு சிப்பந்திகள் மயக்க நிலையில் கிடத்தப் பட்ட ஒருவனை ட்ராலியில் தள்ளிக்கொண்டு போனார்கள்.

அந்த மனிதனின் கண்கள் செருகிக் கிடந்தன.

கையில் ரத்தம் செலுத்தும் ரப்பர் குழாயுடன் இணைந்த ஊசி.

மூக்கில் ஆக்ஸிஜன்.

கூடவே அழுதழுது சிவந்த கண்களுடன் இரண்டு பெண்கள்.

மனைவி? தங்கை?

சீரியஸ் கேசா?

சீதாவையும் மீறிக்கொண்டு நினைவுகள் விஸ்வரூபம் எடுத்தன.

ராம்குமார் நினைவில்லாமல் கிடந்தது.

கைகளில், காலில், மூக்கில் விதம் விதமாய் ரப்பர் குழாய்கள்.

களை இழந்த முகம்.

நீலம் பாரித்த உதடுகள்.

நினைவுகளிலிருந்து மீள தலையை உலுக்கிக் கொண்டாள் சீதா?

என்ன செய்கிறாள் இந்த சுமி? இத்தனை நிமிடங்களா?

அறைக் கதவைத் திறந்துகொண்டு வந்த சுமியின் முகம் நன்றாக இல்லை.

நல்ல வேளையாய் சீதாவின் கவனம் அவ்வழியாய் போன ஒரு நோயாளியின் மீதே இருந்தது.

அந்த ஒரு நிமிஷத்தில் தன்னை சுதாரித்துக் கொண்டாள் சுமித்ரா.

"போலாமா?"

காரில் ஏறிக் கொண்டு தலையை கைகளால் அழுத்திக் கொண்டாள் சுமித்ரா.

"தலை வலிக்கிறது சீதா. எங்காவது காத்தாட உட்காரலாமே?"

"பீச்சுக்குப் போகலாமா?"

இருள் நன்றாய் சூழ ஆரம்பித்துவிட்ட நேரம்.

"வேண்டாமே, கோவிலுக்குப் போயிட்டுப் போவோம்."

கார் கபாலீஸ்வரர் கோயிலை நோக்கிப் போனது.

"என்ன சொன்னார் டாக்டர்?" என்று நல்ல வேளையாய் ,சீதா கேட்காததால் பெருமூச்சு விட்டாள் சுமித்ரா.

ஸ்வாமி, அம்மன் தரிசனத்தை முடித்துக்கொண்டு பிரகார மணலில் அமர்ந்தார்கள்.

சற்றுத் தொலைவில் ராமாயண உபந்நியாசம் நடந்து கொண்டிருந்தது.

"கைகேயி இரண்டு வரங்களைக் கேட்டதும் மூர்ச்சித்து விழுந்த தசரத சக்ரவர்த்தியின் நிலையை கவி எப்படி விளக்குகிறார் என்றால், வனத்தில் மானொன்று மேய்ந்து



கொண்டிருந்ததாம். எங்கோ சென்று கொண்டிருந்த ஒரு பெண்புலி பசி தாங்காததால் பெரியதாய் கர்ஜித்ததாம். கண்காணாத தொலைவில் இருந்தாலும் அந்த கர்ஜனையைக் கேட்டதும் சாதுவான மான் பயந்து மூர்ச்சித்து விழுந்துவிட்டதாம். புலி அருகில் வந்து விழுந்து கிடந்த மானைப் பார்த்ததாம். இதற்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்று முகர்ந்து பார்த்துவிட்டு 'சரி உயிர் இருக்கிறது ஒரே கடியாய் கடித்து முழுங்கி விடலாம்' என்று தீர்மானித்துத் தன் வாயை திறந்து கொண்டு மானின் கழுத்தை நெருங்கியதாம். மூர்ச்சையாய் கிடந்த மான் மயக்கம் தெளிந்து 'கடவுளே, அந்தப் புலி எங்காவது போயிருக்க வேண்டுமே' என்று வேண்டிக் கொண்டு கண்களைத் திறக்கவும், புலி வாயைத் திறந்து கொண்டு நிற்கவும் சரியாக இருந்ததாம். அந்த நிமிஷம் எப்பேர்ப்பட்ட பயங்கரமான நிலையில் மான் இருந்ததோ, அதே நிலையில்தான் அன்று தசரதன் இருந்தானாம்..."

அருகில் இருந்த சீதாவை திரும்பிப் பார்த்த சுமித்ராவுக்கு இன்று மானின் நிலையில் இருப்பது சீதாதான் என்பது புரியவே துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு கண்களில் நீர் வழிந்தது.

## 23

பெரிய அலை ஒன்று சீறிக்கொண்டு எழுந்து 'உங்களையெல்லாம் மூழ்க அடித்து விடுகிறேன் பார்' என்று வேகத்துடன் பொங்கி, முன் வந்து இருபதடி தாண்டுவதற்குள் ஆவேசம் அடங்கிப் போனதாய், நுரையாக மாறி மேட்டில் ஊறியது. அலையின் தண்ணீர் திரும்ப கடலுக்குள்ளேயே வடிந்ததும், மேட்டிலிருந்த நுரை வற்றினதும்,

எங்கிருந்தோ நண்டு ஒன்று தலையை நீட்டியது. சற்றே சிவந்த ஓட்டைக் கொண்ட அந்த நண்டு எதையோ பறி கொடுத்தாற்போல அப்படியும் இப்படியும் ஓடி, மீண்டும் மணலுக்குள்ளேயே புகுந்து, சற்று தள்ளி மறுபடியும் புது வளையிலிருந்து தன் கொடுக்கை நீட்டியது. அடுத்தாற்போல அலை ஒன்று வரவும் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. அந்த நண்டு தண்ணீரோடு போய்விட்டது போலும் என்ற எண்ணம் தோன்றி மறைவதற்குள் ஒரு அடி தள்ளி, அதே சிவந்த ஓட்டு நண்டு மணலிலிருந்து வெளி வந்து குடு குடுவென்று ஓடியது. ஒவ்வொரு முறை அலை வந்து மறுபடியும் போனதும் அங்குமிங்குமாய் பல நண்டுகள் தோன்றினாலும், இந்த சிகப்பு நண்டிடம் மாத்திரம் ஒரு அலாதி வேகம், துடிப்பு இருந்தது.

கோவணாண்டிகளாக இரண்டு சின்ன பையன்கள் கையில் ஒரு பையுடன் குனிந்து எதையோ பொறுக்கிக் கொண்டே வந்தார்கள். ஆள் அரவம் கேட்டு சிதறி ஓடின நண்டுகளை அவர்கள் பிடிக்கும் நேரத்தில் அந்த சிவந்த நண்டு மேல் அவர்கள் பார்வை போகவே அதையும் பிடிக்க முயன்றார்கள்.

கையை இடுக்கிபோல வைத்துக்கொண்டு, பையப் பைய ஒரு பிள்ளை குனிவதற்குள் மாயமாய் மணலுக்குள் மறைந்தது அந்த நண்டு. அலை வந்து போனதும் தலை தூக்கும், அப்போது பிடிக்கலாம் என்று காத்து நிற்கும் பையன்களின் கைகளில் மற்ற ஏமாந்த நண்டுகள் கிடைக்கின்றனவே தவிரவும், இது சிக்க மாட்டேன் என்றது.

"எங்கடா போச்சு?"

"வளை ஆழமா இருக்குமாடா? போய் பதுங்கிச்சோ?"

"தண்ணியிலே போயிருக்கும்டா..."



"அந்தா பாருடா அதேதான் சிவப்பா இருக்குது பாரு. என்னமாடா அம்மாந் தூரம் மணலுக்குள்ளேயே போயிருக்கும்?"

எமகாதக நண்டு மூன்று அடி சுற்றுப் பரப்பில் ஓடி, ஒளிந்து, மாயமாலம் பண்ணியதால் பையன்கள் சலித்துப் போய், "இது வேண்டாம்டா. வா, வேறே அங்கே போய் புடிச்சுக்கலாம்" என்று திரும்பி விட்டார்கள்.

சிகப்பு நண்டு நன்றாய் வளையிலிருந்து வெளியே வந்து தனது வெற்றியை கொக்கரிக்கிற மாதிரி கொடுக்குகளைத் தூக்கிக்கொண்டு ஒரு வட்டம் அடித்துவிட்டு மீண்டும் மணலுள் மறைந்தது.

கடலுக்கு மிக அருகில சற்றே மேடான பகுதியில், கரையில் இழுத்து நிறுக வைத்திருந்த படகு ஒன்றின் நுனிப் பகுதியில் சௌகரியமாய் சாய்ந்தவாறு அமர்ந்திருந்த சீதாவின் கண்கள், அலைகளில் அளையும் மஞ்சு, ராஜுவிடம் அருகே மணலில் குழிபறித்து மலை கட்டி விளையாடிக் கொண்டிருக்கும் ராம்குமார், சுமியின் பெண் நீரஜாவிடம் இருந்தாலும், அடிக்கடி மீறிக்கொண்டு ஈர மணலில் அட்டகாசம் செய்யும் அந்த நண்டிடமே ஓடின.

மணலைக் குடைந்து வளைகட்டி, அதனுள் மறைந்து, மறைந்து அந்த நண்டு செய்யும் சாகசம் அவளை வெகுவாகக் கவர்ந்தது.

ஏனோ தெரியவில்லை. எப்போது கடற்கரைக்கு வந்தாலும் சிறு குழந்தை போல கடலோரத்தில் அமர்ந்து சிதறும் நண்டுகளைப் பார்ப்பதென்றால் அவளுக்குப் பிடிக்கும்.

அலைகளின் ஆர்ப்பரிப்பையும் மீறிக்கொண்டு ராஜு ஏதோ உரக்கக் கூறுவது அவளுக்குக் கேட்டது. தொடர்ந்து அடுக்கடுக்காய் எழுந்தது மஞ்சுவின் சிரிப்பு.

கூந்தல் பிரிந்து முகமெல்லாம் கூத்தாட, பளிரென்று பல் வரிசை மின்ன, வளர்ந்துவிட்ட உடலுமாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மஞ்சரி வளர்ந்து வருவது சீதாவுக்கு மீண்டும் இந்தக் கணத்தில் நினைவுக்கு வந்தது.

ஆயிற்று இன்னும் ஒருவருஷ காலமோ, இல்லை அதற்குள்ளேயோ! மஞ்சுவின் வளர்த்தி அவள் சீக்கிரத்தில் பருவமடைந்துவிடுவாள் என்பதையும் நினைவூட்டியது.

இனிமேலதான் பொறுப்பெல்லாம்! பெண்ணை அழகாய் வளர்த்து ஒருவனிடம் ஒப்படைக்கவேண்டும்; பிள்ளையை உயர்ந்த படிப்பு படிக்க வைத்து நல்ல வேலையில் அமர்த்த வேண்டும். இவைகள் தான் அவள் நெஞ்சத் துடிப்போடு கலந்துவிட்ட வேகம். ராம்குமார் உயிரோடு இருந்த போது ஆயிரமாயிரம் முறைகள் சொல்லக் கேட்டுக் கேட்டு தன் நெஞ்சுக்குள்ளேயே இட்டுக் கொண்டு விட்ட சபதங்கள்.

"பெரிம்மா... மணி என்ன? அம்மா எப்ப வருவா?" நீரஜா கேட்ட கேள்வியால் தன் சுய நினைவுக்கு வந்தாள் சீதா.

"இதோ வந்துடுவாம்மா... நீ விளையாடு..."

எங்கே போனார்கள் இந்த சுமியும் விசுவும்?

மாலை மணி ஐந்து இருக்கும். திடுப்பென்று குழந்தைகளோடு வந்தவர்கள் 'கிளம்பு சீதா. பீச்சிற்குப் போகலாம். உன்னையும் குழந்தைகளையும் அங்கேயே விட்டுட்டு, எங்களுக்கு கொஞ்சம் வேலை இருக்கு. முடிச்சிட்டு வரோம்' என்று இவளையும் கிளப்பினார்கள்.

காரில் ஏறுவதற்குள்ளேயே சுமித்ராவின் முகம் வாடியிருப்பதை சீதா கண்டு கொண்டாள்.

"ஏய், எனிதிங் ராங்? ஏன் என்னமோ மாதிரி இருக்கே சுமி?"



"ம்?... ஒண்ணுமில்லை..." சிரித்து சமாளித்தாள் சுமித்ரா. பிறகு "நேத்திக்கு ஆரம்பிச்ச தலைவலி இன்னும் போகலை சீதா, அதுதான்..." என்றாள்.

என்ன சொல்லியும் ஏதோ விஷயம் இருக்கிறது என்றே ஊகித்த சீதா, விஸ்வநாத்தும் வழக்கத்துக்கு மாறாக கனமான முகத்துடன் இருந்ததால் கணவன் மனைவி நடுவில ஏதாவது சின்ன சண்டை, வாக்குவாதம் மூண்டிருக்கலாம் என்றும் நினைத்தாள்.

பீச்சில் சீதாவையும், குழந்தைகளையும் இறக்கி விட்ட விசு, "வழக்கமான இடத்தில் இருங்கள். வீ வில் கம் பேக் ஆஸ் ஏர்லி ஆஸ் பாஸிபிள்" என்று சொல்லி விட்டுக் காரைக் கிளப்பினான். சற்று தொலைவு சென்றதும் மனைவியின் ஒரு கையை இடது கையால் எடுத்து, ஆதரவுடன் அழுத்தி, "சீதாவுக்கு ஏதோ விஷயம்னு புரிஞ்சுடுத்து... கொஞ்சம் கலகலப்பா இருக்க முயற்சி பண்ணும்மா... நாம்ப தைரியமா இருந்தாலதானே நல்லது சுமி" என்று மெதுவாய் கூறினான்.

என்ன தேற்றிக்கொண்டாலும் முதல் நாளிலிருந்து கட்டுப்படாமல் வெடித்துக் கொண்டிருந்த அழுகை அப்போதும் சுமித்ராவுக்கு பொங்கவே செய்தது.

"என்னாலே நினைச்சுக்கூட பார்க்க முடியலை விசு... என் சீதாவுக்கு ஏன் இப்படி மேல் மேலே கஷ்டம் வரணும்?... ஓட ஓட விரட்டினா அவ என்ன பண்ணுவா? நல்ல மனசு கொண்ட என் சீதாவுக்கு சோதனைகள் போதாதா?..." அழுது கொண்டே புலம்பினாள் சுமித்ரா.

பாவம் அவன்தான் என்ன பண்ணுவான்?

முதல் நாள் கன்ஸல்டேஷன் பீஸ் கொடுத்துட்டு வந்துடறேன், நீ இரு சீதா, என்று சொல்லிவிட்டு டாக்டரின் அறைக்குள் போனவனுக்கு ஒரு மாதிரி உண்மை நிலை புரிந்து போனது.

"உட்காருங்க மிஸஸ் விஸ்வநாத். உங்களை மட்டும் எப்படித் தனியா கொஞ்சம் இருங்கனு சொல்றதுன்னு யோசிச்சேன்... குட் திங் யூ ஹாவ் கம் பை யுவர் செல்ஃப்..."

சுமித்ரா உட்கார்ந்தாள். "இன்னிக்கு காலையிலே மிஸ்டர் விஸ்வநாத் போனிலே சொன்ன போதே நான் சந்தேகப்பட்டேன். இப்ப ஓரளவுக்கு நிச்சயம்தான்... சந்தேகமே வேணாம்னு பையாப்ஸிக்கு எடுத்திருக்கேன். ஐ ஆம் ஸாரி"

சுமித்ராவுக்கு ஒன்றும் புரியவில்லை.

டாக்டர் முகத்தில் ஏனிந்த வருத்தம்?

குரலில் ஏனிந்த தயக்கம்?

என்ன விஷயம்?

"ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட் யூ டாக்டர்..."

கண்களை விழித்து 'உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?' என்பது போல பார்த்த டாக்டர் "மிஸ்டர் விசு உங்களிடம் ஒண்ணுமே சொல்லலியா?" என்றார்.

இல்லை என்பது போல தலையாட்டினாள் சுமி.

சற்று மௌனமாயிருந்த டாக்டர் தனக்குத்தானே ஏதோ யோசித்துவிட்டு "எல்லா விவரத்தையும் நான் மிஸ்டர் விசுகிட்டே பேசிக்கிறேன். நீங்க போங்கம்மா..." என்றார் மெதுவாக.

டாக்டர் எதை மறைக்கிறார்?

ஏன் விசுவிடம் பேசுகிறேன் என்கிறார்?

சுமித்ராவினுள் ஒரு படபடப்பு.

"என்ன விஷயம் டாக்டர்... பயப்படும்படி ஒண்ணும் இல்லையே..."



பரிதாபமாய் தவித்த அவளை டாக்டர் ஏறிட்டுப் பார்த்தாரே தவிர வாய்வார்த்தைகளாய் ஒன்றுமே சொல்லவில்லை.

மனக்கலக்கத்துடன் வெளியே வந்த சுமித்ரா 'தலை வலி' என்று சொல்லி சீதாவிடமிருந்து தப்பித்துக் கொண்டாள்.

'ஆனாலும் சம்திங் ஈஸ் ராங்' என்று மனசு சதா முணு முணுத்ததால் இரவு கணவன் வீடு திரும்பினதும் மாடி அறையில் தன் சந்தேகத்தைக் கேட்டுவிட்டாள்.

"டாக்டர் என்னமோ சொல்ல வந்தார்... அப்புறம் என்கிட்டே நீங்க ஒண்ணும் சொல்லலைனு தெரிஞ்சதும் மேற்கொண்டு விபரம் சொல்ல மாட்டேனுட்டார்... என்ன விசு? சீதாவுக்கு என்ன?"

சுமியின் கஷ்டம் விசுவுக்குப் புரிந்தது. அவன் மனம்படும் பாட்டை அவளிடம் எப்படி எடுத்துரைப்பான்?

"நீ நேத்து ராத்திரி என்கிட்டே சொன்னபோதே எனக்குள்ளே ஒரு நெருடல்... கார்த்தால டாக்டர் கிட்டே பேசினேன்... அவரும் நான நினைச்ச மாதிரியே நினைச்சார... பேஷண்ட்டை பார்த்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்னார்... ஹி டெலிபோன்ட் மீ... அவர் சந்தேகம் முக்கால்வாசி நிஜமாயிடலாம்னு பயப்படறார்... படிச்சவா நீங்களே இப்படி காலத்தைக் கடத்தியிருக்கேளேனு ரொம்ப வருத்தப்பட்டார்... சுமி நாளை வரப்போற ரிப்போர்ட்டை எதிர்நோக்க என் மனசுக்கே தைரியமில்லையே... அந்தப் பெண் சீதா... எப்படி?" மேலே பேச முடியாமல் விசுவின் குரல் கம்மிப் போயிற்று.

"டாக்டர் என்னனு சந்தேகப்படறார்...?" தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் சுமித்ரா.

கணவன் மெதுவாய், ரகசியம் பேசுவது போல சொன்னதைக் கேட்டு மின்சாரம் பாய்ந்தாற்போல பல கணங்கள் பிரமை கொண்டவள் சுயநினைவு வந்ததும் "இல்லை... இது பொய்... பொய்... திஸ் கான்ட் பீ ட்ரூ..." என்று உரக்கக் கூவி அழுதாள்.

"கண்களை துடைச்சிக்கோ சுமி. ஹாஸ்பிடல் வந்தாச்சு"

காரை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி விட்டு மனைவி பக்கம் திரும்பின விசு "நீயும் வரயா? இல்லை நான் மட்டும் போயிட்டு வந்துடட்டுமா?" என்றான்.

பதில் பேசாமல் வண்டியை விட்டு இறங்கினாள் சுமி.

மாடி ஏறிப் போனார்கள்.

முதல்நாள் அடித்த அதே மருந்து வாடை, கேட்ட வேதனை முனகல்கள், கண்ட நோயாளிகள்தாம் என்றாலும் இன்று எல்லாமே லட்சோப லட்சம் மடங்குகள் பெரியதாகி சுமித்ராவைப் பிழிந்து எடுத்தன. இவர்களை உட்கார்த்தியதும், 'ஐ ஆம் ஸாரி' என்று வைத்தியரே வலுவில் ஆரம்பித்ததும் எல்லாம் புரிந்துபோயிற்று.

"சின்னப் பெண். வாழ்க்கையில் கஷ்டப்பட்டவள் என்று வேறு சொன்னீங்க... மிஸ்டர் விசு! ஏன் இத்தனை காலதாமதம்?... இரண்டு மாசத்தில் வியாதி வேர் விட்டு பரவி விட்டுதே. ஓ காட்? ஹௌ ஐ விஷ் ஐ கேன் ஹெல்ப் யூ இன் திஸ் மாட்டர்..."

"உங்க சீதாவுக்கு கான்ஸர். அதுவும் பரவக்கூடிய புற்று நோய்னு நிரூபணமாயிடுத்து மிஸ்டர் விசு... எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாய் ஆபரேஷன் பண்ணறோமோ அவ்வளவு நல்லது... கான்ஸர்னா என்ன தெரியுமா? லத்தீன் மொழியிலே கான்ஸர்னா நண்டுனு அர்த்தம்... சரியாத்தான் பேர் வச்சிருக்காங்க. மணலை நண்டு குடைந்து வளை கட்டுவது போல மனித உடம்பை



இந்த வியாதி குடைந்து பரவிவிடும் மிஸ்டர் விசு... மணலுக்குள் புகுந்து மறையும் நண்டு போல இதுவும் உடலுக்குள் எங்கே புகுந்து கொள்ளும், எங்கே மறைந்து கொள்ளும்னு ஒண்ணுமே புரியாது. அதனாலேதான் சொல்றேன்... உடலுக்குடன் ஆபரேஷன் பண்ணி இந்த நண்டை வேரோடு தோண்டி எடுக்கணும்... யூ அண்டர்ஸ்டாண்ட் மீ?..."

டாக்டர் பேசிக்கொண்டே போனார்.

சுமித்ராவுக்கு ராட்சத நண்டு ஒன்று தன் இரு கொடுக்குகளுக்குள் தன் ஆருயிர் சீதாவைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்ற ஒரு உண்மையைத் தவிர வேறு ஒன்றுமே புரியவில்லை.

## 24

சுமித்ரா அழுதுகொண்டிருந்தாள். கட்டிலில் குப்புறப் படுத்துக்கொண்டு அடக்க மாட்டாமல் திக்கி, திக்கி அழுது கொண்டிருந்தாள்.

நினைக்க, நினைக்க 'சீ என்ன வாழ்க்கை, என்ன வேதனை' என்ற நினைப்பே வளர்ந்து அழுகை இன்னும் அதிகமாகிப் போனது.

சீதாவுக்கு கான்ஸர்.

என் வயசை ஒத்த சீதாவுக்கா புற்றுநோய்?

பாழும் கான்ஸர்.

என்னவெல்லாமோ செய்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்ளும் மனித இனத்தின் — சந்திரனில் இறங்கி விட்டோம் என்று எக்காளமிடும் விஞ்ஞானிகளின் — கைகளில் பிடிபடாமல் இதுநாள்வரை ஒரு மருந்துக்கும் கட்டுப்படாமல் வளர்ந்து வரும் பாழும் கான்ஸர்.

சுமித்ராவுக்கு எல்லாம் வெறுத்துப் போயிற்று.

எதை சாதிக்கவென்று விதி இப்படி சீதாவை ஓட ஓட விரட்டுகிறது?

சின்ன வயசிலே அப்பா இறந்து குடும்பப் பொறுப்பு.

பின்னால் அன்புக் கணவனையும் பிரிந்தாள்.

இப்போது தீராத இந்த பயங்கர நோயா?

ஐயோ, எதற்காக?

எதற்காக என் சீதா இப்படி மேன்மேலும் கஷ்டப்பட வேண்டும்?

எனக்கும் அவள் வயசுதானே?

நான் சின்ன வயசு முதற்கொண்டு கடுகத்தனை கஷ்டத்தையாவது உணர்ந்திருக்கிறேனோ?

ம்ஹூம்... இல்லை.

அன்பான அப்பா அம்மா. இதமான சூழ்நிலை. பின்பு இன்னும் உயர்ந்த குடும்பத்தில் வாழ்க்கை, அன்புக் கணவன், அழகாய் புத்திசாலிகளாய் குழந்தைகள்.

எனக்கு என்ன குறை?

ஒன்றும் இல்லை.

எனக்கு ஏதாவது ஒரு சின்ன கஷ்டம்?

ம்ஹூம் ஒன்றுமில்லை?

எனக்கு ராஜபாட்டை; என் சீதாவுக்கு முள்ளும், கல்லும் நிறைந்த சந்து. இது ஏன்?

இந்த பாரபட்சம் கடவுளுக்கு எதனால் உண்டாயிற்று?

குமுறி அழும் சுமித்ராவுக்கு திடீரென்று என்றோ சீதா சொன்னது நினைவுக்கு வந்தது.

ஒரு சமயம் ஸரஸுக்கு வளைகாப்பு செய்கிறேன் என்று இவர்கள் போய்விட்டு, அவமானப்பட்டுத் திரும்பியதும் பொறுக்க மாட்டாமல் சுமித்ரா சொன்னாள். "உனக்குத்தான் ஓயாமல் மனசுக்கு வேதனை சீதா... எப்படித் தான் எல்லாத்தையும் தாங்கிக்கிறாயோ? உன் கஷ்டத்திலே பாதி எனக்கு வரப்படாதா?"



அப்போது அவர்கள் இருவரும் தனித்திருந்தார்கள்.

பேசிய தோழியின் கையை பிடித்துக் கொண்டாள் சீதா. "தப்பித் தவறிக்கூட இனிமே இப்படி பேசாதே சுமி.. நான் சின்ன வயசிலேர்ந்தே கஷ்டப்பட்டு வளர்ந்திருக்கேன். அதனாலே என்னாலே இதையெல்லாம் சாதாரணமா தாங்கிக்க முடியும்... ஆனா உன் வாழ்க்கை இது நாள் வரை மேடு பள்ளமே இல்லாம ஒரே சீரான "ஹைவே" மாதிரி இருந்திருக்கு. உன்னால் ஒரு சின்ன கஷ்டத்தைக்கூட தாங்க முடியாது... நான் கடவுள்கிட்டே வேண்டிக்கிறதும் இதேதான்... மேடு பள்ளம் பார்க்காமலேயே என் சுமி இருக்கணும்னுதான் நித்தமும் வேண்டிக்கறேன்..." சீதாவின் உண்மையான பேச்சைக் கேட்டதும் அன்று சுமித்ராவின் கண்கள் கலங்கிவிட்டன.

அதை இன்று நினைத்துக் கொண்டதும் மேலும் துக்கம் தாங்கிக்க முடியாததாகிப் போயிற்று.

மேடு பள்ளம் எனக்கே இருக்கட்டும் என்ற என் சீதாவின் வாழ்க்கை இனி மேட்டையே காண முடியாத பள்ளமாகிப் போயிற்றே என்று எண்ணி வேதனை கொண்டாள்.

ஒருசில மணி நேரங்கள் முன்பு டாக்டரோடு பேசின பேச்சுக்களெல்லாம் மீண்டும், மீண்டும் மனசில் வந்து போயின.

"நிச்சயமா கான்ஸர்தானா, டாக்டர்? வேறு ஏதாவதாக இருக்க இடம் இல்லையா?" விசு பரபரத்தான்.

"பையாப்ஸி ரிப்போர்ட் ஊர்ஜிதப் படுத்தின பிறகு வேறு எப்படி நினைக்க முடியும்?... இரண்டு மாசமா இருப்பதை கொஞ்சம் முன்னாலேயே கவனிச்சிருந்தா எவ்வளவு சௌகரியமாய் இருந்திருக்கும்?"

"கவனிச்சாளே, டாக்டர்... போன மாசம் பார்த்த அந்த டாக்டர் மாஸ்டைடிஸ் — இன்ஜெக்ஷன் கூட போட்டிருக்காரே..."

"ஸோரி மீ மிஸ்டர் விசு... தட் டாக்டர் மஸ்ட் ஹாவ் பின் எ ஃபிராக்... எந்த அனுமானத்திலே இது ஜலக் கட்டினு தீர்மானிச்சாரோ... ஒரு மாசம் வீணாயிடுத்தே..."

நிமிஷங்கள் மௌனமாய் கரைந்தன...

"ஸோ... வாட் டு யூ ஸே டாக்டர்? மேற் கொண்டு என்ன பண்ணணும்?"

"ம்...? ஆபரேஷன்தான்... வாட் எல்ஸ்?... மார்பில் சின்ன கட்டியாய் உண்டான இந்த வளர்ச்சி, கவனிக்காமல் விட்டதாலே மார்பகத்தினுள் நன்றாய் வேர்விட்டு வளர்ந்திருக்கு... மேற்கொண்டு பரவுவதைத் தடுக்க உடனடியாய் மாஸ்டெக்டாமி பண்ணணும்..."

"மாஸ்டெக்டாமி என்றால்?" இப்போது சுமித்ரா குறுக்கிட்டாள்.

"இடது பக்க மார்பகம், தோளிலிருந்து அதைச் சுற்றியிருக்கும் சதை எல்லாத்தையும் வெட்டி எடுப்பதற்குப் பேர்தானம்மா மாஸ்டெக்டமி..."

"எப்போ அட்மிஷன் ஆகலாம், டாக்டர்?" இது விசு.

"உடனே மிஸ்டர் விசு... டு டே இட் ஸெல்ஃப் இஃப் பாஸிபிள். இனியும் காலதாமதம் செய்தா அது பைத்தியக் காரத்தனம்..."

இன்றைக்கேவா?

சீதாவிடம் விஷயத்தைச் சொல்லி, காமாட்சியிடம் எடுத்துரைத்து... டைம் காட்... அது சாத்தியமாகின்ற ஒன்றா?

மனசின் எண்ணத்தை வெளியே டாக்டரிடம் கூறினான் விசு.



"அந்தக் குடும்பத்தைப் பத்தி உங்ககிட்டே நான், நேற்றே சொன்னேன் டாக்டர். எ வெரி ட்ராஜிக் கேஸ்... கணவன் இல்லாத குடும்பத்தை, ஏன் ஆண் துணை இல்லாத குடும்பத்தை, தன் சின்ன தோள்களிலே எவ்வளவு தைரியத்துடன் சீதா தாங்கிண்டு போறானு சொன்னேன். இப்போ இந்த அதிர்ச்சியான விஷயத்தை அவளிடமோ, இல்லை அவள் தாயாரிடமோ எப்படி எடுத்துச் சொல்றது, டாக்டர்?... இதுக்கு எனக்கே தைரியமில்லையே... அந்த சின்னப் பெண் எப்படித் தாங்குவா? ப்ளீஸ் கிவ் மீ டு டேஸ் டைம் டாக்டர்... எப்படியாவது இரண்டு நாளில் சொல்லிடறேன் டாக்டர்...."

விசுவை முடிக்கவிடாமல் தலையாட்டிக் கொண்டே குறுக்கிட்டார் டாக்டர்...

"மன்னிக்கணும் மிஸ்டர் விசு... ஐ வாண்ட் சீதா டு பீ அட்மிட்டட் வித்இன் எ டே... என் கடமையை நான் சரியாகக் கவனிக்க வேண்டாமா? சீதா உயிர் பிழைத்து நன்றாய் வாழ வேண்டாமா? நாளைக்கு சோதனை பண்ணி டெஸ்ட், எக்ஸ்ரே எல்லாம் எடுத்து அவள் ஆபரேஷனுக்குத் தயாரா என்பது தெரிந்த பிறகு சீக்கிரத்தில் ஆபரேஷனை செய்வதுதான் சீதாவுக்கு நல்லது... பிறகு உங்கள் இஷ்டம்..."

டாக்டர் தீர்மானமாய் கூறிவிட்டார்...

சீதாவிடம் என்னவென்று கூறுவான் விசு, இல்லை எப்படிச் சொல்லுவான்?

"கான்ஸர் ஏன் வரது டாக்டர்?... ஏதாவது காரணம் உண்டா?" ஓரளவு விவரம் தெரிந்தால் நல்லது என்ற நினைப்பில் விசு.

"கான்ஸர் வருவதற்கோ, இல்லை அதை பரிபூரணமாய் குணமாக்குவதற்கோ இன்றைய தேதி வரை ஒரு காரணமுமில்லை; ஒரு மருந்துமில்லை..."

விசு, சுமித்ராவிடமிருந்து 'ஹா' என்ற வார்த்தையை எதிர்பார்ப்பது போல சற்றே நிறுத்தினார் டாக்டர்... அரை மயக்க நிலையில் இருந்த சுமித்ராவும், துக்கத்தால் மனமுடைந்து போன விஸ்வநாதும் எதும் பேசாததால் அவர் மேலே தொடர்ந்தார்.

"புதுசு, புதுசாய் ஏதோ ரிசர்ச் செய்ய முனையும் போது சின்ன சின்ன விஷயங்கள் புரியறது. தாய்ப்பால் சரியாகக் கொடுக்காமல் இருந்தால், இல்லை குழந்தையே பிறக்காமல் இருந்தால், மார்பகத்தை சரிவர உபயோகிக்கா விட்டால் மார்பில் கான்ஸர் வரலாம்னு ஒரு சிலர் நினைக்கிறாங்க... வம்சத்தில் யாருக்காவது வந்திருந்தால் கீழ்க்கடையினருக்கு வர சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் சொல்லறாங்க... பட் தோ சஸ் நத்திங் டெபனெட் அபௌட் திஸ்..."

இப்போது சுமித்ரா பேசினாள்.

"டாக்டர்... சீதாவோட நிலைமை இப்போ எப்படி இருக்கு? ப்ளீஸ் டெல் மி த ட்ருத்... எதுவானாலும் பயப்படாம சொல்லுங்கோ டாக்டர்..."

கண்களைத் துடைக்கக்கூடத் தோன்றாமல் "ப்ளீஸ் டெல் மீ..." என்று மறுபடி, மறுபடி கெஞ்சினாள்.

"யூ வாண்ட் த ட்ருத்?... சரி சொல்றேன்... கான்ஸர் பற்றி இன்னும் ஒருத்தருக்கும் ஒண்ணும் சரியாக புரிபடலை... இருந்தாலும் உத்தேசமாய் சில கணக்கெடுப்புகள் மூலம் சிலவற்றை புரிஞ்சிக்க முயற்சிக்கிறோம்... இன்றைக்குத் தெரிந்த விபரத்தின்படி மார்பக கான்ஸர் கண்டு பிடிக்கப்பட்டு ஆபரேஷன் ஆனவர்களில் நூறில் நாலிலிருந்து ஏழு பேர்கள் வரையில்தான் ஐந்து வருடங்களுக்கு மேல் வாழறாங்க... பதினாறு பேர்கள் ஐந்து வருடங்கள் வாழறாங்க... பாக்கி பேரெல்லாம்..."

காதைப் பொத்திக்கொண்டு எழுந்து ஓடிவிடலாமா என்ற ஆவேசமே சுமித்ராவினுள் எழுந்தது.

"புறப்படலாமா விசு?"

மௌனமாய் இருவரும் எழுந்தார்கள்.



"தாங்க்யூ டாக்டர்... தாங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்... நீங்க என்ன செய்தாலும் அது எங்க நன்மைக்குத்தான்னு புரியறது... நான் உங்களுக்கு நாளைக் கார்த்தால போன் பண்ணறேன்..."

டாக்டரும் எழுந்து மேஜையை சுற்றிக்கொண்டு விசுவிடம் வந்தார்.

"ஐ விஷ் யூ லக் மிஸ்டர் விசு... அந்தப் பெண் சீதா விவேகியாக இருப்பாள்னு நம்பறேன்... நான் டாக்டராயிருந்தாலும் எனக்கு தெய்வத்தில் நம்பிக்கை உண்டு மிஸ்டர் விசு... நான் ஆபரேஷன் செய்த கேஸ்களில் பல பேர் இன்றைக்குப் பல வருஷங்கள் கழித்து ஆரோக்கியமாக வாழ்ந்திண்டு இருக்காங்க... ஒரு அம்மா பதினைந்து வருஷமாய் திடமாய் இருக்காங்க... அந்த அம்மாவுக்கு வைத்தியத்துறை கொடுத்தது 4–5 வருஷங்கள்தான்... இப்ப அவங்க திடமாய் இருப்பதற்கு என்ன காரணம்? நல்ல தேக அமைப்பா? இல்லை தெய்வ நம்பிக்கையா? ஐ டோண்ட் நோ... ஸோ இதையெல்லாம் சீதாவிடம் சொல்லி தைரியமாய் இருக்கச் சொல்லுங்க..."

காரில் ஏறின பிறகு விசு கேட்டான், "எங்கே பீச்சுக்குத் தானே?"

தெய்வமே! இந்த மனசோடு சீதாவை எப்படி சந்திப்பது!

"என்னாலே சீதாவை பார்க்க முடியாது விசு... ப்ளீஸ் ட்ராப் மீ இன் தி ஹவுஸ்..."

அவள் மனநிலையை உணர்ந்த விசு நுங்கம்பாக்கத்திற்கு வண்டியைச் செலுத்தினான்.

வீடு நெருங்குகையில் மட்டும் "நாளைக்கு அட்மிட் பண்ணணும்னா சீதாகிட்டே எப்போ சொல்லறது? நீ கூட இருந்தா தேவலை சுமி" என்றான்.

கணவனை ஏறிட்டு விழித்தாள் சுமி. பிறகு "ஐய்யோ என்னால் முடியாது... ப்ளீஸ் என்னால முடியாது"

என்று ஆற்றிய வண்ணம் கார் நின்றவுடன் இறங்கி ஓரே ஓட்டமாய் வீட்டினுள் நுழைந்து, மாடி ஏறி, தன் அறைக்குள் சென்று விழுந்தாள்.

இப்போது நெஞ்சு வரண்டுபோக அழுது தீர்த்தவளுக்கு விசு சீதாவிடம் விஷயத்தைச் சொன்னாரா, எப்படிச் சொன்னார் என்ற கவலையும், என் சீதாவுக்குத் துணையாக நான் அவளோடு இல்லையே என்ற பயமும் சேர்ந்தே எழுந்தன.

பீச்சிலிருந்து சீதாவையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அவர்களை மைலாப்பூரில் இறக்கினான் விசு.

"சுமி எங்கே?" என்று சீதா கேட்டபோது அவள் கண்களை சந்திக்க வலுவில்லாத விசு 'தலைவலி ஜாஸ்தியாயிடுத்து. வீட்டிலே இறக்கிட்டேன்' என்றதும் அவன் எதனாலோ பொய் சொல்லுகிறான் என்பது சீதாவுக்குத் தெளிவாயிற்று.

சீதாவை அவள் வீட்டில் இறக்கியபோது "நாளைக்கு உன்கிட்டே நானும் சுமியும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. ஸ்கூலுக்கு லீவு போட்டுடு... நான் எட்டு மணிக்கு இங்கே வந்து உன்னை 'பிக்கப்' பண்ணிக்கிறேன்" என்றதும் கணவன், மனைவிக்குப் பெரியதாய் ஏதோ சண்டை; அதைத் தீர்க்கத்தான் என்னை அழைக்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றி ஏற்கனவே எழுந்த சீதாவின் சந்தேகம் இன்னும் அதிகமாயிற்று.

## 25

**சை**க்கிள் ரிக்‌ஷா நின்றது.

முதலில் மெள்ள சீதா இறங்கினாள். பின்னால் ராம்குமாரைத் தூக்கிக் கொண்டு காமாட்சி இறங்கினாள்.



வாடிக்கையாய் வரும் ரிக்‌ஷாக்காரனாதலால் காலி வண்டியை இழுத்து மர நிழலில் நிறுத்தினான். மாலைக் காற்று ஜிலு ஜிலுவென வீசவே, ஏறி வண்டியினுள் படுத்து விட்டான்.

சீதா திரும்ப அரைமணியாவது ஆவது நிச்சயம்.

மெதுவாய் நடந்து உள்ளே போன சீதா "நீ உட்கார்ந்துண்டு இரும்மா" என்று சொல்லிவிட்டு தான் மட்டும் ரிஸப்ஷனுக்குப் போனாள்.

"குட் ஆஃப்டர் நூன் ஸார்."

குரல் கேட்டு நிமிர்ந்தார், ரேடியாலஜிஸ்ட் "ஓ! குட் ஆஃப்டர் நூன்... வந்துட்டீங்களா... சரி உள்ளே ஸிஸ்டர் இருக்காங்க... நீங்க போய் தயாராகுங்க. இதோ வந்திடறேன்..."

திரும்பி, பக்கவாட்டிலிருந்த அறை ஒன்றில் நுழைந்தாள் சீதா.

இன்றோடு பதினாறாம் நாள். இடம், செய்யவேண்டியவைகள் எல்லாம் பழகிப் போயிருக்கவே, ஸிஸ்டரின் உதவியை நாடாமல் தானே தன் ரவிக்கையைக் களைந்து விட்டு, புடவைத் தலைப்பால் மார்பை மூடிக் கொண்டு அங்கிருந்த படுக்கையில் நிதானமாய் ஏறிப்படுத்தாள்.

அறைக்கதவு மறுபடி திறந்து மூடியது.

ரேடியாலஜிஸ்ட் வந்து விட்டார்.

"ஹலோ, ஹௌ ஆர் யூ டுடே?..." புன் சிரிப்புடன் கேட்டவாறே தன் பணியில் ஈடுபட்டார், அவர்.

சீதா படுத்திருந்த படுக்கைக்கு மிகச் சமீபத்தில் பெரியதொரு மிஷின் வட்டமுமில்லாத ஓவல் வடிவமும் இல்லாத முகத்துடன் நின்றிருந்தது. அதை அருகில் இழுத்து, சீதாவின் மார்புக்கு நேராய் அதன் முகம் இருக்கும்படி சரி செய்தார் ரேடியாலஜிஸ்ட் மிஷினுக்கும்

சீதாவின் இடது மார்பகத்துக்கும் சுமார் நாலு இஞ்ச இடைவெளி இருக்கும்படி வைத்தவா, "நான் போனதும் தலைப்பை எடுத்திடுங்க... டைம் ஆனதும் நான வந்துடறேன்" என்று நித்தமும் சொல்லுவதையே இன்றும் சொல்லி விட்டு வெளியே போனவர் அடுத்த அறையிலிருந்த சுவரில் இருந்த கண்ணாடி வழியாய் கவனித்தவாறே 'கோபால்ட்' கதிர்களை வீசும் யந்திரத்தை முடுக்கினார்.

கோபால்ட் கதிர்களுக்கு எந்த ஜீவராசியையும் கொல்லும் பயங்கர வீரியம் உண்டு. புற்றுநோய் கிருமிகளைக் கொல்ல அதை உபயோகிக்கையில், சம்பந்தப்பட்ட நபரின் சம்பந்தப்பட்ட உறுப்பை மட்டுமே அதன் ஒளியில் காட்டுவார்கள். யந்திரத்தை இயக்குனர் கூட முன் எச்சரிக்கையுடன் அந்தக் கருவி இயங்கும் போது பக்கத்து அறையில் இருந்தவாறே பேஷண்டையும், கோபால்ட் வைத்தியத்தையும் மேற்பார்வை இடுவார்.

'கிளிக்' என்ற சப்தத்துடன் மிஷின் ஓட ஆரம்பித்ததும் தலைப்பை எடுத்து வயிற்றுப் பகுதியில் ஒதுக்கிக் கொண்டாள் சீதா. ஒரு சில கணங்களிலேயே இதமான வெப்பம் தன் இடது மார்பகத்தைத் தழுவுவதை உணர்ந்து கண்களை லேசாய் மூடிக் கொண்டாள்.

ஐந்து வாரங்களா?

ஆம் ஆஸ்பத்திரியில் மூன்று வாரங்கள். இப்போது கோபால்ட் வைத்தியம் இரண்டு வாரங்கள். எல்லாமாய்ச் சேர்ந்து ஐந்து வாரங்கள் ஓடி விட்டன.

அன்று, மாலை பீச்சிலிருந்து திரும்புகையில் "நாளைக்கு உன்னோடு கொஞ்சம் பேசணும்" என்று விசு சொன்ன நேரத்தில் கணவன், மனைவி நடுவில் ஏதோ சண்டை, சமாதானம் செய்யத்தான் தன்னை கூப்பிடுகிறார்கள் என்று நினைத்த தன் பேதைமையை இப்போது நினைத்தாள் சீதா.

நானும் படித்தவள்தான்.



பல பத்திரகைகளைப் படிப்பதன் மூலம் உலக நடப்புகளை அறிந்து வைத்திருப்பவள்தான. என்றாலும் எப்படி எனக்கு இப்படி ஒரு வியாதி வரக் கூடும் என்ற சந்தேகம் கடுகத்தனை கூட தோன்றாமல் போயிற்று?

அதுவும் என் பேதைமதானா?

விசு சொன்னபடி மறுநாள் காலை எட்டு மணிக்கெல்லாம் வந்துவிட்டான்.

"என்ன விஷயம் விசு?" என்று காமு கேட்டதற்கு ஏதோ சொல்லி மழுப்பினான். "அப்பா, ஏதோ பேசணும்னார். கொஞ்ச நேரத்துலே திரும்பி வந்துடுவோம்..." என்று கூறிவிட்டு சீதாவுடன் புறப்பட்டான்.

தன் சந்தோகம் தவறோ? உண்மையிலேயே பண விஷயமாய் ஏதாவது மாமாதான் பேச விரும்புகிறாரோ, என்று கூட சீதா எண்ணினாள்.

நுங்கம்பாக்கத்து வீட்டில் நுழைந்த சில நிமிஷங்களிலேயே ஏதோ தவறு என்பது சீதாவுக்குப் புரிந்து விட்டது வியாபாரத்தில் நஷ்டமோ?

குழந்தைகளுக்கு உடம்பு சுகமில்லையோ என்று அப்போதும் சீதா நினைத்தாளே தவிர, வேறு எதுவும் கற்பனை பண்ணி பார்க்கத் தோன்றவில்லை.

மாமி, சுமித்ராவின் முகங்கள் நன்றாகவே இல்லை. சுமித்ரா அழுதிருந்தாளோ?

மாமா மௌனமாயிருந்தார்.

விசுவின் முகத்தில் ஓய் இறுக்கம்.

"வாம்மா சீதா... முதல்லே டிபன் சாப்பிட்டுட்டு அப்புறம் பேசலாம்..."

மாமி பின்னால் சீதா போனாள்.

சூடாய் இட்டிலியும், சாம்பாரும் பரிமாறப் பட்டது. காபியும், குடித்துவிட்டு மீண்டும் ஹாலுக்கு வந்தாள் சீதா.

"உட்கார் சீதா..."

இரட்டை சோபாவில் சீதா உட்கார அருகில் சுமி அமர்ந்தாள்.

"என்ன மாமா? என்ன எல்லாரும் ஒரு மாதிரியா இருக்கேள்? வியாபாரத்திலே ஏதாவது கஷ்டமா? எனக்கு சொல்லலாம்னா சொல்லுங்கோ மாமா"

நீயே சொல்லு என்பது போல மகனை நிமிர்ந்து பார்த்தார் சுப்பிரமண்ய அய்யர்.

மிகவும் கஷ்டப்பட்டு ஏற்கனவே தனக்குள் பல முறைகள் ஒத்திகை பார்த்துக் கொண்டபடி வெளியே பேசினான் விசு.

"நீ ரொம்ப ப்ராக்டிகல் பர்ஸன் சீதா. நான் சொல்லப் போறதை அமைதியாய் எடுத்துப்பே என்கிற தைரியம் எனக்கு இருக்கு... நாம ஒண்ணு நினைக்கிறோம். நடக்கிறது பல சமயங்களிலே வேறென்னவோ?... நல்ல வாளுக்கெல்லாம் கஷ்டங்களே கூடாதுனு நாம்ப ஆசைப் படறோம். ஆனா வாழ்க்கையிலே அப்படி நடக்கறதில்லை... இல்லையா?..."

எதற்காக இத்தனை பீடிகை?

ஆனால் விஸ்வநாத் பேசப் பேச, எதுக்காக இத்தனை பலமான அஸ்திவாரம், என்னத்திற்காக இவர் கள் முகத்தில் பரவிக் கிடக்கும் வேதனை எல்லாம் — புரிந்து போயிற்று.

ஒன்றையும் மூடி மறைக்கவில்லை விசு. அதற்காக வேறு எதையும் தேவைக்கு மேல் விவரித்தும் சொல்ல வில்லை.



டாக்டர் தன்னிடம் கூறியதை எல்லாம் திரும்ப எடுத்துச் சொன்னவன், மருத்துவக் கணக்குப்படி நூற்றுக்கு நாலிலிருந்து ஏழு பேர்கள் வரை ஐந்து வருடகளுக்கு மேல் வாழ்கிறார்கள். பதினான்கு பேர்கள் மட்டுமே ஐந்து வருடங்கள் வாழ்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை மட்டும் சொல்லாமல் விட்டு விட்டான்.

விசு பேசும் நாழிகையில் அருகில் இன்னும் நெருங்கி அமர்ந்த சுமித்ரா கணவனின் பேச்சு தோழிக்கு அதிர்ச்சியாக இருக்குமே என்ற ஆதங்கத்தில் சீதாவின் தோள்களை கையைப் போட்டு லேசாய் அணைத்துக் கொண்டாள்.

'சின்னப் பெண் பதறிப் போவாளே' என்று வருந்திய நீலாம்பாள் விசு பேச ஆரம்பித்த சில நிமிஷங்கள் கழித்து உள்ளே எழுந்துபோய் சூடாய் பால் எடுத்து வந்து சீதாவிடம் கொடுத்து 'சித்தே குடிச்சுக்கோ சீதா... மனசுக்குத் தெம்பாயிருக்கும்' என்றாள்.

ஆடாமல், அசையாமல் அமர்ந்து கொண்டு ஒரு சின்னக் குழந்தைக்கு எடுத்துச் சொல்லுவது போல விசு கூறுவதைக் கேட்ட சீதாவுக்கு விஷயங்கள் தெளிவு பெற்ற அதே நேரத்தில் சின்ன இதயத்தில் தாங்கொணா வலியும் கண்டது.

"உன் விஷயத்தில் பயப்படறத்துக்கு ஒண்ணுமே இல்லையாம், சீதா... 'எனக்குத் தெரிஞ்ச அம்மா ஒருவா பதினைஞ்சு வருஷமாய் திடமாய், சாதாரண வாழ்க்கை வாழ்ந்துண்டு — இருக்கார். இதை சீதாவிடம் சொல்லுங் கோ'னு டாக்டரே சொன்னார். உன்னைப் பார்க்கிற டாக்டர் மெட்ராஸிலேயே சிறந்தவர்... அதனாலே பயப் பட ஒண்ணுமே இல்லை... பேரைக் கேட்டால்தான் நமக் கெல்லாம் பயமாக இருக்கே தவிர, ஸயன்ஸ் அட்வான் ஸாகி இருக்கிற இந்த காலத்தில் பயப்பட அவசியமே இல்லை... ஹாவ் ஐ மேட் மை செல்ஃப் க்ளியர் சீதா?"

டாக்டர் சொல்லாததையெல்லாம்கூட சீதாவின் திருப்திக்காக சேர்த்துப் பேசினான் விசு.

ஒன்றுக்குமே பதில் சொல்லவில்லை சீதா.

அவள்தான் எப்படிப் பேசுவாள்?

இல்லை என்ன இருக்கிறது பேச?

தொண்டையும், இதயமும் பாறையாய் இறுகிப் போயின.

மெதுவாய் விசு, சுமி, மாமா, மாமி என்று கண்களைத் திருப்பிப் பார்த்தாள்.

"என்ன சீதா? ஏன் அப்படி பார்க்கிறே?" பயந்து போன குரலில் சுமி கேட்டாள்.

வேதனை கலந்த புன்னகையுடன் தலையை ஆட்டினாள் சீதா.

"ஸோ, தட் ஈஸ் லைஃப்" என்று முனகிவிட்டு சுமித்ராவைத் தேற்றுவது போல இன்னொரு முறை புன்னகைத்தாள்.

என்ன பெண் இவள்?

சீதா என்று பெயர் வைத்ததனால் இப்படி பொறுமைக்கு உதாரணமாய் இருக்க வேண்டுமா?

'ஹோ எனக்கா கான்ஸர்?' என்று வாய்விட்டு கதறக் கூடாது?

'எனக்கு ஏன் மேலே மேலே சோதனை?' என்று புலம்பக் கூடாது?

இப்படி எல்லாவற்றையும் தனக்குள்ளேயே அமுக்கி வைத்துக்கொண்டு என்னையும் மற்றவர்களையும் தேற்ற இதென்ன சிரிப்பு? சுமித்ராவின் நினைவுகள் சுழன்றன.



"எவ்வளவு சுருக்க அட்மிட் ஆறோமோ அத்தனை நல்லதுன்னு டாக்டர் நினைக்கிறார் சீதா... இன்னிக்கு ஈவ்னிங் அட்மிட் ஆறது உனக்கு சௌகரியமா?"

விஷயத்தைக் கேட்டதும் சீதா ஆடிப் போவாள்; அவளை சமாதானப் படுத்த நாங்களத்தனை பேரும் தயாராக இருக்கவேண்டும் என்று தீர்மானித்திருந்த விசுவுக்கு சீதாவின் மௌனம் வேதனையைத் தந்தது.

"............"

"சொல்லு சீதா... வாட் ஈஸ் யுவர் ஒப்பீனியன்?"

"எனக்கு என்ன தெரியும் விசு?... நீங்க எது பண்ணினாலும் எனக்கு சரிதான்... ஆனா ஆனா இன்னிக்கே அட்மிட் ஆகணுமா? அம்மாகிட்டே இந்த விஷயத்தை எப்படிச் சொல்றது? அம்மாவாலே இதைத் தாங்கிக்க முடியாது... கான்ஸர்னு சொல்லாமே வேறு ஏதாவதுதான் சொல்லணும். நான் சொல்றது சரிதானே மாமா?" முகத்தைத் திருப்பி சீதா கேட்டாள்.

சீதா இவ்வளவு ப்ராக்டிகலாக இருப்பாள் என்று ஒருவருமே எண்ணவில்லை.

சீதாவிடம் எப்படிச் சொல்லுவது என்று நடுங்கிக் கொண்டிருந்த விசுவிற்கு இப்போது தைரியம் வந்து விட்டது.

"அம்மாகிட்டே இதெல்லாம் ஒண்ணும் சொல்ல வேண்டாம் சீதா. மார்கட்டி சீழ் கோத்துண்டுடுத்து அதனாலே மார்பகத்தை எடுக்கணும்னு சொல்லிடலாம். அம்மா நாம்ப சொன்னா நம்புவா. நானே வந்து விவரமாய் சொல்லறேன். அப்போ, நான் சாயங்காலம் ஹாஸ்பிடலுக்கு வந்திடறோம்னு டாக்டருக்கு போன் பண்ணிடட்டுமா?"

திரும்ப காரில் சீதாவைக் கொண்டு விடுகையில் சுமித்ராவும் உடன் வந்தாள்.

சொம்ப நாழிகையாய் கேட்க விரும்பியதை அப்போது சீதா கேட்டாள்.

"செலவு என்னாகும் விசு? எல்லாத்துக்கும் என்கிட்டே தயாரா பணத்தை வைச்சுக்கணுமே, அதனாலே கேட்கிறேன்"

காரை ஓட்டிக் கொண்டிருந்த விசு பின்னால் திரும்பிப் பார்த்தான்.

"இப்போ அதைப் பத்தி என்ன சீதா?"

"இல்லே விசு. என் சக்திக்கு எவ்வளவு முடியுமோ, அதை நான் முன்னாலேயே புரிஞ்சிக்கறது நல்லதில்லையா?......." ஆஸ்பத்திரியிலே கூட ஸ்பெஷல் வார்டு, அது, இதுனு வேண்டாம் விசு. மினிமம் என்ன அவசியமோ, அது போதும்... டாக்டர்கிட்டே இதை நீங்க முன்னாலேயே சொல்லிடறது நல்லதுன்னு நான் நினைக்கிறேன்... ப்ளீஸ் ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மீ..."

சீதாவின் தன்மான உணர்வு விஸ்வநாதனிற்கும், சுமித்ராவுக்கும் நன்றாகப் புரியவே அவர்கள் பதிலே பேசவில்லை.

காமாட்சியிடம் விசு விளக்கமாய் சீதாவுக்குச் செய்யப் போவது சாதாரண ஆபரேஷன் என்று எடுத்துச் சொன்ன போது அவளும் குதிக்கவில்லை, கத்தி ஆர்ப்பரிக்கவில்லை.

சீதாவின் தாயல்லவா?

நெஞ்சை ஒரு கையால் அழுக்கிக் கொண்டு "கடவுள் இருக்கார். நான் வேறே என்ன சொல்லப் போறேன்?" என்றவள் வேறெதும் கேட்கவில்லை.

"நாங்க போயிட்டு ஐந்து மணிக்கு வந்துடறோம் நீ ரெடியாயிரு சீதா" என்று சொல்லிவிட்டு விசு, சுமி புறப்பட்டுப் போனார்கள்.



சாப்பிட்டுவிட்டு பையனை வாரி எடுத்துக் கொண்டு படுக்கப் போனாள் சீதா.

கதை சொல்லி முடித்ததும், தூங்கிப் போன குமாரின் கண்களில் லேசாய் முத்தமிட்டதும், 'என் குழந்தைகள் இன்னும் பிஞ்சு, பிஞ்சாய் இருக்கிறார்களே; இவர்களை ஆளாக்கி விடும்வரை நான் திடகாத்திரமாய் இருக்க வேண்டுமே' என்று எண்ணியவள் கண்களில் அவளையும் மீறிக் கொண்டு நீர் வழிந்தது.

அன்று மாலை சீதாவை அழைக்க வந்த விசு, பத்து ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் இரண்டை, சீதாவிடம் கொடுத்து, "இது உன் பணம் சீதா வட்டியை கொஞ்சம் முன்னால் கொடுக்கறேன். அவ்வளவுதான்" என்றதும் தன் மனசு நோகாமல் உதவி பண்ண அவன் எவ்வளவு முயற்சிக்கிறான் என்பது சீதாவுக்குப் புரிந்தது.

அன்று மாலையே சீதாவை ஆஸ்பத்திரியில் சேர்ந்தார்கள்.

வெற்றிகரமாய் அறுவை முடிந்தது.

"நான் எதிர் பார்த்ததற்கும் குறைச்சலாய்தான் வியாதி பரவி இருக்கு. வேரோடு தோண்டி எடுத்திட்டோம். இருபது நாள் இங்கே இருந்திட்டு, அப்புறமா, ஒரு பதினைஞ்சு நாட்கள் கோபால்ட் ட்ரீட்மெண்ட் எடுத்துண்டா சீதாவுக்கு நல்ல குணம் கண்டுடும்னு நான் நினைக்கிறேன்" என்று டாக்டர் கூறினது தேனாய் எல்லார் காதுகளிலும் பாய்ந்தது.

நல்ல வேளையாய் சிக்கல்கள் ஏதும் இல்லாமல் சீக்கிரமாய் குணமடைந்த சீதா, வீட்டுக்கு இருபத்தியோராம் நாள் திரும்பினாள்.

"ஓ. கே. மிஸஸ் சீதா. இன்னிக்குப் போதும். நாளைக்கு வந்துடுங்க. இன்னும் நாலே நாள்தான்..."

ரேடியாலஜிஸ்ட் உள்ளே வந்து கூற, புடவைத் தலைப்பை சரி செய்து கொண்டு எழுந்தாள் சீதா.

இன்னும் நாலு நாட்கள்.

பிறகு ஒரு மாசம் ரெஸ்ட்.

அப்புறம் பழையபடி சாதாரண வாழ்க்கை.

அம்மாடி! சீதாவுக்கு நினைப்பே இனித்தது.

## 26

நிதானமாய் படி ஏறி, வாசலில் நின்று கொண்டிருந்த தாயாரிடம் கையிலிருந்த புத்தகங்கள், டிபன்பாக்ஸ், குடை எல்லாவற்றையும் கொடுத்த சீதா கால் செருப்புகளை மூலையில் உதறிவிட்டு ஆயாசத்துடன் ஹால் நாற்காலியில் சாய்ந்தாள்.

கோட் ஸ்டாண்டில் குடையையும், மேஜையில் புத்தகங்களையும் வைத்துவிட்டு டிபன் பாக்ஸை தேய்க்கப் போட்டாள் காமு. சமையலறைக்குள் புகுந்து, சூடாய் காபியையும் ஒரு தட்டில் இரண்டு மிளகாய்ப் பொடி தடவின தோசைகளையும் எடுத்து வந்து சீதாவிடம் கொடுத்தாள்.

"ஏன், இன்னிக்கு இவ்வளவு நாழியம்மா?... இருட்டிப் போயிடுத்தே..."

"சரளா வந்திருந்தா. இத்தனை நாழி காத்துண்டிருந்துட்டு சித்த முன்னாடிதான் புறப்பட்டுப் போறா."

"ஸ்கூல் பெரிய பரீட்சை ஆரம்பமாகப் போறதோலயோ? அதுக்கு க்வெஸ்டின் பேப்பர் தயார் பண்ண



வேண்டியிருந்தது. அதான் நாழியாயிடுத்து... என்ன விசேஷமாம்?"

சீதா குடித்துவிட்டு நீட்டிய காலி தம்ளரை காமு வாங்கிக் கொண்டு சமயற்கட்டு முற்றத்தில் வைத்துவிட்டு மீண்டும் ஹாலுக்கு வந்து சீதாவின் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"ஒண்ணுமில்லை. பிள்ளைகளெல்லாம் சீதா சித்தியைப் பார்க்கணும்னு நச்சரிக்கறாளாம், அதனாலே கூட்டிண்டு வந்திருந்தா."

சீதாவின் உதடுகள் விரிந்தன.

"அத்திம்பேருக்குத் தெரியாமல், வழக்கம் போலத்தானேயம்மா?"

காமுவுக்கு சீதாவின் கேள்வி வேடிக்கையாயில்லை.

"மாப்பிள்ளை ஊரில் இல்லையாம் சீதா. அதனால நாளைக்குத் திரும்பறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கா. ஒரு கூடை சாத்துக்குடி பழம் வாங்கிண்டு வந்து கொடுத்துட்டு 'சீதாவுக்கு பிழிஞ்சு குடும்மா. அவளைப் பார்த்துக்கோம்மா'னு நாலு தடவை சொல்லிட்டுப் போனா. பாவம் அவோதான் என்ன பண்ணுவா!"

வாஸ்தவம்தான் இதுக்குமேல் தைரியத்தை சரளாவிடம் எதிர்பார்ப்பது ரொம்ப அதிகம்.

வியாபாரம் நன்றாய் பெருகி விட்டதால், மாசத்தில் பாதி நாட்கள் மூர்த்தி ஊரில் இருப்பதில்லை. பம்பாய், டெல்லி என்று பறக்க ஆரம்பித்து இருந்தான். இது சரளாவுக்கு ரொம்ப சௌகரியமாய் போயிற்று. டிரைவருக்கு காபி, டிபன், ஐந்து, பத்து என்று கொடுத்து கைக்குள் போட்டுக் கொண்டு விட்டாள். மாமியாரிடம் 'கடை வீதிக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு இங்கு முடிந்த போது வந்து விடுவாள்.

டிரைவரும் நல்லவன். இதுநாள் வரை வாயைத் திறக்கவில்லை. மேலும், பிள்ளைகளுக்கு விவரம் புரிந்து கொள்ளும் வயசாகி விட்டது! அம்மாவுக்கு பிறந்தாத்துக்குப் போக ஆசை என்று உணர்ந்து கொண்டு "எங்க சித்தி ஆத்துக்குப் போலாம்மா" என்று சொல்லி கிளப்பி இங்கு சித்தி வீட்டுக்கு வந்து கொட்டம் அடித்து விட்டுப் போவார்கள்.

ஸரஸு கையில் நல்ல பணம் ஓட்டம் இருந்ததால் வரும்போதெல்லாம் சீதாவுக்கு, அம்மாவுக்கு, குழந்தைகளுக்கு என்று எதையாவது வாங்கி வருவாள். இல்லை, டிரைவரை அனுப்பி ஹோட்டலிலிருந்து தித்திப்பு, காரம், ஐஸ் க்ரீம் வாங்கி வரச் சொல்லுவாள்.

போன பத்தாம் மாசம் சீதாவுக்கு ஆபரேஷன் ஆன போது அவளுக்கு யாரும் சொல்லவில்லை. ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம் என்ற சீதா நினைத்ததே காரணம். தெருவில்கூட எல்லாரிடமும் "வயித்திலே கட்டி ஆபரேஷன்னு சொல்லிடும்மா" என்று அவள் சொன்ன போது 'சின்னப் பெண்; மார்பகத்தில் கட்டி என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறாள்' என்றே நினைத்த காமுவும் அப்படியே குடியிருந்தவர்களிடமும், விசாரித்த ஓரிருவரிடமும் சொல்லி வைத்தாள்.

கட்டு எங்கே போட்டிருக்கிறார்கள் என்று யாராவது சட்டையைத் தூக்கிப் பார்க்கப் போகிறார்களா என்ன ஒன்றுமில்லை.

சீதா ஆஸ்பத்திரியிலிருந்த சமயம் இரண்டு முறைகள் ஒரு உறவினர் வந்து தேடிவிட்டுப் போயிருக்கிறார். முதல் தடவை வீடு பூட்டியிருப்பதைக்கண்டு வெளியே போயிருக்கலாம் என்று நினைத்தார். அடுத்த தடவை வந்த போது குடித்தனக்காரரிடம் விசாரித்தார்.

"சீதாவிற்கு வயித்துலே கட்டியாம். ஆபரேஷன் பண்ணி இருக்கா... எந்த ஆஸ்பத்திரின்னு தெரியலை. அவ



அம்மா குழந்தைகளோட அவ சித்தி யாத்துலதான் இருக்கா. போயி இருபது நாளாகப் போறது..."

குடித்தனக்காரர் சொன்னதை அன்றே ஸரஸுவிடம் அந்த உறவுக்காரர் மூர்த்திக்குத் தெரியாமல் சொல்லி விட்டார்.

அலறிக் கொண்டு மூர்த்தி இல்லாத நேரமாய் சமித்ராவுக்குப் போன் செய்தாள் ஸரஸு.

"சீதாவுக்கு ஆபரேஷன் ஆயிடுத்து ஸரஸு. பயப்பட ஒண்ணுமில்லை. நாளைக்கு ஆத்துக்கு வந்துடுவா. உனக்கு எப்படி சொல்றது ஸரஸு? உங்காத்துக் காரர் ஊரில் இருக்காரோ, என்னமோ?"

மறுநாள் காய்கறி, பழம், மளிகை வாங்க என்ற சாக்கை வைத்துப் புறப்பட்டு நேரே மைலாப்பூருக்குப் போனாள், ஸரஸு.

காலையிலே வீடு திரும்பிய காமு, சீதாவைப் படுக்க வைத்துவிட்டு, பூட்டியிருந்த வீட்டை ஒருங்கு பண்ணிக் கொண்டிருந்த போது ஸரஸு வந்து சேர்ந்தாள்.

"என்னை எல்லாருமா சேர்ந்துண்டு இப்படி அன்னியமாக்கிட்டேளே! நான் ஒண்ணுத்துக்கும் உதவாதவளா இருக்கேனே" என்று சீதாவைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

அம்மாவும், சீதாவும் எந்தக் காரணத்தால் தன்னை ஒதுக்கி விட்டார்கள் என்பது அவளுக்கு நன்றாய் நினைவிலிருந்தது.

ராம்குமார் போனதும் இவள் அடிக்கடி கணவனுக்குத் தெரிந்தே தங்கையைக் காண வந்து கொண்டிருந்தாள். ஒரு வருஷம் போல ஆன பிறகு கணவர் கொடுக்கும் தைரியத்தில் மருதகளையும், குழந்தை குமாரையும் தன்னோடு அழைத்துப் போய் ஒரு நாள் வைத்துக் கொள்ளவும் தலைப்பட்டாள். 'வேண்டாம் ஸரஸு' என்று

சீதா தடுத்துப் பார்த்தாள். ஆனால் ஸரஸா கேட்கவில்லை. கணவன் மாறிவிட்டார் என்று மகிழ்ந்து போனாள்.

யார்?

மூர்த்தியா மாறுவான்?

வேண்டா வெறுப்புடன் ஸரஸாவின் செய்கையைப் பொறுத்துக் கொண்டிருந்தவனுக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை அவன் வீட்டிற்கு வந்திருந்த மஞ்சு நல்ல இசைத் தட்டு ஒன்றைக் கீழே போட்டு உடைத்துவிட்டதும் கோபம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது.

"அன்னக்காவடிகளுக்கு நல்ல சாமானின் அருமை எப்படித் தெரியும்? தரித்திரம், சனியன். இன்னிக்கு இதுகள் சீராடறதுகள். நாளைக்கு இதைச் சாக்கா வைச்சுண்டு உன் தங்கை, அம்மா இங்கே பாத்யதை கொண்டாடப் போறா. எல்லாம் நான் எதிர் பார்த்தது தானே?..." என்று அசிங்கமாய் கத்தினான்.

பன்னிரண்டு வயது மஞ்சுவுக்கா புரியாது?

வீட்டுக்கு வந்து அம்மாவிடமும், பாட்டியிடமும் அழுது கொண்டே விஷயத்தை பிட்டு விட்டு வைத்து விட்டாள். அடுத்த முறை ஸரஸா வந்த போது காமாட்சி ஆத்திரம் தாங்காமல் கேட்டு விட்டாள்.

"மனசு ஒடிஞ்சு போய் நாங்களே தவிச்சிண்டு இருக்கோம். இதிலே வெந்த புண்ணிலே வேல் பாச்சற மாதிரி உங்காத்துக்காரர்கிட்டே வலிய வந்து என்னத்துக்காக வசவுகளை வாங்கிக் கட்டிக்கணும்? நாங்க அன்னக்காவடிகளாகவே இருந்துட்டுப் போறோம்... நீயும், உன் ஆம்படையானும் நன்னாயிருந்தா சரி. இனிமே நீ இங்கே அடிக்கடி வராதே சரசு, நாங்க கௌரவமா இருக்கிறதை கெடுக்காதேடியம்மா... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

அன்று காமு பேசினது போல வேறு எப்போதும் இனி சீதா கேட்டதில்லை?



"உன் மனசு புரியறதும்மா. நீ சொல்றதும் நிஜம் தான்" என்று உருகின சரசு அதுக்கப்புறம் பிறந்த வீட்டையே மறந்து வாழத் தலைப்பட்டாள்.

சீதாவுக்கு ஆபரேஷன் என்று கேள்விப்பட்ட பிறகு மாத்திரம் அவளால் பொறுக்க முடியவில்லை. தானாடா விட்டாலும் தசை ஆடுமல்லவா?

சீதாவைப் பார்க்க பல வருஷங்கள் கழித்து வந்த சரசு 'என்னை அன்னியமாக்கிட்டேளே!' என்று கதறிவிட்டு, புறப்படுவதற்கு முன்னால் கை பர்ஸிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்து அம்மாவிடம் கொடுத்தாள்.

"தப்பா நினைச்சுக்காதேம்மா, இப்போ ரொம்ப சிலவு இருக்கும். வைச்சுக்கோ" என்றாள்.

காமுவும், சீதாவும் மறுத்துவிட்டார்கள்.

"நீ எனக்கு எவ்வளவோ பண்ணலையா? நானே உனக்கு அண்ணாவாயிருந்தா நீ எடுத்துக்க மாட்டியா? என் மனசு உனக்குக் கூடவா புரியலை? இரண்டு தலை எறும்பாட்டம் நான் பாசத்தாலே தவிக்கிறது உனக்கும் புரியலையா சீதா?" என்று சரசு பரிதவித்ததும் சீதாவின் நெஞ்சு இளகிவிட்டது.

தங்கையைப் பார்த்த திருப்தியில் அவள் தன்னிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட சந்தோஷத்தில் 'கட்டி எங்கே, காயத்தைக் காட்டு' என்று கூட சரசுவுக்குக் கேட்கத் தோன்றவில்லை. 'வயிற்றில் கட்டி ஆபரேஷன். இப்போ தேவலை' என்று அவர்கள் சொன்னதை பரிபூரணமாய் நம்பிவிட்டாள்.

அதற்குப் பிறகு அடிக்கடி என்று முடியாவிட்டாலும் இந்த ஒரு வருஷத்தில் பல தடவைகள் தனியாகவும், குழந்தைகளுடனும் வந்திருக்கிறாள் சரசு. குழந்தைகள், டிரைவர் எல்லோரும் இவள் பக்கம்.

லாரலாவை சொல்லுவானேன்? காமாட்சியே சீதாவுக்கு சாதாரண கட்டிதான் என்று நம்பிவிடவில்லையா, என்ன?

'சீழ் கோத்த கட்டி, அதனாலே மாரிலே ஆபரேசன் இது மேலும் பரவாம இருக்க மின்சார வைத்தியம் ஆத்துக்குப் போனதும் எடுத்துக்கணும்' என்று விசு சொன்னதை முடியாமையால் நம்பினதால் 'என்னத்துக்காக மின்சார வைத்தியம்?' என்று நித்தமும் சீதாவுடன் கோபால்ட் சிகிச்சைக்காக கூடப்போன காமு வாயைத் திறந்து ஒருவரையும் கேட்டவளில்லை.

ஜி. எச்.ல் ஆபரேஷன் நடந்த நாட்களில் குழந்தைகளுடன் நுங்கம்பாக்கத்தில இருந்தாள் காமு. சுமித்ரா சீதாவுடனே தங்கி விட்டதால இவள் குழந்தைகளுடன் காலையில் மாலையில் போய் சீதாவைப் பார்த்துவிட்டு வந்துவிடுவாள். "சீதாவுக்கு இனி ஒன்றும் இல்லை," என்று டாக்டர் சொன்னதைத் தன் காதுகளால் கேட்டதும் மனசில், நிம்மதி கொண்டு சீதா வீடு திரும்பிய நாளில் கற்பகாம்பாளுக்கு பாலபிஷேகம் செய்வித்தாள்.

கோபால்ட் சிகிச்சைக்கு இவளை அழைத்துப் போக என சுமித்ரா காரை எடுத்துக் கொண்டு வந்ததை முதல் சில நாட்கள் பொறுத்துக் கொண்டாள் சீதா. உடம்பில் சற்றுத் தெம்பு வந்ததும் "இங்கே இருக்கிற இடத்துக்குப் போக நீ அங்கேயிருந்து எதுக்கு வரணும்? நானும் அம்மாவுமா சைக்கிள் ரிக்ஷாவிலே போயிடுவோம்... என்னாலே உனக்கு இன்னும் எத்தனை நாள் சிரமம்" என்று பிடிவாதம் பிடித்து வெற்றியும் கண்டாள்.

"இன்னொரு தோசை கொண்டு வரட்டுமா, சீதா?"

"ம்... என்னம்மா?"

"நல்ல பொண்ணுடிம்மா. இன்னொரு தோசை வேணுமான்னேன். எங்கே யோஜனை?"



சிரித்தாள் சீதா.

பிறகு நாற்காலியிலிருந்து இறங்கி, எச்சிற் கையுடன் தரையில் அம்மாவின் மடியில் தலைவைத்து சாய்ந்து படுத்தாள்.

"லாரலா"வைப் பத்திதான் நினைச்சிண்டிருந்தேன். ஆமா, குழந்தைகள் எங்கேம்மா?"

"இது என்ன கொஞ்சல்? விளையாடப் போயிருக்கிற பசங்களைத்தா சிரிக்கா போறா?..." ரொம்ப நாளைக்குப் பிறகு தாயும், மகளும் மனம் விட்டு சேர்ந்து சிரித்தார்கள்.

அந்தக் கோடை விடுமுறைக்கு 'காமு, சீதா, குழந்தைகள் அனைவரும் சுமித்ரா குடும்பத்தாரோடு ஊட்டிக்குச் சென்று இரண்டு மாச காலம் ஆனந்தமாய் இருந்துவிட்டு திரும்பின போது கடந்த ஒருவருஷ காலமாய் மீண்டும் நிம்மதியுடன் இருப்பது சீதாவுக்குப் புரிந்தது. தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது என்ற இதம் காரணமோ?

## 27

சொம்பில் தண்ணீரை மொண்டு மேலே ஊற்றிக் கொண்டாள் சீதா. காத்தை தூக்கின கை வலித்தது. அண்டா ஜலத்தை தூக்கின மாதிரி இதென்ன வலியும், ஆயாசமும்?

என்னமோ தெரியவில்லை. ஊட்டியிலிருந்து திரும்பினதிலிருந்தே ஏதோ தொட்டுத் தொட்டு உடம்பைப் படுத்திக் கொண்டிருந்தது. வந்த சில நாட்களில் ஊட்டி குளிரிலிருந்து மாறியதால் இந்த முடியாமை என்றே சீதா நினைத்தாள். பத்து நாட்கள் சென்ற பிறகு தொடர்ந்து

களைப்பு அதிகமாகிப் போனதை அம்மாவிடம் சொல்லவே செய்தாள்.

"குளு குளுனு அங்கே ரெண்டு மாசம் இருந்திட்டோம் மோன்னோ, அதால இப்படி வேர்த்துக் கொட்டிண்டு களைச்சுப் போறது.. வந்ததும் எனக்கும் இப்படித்தான் இருந்தது" என்று காமு பதில் சொல்லவும் தான் நினைத்தது சரிதான் என்று சீதா எண்ணிக் கொண்டாள்.

மேற்கொண்டு ஒருவார காலமானபோது இடது கக்கத்தில் கீழ் லேசான வலி தோன்றியது. கக்கத்தில நெறி கட்டும் அளவுக்கு என்ன வேலை பண்ணினேன், என்று வியந்த சீதா இதைப்போய் பெரிசு பண்ணுவானேன் என்று ஒதுக்கிவிட்டாள்.

ஊரிலிருந்து திரும்பின முதல் இங்கு ஏகமாய் வேலை சேர்ந்து போயிருந்ததால முழு மூச்சுடன் வீட்டு, பள்ளி வேலைகளில் ஈடுபட்ட சீதா "வேலையும் அதிகம், வெயிலும் தாங்கலை. அதனாலதான் இப்படி மனசுக்கு ஏதேதோ தோணறது" என்று தனக்குத்தானே முடிவு செய்து கொண்டு விட்டவளாய் மறுபடி அம்மாவிடம் தன் உடல் நிலையைப் பற்றி ஏதும் பேசவில்லை.

இப்போது குளிக்க சொம்புக் தண்ணீரைக் தூக்க முடியாமல் களைப்பு ஆட்கொண்டபோது 'நிஜமாகவே இவ்வளவு முடியாமையா? இல்லை நானே நினைச்சுக்கறேனா?' என்று வியந்தாள்.

தண்ணீரை வழித்து சோப்பு தேய்க்கும்போது குனிந்து தன் உடம்பை பார்த்துக் கொண்டாள் அவள்.

ராம்குமார் இருந்த காலத்தில் தளதளவென்று கீரைத் தண்டு மாதிரி இருந்த உடம்பு இப்போது பாதியாய் வத்தியிருந்தது. கணவனின் மறைவுக்குப் பிறகு பால், பழம்



என்று எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டாள் சீதா. ஆபரேஷன் ஆனபிறகு உடம்பு இன்னும் மோசமாகி விட்டது.

சீதாவின் கை அவளையும் அறியாமல் அவள் இடது மார்பகம் இருந்த இடத்தைத் தடவிக் கொடுத்தது.

எலும்புகளோடு உறவாடி நின்ற கட்டையான தோலதான் அவள் கைகளில் தட்டுப்பட்டது. கரிசல் மண்ணில் பள்ளம் தோண்டியது போல ஒரு சொரசொரப்பு. சதைகளை அறுத்து, தோல்களை இழுத்து தைத்து விட்டிருந்ததால் முதலில் முடிச்சு, முடிச்சாய் இருந்த தழும்புகள், பின்னால் கோபால்ட் சிகிச்சைக்குப் பிறகு ஜுவலம்விட்டு அணைந்த நெருப்புத் துண்டங்கள் போல ஒரு அசட்டுக் கறுப்பையும், இன்னும் அசிங்கமான சொர சொரப்பையும் பெற்று விட்டன.

முதலில் தன் உடம்பைப் பார்த்துக் கொள்ள நேரும் போதெல்லாம் சீதாவுக்கு குமட்டல் எழும். குளிக்கும் போது அந்த இடத்தின் கறுமையை அகற்றுவது போல சோப்பை அழுத்தி அழுத்தித் தேய்ப்பாள்.

நாளடைவில் எல்லாம் அவளுக்குப் பழகிப் போய் விட்டது.

'இந்த மட்டும் என் ராம் மறைந்த பிறகு இந்த அலங்கோலம் உண்டானதே! அவர் இருந்திருந்தால் ரொம்ப வருத்தம் கொண்டிருப்பார்?' என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்ளவும் முனைந்தாள்.

குளித்து முடித்த சீதாவுக்கு எழுந்து நிற்க முடியாத படி. கால்களில் சட்டென்று ஒரு தொய்வு.

"கடவுளே! எனக்கு என்னாயிற்று?"

மெதுவாய் துடைத்து புடவையைச் சுற்றிக் கொண்டவள் அறைக் கதவைத் திறந்து வெளியே வந்ததும், உடம்பின் இயலாமை தாங்க முடியாமல் போய் அப்படியே அங்கிருந்த கட்டிலில் சற்று சாய்ந்து கொண்டாள்.

எதேச்சையாய் அங்கு வந்த காமு ஓய்ந்து போயிருந்த மகளைக் கண்டாள்.

"என்ன சீதா?"

"ஒண்ணுமில்லையம்மா, அசதியாய் இருக்கு."

சில நாட்களாய் காமுவே உணர்ந்ததுதான். பள்ளியிலிருந்து வீடு திரும்புகிற பெண் சோர்ந்து, சோர்ந்து அமர்கிறாள். ஓரிரு நாட்களாய் சரியாக சாப்பிட மாட்டேன் என்கிறாள். கேட்டால் 'பசிக்கலையேம்மா' என்கிறாள்.

"டாக்டரை வேணா பார்க்கிறாயா, சீதா? கொஞ்ச நாளாகவே ரொம்ப பலவீனமா இருக்கியே?"

"ம்? பார்க்கறேன்ம்மா... பாக்கறேன்."

கண்களை மூடிக்கொண்டு திரும்பிப் படுத்தாள் சீதா.

படுத்தவள் உறங்கிவிட்டாள் போலிருக்கிறது. திடுக்கிட்டு எழுந்தால் மணி பத்தை நெருங்கி கொண்டிருந்தது.

"என்னம்மா! மணி ஆயிடுத்தே என்னை எழுப்பப் படாதா?" சமையற்கட்டில் நின்ற அம்மாவிடம் முறையிட்டாள் சீதா. "என்னிக்குமில்லாம இப்படி அசந்து போய் தூங்கறே... எப்படியம்மா எழுப்ப மனசுவரும்? ஒரு நாள் லீவு போட்டுடு!"

வேறு என்ன செய்வது?

எதிர் வீட்டுக்குப் போய் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னாள் சீதா.

"குட் மார்னிங் ஸார்... சீதா பேசறேன், இன்னைக்கு நான் ஸ்கூலுக்கு வரலை. ஈஸ் தட் ஆல்ரைட்? ஸாரி டு இன்ஃபார்ம் இன் த லாஸ்ட் மோமெண்ட் ஸார்."



தலைமை ஆசிரியருக்கு மட்டும் சீதாவுக்கு நடந்திருக்கும் ஆபரேஷனின் உண்மை விவரம் தெரியும்.

அறுவை சிகிச்சைக்கு முன்னால் அவரை வீட்டில் கண்டு விபரத்தை விசுவும், சுமித்ராவும் தெரிவித்துவிட்டு "வெளியில் எல்லாருக்கும் வயிற்றிலே கட்டி என்று சொல்லியிருக்கிறோம். சின்ன பெண் பாருங்கள். வீ டோண்ட் வாண்ட் ஹர் ஃப்யூசர் டு பீ ஸ்பாயில்ட் பை காஸிப், நீங்களும் புரிந்து கொள்ளுவீர்கள் என்று நம்புகிறோம்" என்ற போது, சரியாகப் புரிந்துகொண்ட தலைமை ஆசிரியர் தலையை ஆட்டி 'ஐ அக்ரீ வித் யூ' என்று விசுவிடம் சொன்னார். இரண்டு நாட்கள் பொறுத்து ஆஸ்பத்திரியில் சீதாவை வந்து பார்த்துவிட்டு "நிதானமாய் பள்ளிக்கு வாருங்கள் சீதா. உடம்புதான் முக்கியம். நான் உங்களுக்கு எந்தவிதத்திலாவது உதவ முடிந்தால் சந்தோஷப்படுவேன்" என்றும் சொல்லிப் போனார்.

இன்று போனில் சீதா பள்ளிக்கு வரவில்லை என்று தெரிவித்ததும் நல்ல இதயம் கொண்ட அவருக்கு சீதாவுக்கு ஒன்றுமில்லையே என்ற ஆதங்கம் எழுந்தது இயற்கையே.

"யூ ஆர் ஆல்ரைட் சீதா?"

"கொஞ்சம் களைப்பா இருக்கு ஸார். அதுதான் டாக்டரைப் பார்க்கலாம்னு..."

"எஸ் டூ தட்... நாளைக்கு வந்தால் போதும் இங்கே. நான் மிஸஸ் மரகதத்தை விட்டு உங்கள் வகுப்பைப் பார்த்துக் கொள்ளச் சொல்லுகிறேன்"

"தேங்க்யூ ஸார்"

வீட்டுக்குத் திரும்பி வந்த சீதா, அம்மாவுடன் சேர்ந்து அமர்ந்து உணவு உட்கொண்டாள்.

குமாருக்கு மூணரை வயசு ஆகிவிட்டதால் அருகிலிருந்த நர்ஸரியில் சேர்த்துக் கொண்டு விட்டார்கள். அதனால் பகல் ஒரு மணி வரை ஓய்வுதான்.

சாப்பிட்ட சீதா, கட்டிலில் படுத்து நன்றாய் உறங்கியே போனாள்.

திரும்ப கண்விழித்த போது டிபனுக்கு உப்புமா செய்து காப்பி போட்டு விட்டு, குமாரை பள்ளியிலிருந்து அழைத்து வந்துவிட்டு, அவனுக்கு கைகால் அலம்பி, முகம் துடைத்து சட்டை மாற்றி, டிபன் கொடுத்துக் கொண்டிருந்தாள் அம்மு.

சீதா எழுந்துவிட்டது தெரிந்ததும் குமார் கையில் பாலைக் கொடுத்துவிட்டு "குடி கண்ணா இதோ வந்துட்டேன்" என்று சொன்னவள், சீதாவுக்கு காபி கலந்து எடுத்து வந்தாள்.

பாலை எடுத்துக் கொண்டு அம்மா முழித்துக் கொண்டு விட்டதால் அவரிடம் சென்று அமர்ந்தான் குமார்.

மகனை மடியில் அமர்த்திக்கொண்டு காபியுடன் வந்த தாயை ஏறிட்டு நோக்கினாள் சீதா.

அந்தத் தாயின் கண்களில்தான் எத்தனை பாசம்?

முகமே இப்படி அன்புக் கடலாய் இருக்கிறதே?

இதேபோன்று எங்கோ, என்றோ படித்த விஷயம் ஒன்று சீதாவின் நினைவில் ஆடியது.

மடியில் படுத்திருக்கும் பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாளாம் ஒரு தாய். பால் குடிக்கும் உற்சாகத்தில் கையையும், காலையும் பிள்ளை உதைத்த வேகத்தில் பாதத்தின் நுனி மேலே எழும்பி குனிந்து கொண்டிருந்த தாயின் முகவாயிலும் உதட்டிலும் நன்றாய் பட்டு விட்டதாம். குழந்தையின் குதிகால் உதைத்த உதையில்



தாயின் கீழ் உதடுகளைப் பற்கள் கிழிக்க ரத்தம் கொட்டியதாம். கிழிந்த உதட்டை தாய் நினைக்கவில்லையாம்; வழிந்த இரத்தத்தை துடைக்கவில்லையாம்; 'என் பல் பட்டு குழந்தையின் கால் புண்ணானதோ?' என்று பதறிய வண்ணம் பிள்ளையின் கால்களைப் பார்த்தாளாம். தாய்ப் பாசம் என்பதற்கு இது ஒரு சின்ன உதாரணம்தான் அது அளக்க சாத்தியமில்லாத ஒரு ஆழ்கடல் என்று எழுதியிருந்தார் அந்தக் கவி.

"என்ன சீதா அப்படிப் பாக்கறே?"

காப்பியை நீட்டிக் கொண்டு நின்றிருந்த தாயை ஆசையுடன் கட்டிக் கொண்டாள் சீதா.

"என்னால உனக்கு எவ்வளவு கஷ்டம்மா? லீவு போட்டுட்டு இருக்கிற இன்னிக்கு கூட உனக்கு கூட மாட உதவி பண்ணாம தூங்கிட்டேன், பார்த்தியா?"

மகளின் கலைந்த முடியை கோதிவிட்டாள் காமாட்சி.

"அசட்டு பிசட்டுனு பேசாம எழுந்து மூஞ்சி அலம்பிண்டு சுமித்ரா வாத்துக்கு போயிட்டு வா. அவ கிட்டே உன் உடம்பைப் பத்தி சொல்லிட்டு, டாக்டரைப் பாக்கணுமானு கேட்டுண்டு வா... நாளைக்கு ஸ்கூல் இருக்கு. ஒண்ணும் பண்ண முடியாது."

தாய் சொன்னபடி சற்று வெயில் தாழ்ந்ததும் நுங்கம்பாக்கத்துக்குப் புறப்பட்டு போனாள் சீதா.

இவளைக் கண்டதும் சுமித்ராவுக்கு ஒரே சந்தோஷம்.

"வா சீதா, வா. என்ன மூணு மணிக்கு வந்திருக்கே? ஸ்கூல் லீவா என்ன? உன்னைப் பார்த்து ரெண்டு நாளாச்சா, இவரும் நானும் இன்னிக்கு சாயங்காலமா அங்கே வரலாம்னு பேசிண்டிருந்தோம்..."

தான் வந்த விஷயத்தை எடுத்துச் சொன்னாள் சீதா.

விசுவநாத்தின் ஆபீசுக்குப் போன் பண்ணினாள் சுமித்ரா, "சீதாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை. டாக்டரைப் பார்த்தா தேவலை விசு. அந்த டாக்டர் கிட்டே பேசிட்டு போன் பண்ணறேளா?..."

அரைமணியில் விசு மறுபடி போன் பண்ணி னான்.

"ஆறு மணிக்கு வரச் சொல்லி இருக்கார். நானே வந்து கூட்டிண்டு போறேன். பீ ரெடி."

சொன்னபடி ஐந்தரைக்கு வந்து விட்டான் விசு.

ஆறு மணிக்கு ஜீ. எச்.ல் இவர்கள் இருந்தார்கள்.

"கிட்டத்தட்ட ஒண்ணரை மாசமாய் உடம்பிலே ஒரு ஆயாசம் இருக்கு டாக்டர்; கொஞ்சநானாய் பசியே இல்லை."

"வேறு ஏதாவது ஸிம்டம்ஸ் உண்டா?" வைத்தியர் எதிர்க் கேள்வி கேட்டார்.

"ஆம்! கொஞ்சம் நாளைக்கு முன்னாலே இடது பக்க கக்கம் கொஞ்சம் வலிச்சது. லேசாய் 'வீங்கின்ட மாதிரி இருந்தது. பட் நௌ இட் ஈஸ் பெட்டர்..."

சீதா முடிக்கவில்லை. டாக்டரின் முகம் சிவந்து போயிற்று.

"நீங்க எல்லாம் படிச்சவங்க... காலத்தை வீணாக் காதிங்களு போன முறையே எத்தனை தடவை எடுத்துச் சொன்னேன்? இப்ப இத்தனை ஸிம்டம்ஸ் இருக்கும்போது ஒண்ணரை மாச காலத்தை கடத்தியிருக்கீங்களே. வாட் ஈஸ் ராங் வித் யூ ஆல்... எதுலே விளையாட்டு எதிலே வீரிய சாக இருக்கணும்னு கூடவா நாங்கள், டாக்டர்ஸ் சொல்லித் தரணும்?"



டாக்டர் எதனால் இப்படி படபடக்கிறார் என்று விஸ்வநாத்துக்குப் புரிய ஆரம்பித்ததால் அவனுக்கு வியாதுதுப் போயிற்று.

ஓ! காட்!

சீதாவுக்கும் சுமித்ராவுக்கும் ஒன்றும் புரியாததால் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து என்ன என்பது போல விழித் தார்கள்.

ஒரு வளை மூடப்பட்டதும் மணலை, ஆழமாய் குடைந்து கொண்டு, யார் கண்ணுக்கும் தெரியாமல் இன் னொரு வளையைத் தோண்டி விட்ட அந்த எமகாதக நண்டு புது வளையிலிருந்து தலையை நீட்டி, தன் கொடுக்கு களைத் தூக்கி விஷமத்துடன் குதித்தது.

## 28

சீதா கண்ணை விழித்துப் பார்க்க முயன்றாள். ம்ஹூம் முடியவில்லை. இமையோடு இமைகளை யாரா வது தைத்து விட்டார்களா என்ன?

கை, கால்கள் எல்லாம் எங்கே? ஒன்றையுமே அசைக்க முடியவில்லையே! துளி அசைத்தாலும் சுருக் கென்று எங்கெங்கோ வலி. உடம்பின் பல பாகங்களை கத்தி யால் கிறிக் கொண்டிருப்பது போன்ற வேதனை.

மிகவும் சிரமப்பட்டு கண்களைச் சற்றே திறந்த போது ஒன்றுமே தெளிவில்லாமல் மசமசத்தது. வெள்ளை வெளேரென பூதங்கள். முகத்தினருகில் குனிந்து கொண்டு ஒன்று. கையருகில் எதையோ ஊசியால் குத்திக் கொண்டு ஒன்று.

சீதாவுக்குப் பயமாக இருந்தது. மயங்கின கண்களை இரும்ப மூடிக்கொண்டு விட்டாள்.

மூக்கால் சுவாசம்விட முடியாதபடி மூக்கும் தொண்டையும் வரண்டு போயிருப்பது அவளுக்குப் புரிந்தது.

தண்ணீர். கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?

பயத்தையெல்லாம் திரட்டி "அம்மா தண்ணி; தூத்தம்" என்றாள் சீதா. ஒரு முறைக்கு இருமுறை கேட்டும் உலர்ந்த வாய்க்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

"அம்மா தூத்தம்..."

அம்மா அருகில் இல்லையோ? இருந்தால் உடனே கொடுத்திருப்பாளே. இந்த பூதங்களுக்கு காது கேட்க வில்லையா?

"தண்ணீ..."

அருகில் பேசாமடந்தையாய் அமர்ந்திருந்த சுமித்ராவுக்கு உள்ளம் மரத்துப் போய்விட்டிருந்தது.

காலையிலே ஆபரேஷன் போது மயங்கிய சீதாவுக்கு இப்போதுதான் சிறிது சிறிதாய் நினைவு வருகிறது.

ஒன்றும் புரியாமல் மலங்க, மலங்க விழித்துக் கொண்டு 'தண்ணீ, தூத்தம்' என்று தோழி முனகியது சுமிக்கு வேதனையை எழுப்பியது.

அப்போது போஸ்ட் ஆபரேடிவ் வார்டில் இருந்தாள் சீதா. பார்வையாளர்கள் யாரும் இருக்கக் கூடாது என்ற விதியை மீறிக்கொண்டு சுமித்ரா உடன் இருந்தாள்.

ஸிஸ்டரிடம் கிசுகிசுத்தாள் சுமி. "தண்ணி வேணுங்கறாளே. குடுக்கக் கூடாதா, ஸிஸ்டர்?"



கூடாது என்பது போல தலையை ஆட்டின ஸிஸ்டர் 'வாந்தி எடுப்பாள். அதைத் தவிர்க்கக் கொடுக்கக் கூடாது' என்றும் சைகையில் கூறினார்.

அடுத்த அரை மணிக்குள் சீதாவின் தண்ணீர் தொண தொணப்பு அதிகமாகிப் போகவே பஞ்சில் தண்ணீரை நனைத்து அவள் உதட்டில் பிழிந்தாள் ஸிஸ்டர்.

இரண்டே இரண்டு சொட்டுத் தண்ணீர்.

உதட்டைத் தாண்டி நெஞ்சில் இறங்க அது போதுமா?

ஒரு நிமிஷ காலத்திற்குள் மீண்டும் 'தண்ணி' என்றாள்? சீதா.

அறைக்கு வெளியே இருந்த வராந்தாவில் விசுவும், காமாட்சியும் அமர்ந்திருந்தார்கள்.

காலையில் ஆபரேஷன் முடிந்து மயங்கின நிலையில் சீதாவை அந்த வார்டுக்குள் கொண்டு வரும் போது சற்றே பெண்ணின் முகத்தைப் பார்த்த காமாட்சிக்குப் பதறிப் போயிற்று.

'ஆ' வென்று திறந்த வாயும், செருகிக் கிடந்த கண்களும், முகத்தில் பரவிக் கிடந்த பிரேதக்களையும், கைக்கு ஒன்றாகத் தொங்கின ஒரு பாட்டிலும். சீதாவுக்கு உயிர் இருக்கிறதா, இல்லையா?

போன வருஷம் சீதா அருவை சிகிச்சை செய்து கொண்டபோது, மயக்கம் தெளிந்த பிறகே காமுவை விசு அழைத்து வந்து காட்டினான்.

இந்தத் தடவை மனசு கேட்காமல் 'நானும் வரேனப்பா' என்று பிடிவாதம் பிடித்து வந்திருந்தவளுக்கு மயக்கத்தில் இருந்த பெண்ணைப் பார்த்ததும் அதிர்ச்சி உண்டாயிற்று.

"என்னம்மா சுமி. இவளை பார்த்தா பயமாயிருக்கு. ஒண்ணுமில்லையே?" பரிதவித்தாள் காமாட்சி.

"ஆபரேஷன் முடிஞ்சா யாரைப் பார்த்தாலும் இப்படித்தான் இருக்கும் மாமி. மயக்க மருந்து கொடுக்கறாங்களோயில்லியோ. அதுதான். பயப்படாதீங்கோ"

சுமித்ரா என்ன தேற்றியும் அடிக்கொரு தடவை சீதாவின் அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு "ஐயோ எனக்கு பயமா இருக்கே" என்று முனகிக் கொண்டு முகத்தை இந்தப் பக்கம் திருப்பிக் கொண்டாள் காமு.

வீட்டுக்குப் போகாமல், அறைக்குள்ளும் போக முடியாமல் தவிக்கும் அந்தத் தாயைப் பார்க்கையில் விசுவிற்கு உள்ளம் நெகிழ்ந்தது.

நான்கு நாட்களுக்கு முன்னால் ஒன்றையும் பெரிய தாய் எதிர்பார்க்காமல் டாக்டரைப் பார்த்தவர்கள் அவர் கான்ஸர் பரவியிருக்கிறது என்று சந்தேகப்படுகிறார் என்பதை அறிந்துகொண்டதும் மண்டையிலேயே இடி விழுந்தாற்போல ஆடிப் போனார்கள்.

"ஒரு தடவை பட்டிருக்கீங்க... இந்த முறை எதனால் இப்படி தாமதிச்சீங்க?" என்று டாக்டர் கோபத்துடன் கேட்டபோது ஒருவருக்கும் வாயே எழவில்லை.

"நாளைக்கு காலையிலே அட்மிட் ஆகணும். தேவையான டெஸ்டுகளை செஞ்சிட்டு உடனடியா மேற்கொண்டு செய்யறதைச் செய்யணும். யூ அண்டர்ஸ்டாண்ட் மீ?"

தலையை ஆட்டிவிட்டு எழுந்தார்கள் காரில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

வீடு திரும்பியதும் முகத்தில் சாதாரண சிரிப்பை எப்படித்தான் சீதா வரவழைத்துக் கொண்டாளோ? அம்மாவிடம் "எதனாலே இப்படி அடிக்கடி உடம்பு களைச்சுப் போறதுன்னு டெஸ்ட் பண்ணி பார்க்கணும்.



நாளைக்கு ஆஸ்பத்திரியிலே சேரச் சொல்லியிருக்காம்மா. வீட்டிலேந்து போய் ஒவ்வொரு டெஸ்டாய் பண்ணிக்கிறதைவிட அங்கேயே இருந்து முடிச்சுக்கறது நல்லது தானே, என்னம்மா?" என்ற போது, பேதை காமு அதையே நம்பி ஒப்புக் கொண்டாள்.

மறுநாள் விசு, சுமி, சீதா மூவரும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள் சீதாவை அட்மிட் செய்தார்கள்.

பரிசோதனைகள் தொடங்கின.

மாலைக்குள் எங்கு, என்ன கோளாறு என்று தெரிந்து போயிற்று.

"இடது பக்கம் ஆரம்பிச்ச கான்ஸர், இன்று வலது பக்கம் பரவி இருக்கு."

டாக்டர் ரிப்போர்ட்டை படித்ததும் "அன்னிக்கு சோதனை பண்ணப்போ வலது பக்கம் ஒண்ணுமில்லைனு ரிப்போர்டில் வந்ததே. கோபால்ட் ட்ரீட்மெண்ட் வேறே கொடுத்திருக்கு. இப்போ எப்படி டாக்டர் பரவியிருக்கு?" படபடத்தாள் சுமித்ரா.

பொறுமையுடன் அவளுக்குப் பதில் சொன்னார் டாக்டர்.

"இந்த வியாதிக்கு எதனாலே கான்ஸர்னு பேரு அன்னிக்கே நான் சொன்னேனே, மிஸஸ் விசு. இந்த நண்டு எந்த வளையில் பதுங்கும், மறுபடியும் எந்த வளையிலிருந்து தலையைத் தூக்கும்னு ஒண்ணுமே சொல்ல முடியாதும்மா... ஐ ஆம் ஸாரி..."

காலதாமதம் செய்யாமல் மறுநாளே ஆபரேஷனுக்கு சீதாவைத் தயார் செய்தார்கள்.

மாஸ்டெக்டாமியுடன், ஊபராக்டமியும் செய்வதென்று டாக்டர் முடிவு செய்துவிட்டார்.

வலதுபக்கம் மார்பகத்தை எடுத்துவிட்ட பிறகு கர்ப்பப்பையில் மார்பகங்கள் சம்பந்தப்பட்ட ஹார்மோன்கள், சுரப்பு நீர்கள், சுரந்துகொண்டே இருந்தால் அது நோயாளியின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பதால் கர்ப்பப்பை, ஓவரிகள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக எடுத்து விடுவதுதான் உபாயாகடமி.

விஷயத்தை சீதாவிடம் சொல்லி சம்மதம் கேட்ட போது பல நிமிஷங்கள் அவள் ஏதும் பதில் கூறவில்லை.

கடைசியில் "என்ன பண்ணணுமோ அதைப் பண்ணித்தானே ஆகணும்?" என்று கேட்டுவிட்டு பேசாதிருந்து விட்டாள்.

"போன வருஷம் மார்பில் கண்ட கட்டி எப்படியோ புரை ஓடிப்போய் வயிற்றில் புண் ஏற்படுத்தி இருக்கு. அதனாலே கர்ப்பப் பையை எடுக்கணும், மாமி" என்று சுமித்ரா எப்படியோ, எதையோ காமாட்சியிடம் சொல்லி வைத்தாள்.

"பயப்பட ஒண்ணுமில்லையே. ஊரிலே இல்லாத வியாதி எல்லாம் எங்க குடும்பத்தைத் தேடித் தேடி வரதேம்மா. பயப்பட ஒண்ணுமில்லையே?" என்று காமாட்சி திகிலுடன் சுமியின் கைகளைப் பிடித்துக்கொண்டு அழுதபோது "ச்சீ. இது மாதிரி தினம் ஆயிரம் பெண்கள் ஆபரேஷன் பண்ணிக்கறா மாமி" என்று மனசார பொய் சொல்லி அவளைத் தேற்றினாள் சுமித்ரா.

சீதாவுக்குப் பயங்கர புற்றுநோய் கண்டிருக்கிறது என்ற விஷயத்தைக் காமுவிடம் சொல்லாமலேயே மறைத்துவிடலாம் என்று விசு, சுமித்ரா போட்டிருந்த திட்டத்தை இடித்துத் தள்ளிய புண்ணியம் மூர்த்திக்கும், ஸரஸுவுக்கும் போய்ச் சேரும்.

சீதாவின் ஆபரேஷன் முடிந்து அன்று பதினேழு நாட்கள் ஆகிவிட்டன. தையல்கூட பிரித்துவிட்டார்கள். 'அம்மாடி பெண்ணுக்கு உடம்பு தேவலையாகிக் கொண்டு



வாது. இன்னும் ஒரு வாரமோ, பத்து நாளோ அப்புறம் ஆத்துக்கு நல்லபடியாய் கூட்டிண்டு போயிடலாம்' என்று காமு சந்தோஷித்த அந்த தினத்தில்தான் ஆஸ்பத்திரி என்றும் பாராமல் அழுது கத்திக்கொண்டு வந்து சேர்ந்தாள் ஸரஸு.

மூர்த்தியின் தூரத்து உறவு பிள்ளையாண்டான் ஒருவன் சீதா படுத்திருக்கும் வார்டில் ஹவுஸ் ஸர்ஜனாய் இருக்கிறான். இவர்களுக்கு அவன் யாரென்று புரியாவிட்டாலும், அவனுக்கு காமுவின் முகஜாடையைக் கொண்டும் அவர்கள் பேச்சுக்கள் மூலமும் இவர்கள் யார் என்பது புரிந்து விட்டது.

முதல் நாள் மூர்த்தி வீட்டுக்குப் போன பையன் "அந்தக் குடும்பத்தை உங்க கல்யாண சமயத்திலே பார்த்த ஞாபகம், பாவம் இந்த சின்ன வயசில அந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு நிலைமை வர வேண்டாம்" என்று ஏதோ உளறி விட்டான்.

மூர்த்தியா விடுவான்?

உடனே மோப்பம் பிடித்து, புகுந்து விசாரிக்கவும் சீதாவின் நிலைமை தெரிந்து போயிற்று.

"போன வருஷம் நடந்த ஆபரேஷன் கட்டியுமில்லை. ஒண்ணுமில்லை. அப்பவே புத்துநோய் தானாம் — இப்ப இந்த மார்புலேயும் பரவி, கர்ப்பப்பை எல்லாத்தையும் சுரண்டி போட்டுட்டாளாமே, உன் தங்கை படற பாட்டைப் பார்த்தியா?"

இரவெல்லாம் தூங்காமல் துடித்து அழுத ஸரஸு பொழுது விடிந்ததும் விடியாததுமாய் புலம்பிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கே வந்துவிட்டாள்.

அவள் வருத்தம் அவளுக்கு.

அம்மாவால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாது என்று அவளிடம் விஷயத்தை மறைத்து இருக்க

இருக்கலாமோ என்ற எண்ணமெல்லாம் ஸரஸுக்கு புத்திக்காவது தோன்றுவதாவது?

"இப்படி என்னை அன்னியமாக்கிட்டேளே. நான் அப்படி என்ன பாவம் பண்ணினேன்? என் கண்ணே சீதா, உனக்கு புத்து நோயாமேடீ... தங்கமான குணம் கொண்டே... உனக்காடீ இந்த பயங்கரம் வரணும்?..... அந்த கடவுளுக்கு இரக்கமே இல்லையாம்மா? கபாலீஸ்வரரை வேரோடு தோண்டினயேம்மா... இப்போ புத்துநோய் கொடுத்திருக்காரேம்மா உன் தெய்வம்... இது என்ன சோதனை...?" என்று 'ஹோ' என்று தன் மனதாபத்தைக் கொட்டி அழும் ஸரஸுவை தடுத்து நிறுத்த சீதாவாலும் முடியவில்லை; ஏன் சுமித்ராவாலும் இயலவில்லை.

காமாட்சிக்கு இப்போது எல்லாம் புரிந்து போயிற்று.

என் சீதாவுக்கு புற்றுநோயா?

முப்பத்தைந்து வயசு முடிஞ்ச சீதாவுக்கு புத்து நோயா?

ஐயோ!

உலகத்திலே நல்லவளா வாழுறத்துக்கும் அர்த்தமே இல்லையா?

நல்லதையே நினைச்சு, தர்மத்தையே கடைபிடிச்சு வாழுறவாளுக்கு சத்தியம் கைகொடுக்கும் என்பாளே!

எல்லாம் பொய்யா?

என் சீதாவுக்கு புற்றுநோயா?

எழுந்து சீதாவினிடம் போக முயற்சித்த காமாட்சி எழுந்து நின்றதும் கால்கள் நுணிபோல தொய்ய, தரையில் மூர்ச்சித்து விழுந்தாள்.

ஸரஸுவை கோபிக்க முடியுமா? அவள் பேதை மையில் துக்கத்தை அவள் வெளியில் கொட்டிவிட்டாள்.



யாரை நொந்து என்ன பயன்? ஒன்றும் இல்லை.

சீதா ஆஸ்பத்திரியைவிட்டு வீட்டுக்குப் புறப்படு முன் தன் கடமையை சரியாகச் செய்ய எண்ணிய டாக்டர் மருத்துவ கணக்குப்படி அவள் அதிகபட்சம் வாழப் போவது இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் என்று எல்லோரிடமும் வருத்தத்துடன் தெரிவித்தபோது சீதாவின் சந்தோஷத்துக்காக, எஞ்சிய நாட்களை அவள் அமைதியாக கழிப்பதற்காக, காமு உட்பட அத்தனை பேரும் தங்கள் நெஞ்சங்களை பாறையாக இறுக்கிக் கொண்டு, வரும் சோதனையான நாட்களை எதிர் நோக்கத் தங்களை தயார் செய்து கொண்டார்கள்.

## 29

**வ**குப்பறை நிசப்தமாக இருந்தது. முன்பெல்லாம் வகுப்பில் தாண்டவமாடும் குறும்பு சிரிப்பலைகளோ, 'டீச்சர், டீச்சர்' என்ற கொஞ்சலான குரல்களோ, இப்போது ஒன்றுமே இல்லை.

டீச்சருக்கு உடம்பு சரியில்லை என்பது எல்லாக் குழந்தைகளுக்கும் புரிந்துவிட்டதாலோ என்னமோ, சீதா வகுப்புக்குள் நுழைந்தாலே அமைதியில் அடங்கிப் போனார்கள் பிள்ளைகள்.

யார் சொன்னார்கள் இவர்களுக்கெல்லாம்?

எப்படி இத்தனை சின்ன குழந்தைகளுக்கு இவ்வளவு அனுசரணையுடன் இருக்கத் தெரிந்தது?

விஷமத்தனமில்லாமல், எதற்கும் அடங்கிப் போகும் குழந்தைகளைப் பார்க்கையில் 'எனக்காக எப்படி

இவர்கள் மாறிவிட்டார்கள்' என்ற வருத்தமே சீதாவுக்கு எழலாயிற்று.

அன்று வகுப்பில் பலகையில் இரண்டு கணக்குகளை எழுதி "ப்ளீஸ் டு திஸ் ஸம்ஸ்" என்று பணித்துவிட்டு இருக்கையில் அமர்ந்தாள் சீதா.

ஒன்றே கால் ஆண்டு இடைவெளிக்குள் பயங்கரப் புற்று நோய்க்கு ஈடு கொடுக்க அவள் இருமுறைகள் அறுவை சிகிச்சைக்குட்பட்டு விட்டது, இப்போது எல்லோரும் அறிந்த ரகசியம்.

தன்னை யார் பார்த்தாலும் அவர்கள் முகத்தில் ஒரு அலாதி பரிவு எழுவதாகவே சீதா உணர்ந்தாள்.

இவளிடம் மனம் விட்டு பேசாவிட்டாலும் பின்னால் பரிதாபப்படுவதும், 'டாக்டர் இரண்டு வருஷம் கெடு வைச்சுட்டாராமே!' என்று விஷயத்தை அலசுவதும் இவளுக்குப் புரிந்ததே.

விஷயம் எப்படி பரவியிருக்கும்?

காற்றிலா?

ஒரு சிலர் சீதாவிடமே "வீ ஆர் ஸாரி சீதா. நிஜம் தானா?" என்று கேட்டபோது இவள் விரக்தியுடன் ஒரு புன்னகை புரிந்துவிட்டு அந்தண்டை நகர்ந்து விடுவாள்.

ஆபரேஷன் ஆன ஒரு மாசத்திற்கு வீட்டோடு ரெஸ்டாய் இருந்தாள் சீதா.

மனசிலும், உடம்பிலும் சற்று தெம்பு வந்ததும் "வேலைக்குப் போகட்டுமா?" என்று டாக்டரைப் பார்த்துக் கேட்டாள்.

"இப்போ உடனே எதுக்கம்மா வேலை? வொய் டோண்ட் யூ டேக் இட் ஈஸி?" என்றார் அவர்.

"வீட்டில் அம்மா, குழந்தைகளைப் பார்த்துண்டே இருந்தா என் மனசிலே என்னெல்லாமோ கற்பனை தோணறது டாக்டர். வெளியிலே போய் வந்தா நல்லதுதானே?" என்றாள் இவள் மெதுவாக.



"உங்க நிலைமை எனக்குப் புரியறது சீதா. வேலைக்குப் போனா நிம்மதி வரும்னு நினைச்சா போயிட்டு வாங்க. ஆனா ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க. உடம்பிலே எந்தப் பகுதியிலேயாவது வலி எடுத்தா உடனே என்கிட்டே வந்து காண்பீங்க. ப்ளீஸ் அனாவசியமா காலத்தை எப்பவுமே கடத்தாதீங்க..."

சீதாவா? இனி காலத்தை வீணாக்குவாளா?

இருப்பது இரண்டு ஆண்டுகளோ, எத்தனையோ? அதற்குள் அவள் செய்ய வேண்டிய கடமைகள் ஆயிரமாயிரம் இருக்கின்றனவே! அவளா காலத்தை விரையமாக்குவாள்?

டாக்டர் சொன்னபடி நடப்பதாக வாக்குக் கொடுத்த சீதா, மறுபடி வேலைக்குப் போக ஆரம்பித்தாள்.

மனசு மாற்றத்துக்காக வேலைக்குப் போகிறேன் என்று எல்லோரிடமும் சொன்னாலும், மற்றொரு முக்கியமான காரணம் அவளுக்கு மட்டும்தான் தெரியும்.

இந்த ஒன்றே கால் ஆண்டு சிகிச்சைக்குள் கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய்கள் செலவு ஆகியிருந்தன. இனி அடுத்த இரண்டு ஆண்டுகளில் என்ன மாதிரியான செலவுகள் எங்கெங்கு ஒளிந்துகொண்டு பயமுறுத்தப் போகின்றனவோ? விசுவிடமிருந்து வாங்கின போன வருஷத்து வட்டியை அப்படியே ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தாகி விட்டது. இந்த வருஷம் பாதி ஆவதற்குள் மீண்டும் முக்கால்வாசி வட்டிப்பணம் காலி. இந்த வேகத்தில் போனால் எதிர் காலத்தில் அவள் குழந்தைகளுக்கென என்ன இருக்கும்?

அடுத்த இரண்டு வருஷத்தை எப்படியோ மெல்ல ஓட்டிவிட்டால், பள்ளியிலிருந்து வரும் வருவாயாவது மிஞ்சுமே!

மாசம் இருநூற்று எழுபத்தைந்து என்றால் இரண்டு வருஷத்தில்?

அம்மாடி! எவ்வளவு பணம்? இதை விட முடியுமா? என்ன?

மனசுக்குள் சீதா போட்ட கணக்குகள் யாருக்குப் புரிந்ததோ, இல்லையோ, விசுவிற்கு கொஞ்சம் புரிந்தது.

"எதுக்காக இவ்வளவு சுருக்க வேலைககுப் போகணும்? இன்னும் இரண்டு மாசம் கழிச்சு போகக் கூடாதா?" என்றான் ஒரு மாலை.

"மனசுக்கு மாறுதலாய் இருக்கலாமேனுதான் விசு..."

அவள் சொல்வதை தான நம்பவில்லை என்பது போல விழித்துப் பார்த்தான் விசு.

மேற்கொண்டு சீதாவே பேசினாள்.

"உங்க கிட்டே கேட்கணும்னு இருந்தேன். தினம் மறந்து போறது. ஆபரேஷன் செலவு கணக்குகளைப் பார்க்க வேண்டாமா விசு? உங்களுக்கு நான் எவ்வளவு தரணும்? கொஞ்சம் பார்த்து சொல்லிட்டேன்னா தேவலை."

"நமக்குள்ளே என்ன கணக்கு சீதா. நான் செலவழிச்சதெல்லாம் உன் பணம்தான். ப்ளீஸ் பிலிவ் மீ."

விசுவின் பேச்சை ஏற்றுக் கொள்ள சீதா தயாராக இல்லை.

"எந்த ஜன்மத்திலேயோ எனக்கு நீங்க தீராத கடன் பட்டிருக்கணும். இல்லேன்னா எதுக்காக என்னால உங்களுக்கு இத்தனை சிரமம்?" விரக்தியுடன் சீதா பேசின போது சாமர்த்தியமாய் பேச்சை மாற்றிவிட்டான் விசு.

சீதா மறுபடியும் வேலைக்குப் போவதில் ஸரஸுவுக்கு கூட ரொம்ப வருத்தம்.



"என்னம்மா. அவதான் தெரியாமச் சொல்லறாளா, நீ கூட பேசாம இருக்கியே. நீ எடுத்துச் சொல்லும்மா" என்று காமுவிடம் பலமுறைகள் மன்றாடிப் பார்த்தாள் ஒன்றுக்கும் பலன் இல்லை.

"அவ என்ன குழந்தையா? அவ இஷ்டம்" என்று எதும் பேச மறுத்து விட்டாள் காமாட்சி.

சீதாவுக்குப் புற்று நோய் கண்டிருக்கிறது என்பதைப் புரிந்து மாறிய பலரில் மூர்த்தியும் ஒருவன். அவன் நிஜமாகவே மாறினானோ, இல்லை ஊருக்காக மாறியதாகக் காட்டிக் கொண்டானோ, என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

இத்தனை வருஷங்களாக இந்த வீட்டில் அடி எடுத்து வைக்காதவன், நாலு நாட்களுக்கொரு முறை குடும்பத்துடன் வந்து போகலானான்.

உறவுக்காரர்களை வைத்துக் கொண்டு சீதாவின் உடம்பு பற்றி பரிதாபத்துடனும், வேதனையுடனும் அவன் பேசுவதைப் பார்க்கையில் காமுவுக்கே எரிச்சல் தோன்றும்.

நாலு பேர்கள் நடுவில் ஒரு நாள் "பணம் எதுனாலும் வேணும்னா தயங்காம கேளு சீதா, வெட்கப் படாதே" என்று மூர்த்தி ஒருதரம் சொன்னபோது வேதனையிலும் சிரிப்பே எழுந்தது சீதாவுக்கு.

பணமா? சீதாவா? இவனிடமிருந்தா?

அது இந்த ஜன்மத்தில் நடக்காது.

ஆனாலும் எங்காத்துக்காரர் எப்படி மாறிட்டார் பார்த்தியாம்மா, என்று போதையாய் மகிழ்ந்து போகும் ஸரஸுவுக்காக ஒருத்தரும் வாயைத் திறக்கவில்லை.

கிட்டத்தட்ட இரண்டு மாசங்களாய் வேலைக்குப் போய் வரும் சீதாவுக்கு நாளாக ஆக, அதிகரித்த காமாட்சி

யின் மனபலம்தான் சற்றும் எதிர்பாராத திகைப்பைக் கொடுத்தது.

தனக்கு கான்ஸர் என்று தெரிந்ததும் துடித்துப் போனதால் இனி என்றுமே எழுந்திருக்க முடியாதபடி மனசில் அடிபட்டு சுருண்டு போவாள் என்று சீதா பயந்ததற்கு மாறாக, ஓரிரு நாட்களில் தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டு விட்டாள் காமு.

முன்பெல்லாம் சீதாவோடு கொஞ்ச நாழிகை இருந்து விட்டு குழந்தைகளையும் வீட்டுக் காரியங்களையும் ஈடுபாட்டுடன் கவனித்தவள். இப்போதெல்லாம் எல்லாவற்றையும் முடித்தேன் என்று முடித்துவிட்டு எப்போதும் சீதாவுடனேயே இருக்கத் தலைப்பட்டாள்.

அதுவும் சீதா வேலைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்து ஒரு சின்ன வேலையைக்கூட அவளுக்கென்று வைக்காமல் எல்லாவற்றையும் தானே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து சீதாவுக்கு எவ்வளவு சௌகரியம் பண்ணித்தர முடியுமோ, அத்தனை முனைந்தாள்.

குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு விட்டு, வெளி உள் வேலைகளையும் சமாளித்துக்கொண்டு, தன்னையும் வெகுவாக கவனிக்க இந்த முடியாத வயதில் தாய் பாடுபடுவதைப் பார்க்கையில் சீதாவின் நெஞ்சம் வலிக்கும்.

களைத்துப் போய் பள்ளியிலிருந்து திரும்பினால் வழி மேல் விழி வைத்து காபி, டிபனுடன் காமு நின்றிருப்பாள்.

ஒரு நாள் பொறுக்க மாட்டாமல் "என்னால உனக்கு எவ்வளவு கஷ்டம்மா? நீ ஏன் இப்படி பாடுபடறே" என்று குரல் கம்ம கேட்டுவிட்டாள்.

உடனே பதில் பேசாமல் மகளை அன்புடன் ஏறிட்டு நோக்கினாள் காமு. பிறகு "இத்தனை வருஷங்களா



நீ என்னை உட்காரவைக்க பாடு படலையா, காப்பாத்தலையா? அப்போ எனக்கு நீ பண்ணினே, இப்போ நான் பண்ணறேன்" என்று பேசிவிட்டு எழுந்த துக்கத்தை வெளியில் காட்டாமல் இருக்க தலைப்பை திருகிக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

அம்மாவுக்கு இத்தனை வேகம் எங்கிருந்து வந்தது?

யார் கொடுத்தது?

இதுவும் நல்லதுக்குத்தான்.

"டீச்சர் வீ ஹாவ் ஃபினிஷ்ட் அவர் ஸம்ஸ்" குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள் சீதா.

ஓ! காட்! அசதியில் தூங்கிவிட்டாளா, என்ன?

மூன்று மாசங்களாய் சாதாரணமாய் இருந்த உடம்பு ஏனோ இரண்டு நாளாய் மக்கர் பண்ணுகிறது.

எழுந்து நின்றாள் சீதா. நின்ற வேகத்தில் வலது துடை எலும்பு வலித்தது.

நேற்றும் இப்படித்தான் லேசாய் துடையில் ஒரு வலி. இன்று அதுவே கொஞ்சம் அதிகமாய்.

'உடம்பில் எங்காவது வலி தோன்றினா உடனே வந்து காண்பிங்க, ப்ளீஸ் டோண்ட் டிலே' டாக்டரின் வார்த்தைகள் அவளுக்கு நினைவு வந்தது.

நாளைக்கு கொண்டு காட்டவேண்டும்.

ஏனோ தெரியவில்லை, டாக்டரிடம் போக வேண்டும் என்று நினைத்தாலே அடிவயிற்றில் வலியுடன் ஒரு கலக்கல்.

மாலையில் தலைமை ஆசிரியரிடம் சென்று உடல் நிலையை விளக்கின சீதா "நாளைக்கு செக் அப்பிற்குப்

போகணும் லீவு எடுத்துக்கட்டுமா?'' என்று கேட்டு விடுமுறை எடுத்துக் கொண்டாள்.

மறுநாள் யாரிடமும் சொல்லாமல் தான் மட்டும் டாக்டரைச் சென்று பார்த்தாள் சீதா.

சில மணி நேரங்கள் அவளை அங்கேயே தங்க வைத்து வலி இருந்த இடங்களை எக்ஸ்ரே எடுத்தும், பரிசோதித்தும் பார்த்த டாக்டருக்கு சீதாவிடம் எதுவுமே பேசத் தெரியவில்லை.

"மிஸ்டர் விசு வரவில்லையா?'' என்று அவர் தடுமாறியதிலிருந்தே தன்னிடம் அவர் எதையோ சொல்லத் தயங்குகிறார் என்று சீதா தெரிந்து கொண்டாள்.

"எதுவானாலும் என்கிட்டே தயங்காம சொல்லுங்கோ, டாக்டர்."

டாக்டர் சொன்னார்.

எதிர்பார்த்ததைவிட விரைவாக கான்ஸர் வியாதி அவளுள் படர்ந்து விட்டதை, இனி எந்த மருந்துக்கும் கட்டுப்படாத அளவுக்கு அவள் சின்ன உடம்பில் பொலலாத நண்டு வளைகள் தோண்டியிருப்பதை, கால் எலும்பிலும் கிருமிகள் பரவி விட்டதையெல்லாம் சொன்னார்.

"நீங்க வேலையை விட்டுடணும் சீதா, இனிமே ரெஸ்ட்டாக இருக்கணும், நாளாக ஆக பலவீனம் ரொம்ப ஏற்படும். அதைத் தடுக்க எவ்வளவு ரெஸ்டாக இருக்கீங்களோ, அவ்வளவு நல்லது" என்றும் அறிவுரை வழங்கினார்.

'சரி, சரி' என்று தலை ஆட்டக்கூடத் தெரியாத சீதா எழுந்து வீட்டுக்குப் போனாள்.

ஒவ்வொருவராய், விசு, சுமி, காமு என்று எல்லோருக்கும் விஷயம் தெரிந்தது.

எதிர்பார்த்ததுதான்.



இரண்டு வருஷங்களுக்குள் எதுவும் நடக்கலாம் என்று முன்பே நெஞ்சில் செதுக்கி வைத்துக் கொண்டது தான்.

என்றாலும்.

இப்படியா? மூன்றே மாசத்திலா?

சீதா வேலையை ராஜினாமாச் செய்தாள்.

அடுத்த ஒரு வாரத்தில் தலை சுற்றலும், வாந்தியும் புதிதாய தலை எடுத்து ஆடின.

வீட்டுக்கே வந்து பரிசோதித்த டாக்டர் டானிக்குகளும் அயர்ன் மாத்திரைகளும் எழுதிக் கொடுத்துவிட்டு "எங்கேயும் அனாவசியமாய் அலைய வேண்டாம், இனி முடிஞ்ச அளவு படுக்கையிலேயே இருக்கட்டும்" என்றார்.

"கோபால்ட் கொடுத்து பரவும் வியாதியை கண்டிக்க முடியாதா?'' என்றும், "ஆஸ்பத்திரியில் வைத்து வைத்தியம் பார்ப்பது தேவலை இல்லையா?'' என்றும், இன்னும் என்னென்னவோ கேட்டான் விசு.

"இப்போ எதுவுமே முடியாது விசு. கோபால்ட் கொடுத்தால் இரத்த சிகப்பு அணுக்கள் உண்டாகும், போன் மேரோவுக்கே கெடுதல் உண்டாகலாம். அமைதியாய் சீதாவை வைத்துக் கொள்ளுங்கள்" என்று தன்னால் இயன்றதைக் கூறி சென்றுவிட்டார் டாக்டர்.

எலி அழுகிறதே என்று பூனை அதை விட்டு விடுமா; தவளை கெஞ்சுகிறதே என்று பாம்பு அதைப் பிடித்திருக்கும் பிடியை நழுவவிடுமா, இல்லை சீதா நாளுக்கு நாள் பலஹீனமடைகிறாளே, அவள் குடும்பத்தின் கதி என்ன என்று எல்லோரும் தவிப்பதால் அவளைக் கவ்விக் கொண்டிருக்கும் நண்டுதான் தன் கொடுக்குகளைத் தளர்த்தப் போகிறதா? ம்ஹூம், ஒன்றும் இல்லை.

## 30

சீதாவுக்கு இப்போதெல்லாம் அடிக்கடி கனவு வருகிறது. பகல், இரவு என்று கண்களை மயக்கித் தள்ளும் போதெல்லாம் ஏதேதோ கனவுகள். அவை கனவு தானா. இல்லை மனசில் மண்டிக் கிடந்த எண்ணங்களின் குமுறல் களா?

அன்று வழக்கம் போல சீதா கண்டது விநோத மான ஒன்றுதான்.

கலங்கரை விளக்கு போன்ற உயரமான கட்டிட மொன்றில் சீதா ஏறிக்கொண்டிருக்கிறாள். சுழன்று சுழன்று மேலே ஏறும்படிகள். நெருக்கமான சுவர்கள். இருள் அதிக மாயிருக்கிறது. சீதாவால் ஏற முடியவில்லை. திணறுகிறாள்; தவிக்கிறாள்; தடுமாறுகிறாள். வேண்டாமே என்று மேலே இருக்கும் யாரிடமோ கெஞ்சுகிறாள். முடியாதபோதும் சாந்தம் இழுப்பதைப் போல தள்ளாடி தள்ளாடி ஏறுகிறாள். எத்தனை நாழிகை ஏறுகிறாளோ...? கால்கள் வலிக்கின்றன. மயக்கம் வருகிற மாதிரி இருக்கிறது. கண்கள் செருக தடதடவென்று இது நாழிகை ஏறின படிகளில் உருண்டு கொண்டே வருகிறாள். கீழே கீழே உருண்டு கருமையான குழி ஒன்றில் விழுகிறாள். சீதாவின் தலைக்கு மேலே ஒன்று, இரண்டு, மூன்று, நூறு கழுகுகள். கழுத்தை ஒடித்து, கண்களைச் சாய்த்து, 'உன்னை எப்போது கொத்தித் தின்ன ஆரம்பிக்கலாம்?' என்பது போல பார்க் கின்றன. ஒரு கழுகு வட்ட மடித்துப் பறந்து சீதாவின் அருகே நெருங்கி வருகிறது. இன்னொன்றும் கிளம்புகிறது. எல்லாமாய் அவள் மேல் பறக்கும் போது 'விர் விர்' என்று இறக்கையின் சப்தம் கேட்க பயங்கரமாய் இருக்கிறது.



அம்மா.

சீதா முழித்துக் கொண்டு விட்டாள்.

"என்ன சீதா கூப்பிட்டியாம்மா?"

"ம்? கழுகெல்லாம் எங்கேம்மா?"

எழுந்து விளக்கைப் போடுகிறாள் காமு.

"ஏதாவது சொப்பனம் கண்டியா? குடிக்க சூடா ஹார்லிக்ஸ் கொண்டு வரட்டுமா?"

அவள் பதிலுக்கு காத்திராமல் உள்ளே போய் பானம் கலந்து எடுத்து வந்தாள் காமாட்சி. சீதாவின் முக மெல்லாம் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள். அருகில் அமர்ந்து துடைத்துவிட்டாள் காமு.

எப்படி இருந்த சீதா எப்படி ஆகிவிட்டாள்?

'கடவுளே, நான் கேட்டதையெல்லாம் கொடுக்க நீ மறந்து போனாலும், கல் மனசை கேட்கிறேன். அதை மட்டுமாவது கொடு. என் சீதாவுக்கு நான தெம்பாய் இருந்து பணிவிடை பண்ணனும். என் குழந்தையை அனாதைபோல தவிக்க விடும்படியான பலவீனத்தை எனக்குக் கொடுக்காதே.'

வெளிறிய சீதாவின் முகத்தைத் துடைத்துவிட்டு அவளை மீண்டும் படுக்கையில் சாத்தினபோது காமாட்சி யின் மனம் பிடிவாதத்துடன மேற்சொன்னவைகளையே வேண்டியது.

ராம்குமார் தவறிப் போன போது, 'நானும் போயிடறேன்; இனிமே நான் எதுக்கு வாழணும்?' என்று துடித்ததைப் போல காமு இப்போது பதறுவதில்லை

சீதாவுக்கு வந்திருப்பது பயங்கர நோய்

நாளுக்கு நாள் அவள் ஆயுசு குறைகிறது

## 30

சீதாவுக்கு இப்போதெல்லாம் அடிக்கடி கனவு வருகிறது. பகல், இரவு என்று கண்களை மயக்கித் தள்ளும் போதெல்லாம் ஏதேதோ கனவுகள். அவை கனவு தானா, இல்லை மனசில் மண்டிக் கிடந்த எண்ணங்களின் குமுறல்களா?

அன்று வழக்கம் போல சீதா கண்டது விநோதமான ஒன்றுதான்.

கலங்கரை விளக்கு போன்ற உயரமான கட்டிடமொன்றில் சீதா ஏறிக்கொண்டிருக்கிறாள். சுழன்று சுழன்று மேலே ஏறும்படிகள். நெருக்கமான சுவர்கள். இருள் அதிகமாயிருக்கிறது. சீதாவால் ஏற முடியவில்லை. திணறுகிறாள்; தவிக்கிறாள்; தடுமாறுகிறாள். வேண்டாமே என்று மேலே இருக்கும் யாரிடமோ கெஞ்சுகிறாள். முடியாதபோதும் காந்தம் இழுப்பதைப் போல தள்ளாடி தள்ளாடி ஏறுகிறாள். எத்தனை நாழிகை ஏறுகிறாளோ...? கால்கள் வலிக்கின்றன. மயக்கம் வருகிற மாதிரி இருக்கிறது. கண்கள் செருக தடதடவென்று இது நாழிகை ஏறின படிகளில் உருண்டு கொண்டே வருகிறாள். கீழே கீழே உருண்டு கருமையான குழி ஒன்றில் விழுகிறாள். சீதாவின் தலைக்கு மேலே ஒன்று, இரண்டு, மூன்று, நூறு கழுகுகள். கழுத்தை ஒடித்து, கண்களைச் சாய்த்து, 'உன்னை எப்போது கொத்தித் தின்ன ஆரம்பிக்கலாம்?' என்பது போல பார்க்கின்றன. ஒரு கழுகு வட்ட மடித்துப் பறந்து சீதாவின் அருகே நெருங்கி வருகிறது. இன்னொன்றும் கிளம்புகிறது. எல்லாமாய் அவள் மேல் பறக்கும் போது 'விர் விர்' என்று இறக்கையின் சப்தம் கேட்க பயங்கரமாய் இருக்கிறது.



அம்மா.

சீதா முழித்துக் கொண்டு விட்டாள்.

"என்ன சீதா கூப்பிட்டியாம்மா?"

"ம்? கழுகெல்லாம் எங்கேம்மா?"

எழுந்து வினக்கைப் போடுகிறாள் காமு.

"ஏதாவது சொப்பனம் கண்டியா? குடிக்க சூடா ஹார்லிக்ஸ் கொண்டு வரட்டுமா?"

அவள் பதிலுக்கு காத்திராமல் உள்ளே போய் பானம் கலந்து எடுத்து வந்தாள் காமாட்சி. சீதாவின் முகமெல்லாம் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள். அருகில் அமர்ந்து துடைத்துவிட்டாள் காமு.

எப்படி இருந்த சீதா எப்படி ஆகிவிட்டாள்?

'கடவுளே, நான் கேட்டதையெல்லாம் கொடுக்க நீ மறந்து போனாலும், கல் மனசை கேட்கிறேன். அதை மட்டுமாவது கொடு. என் சீதாவுக்கு நான் தெம்பாய் இருந்து பணிவிடை பண்ணணும். என் குழந்தையை அனாதைபோல தவிக்க விடும்படியான பலவீனத்தை எனக்குக் கொடுக்காதே.'

வெளிறிய சீதாவின் முகத்தைத் துடைத்துவிட்டு அவளை மீண்டும் படுக்கையில் சாத்தினபோது காமாட்சியின் மனம் பிடிவாதத்துடன் மேற்சொன்னவைகளையே வேண்டியது.

ராம்குமார் தவறிப் போன போது, 'நானும் போயிடறேன்; இனிமே நான் எதுக்கு வாழணும்?' என்று துடித்ததைப் போல காமு இப்போது பதறுவதில்லை.

சீதாவுக்கு வந்திருப்பது பயங்கர நோய்.

நாளுக்கு நாள் அவள் ஆயுசு குறைகிறது.

அவன் போனபிறகு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளப் போவது யார்?

யாராவது ஒருவராவது இருந்து அவர்களுக்குச் சமைத்துப் போட்டு காப்பாற்றி ஆளாக்க வேண்டாமா?

'தெய்வமே. என் சீதாவுக்குப் பிறகு குழந்தைகளை காப்பாத்த என் மனசுக்கும், உடம்புக்கும் தெம்பு கொடு' சதா சர்வகாலமும் வேண்டுபவளாய் மாறிப்போனாள் காமு.

"பாட்டீ."

"என்ன மஞ்சு?" சீதாவைப் படுக்க வைத்துத் திரும்பிய காமாட்சிக்கு அந்த நேரத்தில் மஞ்சு விழித் திருப்பது வேடிக்கையைத் தரவில்லை.

"அம்மா தூங்கிட்டாளா? உடம்பு ஜாஸ்தியாக லையே?"

"இல்லைம்மா. நீ தூங்கு."

சீதாவுக்கு அம்மாவும், மஞ்சுவும் பேசுவது கேட்கவே செய்தது.

இரவு நேரங்களில் தலையணிக்கடியில் ஆளுக்கொரு டார்ச் விளக்கை வைத்துக் கொண்டு இவள் சற்று புரண்டு படுத்தாலும் முகத்திலும் வெளிச்சம் போட்டு அடித்துப் பார்ப்பது; உடம்பு அதிகமாகி விட்டதா என்று கவலைப் படுவது எல்லாம் தெரியும்.

பதிநான்கு வயசு பெண் மஞ்சுவிற்கு இப்படி ஒரு வைர மனமா?

என்னதான் புரிந்து கொண்டாளோ, இல்லை எப்படித்தான் தெரிந்து கொண்டாளோ, கடந்த ஒரு மாச மாய் சீதாவின் நிலைமை மோசமானதிலிருந்து இவள் நடத்தை. பேச்சு எல்லாம் பெரிய மனுஷியுடையது போல பொறுப்புடன் இருந்தது.



உறக்கம் வராத சீதாவின் மனசு என்னென்னவோ கணக்குப் போட்டது.

இன்னும் எத்தனை மாசங்களோ?

பள்ளி வேலையும் விட்டாயிற்று.

பணம் விசுவிடம் எவ்வளவு இருக்கும்?

கிட்டத்தட்ட இருபத்தி ஐயாயிரம் இருக்கலாமா?

என் பாங்கில் ஒரு இரண்டாயிரம் இருக்கும்.

இதை வைத்துக் கொண்டு காலம் இருக்கும் நிலைமையில் மஞ்சுவை கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும், குமாரைப் பெரிய படிப்பு படிக்க வைக்க வேண்டும்.

அம்மாவால் ஒண்டியாய் இத்தனையும் சாதிக்க இயலுமா?

ஸரஸ்"வை நம்ப முடியாது. மூர்த்தி மண் குதிரை.

பிறகு யார்?

மலைபோல சுமித்ரா குடும்பத்தைத்தான் நம்ப வேண்டும்.

சின்ன வயசு முதற்கொண்டே என் சிநேகிதத்தி னால் சுமிக்கு என்ன லாபம்?

கஷ்டங்கள், வேதனைகள் இவைகளைத்தான் என் நட்பு அவளுக்குக் கொடுத்தன.

'எனக்குப் பிறகு என் குடும்பத்தைப் பார்த்துக்கோ சுமி' என்று அவளிடம்தான் எல்லோரையும் ஒப்படைத்து விட்டுப் போக வேண்டும்.

கடவுளே. நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? இன்னும் பத்து வருஷகாலம் நான் திடமாக இருந்திருக்கக் கூடாதா?

வாழ வேண்டும் என்ற ஆசையினாலே நான் தவிக்க வில்லையே.

என்னை நம்பி பிறந்துவிட்ட என் குழந்தைகளை ஆளாக்கத்தானே இந்த கெஞ்சல்!

பத்து வருஷத்தில் மஞ்சுவின படிப்பு முடிந்து ஒருத்தனிடம் கையைப் பிடித்துக் கொடுத்து விடுவேன். பிறகு நீயாயிற்று, உன் தம்பியாயிற்று என்று சொல்லிவிட்டு மனசில பயமில்லாமல் கிளம்பி விடலாமே! சாவுக்கு அஞ்சாமல சிரித்துக் கொணடே போகலாமே.

கொம்புத் தேனுககு ஆசைப்படும் முடவனாக சீதா துவண்டு போனாள்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது.

எங்கோ கோழி கூவியது.

முடியாமல எழுந்து ஜன்னல் திரையை விலக்கி விட்டு எட்டிப பார்த்தான சீதா.

கிழக்கில் லேசாய் சிவந்துகொண்டு ஆதவனின் கரங்கள் நீண்டிருந்தன.

மாடியில் நின்று அநத செவ்வானத்தைக் கணடு களித்தால எபபடி இருக்கும் என்று எண்ணிக்கொணடான சீதா.

ராம்குமாரும் அவனும் எத்தனை நாட்கள மாடியில் நின்று சூரியோதயத்தைப பார்த்து மகிழநதிருககிறார்கள?

இன்று அதிகாலை அவனுக்கு சுகத்தைத் தந்தது.

இன்னும் இதைப்போல எத்தனை காலை நேரங்களை அவன் பார்ககப் போகிறானோ?

கூட்டமாய பறவைகள் பறந்து போயின.



சிவப்பாய் இருந்த வானம் பார்த்துக கொண்டிருக்கையிலேயே வெள்ளையாய் மாறிச சிரித்தது.

ஆஹா! வானம், மேகங்கள் இத்தனை அழகாய் இருக்க முடியுமா?

கூட்டமாய் பறக்கும் பறவைகளிடம் இப்படி ஒரு கம்பீரமா?

இதுநாள் வரை கவனத்தில் தென்படாத ஒவ்வொன்றும் இப்போதெல்லாம் தன் மனசில் பட்டு நிற்பது ஏன் என்பது சீதாவுக்குப் புரிந்ததுதான்.

ஒரே ஒருகணம் நெஞ்சை வலித்தாலும், இதுதான் மார்வலியோ, இதுதான என் கடைசி மூச்சோ என்று அவன முதுகு தண்டு சில்லிட்டுப போகிற மாதிரி ஒரு பிரமை.

எத்தனைதான் கட்டி அமுக்கினாலும் மீறிக் கொண்டு அவன் உணர்ச்சிகள் எழவே செய்தன.

நாளுககு நாள் சீதா பலவீனமடைந்து வருவது எல்லோருக்குமே நன்றாகத் தெரிந்தது.

காலவலி, காலவலி, என்று துடித்தவனிடம் இரண்டுநாட்களாய் தலைவலியும் சேர்ந்து கொணடது.

ஊசி குத்துவது போல மெல்ல மெல்ல வலி அதிகமாகிப் போனதால், எழுந்து நடப்பது, வெளியே போவது எல்லாம் நின்று போயிற்று.

செலகளில் போதை நீர உறபத்தியானதால பசியின்மையும், சோர்வும் உணடாகிறது என்றார் டாகடர்.

எக்டாக்ஸான் ஒரு இன்ஜெக்ஷன் விலை இருபத்தைந்து ரூபாய் என்று இருபது ஊசிகள் போட்டதும் லேசாய் குணம் தெரிந்தது. அதுவும் பத்து நாட்களுக்குத் தான்.

பழையபடி தலைவலி, பசியின்மை, வாந்தி.

ஒரு மாச காலத்தில் சீதாவை பகுதி பகுதியாய நண்டு குடைந்து விட்டது. வெளியிலேயே நன்றாய் தெரிய ஆரம்பித்து விட்டது.

நிமிஷத்துக்கு நிமிஷம் கரைந்து கொண்டிருந்தாள் அவள்.

அந்த கரைசலில் அவளுக்கு மிஞ்சியது வலி ஒன்று தான்.

வலி, வலி, சதாவலி.

பாழும் நண்டு அவள் மெல்லிய உடம்பை குடைந்ததால் எழுந்த பயங்கர வலி.

பொறுமைக்கு அர்த்தமாய் இதுநாள் திகழ்ந்த சீதா வே பொறுமையை இழந்து கத்தலானாள்.

"வலிக்கிறது. அம்மா வலிக்கிறது."

"என்னாலே தாங்க முடியலை சுமி; எனக்கு ஏதாவது கொடுத்துடு சுமி, என்னாலே உயிர் வாழ முடியாது சுமி."

கதறுவது நம் சீதாவா! ஆமாம்; விவேகம் நிறைந்த சீதாதான்.

பொறுக்கமாட்டாத நிலை வந்ததும் முக்கால்வாசி பொழுது அவளுக்கு மெத்தடின் கொடுத்து அரை மயக்கத் திலேயே வைத்திருந்தார் டாக்டர்.

மருந்தின் போதை இருக்கும் வரையில் பேசாமல் மயங்கிக் கிடக்கும் சீதா, தெளிந்து போனால் "குழந்தை களை அந்தப் பக்கம் அழைத்துப் போகச் சொல்லு... அவா என் அலங்கோலத்தைப் பார்க்க வேண்டாம்... என்னால் வலி தாங்க முடியலையே" என்று கதறி, கதறி அழலானாள்.

சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒருநாள் அவள் பேசத் தொடங்கியதும் மூளையிலும் கான்ஸர் பரவி விட்டது டாக்டருக்குப் புரிந்தது.



இனி எந்த நிமிஷமும் எதுவும் நேரலாம்.

அன்று சற்றே அதிசயமாய் தெளிந்து போன சமயத்தில் இதுநாள் வரை எவரிடமும் எதுவும் சொல்லி அழாத சீதா விசுவையும், சுமித்ராவையும் அருகில் அமரச் செய்து "என் குழந்தைகள் விசு. அவாளை அனாதையா விட்டுட்டுப் போறேன் சுமி" என்று அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு கேவினாள்.

அந்த சமயத்துக்காகவே காத்திருந்த விசு பேசி னான். "நீயே இந்தப் பேச்சை எடுக்காட்டா நாங்க எப்படி பேசறதுன்னு இருந்தோம் சீதா... எங்கப்பா, அம்மா உன் கிட்டே சொல்லச் சொன்னதை சொல்லட்டுமா? மஞ்சுவை யும், குமாரையும் எங்க குழந்தைகளாய் தத்து எடுத்துக்க எங்கப்பா ஏற்பாடு பண்ணி இருக்கார் சீதா. இது உனக்கு திருப்திதானேம்மா? உங்கம்மாவை எங்கம்மாவோடு கூடப் பிறந்த சகோதரி மாதிரி வைச்சு காப்பாத்துவோம்னு அம்மா சொல்லச் சொன்னா... உனக்கு சந்தோஷமா சீதா? எங்க மேல உனக்கு நம்பிக்கை இருக்கில்லையா? அப்பா, அம்மாவே உன்கிட்ட இதை நேரடியா சொல்லுவா. உனக்கு சந்தோஷமா, சீதா?"

விசுவின் கைகளைப் பற்றி இழுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள் சீதா.

அவர்கள் முன்னாலேயே அம்மாவை அழைத் தாள்.

"கடவுள் இருக்காரம்மா... அப்பா போய் நாம்ப தவிச்ச போது நமக்கு எப்படியோ வழி காட்டினார்; ராம் குமார் போனபோதும் நிர்கதியாய் நம்பளை தவிக்க விடலை... இப்போ எனக்குப் பிறகு உங்களை பார்த்துக்க அருமையான மனுஷாளை கொடுத்துவிட்டார் அம்மா... நான் அதிருஷ்டக்காரிம்மா... கடவுளுக்கு என் மேலே கருணை இருக்கும்மா..." என்று ஏதேதோ உணர்ச்சி வயப் பட்டுப் புலம்பினாள்.

இதற்காகவே காத்துக்கொண்டிருந்ததைப்போல சீதாவின் உடல்நிலை தடக்கென்று மறுநாளே மோசமானது. மூளையில் புற்று நோய் பரவி கண் பார்வை போயிற்று. அதற்கும் அடுத்த நாட்களில் பேசும் சக்தியும் போயிற்று.

சீதாவின் அவலம், பார்ப்போர் நெஞ்சை அறுத்தது.

உயிரிருந்தும் பிணமாகிப் போன சீதா நான்கு நாட்களில் நினைவை இழந்தாள். இரண்டு நாட்களுக்கு தன்னைச் சுற்றி நடப்பது ஒன்றுமே அறியாமல் கட்டையாய் கிடந்தவள், கரும்பைப் பிழிந்து சக்கையைத் தள்ளி விடுவது போல அவள் தேகத்தைக் குடைந்து அவள் உயிரைத் தின்ற அந்த நண்டு ஒருநாள் காலைப் பொழுதில் இனி இவள் வேண்டாம் என்று தீர்மானித்ததால் அன்று இவ்வுலகை விட்டு, இதுநாள் பட்ட கஷ்டங்களை விடுத்துப் பறந்தே போனாள்.

சீதாவின் கதை முடிந்தது.

பரந்த உலகில் இன்னும் எத்தனை சீதாக்களோ?

□ □ □

CPL 554243

25 FEB 2003

MADRAS-600

P. 272
25-03